# வள்ளியம்மன் அம்மானை



கலாநிதி முருகு தயாநிதி

# வள்ளியம்மன் அம்மானை

பதிப்பாசிரியர்

கலாநிதி முருகு தயாநிதி

MA, PGDE, MEd, MPhil, Ph.D

முதுநிலை விரிவுரையாளர்

தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு

தமிழ்ப் புதுவை

புதுச்சேரி

வள்ளியம்மன் அம்மானை

வெளியீடு: தமிழ்ப் புதுவை, 17, 14ஆவது தெரு, கிருஷ்ணா நகர், புதுச்சேரி - 8.

பதிப்பாசிரியர்: கலாநிதி முருகு தயாநிதி

பதிப்பு : டிசம்பர் 2019

விலை : ரூ. 100/-

பக்கம்: 160

புத்தக கணினி வடிவமைப்பு : பிளாட்டினம் கிராபிக்ஸ், புதுச்சேரி - 1.

அச்சிட்டோர் : பிரிண்ட் பிராசஸ், சென்னை - 600 014

ISBN : 81-938307-8-9

Valliamman Ammanai

Publisher : Tamizh Puduvai, 17, 14th Street, Krishna Nagar, Puducherry - 8

Author : Kalanithi Murugu Dhayanithi

Edition : December 2019

Price : Rs.100/-

Pages : 160

Book Layout & Design : Platinum Graphics, Puducherry - 605001.

Printed at : Print Process, Chennai - 600 014.

© All rights reserved No part of this book may be repoduced or retrieved or Photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the Author.

# சமர்ப்பணம்

இந்த ஏட்டினைத் தந்து அதனைப் பிரதி செய்த
அம்பிலாந்துறையினைச் சேர்ந்த வெ.கணபதி என்பவருக்கும்,
மற்றுமொரு ஏட்டினைத் தந்துதவிய க.ஜதுகுலராசா
ஆசிரியர்அவர்களுக்கும் இந்த நூல் சமர்ப்பணமாகின்றது.

# அணிந்துரை

தமிழ் இலக்கிய வரலாறு காலத்தால் முற்பட்டது. சங்க காலத்திற்கு முன்னர் வாய் மொழியாகக் காணப்பட்ட இலக்கியங்கள் யாவும் அக்காலத்தி னைத் தொடர்ந்து எழுத்து வடிவம் பெறுகின்றன. அவை யாவும் அகம், புறம் என்ற நிலையில் மிக நீண்ட இலக்கியங்களாகத் அமையப் பெறுகின்றன. இந்த இலக்கியங்களின் தொடர்ச்சியாகப் பல்வேறு கால கட்டங்களில் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த அடிப்படையில் பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் 96 வகைப் பிரபந்தங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அத்தகைய பிரபந்தங்களில் அம்மானையும் ஒன்றாகும். முதன் முதலில் அம்மானை ஓர் இலக்கிய வடிவமாக சிலப்பதிகாரத்தில் முன்வைக்கப்படுகின்றது. எனினும் தொல்காப்பியர் பண்ணத்தி எனும் வகையின் ஊடாக அம்மானை பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவகையில் பல்வேறு இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் அம்மானை சிறப்பிடம் பெறுகின்றது. இலங்கையில் வேறு எங்கும் தோற்றம் பெறாத இலக்கியமாக அம்மா னைப் பாடல்கள் மட்டக்களப்புத் தமிழகத்திற்கே உரியதோடு மட்டுமல்லாது அப்பிரதேசத்தின் புலமைத்துவத்தின் சிறப்பினையும் அடையாளப்படுத்தி நிற்கின்றது. எனினும் இந்த இலக்கியங்களை யார் பாடினார் என்பது பற்றிய தடயங்கள் எதுவும் இல்லாதிருக்கின்றது. இந்த நிலை இங்கு எழுந்த பல இலக்கியங்களுக்கான பொதுவான பண்பாகவும் அமையப் பெற்றுள்ளது.

நாம் அறிந்த வகையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் ஓலைச் சுவடிகளில் இருந்து பல இலக்கியங்கள் பிரதியாக்கம் செய்யப்பட்ட போதும் அவற்றுள் கணிசமானவை பதிப்பிக்கப்படாமலேயே உள்ளன. பேராசிரியர் சு.வித்தியானந்தன் “கஞ்சன்” அம்மானயினையும் “மட்டக்களப்பு நாட்டார்” பாடல்களையும் இலக்கிய கலாநிதிகளான வ.சிவசுப்பிரமணிம் “சுருதி” நூலினையும் சா.இ.கமலநாதன் “பாரத” அம்மானையினையும்

பதிப்பித்துள்ளனர். இவ்வாறான பதிப்பு முற்சியில் குறிப்பிட்ட இலக்கியங்கள் அச்சுவாகனம் ஏறியுள்ளன.

இத்தகைய ஒரு பின்னணியில் கலாநிதி முருகு தயாநிதி அவர்களின் இலக்கிய ஆய்வு முயற்சிகள் பலவாறான கோணங்களில் இடம்பெறுகின்றன. அந்தவகையில் அவர் ஏற்கனவே எட்டுப்புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் கவிதை, கட்டுரைத் தொகுப்பு என்பவற்றோடு மறைந்து செல்ல விருந்த கண்டிராஜன் ஒப்பாரியினையும் பதிப்பித்து தமிழ் உலகத்திற்கு ஓர் உன்னத ஆவணமாகத் தந்துள்ளார்.

கலாநிதி முருகு தயாநிதி அவர்கள் மற்றவர்களைப்போல் பதிப்பித்த இலக்கியங்களையே பதிப்பிக்காமல் இதுவரை பதிப்பிக்கப்படாமலும் மறைந்து செல்லும் தன்மையிலும் அழிந்த நிலையில் காணப்படும் இலக்கியங்களைத் தேடிக் கண்டு பிடித்து அவற்றைப் பதிப்பிப்பதில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகின்றார். அதற்கு அவர் வாழும் சூழலும் ஒரு காரண மாக அமைகின்றது. தமிழ்மொழியைப் பொறுத்தவகையில் மட்டக்களப்பில் படுவான்கரைப் பிரதேசம் பல நிலைகளிலும் உயர்ந்து நிற்கின்றது. இப்பிரதேசத்தில்தான் அதிகமான ஏட்டிலககியங்கள் எழுந்துள்ளன. இன்றும் சித்திரக்கதை படித்தல், கண்ணகி வழக்குரை படித்தல் முதலிய படிப்புக்கள் ஓலைச் சுவடியைப் பார்த்தே இடம்பெறுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். அத்தகைய பிரதேசத்தில் வாழும் இவருக்கு அங்குள்ள ஓலைச் சுவடிகளைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறான வாய்ப்புக்களே அவரை இத்தகைய ஆய்வு முயற்சிக்கு இட்டுச் செல்பவையாக அமைந் துள்ளது. அதன் விளைவே வள்ளியம்மன் அம்மானை எனும் இரண்டு ஓலைச் சுவடிகளைக் கண்டு பிடித்து, கொப்பியில் பிரதி செய்து பதிப்பித்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது. இந்த ஓலைச்சுவடிகளை ஒப்பிட்டுப் பார்த்துப் பதிப்பித்துள்ளார். ஓலைச்வடிகள் அக்கால சூழலைப் பிரபலித்து நிற்கின்ற சொற்கள் பலதைக் கொண்டிருப்பதனால் அவற்றுக்கான சொற்பொருளை வாசகர்களும் ஆய்வாளர்களும் விளங்கிக்கொள்வதில் தடங்கல் ஏற்பக் கூடாது என்பதற்காக அதற்கு அச்சொற்களுக்கான விளக்கங்களையும் கொடுத்துள்ளார். அத்தகைய முயற்சியினால் அம்மானையின் பொருளை விளங்கிக் கொள்வது இலகுவாகின்றது.

வள்ளியம்மன் அம்மானையின் மூலத்தினைக் கண்டு பிடித்து அதனை வள்ளியம்மன் அம்மானை ஓலைச்சுவடியுடன் ஒப்பிட்டு நீண்ட தொரு ஆய்வுப் பதிப்பினை எழுதி இருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்த

ஆய்வுப் பதிப்பினை வாசித்த மாத்திரத்தே வள்ளிம்மன் அம்மானையை மிக இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, அழிவின் விழிம்பிலுள்ள இவ்வாறான அரிய பல பொக்குஷங்களைத் தேடி அவற்றை ஆவணப்படுத்தும் ஆய்வாளரின் இலக்கிய தமிழ்ப்பணி மிகவும் பாராட்டுக்குரியது. கலாநிதி முருகு தயாநிதியின் இத்தகைய முயற்சிகள் மேலும் தொடரவும் அவரது தமிழ்ப்பணி மேன்மேலும் வளரவும் அவரை வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

முனைவர் **கலா சந்திரமோகன்**
மொழி கற்கைகள் துறை
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கொழும்பு

# ஆய்வுப் பதிப்பு

## மட்டக்களப்புத் தமிழகம்

குமரிக்கண்டம் கடற்கோளினால் மூழ்கியபோது இலங்கைத்தீவு எஞ்சி இருந்தது என்பர். காலவோட்டத்தில் இத்தீவின் முதல் மன்னனாக இராவணன் அடையாளப்படுத்தப்படுகின்றான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரரையும் மட்டக்களப்பில் திருக்கோயில் எனும் இடத்திலுள்ள சிவலிங்கத்தினையும் வழிபட்டிருகின்றான். இவ்வாறு இராவணனது வழிபாட்டுடன் சிறப்புப்பெறும் ஒரு மாவட்டமாகவே மட்டக்களப்பு மாவட்டம் அமையப் பெற்றுள்ளது. சமூகப் பண்பாட்டுத்தளத்தில் இம்மாவட்டத்தினை ஆன்றோர் மட்டக்களப்புத் தமிழகம் என அழைப்பர். இத்தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாதவகையான இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றுள்ளன.

1. வடமோடி, தென்மோடிக் கூத்து
2. வசந்தன் ஆடல்
3. பறைமேளக் கூத்து
4. அம்மானை
5 நாட்டார்பாடல்
6. கண்ணகி வழக்குரை காவியம்
5. கரகம், கும்மி காவடிப் பாடல்கள்

போன்றவற்றினை அடையாளப்படுத்தலாம். இவ்வாறான இலக்கியங்கள் யாவும் ஓலைச்சுவடிகளிலே இருந்துள்ளன. இவற்றுள்; நூற்றுக்கு மேற்பட்ட கூத்துப் பிரதிகள் உள்ளன. இந்த இலக்கியங்கள் யாவும் ஏனைய பிரதேசங்களில் உள்ள கலைவடிவங்களில் இருந்து வேறுபட்டவையாக அமையப்பெற்றுள்ளன. இவற்றுள் அம்மானைப் பாடல்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்துள்ளன. அவை கஞ்சன் அம்மானை, பாரத அம்மானை, இராமர் அம்மானை, வள்ளியம்மன் அம்மானை போன்றனவாகும். இவ்அம்மானைகள் மட்டக்களப்புத்

தமிழகத்திற்கே சிறப்பு வாய்ந்தவையாக இருக்கின்றன. அதாவது, தமிழகத்தில் அம்மானைகள் பல எழுந்தபோதும் மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த அம்மானைகள் அவற்றிலிருந்து வேறுபட்ட தன்மை கொண்டதாக அமையப்பெற்றுள்ளன.

## பதிப்பின் நோக்கம்

இதுவரையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த இலக்கியங்கள் பலவாகும் என்பதனை அறிகின்றோம். அத்தகைய இலக்கியங்கள் யாவும் பதிப்பிக்கப்படவும் இல்லை. இன்னும் பல இலக்கியங்கள் ஓலைச் சுவடியில் இருந்து பிரதியாக்கம் செய்யப்படவும் இல்லை. இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றினை மேலும் அறிவதற்குப் பல தடங்கள் எழ வாய்ப்பு ஏற்படும் என்பதனை நாம் உணர்கின்றோம். கிடைத்த பிரதிகளையாவது எதிர்கால சமூகம் அறிய வேண்டும் என்பதற்காக இத்தகைய பதிப்பு முயற்சியினை மேற்கொண்டுள்ளேன்.

1. கிடைத்த ஓலைச் சுவடியைப் பதிப்பித்தல் (வள்ளியம்மன் அம்மானை, இராமர் அம்மானை)
2. அவற்றில் உள்ள சொற்களுக்கான விளக்கங்களை முன்வைத்தல்
3. மூலக் கதையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்

எனும் அடிப்படையில் பதிப்பிக்கின்றேன். மேலும் இப்பதிப் பினூடாக எதிர் காலத்தில்,

1. மட்டக்களப்பு வரலாற்றினை ஸ்தீரனப்படுத்தல்
2. பதிப்பு முயற்சியை தீவிரப்படுத்தல்
3. இலக்கியங்களின் பேசுபொருளை சமூகப் பண்பாட்டுத் தளத்தில் ஆராய்தல்
4. இலக்கியங்களை ஒப்பிட்டறிதல்
5. இலக்கியங்களைப் பாடிய புலவர்களின் பின்னணியைக் கண்டறிதல்
6. இவ்வாறான இலக்கியங்களை உலகறியச் செய்தல்

எனும் அடிப்படையில் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சிப் புலத்தினை முன்கொண்டு செல்ல முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

## ஓலைச் சுவடி

பண்டைக்காலம் தொடக்கம் வாய்மொழியாகவே இலக்கியங்கள் பயிலப்பட்டு வந்துள்ளன. பிற்கால கட்டத்தில் எழுத்துக்களால் எழுதும்

வழக்கம் வந்தபின்னர், தமிழ் இலக்கிய நூல்கள் பனை ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அந்த நூல்களில் உள்ள விடயங்களைக் கொண்டு பாடம் படிப்பிக்கப்பட்டது. சீடர்கள் தங்களுக்குப் பிரதி வேண்டுமெனில், புதிய ஓலைச் சுவடிகளில் எழுதி எடுத்துக் கொண்டனர். அத்தகைய ஓலைச்சுவடிகள் முந்நூறு வருடங்கள் வரை சிதையாமல் இருப்பதாகக் கூறுவர்; அதன் பின் மறுபதிப்பு (Reprint)செய்யவேண்டிவரும். அவ்வாறு மறுபதிப்பு செய்யும்போதோ அல்லது புதிய பிரதிகளை எழுதும்போதோ அந்த காலகட்டத்தில் எந்த வழக்குச் சொற்கள் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தனவோ, அந்தச் சொற்களைப் பயன்படுத்தியே சுவடிகள் எழுதப்பட்டுவந்துள்ளன. பிற்காலத்தில் பிரதியாக்கம் செய்யப்பட்ட ஓலை சுவடிகள் தற்போதைய தமிழ் வார்த்தைகளையும் பிறமொழி கலந்தும் இருப்பதனை அவதானிக்கமுடிகின்றது.

அம்பிலாந்துறைக் கிராமத்தில் பல ஏடுகள் இருந்துள்ளன. அவற்றுள் வைகுந்த அம்மானை, பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, இராமர் அம்மானை முதலியவற்றைக் கொள்ளமுடியும். இந்த இலக்கியங்கள் ஏடுகளிலேயே எழுதப்பட்டிருந்தன. இவற்றுள் வள்ளியம்மன் அம்மானை ஜனரஞ்சக நோக்கில் படைக்கப்பட்டுள்ளது. இவ்வம்மானைகள் தமிழ் நாட்டிலோ அல்லது இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலோ அறியப்படாதவையாகும். வள்ளியம்மன் அம்மானை ஏட்டில் இருந்து பிரதி யாக்கம் செய்யப்பட்டது. வள்ளியம்மன் அம்மானை ஏடானது வெ.கணபதி என்பவரிடம் இருந்து பெறப்பட்டது. அவரே இந்த ஏட்டினைப் பிரதியாக்கம் செய்து தந்துள்ளார். அத்தோடு கடுக்காமுனையைச் சேர்ந்த க. ஜதுகுலராசா ஆசிரியரிடம் இருந்தும் ஒரு ஏடு பெறப்பட்டடு ஒப்பு நோக்கப்பட்டது.

## அம்மானை

அம்மானை என்பது மகளிர் ஆடும் விளையாட்டுகளில் ஒன்று. இது, இரண்டு அல்லது மூன்று பெண்கள் மரத்தால் ஆக்கப்பட்ட அம்மானைக் காய்களை சிறிது மேலே எறிந்து அவை கீழே விழாமால் அவற்றில் ஒன்றைக் கழித்து அல்லது கூட்டிப் பிடிப்பதாக அமைந்த விளையாட்டாகும். மரக்காய்களுக்குப் பதிலாகக் கற்களையோ, மணிகளையோ பயன்படுத்துவதும் உண்டு. இலக்கியத்தில், இருபதிலிருந்து இருபத்தைந்து வயதுவரை உள்ள அரிவைப் பருவத்துப் பெண்களுக்குரிய விளையாட்டாக அம்மானை காணப்படும் இவ்விளையாட்டை ஆடுகையில் பாடப்படுவனவாக எழுந்தவை அம்மானைப் பாடல்கள் இவை காலப்போக்கில் பல வகையான மாறுதல் பெற்றுப் பயின்றன.

அம்மானைப் பாடல்வகையை முதன் முதலில் சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் வாழ்த்துக் காதையில் "அம்மானைவரி" என்னும் தலைப்பில் காண்கிறோம்.

"வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை?
ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை"

என்று தொடங்கி ஐந்தடிகள் கொண்ட நான்கு அம்மானை வரிப்பாடல்கள் அம்மானை விளையாடும் மகளிர் தம் ஆட்டம் வழியே சோழ மன்னனின் புகழைப் பாடி மகிழ்தலைக் காட்டுகின்றன.

இசைப் பாட்டாகப் பொலியும் இப்பாடல்களில் முதல் இரு அடிகளில் ஒரு கேள்வியும், அடுத்த இரு அடிகளில் விடையும், இறுதி அடியில் வாழ்த்தும், இரண்டு - மூன்று அடிகளில் மடக்கும் அமைந்து கலித் தாழிசை வடிவில் காணும் இப்பாடல்கள் மூன்று பெண்கள் தமக்கிடையே உரையாடிக் கொள்வதைக் காட்டுகின்றன எனச் சொல்வர்.

ஒவ்வொருவர் ஓரொரு பாடலைப் பாடித் தம் வாழ்த்தைத் தெரிவிப்பதாகக் கொள்ளலாம். திருமுறைகளில், அம்மானை ஆட்டம் பற்றிய குறிப்பைத் திருஞானசம்பந்தரின் பாடல் ஒன்றில், கருந்தடங்கண்ணார் கழல்பந்து அம்மானைப் பாட்டயருங் கழுமலமே என்ற குறிப்பு இருப்பினும் அம்மானைப் பாடல்கள் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் அன்றி மற்ற இடங்களில் காணப்படுவதில்லை. திருவாசகத்தில், திருவம்மானை என்ற தலைப்பில் உள்ள இருபது பாடல்கள் "அம்மனாய்" என்ற சொல்லைப் பாட்டின் இறுதிச் சொல் லாகக் கொண்டுள்ளன.

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
பண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

என்றவாறுள்ள இவ்வம்மானைப் பாடல்கள், சிலம்பில் காண்பது போல் மன்னனைப் பற்றி அல்லாமல் இறைவனைப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்தும் வகையில் அமைந்திருக்கின்றன. இம்மாற்றத்தை முதலில் மாணிக்கவாசகர் செய்தார் எனத் தோன்றுகிறது. மேலும், இவை வினா விடை வடிவில் அமையவில்லை. சிலம்பில் கண்ட கலித்தாழிசை வடிவம் இப்பாடல் களில் கொச்சகக் கலியாக மாறியிருப்பதைக் காண்கிறோம். வெண்டளை பயிலுமாறு அமைக்கப்பட்ட இப்பாடல்களின் ஓசை நயம் கருதியும், இவற்றை

அடுத்து வரும் திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி போன்ற மகளிர் விளையாட்டுகளை ஒட்டி அமைந்துள்ள பாடல் களைக் கருதியும், திருவம்மானைப் பாடல்கள் அம்மானை விளையாட்டில் பாடுவதற்காக அமைந்தவை எனத் தெரிகிறது இப்பாடல்களில், அம்மானாய் என்ற சொல்லைத் திருப்பாவையின் பத்தாவது பாட்டில் (நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்) காண்பது போல அம்மா என்ற பொருளில் விளையாடச் சேர்ந்திருக்கும் மகளிரை முன்னிலைப்படுத்திக் கூறும் சொல்லாகத் தெரிகிறது. இதுபோல, அம்மனை, அம்மனார், அம்மானே போன்ற சொற்களும் பயன்படுத்தப்படும். சிலம்பில் தாழிசை வடிவிலும் திருவாசகத்தில் கொச்சகக் கலிப்பா வடிவிலும் அமைந்த அம்மானைப் பாடல் அடுத்துக் கலம்பகம், உலா, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக் கியங்களில் (15 – 16ஆம் நூற்றாண்டுகளில்) மேலும் மெருகூட்டிய தரவுக் கொச்சகக் கலிப்பாவாக உருக்கொண்டது. பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "மூவரம்மானையின்" முதல் பாடல்,

> "புந்திவனஞ் சூல்மும் பொருவில்லாப் பிள்ளையார்
> தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி அம்மானை
> தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி ஆமாகில்
> இந்த வயிற்றுக்கு இரையெங்கே அம்மானை?
> இன்றென்றே ஈசன் இரக்கலுற்றான் அம்மானை!"

திருவரங்கக் கலம்பகத்தில் உள்ள ஒரு பாடல்

> "தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
> ஆனவர்தாம் ஆண்பெண் அலியலார்காண் அம்மானை
> ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்
> சானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை?
> தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை!"

சிலப்பதிகார அம்மானைவரிப் பாடல்களைப் போல இவற்றில் வினா-விடை அமைப்பும் அடிமடக்கும் பயிலக் காண்கிறோம். எனினும், இப்பாடல்களின் சொற்களில் காணும் வஞ்சப்புகழ்ச்சி / நையாண்டி வகை நகைச்சுவையும், குறிப்பாக, இறுதியடியில் சிலேடை நயம் தோன்ற விடையளித்து ஒரு திருப்பத்துடன் முடிக்கும் முறையும் அம்மானைப் பாடல்களின் அழகிய பரிணாம வளர்ச்சியைப் பறைசாற்றுகின்றன. இப்பாடல்களின் பின்னணியான அம்மானை விளையாட்டில், பாட்டுடைத் தலைவனின் குணநலன்களைக் கூறும் ஒரு பெண்ணும், அவை பற்றிய கேள்வியொன்றை எழுப்பும் ஒரு பெண்ணும், அதற்கு விடையளிக்க மூன்றாவதாக ஒருபெண்ணும் பங்கெடுப்பதாகக் கற்பனை செய்யலாம் அல்லது இரு மகளிர் மட்டுமே இருப்பதாகவும் கருதலாம்.

"இவற்றில் உள்ள சிறப்பு ஐய வினாவிற்குக் கூறும் விடையில் சிலேடையும் குறிப்பும் சமத்காரமும் அமையச் செய்வதேயாம். சிலபோது நேர் விடையும் அமையும். ஆதலின், புலமைநலஞ் சான்றோர் தம் கவித் திறனையும், எடுத்துக்கொண்ட பொருள் திறனையும் விளக்க இப்பாடல் வகையைக்கையாண்டனர்" இவ்வகை அம்மானைப்பாடல்களைவெண்டளை பயிலும் தரவு கொச்சகக் கலிப்பா அல்லது "உறழ்கலிப் பா" (வினா – விடை கொண்ட கலிப்பா) என்னும் வகையைச் சார்ந்தன எனக் கொள்ளலாம். இப்பாடல்களில் ஒலிக்கும் வெண்பா யாப்பிற்குரித்தான செப்பலோசை அம்மானை ஆட்டத்திற்கு உகந்ததெனக் கருதியதாகக் கொள்ளலாம். தனக்கென ஒரு தனி நடையை வகுத்துக்கொண்டு படிப்பதற்கு இன்பந்தரும். அம்மானை தொண்ணூற்றாறு வகைப் பிரபந்த வகைகளில் ஒன்று. ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் (13–ஆம் நூற்றாண்டு?) இடையே ஒரு வாக்கு வாதம் நடைபெற்றதாகவும், அது அம்மானை வடிவத்திலேயே நடந்ததாகவும் வினோதரசமஞ்சரி போன்ற நூல்களில் பார்க்கலாம்.

புகழேந்தியின் பாடல்

"திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானை!
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை!
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது அம்மானை!
ஒப்பரிய விளையாட்டு உறந்தையிலோ அம்மானை!
கரையெதிர்ஏ டேறியது காவிரியோ அம்மானை!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை!
பரவைபடிந் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானை!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்எளிதோ அம்மானை!"

அம்மானை என்பது ஒரு மகடூஉ முன்னிலைச் சொல்லாக மட்டுமே அமைவதும், வினா – விடை அமைப்பு இன்மையும் இப்பாடல் வகையைச் சிலப்பதிகார, சிற்றிலக்கிய அம்மானைப்பாடல்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

கடந்த இருநூறாண்டுகளில், அம்மானைப் பாடல்கள் கதைப்பாட்டு என்னும் நாட்டுப்புற இலக்கியமாக மாறி மக்களிடையே வாய் மொழியாகப் பயிலப்பெற்றன. இதுவரை நாம் பார்த்த அம்மானைப் பாடல்களில் உள்ளது போலன்றி, இக்கதைப்பாட்டில், அம்மானை என்ற சொல் குறிப்பிட்ட பொருள் ஏதும் இன்றிக் கேட்போர் கவனத்தை ஈர்க்க மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகத்தெரிகிறது. அரசியல், சமுதாய, சமயத் தலைவர்களின் வரலாற்றை விவரிப்பதற்கோ அல்லது ஒரு நீண்ட கதையைப் பாடல் வழியாகக் கூறுவதற்கோ இந்த அம்மானைக் கதைப் பாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இராமப்பய்யன் அம்மானை, ஆமையார் அம்மானை, சிவகங்கைச் சீமை அம்மானை, அகிலத் திரட்டு

அம்மானை போன்ற அம்மானைகள் இவ்வகையைச் சார்ந்தவை. ஆமையார் அம்மானை சுவாரசியமான கதையையும் அழகிய வர்ணனைகளும் கொண்ட செய்யுள் பகுதிகள் கொண்ட அந்த நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது கதைப்பாட்டுகளின் இலக்கிய நயம் எழுதுபவரின் திறனையும் நோக்கத்தையும் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாக, 3745 அடிகள் கொண்ட ஆமையர் அம்மானை பெரும்பாலும் வெண்கலிப்பா நடையிலும் இடையே விருத்தம், கலி விருத்தம், சந்தவிருத்தம் ஆகிய குறிப்புக்களோடும் அமைந்துள்ளது. பாடல் முற்றிலும் பொழிப்பு மோனை பயில்கிறது. எல் லா அம்மானைக் கதைப்பாட்டுகளும் இவ்வாறு இலக்கணங் கொண்டு அமைக்கப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

'லாவணி' என்றழைக்கப்படும் சமீபத்திய கதைப்பாட்டும் அம்மானைக் கதைப் பாட்டுப் போலவே அமைந்திருக்கும். குதிரை லாவணி போன்றவை அன்றாடப் பேச்சு வழக்குத் தமிழில் குறிப்பிட்ட இலக்கணம் ஏதுமின்றி அமை வதைப் பார்க்கலாம். அம்மானைப் பாடலின் இலக்கணம் பற்றித் தொல் காப்பியத்திலோ, பாட்டியல் போன்ற பழைய யாப்பிலக்கண நூல்களிலோ குறிப்பில்லை. சிலப்பதிகாரத்திலும் சிற்றிலக்கியங்களிலும் பிரபந்தங்களிலும் அண்மைக்கால நாட்டுப்புற இலக்கியத்திலும் தாம் கண்ட அம்மானைப் பாடல் அமைப்புக்களை நோக்கி அதற்கான யாப்பு இலக்கணத்தை முதன் முறையாக நமக்குத் தந்தவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். அறுவகை இலக்கணம் என்னும் அவரது நூலில் உள்ள நூற்பாக்கள் அம்மானைப் பாடலின் காலத்திற்கேற்ற வளர்ச்சியையும் காட்டுகின்றன.

"இரண்டு நாலைந் தெனுமடி ஈற்றில்
தன்பெயர் குலவத் தக்க அம்மானை
ஐந்தடிக் கலிப்பா போலும் அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே
கூறினர் பற்பலர் குவலயத் திடத்தே"

"அம்மானை ஈற்றின் விடைமொழி யதனுள்
இருபொருள் காட்டல் மிகையாம் முப்பொருள்
நாற்பொருள் மொழியினும் இசைவுறல் நலமே"

"கலிப்பா அரையரை யாகக் கூட்டியும்
எதுகை இன்றித் தனித்தனி சேர்த்தும்
காதை அம்மானை கழறினர் சிலரே"

"கொச்சகச் சீர்கொடு கூறுமம் மானை
இழிவின தாகுமென் றிசைப்பது துணிவே"

இதுவரை நாம் கண்ட செய்திகளிலிருந்து, அம்மானை என்னும் செய்யுள் வகை சிலப்பதிகாரத்தில் பிறந்து, மணிவாசகரின் திருவம்மானையில் தவழ்ந்து, சிற்றிலக்கியம் பிரபந்தங்களில் முழு வளர்ச்சியுற்று, அண்மைக் கால அம்மானைக் கதைப் பாட்டுக்களைத் தன் குழந்தைகளாகப் பெற்று நம்மிடையே இன்னும் இளமை குன்றாத் தமிழ் இலக்கியமாகத் திகழ்கிறது என்று அறிகிறோம்.

## கந்தபுரணக் கதைச் சுருக்கம்

முருகனின் சிறப்புக்களை வடமொழியில் எழுந்த ஸ்கந்த புராணமே முதன் முதல் குறிப்பிடுகின்றது. வடமொழியில் எழுந்த ஸ்கந்தபுராணத்தைத் தழுவி தமிழில் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் என்ற நூலைப் பாடினார். வடமொழியில் ஸ்கந்தபுராணம் என்ற ஒரு புராணம் எழுந்துள்ளமை பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து முரண்பாடுகள் உள்ளன. கந்தபுராணம் முருகனைப்பற்றிப் பாட, தமிழில் எழுந்த முதற்புராணமாகும். இப்புராணம் தோன்றிய காலம் பன்னிரெண்டாம் நூற்றாண்டு என்பர். முருகப் பெருமானுடைய திருவருளை முன்னிட்டு கச்சியப்பர் சிவாச்சாரியார் அவரது பாடல்களைப் பாடவேண்டும் என்று எண்ணினார். அவருடைய தந்தையார் காலத்தியப்ப சிவாச்சாரியார், "முருகப்பெருமானிடத்தில் இணையில்லாத பக்தியுடைய நீங்களே கந்தபுராணத்தை தமிழில் பாடவேண்டும்" என்று மகனுக்குக் கூறினார். அப்போது, கச்சியப்பசிவாச்சாரியார் இதை எப்படிப் பாடுவது? என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, "திகடசக்கரம்" என்ற தொடர் அசரீதியாகக் கிடைத்தது. அதைக் கேட்டு இறைவன் திருவருள் பாலித்தான் என்று ஆனந்தம் கொண்டு அதையே தொடக்கமாக வைத்துப் பாடினார்.

கச்சியப்பசிவாச்சாரியார் இயற்றியுள்ள கந்தபுராணத்தில் பதின் மூவாயிரம் சுலோகங்கள் உள்ளன. அவர் அதை, 10345 பாடல்களில் பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டையும் ஆழமாகப் பார்த்து பொருள் செய்வதானால் ஒரு மக - மகம் ஆகும் என்பர். அத்தகைய பொருள் பதிந்த செய்தியை கந்தபுராணம் தருகின்றது. ஆகவேதான், "கந்த புராணத்தில் இல்லாத பொருள் எந்த புராணத்திலும் இல்லை" என்பர். கந்தபுராணம் ஆறு சம்கிதைகள் அடங்கியது. ஐம்பது காண்டங்களை உடையது. சுதைகுமார சம்கிதை, சூத சம்கிதை, பிரம்ம சம்கிதை, விஸ்ணு சம்கிதை, சங்கர சம்கிதை, சூரசம்கிதை என்னும் ஆறு சம்கிதைகள். சங்கர சம்கிதையில் முப்பதி னாயிரம் சுலோகங்களும் பன்னிரெண்டு காண்டங்களும் இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது சிவரகசியக்காண்டம் இது பதின்மூவாயிரம் சுலோகங்களையும், உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்று ஏழு காண்டங்களையும் கொண்டது. தேவகாண்டத்தில் வள்ளி

திருமணம் எனும் படலத்தில் வள்ளியம்மன் அம்மானைக்கான உள்ளீடுகள் பெறப்பட்டுளமையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அசுரர்களுடைய கொடுவினை தாங்கமுடியாத திருமால், பிரமன், இந்திராதி தேவர்கள் சிவனிடம் சென்று முறையிடுகின்றனர். ஈசன் அவர்கள் வேண்டுகோளை ஏற்று அபயமளித்து அனுப்புகின்றார். சிவனது ஆறு திருமுகங்களுடனும் திருக்கோலங்கொண்டு, ஆறு தீப்பொறிகளை நெற்றிக் கண்ணில் இருந்து அருளுகின்றார். (தோற்றுவித்தார்) அவை சிவனுடைய ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், ஆறாவதாகிய உள்முகம் அடங்குகின்றது. இந்தத் தீப்பொறிகளைச் சுமந்து சென்று கங்கையில் விடுமாறு வாயுவுக்கும், அக்கினிக்கும் கட்டளையிட அவ்வாறே செயற்படுகின்றனர். கங்கையும் அத்தீப் பொறிகளை இமயமலைச் சாரலில் உள்ள சரவணப்பொய்கையில் சேர்த்துவிட்டாள். அங்கு முருகன் தோன்றுகின்றார்.

திருமாலின் திருநயனங்களிலிருந்து அமிர்தவல்லி, சுந்தர வல்லி எனும் இருவரும் தோன்றுகின்றனர். இவர்கள் முருகனை அடைவதற்காகச் சரவணப்பொய்கைக்கு அருகில் தவம் செய்கின்றனர். தவத்தின் வலிமை அறிந்த முருகன் அங்கு சென்று, அமிர்தவல்லியைத் தெய்வேந்திரன் மகளாக வளர்ந்து வருமாறு கூறுகின்றார். உரியகாலம் வரும்போது அவளை மணந்துகொள்வதாகவும் அருள்பாலித்தார். அவ்வாறே சுந்தரவல் லியிடம் சிவமுனிவன் குழந்தையாகி வேடுவர் குலத்தில் வளர்ந்து தன்னை மணம்புரியக் காத்திருக்குமாறும் பணித்தார்.

வள்ளிமலையில் சிவன் எனும் முனிவர் தவமியற்றி வந்தார். அவரெதிரில் அழகிய மான் ஒன்று வந்தது. அந்த மானைக்கண்டு முனிவர் மோகம் கொள்ள, அந்த மான் கருவுற்று ஒரு பெண்மகவை ஈன்றது. காட்டில் வள்ளிக் கொடிகளுக்கிடையே தோன்றிய அந்தக் குழந்தையினை வேடர் தலைவன் கண்டெடுத்து, தனது மனைவியிடம் கொடுக்கின்றான். மிக்க மகிழ்ச்சியுடன் அந்தக் குழந்தையினை அவர்கள் வளர்த்துவருகின்றனர். தக்க வயது வந்ததும் வேடர்குல மரபுப்படி தினைப்புனம் காக்க அனுப்புகின்றனர். தினைப்புனத்தில் நாரதர் வள்ளியை கண்டு அவள் அழகை முருகனிடம் பலவாறு சொல்லி திருமணத்துக்கான ஏற்பாட்டினைச் செய்து வைக்கின்றார்.

முருகன் வேட்டைக்கு வந்து வேடுவனாக வள்ளிமுன் தோன்றி அவளைப் பற்றிய விவரங்களைக் கேட்டு தன் தாகத்தைத் தீர்க்கு மாறு வேண்கின்றார். அப்போது வேடுவ தலைவன் அங்கு வர வள்ளி அச்சமுறுகின்றாள். அந்தவேளை முருகன் வேங்கை மரமாக நின்றார். அங்குவந்த வேடுவர்கள் புதிதாகத் தோன்றிய அம்மரத்தை வெட்ட முனைந்தபோது வேடுவதலைவன் தடுக்கின்றான். இந்த மரம் குளிர்மை யாக இருக்க உதவும் என்று அங்கிருந்து செல்கின்றனர். காடுகளைச்

சுற்றிப் பார்த்து விட்டு வேடுவர்கள் மீண்டும் வந்தபோது முருகன் ஒரு கிழவர் வடிவில் அவர்கள் முன் தோன்றினார். சிவப்பழமாய்த் தோன்றிய முருகனை வேடுவதலைவன் வணங்க முருகன் விபூதி அணிந்து ஆசிகூறினார். கிழவன் வருகையை கேட்டறிந்த வேடுவதலைவன் அவர் விருப்பப்படி வேடமலையில் உள்ள குமரித்தீர்த்தத்தில் நீராடி வள்ளிக்குத் துணையாக இருக்கும்படி கூறுகின்றான்.

வள்ளி கொடுத்த தேனும் தினைமாவையும் உண்ட முருகன் நீர் வேட்கை தனியத் தண்ணீர் கேட்டார். அவள் கிழவனிடம், இங்கிருந்து ஏழுமலை தாண்டிச் சென்றால் தண்ணீர் கிடைக்குமென்று கூற, அவளையும் துணைக்கு அழைத்துக்கொண்டு அங்கு செல்கின்றார். நீரைக்காட்டி தாகம் தீரும்வரை பருகுமாறுகூறி கரையில் நிற்கின்றாள். சிறிது நேரம் கழிந்து இப்பொது எனக்கு நீர் வேட்கை தீர்ந்ததென்றும், ஆனால், அப்போது ஏற்பட்ட மோகதாகத்தைத் தணிக்குமாறு வள்ளியை வேண்டினார். அதற்கு இசைய வள்ளி மறுத்து, வேடுவர்களால் ஆபத்து ஏற்படும் என்று கூறி இருப்பிடம் நோக்கிச் செல்லப் புறப்பட்டாள். அப்போது முருகன் அண்ணன் கணபதியை நினைக்க, அவர் முரட்டு யானையாக வள்ளிமுன் தோன்றினார். அதனைக் கண்ட வள்ளி அஞ்சி முருகனின் பக்கம் ஓடிவந்து, தன்னைக் காக்கும்படியும் தனது சொல்லுக்கு இசைவேன் என்றும் கூறினாள். அப்போது யானையும் சென்றுவிடவே வள்ளிக்குத் தனது சுயரூபத்தைக் காட்டுகின்றார்.

வள்ளி தினைப்புனம் வந்ததும் அவளுடைய உடலில் ஏற்பட்ட மாற்றம் பற்றி தோழியர்கள் விசாரிக்கின்றனர். இந்த வேளையில் முருகன் மீண்டும் வேடவடிவில் அங்கு வந்து அந்தப் பக்கம் அம்பால் அடிபட்ட யானையைக் கண்டீர்களா என விசாரிக்கின்றார். அந்த வேளையில் வள்ளியின் கண்களும், அந்த வேடனின் கண்களும் ஒன்றிணைந்தமையி னைக் கண்ட தோழி பக்கத்தில் இருந்த வயலுக்குச் சென்றாள். அவளிடம் வள்ளியைச் சேர்த்துவைக்குமாறு வேடனாக வந்த முருகன் வேண்டுகின்றான். இதற்கு இயைந்த தோழி வேடர்கள் கண்ணில் பட்டால் ஆபத்து நேரும் என்று கூறுகின்றாள். இதன்படி பக்கத்தில் உள்ள சோலையில் முருகனும் வள்ளியும் சந்தித்து அளவலாவி மகிழ்ந்தனர். பின்னர அங்குவந்த தோழி வள்ளியைப் பிரித்துச் செல்கின்றாள். தினைகள் முற்றிவிட தினைப்புனக் காவலும் முடிவு பெற்றது. வள்ளியும் தோழியும் வீட்டை அடைந்தனர். வள்ளியினுடைய உடலில் மாற்றங்கண்ட பெற்றோர்கள் வள்ளிக்கும் முருகனுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி அறிந்து கொண்டனர்.

வள்ளியின் வீட்டின் பின்புறத்தில் அன்றிரவு முருகன் வந்து காத்தி ருந்தார். அவரிடம் தோழியர் வள்ளியை ஒப்படைக்கின்றனர். அன்றிரவை மகிழ்ச்சியுடன் கழித்த அவர்கள், விடியற்காலை தலைமறைவாகின்றனர்.

அவ்வேளை வள்ளியைக் காணாமல் வேடர்கள் தேடுகின்றனர். பின்னர் வள்ளி முருகனுடன் இருக்கும் இடமறிந்து அங்கு செல்கின்றனர். அங்கு சென்றபோது இருவருக்கும் சண்டை இடம்பெறுகின்றது. வேடர்கள் பாணங்கள் எய்தனர். அப்போது ஆறுமுகன் சேவலை நினைக்க அது அங்கு வந்து பயங்கரமாய்க் கத்தியது. அனைவரும் அஞ்சி ஓடினார். சிலர் மயங்கி வீழ்ந்தனர், வள்ளியின் தந்தையும் வீழ்ந்துகிடந்தார். அப்போது அங்குவந்த நாரதர் அனைவரையும் எழுப்பும்படி கூறி வள்ளியை முறைப்படி திருமணம் செய்துகொள்ளுமாறும் பிராத்தித்தார். அவ்வாறே முருகன் அனைவரையும் ஒரே பார்வையால் எழுப்பி, தனது ஆறுமுகத்துடன் காட்சியளித்தார். பின்னர் முருகன் – வள்ளி திருமணம் இடம்பெற்றது. திருமணத்திற்கு பார்வதி பரமேசுபரரும் தோன்றினர். அத்தோடு இந்திராதி தேவர்களும் மலர்மாலை பொழிந்தனர். பின்னர் பரமனைவழிபட்டு அருளைப்பெற்று வள்ளியுடன் கந்தகிரியை அடைந்தார். தெய்வானை, வள்ளியையும் முருகனையும் அன்புடன் வரவேற்று தனக்கு ஒரு துணைகிடைத்திருப்பதாக மனம் மகிழ்ந்தாள்.

## வள்ளியம்மன் அம்மானை

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வைகுந்த அம்மானை, இராமர் அம்மானை, பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை பேன்ற அம்மானைகள் எழுந்துள்ளன. அவற்றுள் சில அச்சுவாகனமும் ஏறியுள்ளன. இங் கு எழுந்த அம்மானைகளுள் வள்ளியம்மன் அம்மானையும் ஒன்றாகும். வள்ளியம்மன் பிறப்பு, அவளை வேடர்கள் கண்டெடுத்து வளர்த்தல், தினைப்புனம் காத்தல், முருகன் வள்ளியிடம் செல்லுதல், அங்கு இடம் பெற்ற திருவிளையாடல்கள், வள்ளிக்கு முருக வடிவத்தைக் காட்டுதல், முத்தியின்பம் அடைதல் என்ற வகையில் அதன் கதை அமைப்பு அமைந்துள்ளது. அதாவது புராணக்கதையினை சாதாரண மக்களுக்கு புரியவைப்பதற்காக, சமூகத்தில் காணப்படுகின்ற காதல் கதைச் சம்பவத்தை உள்வாங்கி வள்ளியம்மன் அம்மானையினைப் படைத்திருப்பது சிறப்பான சிந்தனைக் கிளறலாகும். இன்றும் வள்ளி தினைப்புனத்துடன் இணைந்த வள்ளியம்மன் வட மோடிக் கூத்து, வள்ளி தினைப்புனம் எனும் கரகாட்டம் முதலிய ஆற்றுகைகள் மட்டக்களப்புத் தமிழக மக்களிடையே பயில் நியைில் உள்ளன.

## தேவலேகக் காட்சி

தேவலேகத்தில் தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இருக்கின்றனர். விஷ்ணுவும் அந்த இடத்தில் இருக்கின்றார். விபூதை என்ற பெண்ணொருத்தி ஆயனுடைய அழகுக்கண்டு மயங்குகின்றாள். இவள் பூங்காவனத்தில் இருந்த காலத்தில் மின்னாள் பிறக்கின்றாள். (வள்ளி) அவள் வளர்ந்துவரும் காலத்தில் ஆறுமுகன் மேலே ஆசை கொண்டு, அவரை அடைவதற்காக அரியதவம் செய்கின்றாள். தவத்தின் வலிமை

அறிந்து அவ்விடம் சென்ற முருகன் "நான் இந்தப் பிறவியில் உன்னை மணக்கமுடியாது. ஏற்கனவே திருமணம் செய்துள்ளேன். அதனால், அடுத்த பிறவியில் நீ பிறந்தால் உன்னை மணப்பேன்" என்று வாக்குக் கொடுக்கின்றார். அவளும் அதற்கு, "எந்தப் பிறப்பானாலும் என்னை நீ மணந்துகொள்" என்று, முருகன் வாக்கினை ஏற்றுக்கொண்டு தவத்தினை நிறைவு செய்கின்றாள். பின்னர் முருகன் "நீ மானின் வயிற்றில் பிறப்பாய்" என்று வரங்கொடுத்து மறைகின்றார்.

## மான் கருக்கொள்ளுதல்

கலைக்கோட்டுமாமுனி என்பவன் தவம் செய்து கொண்டு இருக்கும் போது, கன்னி இளம்மான் ஒன்று துள்ளிவருவதனைக் கண்டு அதன்மேலே ஆசைகொள்கின்றார். அந்த மானைப் பார்த்த மாத்திரத்திதே அவ்மான் கருக்கொள்கின்றது. கருக்கொண்ட மான் வள்ளிக்குளியருகே வந்து கன்றை ஈன்று அந்த இடத்தைவிட்டு நீங்கிச் செல்கின்றது. அப்போது அந்தக் குழந்தைதனை பூமாது எடுத்து தேனமிர்து கொடுத்து சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்றாள். இவ்வாறு செல்லுகையில் அந்த வழியால் மிருகவேட்டை முடித்துக்கொண்டு குறவர்களும் குறத்திகளும் தங்களுடைய வாழ் விடத்துக்குப் போவதற்கு வருகின்ற வேளையில், வாவிச்சுனை அருகே குழந்தை அழுகின்ற சத்தத்தை உணர்கின்றனர். அதிசயத்தோடு அங்கு சென்ற அவர்களுக்கு இந்தக் குழந்தை கிடைக்கின்றாள். அக்குழந்தைதனை சந்தோசத்துடன் எடுத்து அவர்கள் வளர்க்கின்றனர்.

## குழந்தை வளர்ப்பு

குறவர்கள் வெகுசந்தேசாசமாக அந்தக் குழந்தையினை வளர்க்கின்றனர். முலைப்பால் கொடுத்தல், மஞ்சல் நீராட்டுதல், மடியில் வைத்துத் தாலாட்டுதல், வெள்ளி, தங்கம், செம்பொன் போன்றவற்றால் கட்டில் செய்து குழந்தையினை வள...த்தல் என்று செற்பாடு நீள்கின்றது. இவ்வாறாக காலவோட்டத்தில் அவளுக்கு பன்னிரெண்டு வயதாகின்றது. இந்த வயதில் அவர்களுடைய முறைப்படி திணைப்புனத்தினைக் காவல் காப்பதற்கு அனுப்புவது வழக்கமாகும். அதன்படியே அவர்களும் வள்ளியினையும் அவளுடன் தோழிமாரையும் அனுப்பி வைக்கின்றனர். இவர்கள் திணைப் புனத்தினை மிருகங்கள், பறவைகள் நெருங்கா வண்ணம் 'ஆலோலம்' என்ற இசையினை இசைத்துக் கொண்டு 'கவுணால்' கல் லெறிந்து காவல் செய்கின்றனர்.

## நாரதன் வருதல்

ஆலோலம் என்ற இசையுடன் காவல் செய்கின்ற இசை நாரதனுடைய செவிகளுக்கு எட்டுகின்றது. அந்த இசையின் மகின்மையை அறிவதற்காக

நாரதன் திணைப்புனத்திற்கு வருகின்றான். அங்கு வள்ளியின் அழகைக் கண்ட அவன் அதில் மயங்கி, இவள் அழகினை யாருக்கும் ஒப்புவிக்க முடியாது என்று, அவளது அங்க அழகைப் பலவாறு இரசித்து இவள் முருகனுக்கு எற்றவள்தான் என்று பின்வருமாறு கூறுகின்றான். "மின்னாளோ! நீ சூரபத்மரை வென்ற, தோகை மயிலில் வலம்வருகின்ற மயில்வாகனருக்குத் துணை யாகுவீரே" என்கின்றார். இதனைக் கேட்டு நாரதனுக்குப் பலவாறுரைத்து புனத்தைவிட்டு வெளியேசெல், இல்லா விட்டால் அண்ணன்மார் வந்தால் உனக்குப் பிரச்சினைவரும் என்று கூறுகின்றாள். அதற்கு நாரதன் நீ ஏன் காட்டில் வாழவேண்டும், மிருகம் பறவை போன்ற இறைச்சிகளை ஏன் உண்டு வாழவேண்டும் இராணியாக இருக்கவேண்டிய உனக்கு இந்த வாழ்க்கை பொருந்தாது என்கின்றான். அதற்கு வள்ளி "நீ எப்படிச் சொன்னாலும் நாங்கள் குறவருக்குரிய நடைமுறையில்தான் வாழ்வோம். அதுதான் எங்களுக்குச் சந்தேஷம் நீ செல் லலாம். எங்களைப்பாதுகாப்பதற்கு வேலன் துணையாக இருக்கின்றார்" என்று தெளிவாகவே கூறுகின்றாள். "நாரதனும் உன்னுடைய செய்தியினை வரிதப்பாமலே முருகனுக்கு முன்வைப்பேன் அப்போது அவர் வருவார்" என்று கூறி புனத்தைவிட்டுச் செல்கின்றார்.

## முருகனும் நாரதனும்

நாரதர் வள்ளியினுடைய புற அழகுதனை அப்படியே முருகனுக்கு ஒப்புவிக்கின்றார். அந்தக் கன்னியினுடைய திருஅழகுதனை உணர்ந்து கொண்டவேலவனார், மெய்மயங்குகின்றார். இந்த மயக்கம் ஏன் உண்டானது என்பதனைத் தெய்வானை அறிந்துகொண்டு நாரதனுக்கு கடியசொல்லால் ஏசுகின்றாள். "நீ கொற்றவரையெல்லாம் கூட்டிப்பகை யாக்கி, மற்றவரைப் வதைக்கத் செய்வதில் உனக்கு சந்தோஷம். நான் ஒருத்தி இருப்பது தெரியாமல் வள்ளியைக் கூட்டிக்கொடுக்கப் போறீரோ மாமுனியே" என்று மனம்நொந்து பேசுகின்றாள். என் மனவாளனே என்னைத் தனியே விட்டு தொழும்பிழைக்கப் போறிரோ (பிரச்சினையில் மாட்டிக்கொள்ளுதல்) இது வேண்டாம் என்று கூறியும் வேலவர் அவளைத் தேற்றிச் வள்ளி இருக்கும் இடம் செல்கின்றார்.

## முருகன் திணைப்புனத்தினை அடைதல்

முருகன் வேடர்களைப் போலவே வனத்தில் இருப்பவர்கள் விரும்புகின்ற பொருட்களுடன் நடந்து செல்கின்றார். நீண்டதூரம் கடந்த அவர் வள்ளியைக் காணாமல் திகைக்கின்றார். அப்போது அவர் அங்குள்ள பறவைகளிடம் வள்ளியை நீங்களாவது பார்க்கவில்லையா? என்று விசாரிக்கின்றார். பதில் சரியாகக் கிடைக்கவில்லை. தெடர்ந்து நடந்து வள்ளி

இருக்கும் திணைப்புனத்தினை அடைகின்றார். அங்கு வள்ளியைக் கண்டு அவள் அழகில் மயங்கிய அவர் எப்படியும் இவளை மனைவியாக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு, வள்ளி முன்னே ஆண்டிவடிவாகச் செல்கின்றார்.

## முருகன் வள்ளி உரையாடல்

முருகன் வள்ளி உரையாடல் பலவாறு உணர்வுப்பூர்வமாக இடம் பெறுகின்றது. குறமகளாகிய வள்ளியைப் பார்த்து, என்னிடம் வளையல் வகைகள் உண்டு அதனை நீ பெறமாட்டீரோ? என்கின்றார். வளையல்மேல் ஆசைகொண்ட வள்ளி விலை கேட்கத் தெடங்கின்னாள். முருகனும் விலையை மாற்றி மாற்றிச் சொல்லி "ஆயிரம் பொன் கொடுத்தால் வளையல் கிடைக்கும் என்கின்றார்" அதற்கு அவள் எங்களுக்கு பொன் பற்றித் தெரியாது. திணை, வரகுதான் கொடுப்போம் என்று மறுத்துக் கூறுகின்றாள். இவ்வாறான நிலையில் முருகன் நீ பார்த்தால் சிறுபிள்ளையாய் இருக்கின்றாய். உனக்குத் தாய் தந்தை இல்லையோ, பிரமன் உன்னை காட்டில் வாழவா படைத்தான் என்று பலவாறு உணர்வுபுல்ர்வமாகக் கருத்துக்களை முன்வைக்கின்றார். அதனை ஏற்க மறுத்த வள்ளி, எங்களுக்குத் தாய் தகப்பான் யாவும் எங்கள் அண்ணன்மார்தான். திணைப் புனத்தைக் காப்பதுதான் எங்கள் தொழில் என்று குறவர்களுக்குரிய தொழிலை கூறி, எங்களை வேலவர் காப்பார் என்கின்றாள். முருகனும் ஊழின் விதிப்படியே எதுவும் இடம்பெறும் என்று கூறுகின்றார். இவ்வாறு கூறக்கேட்ட வள்ளியும் எங்கள் அண்ணர்மார் வந்தால் உங்களை கொன்றுவிடுவார்கள். நீங்கள் இங்கிருந்து உடன் சென்றுவிடுங்கள் என்று கூறுகின்றாள். முருகக்கடவுளும் மானே உனைநாடி வந்தேன் அல்லாமல், நான் இங்கிருந்து பேகமாட்டேன் என்று அடம்பிடித்து நிற்கின்றார்.

## வேங்கை மரமாதல்

வள்ளி, "புனத்தை விட்டுவெளியேறு இல்லாவிட்டால் உன்னை அண்ணன்மார் சாகவைத்துவிடுவார்கள்" என்று கூறிக்கொண்டிருக்கும் போது, குறவர்கள் அங்கு வருகின்றமையினை அறிந்து வேலவர் வேங்கை மரமாக மாறிவிடுகின்றார். அதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற குறவர்கள், இந்த மரம் இங்கு எப்படிவந்தது என்று வள்ளியிடம் கேட்கின்றனர். வள்ளி பயந்த மனோநிலையில் அதனைப் பற்றித் தெரியாது என்று கூறுகின்றாள். கோபம் மிகுதியான குறவர்கள் அந்த மரத்தை வெட்டுவதற்கு கோடரி, கத்தியுடன் தயாராகின்றனர். மரத்தைச் சுற்றிப்பார்த்த ஒரு வேடன் இது தெய்வமரம் என்று கூறி, இந்த மரத்தை வெட்டுவதனால் ஏதாவது தீவினைவரலாம், அதனால் உலகமும் அழியலாம் என்று வெட்டுவதற்கு மறுக்கின்றான். அதனை ஏற்ற வேடர்கள் எல்லோரும், இந்த மரம் உனக்கு குளிராக இருக்குமென்று வள்ளியிடம் சொல்லி, மீண்டும் வனத்தை நோக்கிச் செல்கின்றனர்.

## முருகன் மானிடராய் வருதல்

குறவர்கள் சென்றதன் பின்னர் மானிட வேடத்துடன் முருகன் காட்சி கொடுக்கின்றார். வேடுவர்கள் கண்டால் உன்னை வெட்டியே கொண்டுவிடுவார்கள் என்று கூறுகின்றாள் வள்ளி. அதற்கு முருகன், "நல் லவருக்குப் பொல்லாங்கு நாட்டில் வரமாட்டாது" என்று கூறி நீ எனக்குத் துணையாக உள்ளாய் என்கின்றார். மானே, நீ இங்கு பல கஷ்டங்களை அனுபவிக்கின்றாய், ஆகவே என்னுடன் வந்தால் உனக்கு விமோஷனம் கிடைக்கும் என்கின்றார். அக்கருத்தினை ஏற்கமறுத்து, தங்கள் குலவரலாறு பற்றி பலவாறுரைத்து, முருகனை புனத்தைவிட்டு வெளியேறும்படி மீண்டும் கூறுகின்றாள்.

## கிழப்பிராமண வடிவுகொண்டு நிற்றல்

மீண்டும் வேடுவர்கள் புனத்திற்கு வருகின்றனர். அதனை அறிந்த் வேலவர் காதில் குண்டலமும், புலித்தேல் ஆடையும் அணிந்துகொண்டு, குக்கல் இருமலுடன், கையில் தடியுடன் தள்ளாடித் தள்ளாடி அவர்கள் முன் ஆண்டியாக, காட்சி கொடுக்கின்றார். இவரைக் கண்டதும் வனவேடுவர்கள் வணங்குகின்றனர். அவரும் அவர்களுக்குத் திருநீறு அணிந்துவிடுகின்றார். வேடர்கள், "நீங்கள் ஏன் இந்த வயதில் கஷ்டப்பட்டு இங்கு வந்தீர்கள்" என்று கேட்கின்றனர். அதற்கு வேலவர், "அங்கே பாருங்கோ ஆடவரே நான் மாமாங்கம், காசி, வடகயிலை, இராமேஸ்வரம், குற்றாலம், பாவநாசம் என்று பல இடங்களில் உள்ள தீர்த்தங்களை ஆடியுள்ளேன். இங்கு கன்னிகாதீர்த்தம் உண்டாம் அதனை ஆடுவதற்காகத்தான் வந்துள்ளேன்" என்றார். நாங்கள் அறிந்தமட்டும் இந்தமலையில் கன்னிகாதீர்த்தம் இல் லை. ஆனால், நீங்கள் அந்தத் தீர்தமதனை ஆடாமல் இங்கிருந்து செல்லக் கூடாது. எங்கள் தங்கைக்கும் துணையாக இருங்கள் என்று செல்கின்றனர். இதனைக்கேட்ட வள்ளி வேலவனைப் பார்த்து பலவாறு உரைக்கின்றாள். எங்கள் அண்ணன்மார் உன்னை நம்பியுள்ளார்கள். அவர்கள் வரும்போது நீயோ பலவாறு அவர்களைக் கவர்ந்துள்ளாய் இது நம்பிக்கைத் துரோகம் என்றாள்.

## தேனும் தினைமாவும் உண்ணுதல்

வள்ளியுடன் பலவாறு உரையாடிக் கொண்டிருந்தபோது வேலவர் தனக்குப் பசிக்குது என்று கூறுகின்றார். அதனை உணர்ந்த வள்ளி; தேக்கிலையில் வைத்து தேனும் தினைமாவும் கொடுக்கின்றாள். அதனை உண்ட பிறகு, தண்ணீர் கேட்கின்றார். அதற்கு அவள், இங்கு குடிதண்ணீர் இல்லை. அதோ பல மலைகளும் சந்தனச்சோலையும் கடந்து சென்று அங்குள்ள சுனையில் நீர் பருகலாம் என்கின்றாள். அங்கு போகுமிடம் தனக்குத் தெரியாது என்று கூறி வள்ளியையும் அழைத்துச் செல்கின்றார்.

அங்கு சென்றதும் அவர், சுனையில் நீர்பருகுவது போல் இறங்கி விழுந்து மிதக்கின்றார். வேலவரும் கைதாரும் என்று கேட்க, வள்ளியும் பயந்து கைகொடுத்து அவரை கரையேற்றுகின்றாள். இதன் பின்னர் முருகன் பலவாறு அவளை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகின்றார் ஆனால், அவையொன்றும் கைகூடவில்லை. இவருடைய செயற்பாட்டினை உணர்ந்து அவள் வேலவரைப் பலவாறு தீட்டித்தீர்த்து வனத்தில் நெடுந்தூரம் நடந்து செல்கின்றாள்.

## முருகன் விநாயகனை நினைத்தல்

முருகன் விநாயகரை உதவிக்கு அழைக்கின்றார். அப்பொழுது அவரும் மதங்கொண்ட யானையாகக் காட்சி கொடுக்கின்றார். அதனைக் கண்டதும் வள்ளி தடுமாறிப் பயந்து வெருண்டு முருகனிடம் ஓடிவந்து காப்பாற்று காப்பாற்று என்று கூறி, நான் உனக்குத் தஞ்சம் என்கின்றாள். அதன்படி யானையை விலக்கவே இருவரும் சுனையருகே இன்பமுடன் இருக்கின்ற வேளையில்தான் முருகன் தனது சொரூபத்தை வள்ளிக்குக் காட்டுகின்றார். சொருபங்கண்டு மயங்கிய வள்ளி வேலவரைப் பற்றிப் பலவாறுரைக்கின்றாள். நான் தங்களைப் பற்றி ஏதேதோ உரைத்தேன் அவையெல்லாம் பொறுத்தருளுவீராக என்று வேண்டுகின்றாள். வேலவர் முற்பிறப்பிலே நீர் என்னை அடைவதற்காக அரிய தவம் செய்தாய். அப்போது நான் அங்குவந்து உனக்குக்கொடுத்த வரத்தின்படியே இப்பிறப்பில் ஆட்கொண்டேன் என்று கூறுகின்றார்.

## வள்ளியைத் தோழிகள் வினவுதல்

வள்ளி வேலவருடன் சென்று திரும்பி தினைப்புனத்திற்கு வருகின்றாள். அப்போது வள்ளியை தோழிகள் "நீ எங்கே சென்று வருகின்றாய்" என்று வினவுகின்றனர். இப்பொழுது நீ வாடி மெலிந்துள்ளாய், மனம் தளர்ந்துள்ளாய், முகம் வாடியுள்ளது, தலைமயிர் அவிழ்ந்துள்ளது என்று அவளுடைய அங்கங்களில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். இதற்கு வள்ளி பொருத்தமாகப் பதில் சொல்லுகின்றாள். "நான் வனத்தில் வரும்போது மதகரியைக் கண்டு பயந்து, அந்தக் கிழவனை விட்டு ஓடிவந்துள்ளேன். என்ன செய்வானோ கிழவன் நான் அறியோன்" என்று பதட்டப்பட்டுப் பதில் கூறுகின்றாள்.

## முருகன் வருதல்

தோழியரும் வள்ளியும் உரையாடிக் கொண்டிருக்கும்போது வேலவர் அங்கு வேடுவ உருவத்தில் வருகின்றார். நான் ஒரு கன்னிமானுக்கு ஐந்து கணைகளால் எய்தேன் அது அம்புபட்டு இந்தப்பக்கம் வந்துள்ளது. அதனைக் கானவில்லையா என்று வினவுகின்றார். அதற்கு தோழி

மார் பலவாறு விடைகொடுக்கின்றனர். நீ ஐந்து கனைகள் தொடுத்ததாகக் கூறுகின்றாய் அப்படியானால் அந்த இடத்திலே அந்த மான் இறந்திருக்கவேண்டும். உன்னுடைய வேடிக்கை என்ன என்று வினவுகின்றனர். வேலவரும் பலவாறு சொல்லியும் அவர்களும் விடவில்லை. இவ்வாறான நிலையில் அவர்களுக்கும் முருகன் தனது சொரூபத்தைக் காட்டுகின்றார். மெய் தடுமாறிய அவர்கள் அவரை வீழ்ந்து வணங்கி, கானகம் வந்த காரணம் என்னவென்று வினவுகின்றனர். நான் வள்ளியை ஆட்கொள்ள வந்தேன் நீங்கள் அதற்கு உதவிசெய்யவேண்டும் என்று தயவுடன் கேட்கின்றார்.

## தோழியர் வள்ளிக்குக் கூறுதல்

தோழியர் வள்ளிக்கு தேவலோகக் காட்சி பற்றி தெளிவுபடுத்துகின்றனர். அதாவது, நீர் என்ன தவம் செய்தீரோ! இப்பு வியில். எத்தனை எத்தனை கோடி மனிதர்களில் அத்தனைபேரும் அடையாத பேறு உனக்குக் கிடைக்கின்றது. உன் தலையெழுத்து தப்பாது. உன்னுடைய தயவாலே நாங்களும் பேறுபெற்றோம் என்கின்றனர். இவ்வாறு கூறிக்கொண்டிரு;கும்போது வேலவர் அங்கருந்து செல்கின்றார். அப்போது வள்ளியும் உன்கூட நானும் வாறேன் என்று கூறுகின்றாள். அதற்கு வேலவரும் இன்று திருச்செந்தூர் செல்கின்றேன், நாளை நான் வருவேன் என்றார்.

## முருகனின் வரவை எதிர்பார்த்து வள்ளி ஏங்குதல்

முருகன் புனத்தைவிட்டு சென்ற நாட்களை எண்ணி எண்ணி ஏங்குகின்றாள். அவளது மனம் பலவாறான சிந்தை கொண்டதாக இருக்கின்றது. அதாவது, அவரைக் காணவில்லை என்றாள் நான் செத்து விடுவேன் என்று பலவாறு சொல்லி அழுகின்றாள். இவ்வாறான நிலையில் தோழியர் அவளைப் பல்வேறு வகையில் புத்தி கூறுத் தேற்றுகின்றனர். “வள்ளி நீ ஏக்கம் கொள்ளாதே. வேலவர் வெள்ளி உதிக்கும் முன்னே வந்துவிடுவிடுவார். அவர் உன்னை மறந்திருக்கமாட்டார்” என்று அவளை மீண்டும் தேற்றுகின்ற வேளையில் குறவர்கள் திணைப்புனம் வருகின்றனர்.

## திணை அறுத்தல்

திணையினை அறுத்ததும் அவர்கள் வாழும் சிற்றூர்க்குப் போக வேண்டி ஏற்படுகினறது. அதற்காகப் பொங்கள் பொங்கி இறைவனுக்குப் படைப்பார்கள். இந்த நிகழ்வு இடம்பெறப்போவதனை அறிந்து வள்ளியும் தோழியரும் மனம் கலங்கி நிற்கின்றனர். நாங்கள் இங்கிருந்து சென்ற பிறகு வேலவர் வந்தால் என்னைத் தேடுவாரே. மானே, மயிலே, குயிலே நான் புல்ங்காவை விட்டு போனால் அவர் வந்ததும், அச் செய்தியை அவரிடம் சொல்லிவிடுங்கள் என்று பலவாறு மனம் புலம்புகின்றாள். இதனைக்கேட்ட தோழியர் அவளை மீண்டும் தேற்றி “அவர் நிச்சயமாக வந்து உன்னைக் கொண்டு செல்வார் பயம்வேண்டாம்” என்று கூறும்போது வள்ளி மயக்க

முற்று நிலத்தில் வீழ்கின்றாள். இதனைப் பார்த்துப் பயந்த அண்ணன்மார் கந்தருக்கு காணிக்கை கட்டி, வெள்ளி மலைவாழும் வேலவர்க்கு அபயம் என்று வேண்டி வீடு செல்கின்றனர்.

## முருகன் வருதல்

புனத்தை விட்டு வள்ளி அவளுடைய சிற்றூர்க்குச் சென்றதும் அங்கு வேலவர் வருகின்றார். அங்கு வந்ததும் வள்ளியைக் காணாமல் பித்துப்பிடித்தவன்போல் ஏங்கித் தவிக்கின்றார். அவளைப் பற்றி பலவாறு சொல்லிப் புலம்புகின்றார். பின்னர் பறவைகளின் தகவலால் அவள் சிற்றூர்க்குப் போன தடயம் அறிந்து அங்கு செல்கின்றார். அங்கு சென்றதும் வேடுவர்கள் அவரை அங்குள்ள அத்திமரத்தின் கீழ் இருக்கச் செய்கின்றனர். அவரைக் கண்ட தோழியர் வேலவரை வணங்கி சிற்றூர்க்கு வந்த காரணம் பற்றி விளக்கமாகச் கூறுகின்றனர்.

## முருகனுடன் வள்ளி செல்லுதல்

தோழியருடைய சொல்லைக்கேட்டு வேலவரும் வள்ளியும் அங்கிருந்து வனந்தனிலே நடந்து செல்கின்றனர். இவர்கள் இருவரும் இல்லை என்பதனை அறிந்த வேடுவர்கள் கோபங்கொண்டு அவர்கள் நடந்தவளியே சென்று இருவரையும் வனத்தில் காண்கின்றனர். கண்டமா த்திரத்தே "கள்ளா நீ கள்ளியைத் திருடி வந்தாயோ உன்னை இப்போது கொல்வேன்" என்று பலவாறுரைக்கின்றனர். அங்கு இருவரையும் வதை செய்வதற்கு முனைகின்றனர். அப்போது முருகன் வள்ளியை தனக்குப் பின்னே மறைத்துக்கொண்டு, "வேடுவரே நீங்கள் இப்போது வீனாக இறந்துவிடப்போகிறீர்கள். தயவுசெய்து இங்கிருந்து போய்விடுங்கள்" என்று கூறுகின்றார். அதனைக் கேட்டதும் வெகுகோபங்கொண்டு சண்டை செய்கின்றனர். ஏற்பட்ட சண்டையினால் அவர்கள் அனைவரும் இறந்துவிடுகின்றனர். இதனைக் கண்ட வள்ளி என்னை வளர்த்தவர்கள் இறந்துவிட்டார்கள். இனி எனக்கு அன்னையர் யார் என்று சொல்லிப் பலவாறு புலம்புகின்றாள்.

## நாரதர் வருதல்

வேடுவர்கள் இறந்து கிடக்கும் இந்த நேரத்தில் நாரதர் அங்கு வருகின்றார். வந்ததும் வள்ளியையும் வடிவேலரையும் வணங்குகின்றார். அப்போது வேலருக்கு உடம்பில் குருதித் தடயம் இருப்பதனைக் கண்டு நடந்த விடயம் பற்றி வினவுகின்றார். வள்ளி அன்று முதல் இன்றுவரை நடந்தவற்றைக் கூறகின்றாள். இதனைக் கேட்ட நாரதர், வள்ளியின் மனம் வாடாவண்ணம் இறந்த வேடுவர்களை எழுப்பி அவர்களுக்கும் முத்தி யின்பம் கொடுக்கவேண்டும் என்று வினையமாக வேண்டுகின்றார். அதனை ஏற்றுக்கொண்ட வேலவர், அவர்களை எழுப்புகின்றார். அப்போது அவர்கள்

எழும்பி வந்து, எங்களை ஆட்கொண்ட பிரான் எங்கே இருக்கின்றார் என்று வள்ளியைக்கேட்க, வள்ளி முருகனைக் காட்டுகின்றார். எங்களுடைய குலத்தெய்வமாய், எங்களுக்காக இரங்கி இம்மலையில் வந்து அமர்ந்ததன் நோக்கம் என்னவென்று வினவுகின்றனர். அந்தவேளை அவர்களுக்கு ஆறுமுகனார் தனது சொரூபத்தைக் காட்ட அவர்கள் யாவரும் வீழ்ந்து வணங்குகி முத்தியின்பம்பெற வேண்டுகின்றனர்.

## வள்ளி திருமணம்

வேடுவர்களின் வேண்டுகேளுக்கும் ஏற்ப திருமணம் இடம் பெறுகின்றது. அலங்கரிப்பு, பந்தலிடுதல், பூரணகும்பம் வைத்தல், கோல மிடுதல், தரைமெழுக்கிடல், மாலைபோடுதல், மோதிரம் அணிதல் என்று பல நிகழ்வுகள் இடம் பெறுகின்றது. இந்த திருமணவிழாவிற்கு வானவர் கள், இந்திரன், சந்திரா, சூரியர், வருணன் என்று பலரும் வந்திருந்தனர். வள்ளியினுடைய வலது கரத்திலுள்ள சிறு விரலை பிடித்துக்கொண்டு வேலவர் வலம் வந்தார். திருமணம் முடிந்ததும் வள்ளிக்கு சீதனமாகப் பலபொருட்களைக் கொடுக்கின்றனர். இந்தவேளை இதனைப் பார்த்தி ருந்த தெய்வானை கோபங்கொண்டு முருகனை ஏசுகின்றாள். அந்த இடத்தில் நாரதர் உங்கள் தங்கை வள்ளியை நீங்கள்தான் பொறுத்தருள வேண்டும் என்று சாந்தப்படுத்துகின்றார். தெய்வானையும் விநாயகனை வணங்க, விநாயகன் முருகன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்கின்றார். அதனைக்கேட்டு சற்றுக்கோபம் தனிந்து "என் கண்ணில் முளியாவண்ணம் அவர்கள் வாழட்டும்" என்கின்றாள். மீண்டும் நாரதர் குற்றம் பொறுத்தருளவேண்டும் தாயே என்று கூறுகின்றார். தொடர்ந்து உமாதேவி யாரும் தெய்வானைக்குப் புத்திகூறி "உன் தங்கையுடன் நீ சோ்ந்திருப்பிர்" என்று கூறுகின்றாள். அதனைக்கேட்டு தெய்வானை "என் தங்கை நீயல்லோ எனக்கு இனி ஏது பயம்" என்று ஆசி கூறுகின்றாள். இந்த நிலையில் உமையம்மை வேலவரைப் பார்த்து "இப்போது நீ செல லலாம்" என்று கூறுகின்றாள். அப்போது வடிவேலர் மயில் வாகனத்திலும் தெய்வானை அன்ன வாகனத்திலும் வள்ளியம்மை கிளி வாகனத்திலும்; தெய்வலோகமே திரண்டு நிற்க திருச்செந்தூர் சென்றனர்.

## ஏட்டில் தவிர்க்கப்படும் எழுத்துக்கள்

இந்த அம்மானையில் பேச்சுவழக்குச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப் பட்டுள்ளன. அக்காலப் புலவர்கள் தங்கள் சமுகத்தில் நிலவிய சொற்களைப் பயன்படுத்தி ஏட்டினை எழுதியுள்ளனர். ஏடு எழுதும்போது எழுத்துக்கள் பல தவிர்க்கப்படுகின்றன. அவை ஊ, ஈ, ழு, ஐ, ஜ ஔ போன்ற எழுத்துக்களாகும். ஈ என்ற எழுத்து குத்துடன் காணப்படுவதனால் அது தவிர்க்கப்படுகின்றது. ஏடெழுதும்போது குத்துவைக்கப்படு வதில்லை. மற்ற எழுத்தக்களை ஏட்டில் சுழற்றி எழுதுவது சிரமமான விடயமாகும். ஆனால், அந்த எழுத்துக்களுக்குப்

பதிலாக வேறு வகை எழுத்துக்களைக் கையாண்டுள்ளனர். ஊ என்ற எழுத்துக்குப் பதிலாக பூ என்ற எழுத்தினையும், ஈ என்ற எழுத்துக்குப் பதிலாக, யீ என்ற எழுத்தினையும், ழ என்ற எழுத்துக்குப் பதிலாக, ள என்ற எழுத்தினையும், ஐ என்ற எழுத்துக்குப் பதிலாக, அய் என்ற எழுத்தினையும், ஜ என்ற எழுத்துக்குப் பதிலாக, ய என்ற எழுத்தினையும் ஔ என்ற எழுத்துக்குப் பதிலாக, அவ் என்ற எழுத்தினையும் பயன்படுத்தியமையினை அவதானிக்கமுடிகின்றது.

## பிரதேச வழக்குச் சொற்கள்

இந்த அம்மானையினைப் பாடியவர் ஆங்காங்கு பிரதேச வழக்குச் சொற்களைக் கையாண்டுள்ளமையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவற்றுக்கான விளக்கங்களை அடிக்குறிப்புப் பகுதியில் இயலுமான வரையிலும் தெளிவுபடுத்தியுள்ளேன். அச்சொற்களில் அதிக மானவை மட்டக்களப்புத் தமிழகத்தில் இன்னும் பயன்பாட்டில் உள்ளவை என்பது அவதானிக்கத்தக்கது.

## சைவசித்தாந்தக் கருத்து

வள்ளியம்மன் அம்மானையின் உள்ளீடு வினையின் பயனையே வெளிப்படுத்துகின்றமையினை கதையின் ஆரம்பமே எடுத்துக் காட்டு கின்றது. முருகன் கொடுத்த வாக்குக்கு ஏற்ப, மறுபிறப்பில் வள்ளியாக பிறந்தபோது திருமணம் இடம்பெறுகின்றது. முத்தி இன்பத்தினை சிவப்பேறு அல்லது முத்திநிலை என்பர். சிவபெருமானின் திருவருட்பேறு பெற்ற மணிவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில், சிவப்பேறு அல்லது முத்தி நிலை பற்றிப் பேசுகின்றார். முத்திநிலையில் இறைவன் ஒன்றாகவும் உடனாகவும், வேறாகவும் இருக்கின்றான். அவனுடன் நாம் முழுமையாகக் கலப்பதனால்தான் பேரின்பம் குறைவுபடாது கிடைக்கின்றது. அவன் வேறாக நிற்பதால் பேரின்பத்தை அவன் நமக்கு ஊட்ட முடிகின்றது. அவன் உடனாக நிற்பதால் அந்தப் பேரின்பத்தை நாம் அனுபவிக்கின்றோம்.

அணைந்தோர் அல்லது சீவன்முத்தர் இறைவனுடன் இரண்டாக்கலந்து நிற்பர். மும்மலங்களை ஞானம் எனும் நீரால் கழுவிப்போக்குவர். சிவமுத்தர் அனைத்தையும் சிவமாகவே காண்பர். இது அத்துவித நிலையாகும். இந்த முத்தியினை மேலும் விதேகமுத்தி, சதேகமுத்தி என இருவகைப்படுத்துவர். விதேகமுத்தி என்பது உடலை விட்டு உயிர் பிரிந்து இறை அருளை ஒன்றுதல். சதேகமுத்தி என்பது உடலுடனேயே இறை அருளைப்பெற்று இன்புதலாகும். சுந்தரரும், சேரமான் பெருமான் நாயனாரும் அடைந்தமுத்தி சதேகமுத்தி எனப்படுகின்றது. பிறவித் தளையைப் போக்கி வீடுபேறு அளிப்பதைச் சுந்தரர்

இங்கு வள்ளியம்மன் முருகனால் ஆட்கொள்ளப்படுவதும் சதேக முத்தி. கற்றவர்கள் முதற்கொண்டு மற்றவர்கள் வரைக்கும் புராணக்கதையின்

தொன்மத்தினை கதைவடிவில் முன்வைத்து, முத்தி நிலையினை எட்டுவதற்கான சிறப்பை இந்த இலக்கியம் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

## கல்வியல் சிந்தனை

### நாடகப் பாங்கு

இன்றைய கல்வி உலகில் முன்வைக்கப்படும் கற்பித்தல் உத்திகள் பலவகையாக அமையப்பெற்றுள்ளன. இதற்கு முன்னரே தொல்காப்பியர் முப்பத்தியிரண்டு வகையான கற்பித்தல் உத்திகளை முன்வைத்துள்ளார். அதனைப் பின்வந்த நன்னூலாரும் ஏற்று அதற்கான விளக்கத்தினைக் கொடுத்துள்ளார். இந்த கற்பித்தல் உத்திமுறைகளில் எளிமையானதும் மாணவர்களை அல்லது கேட்பவர்களை ஈர்க்கக்கூடியதுமாக அமைவது நாடகத் தன்மைவாய்ந்த கற்பித்தல் உத்தியாகும். வள்ளியம்மன் அம்மானை பாடிய புலவர் பாத்திரப்படைப்பு, உரையாடல், கதைப்பின்னல், கொண்டுசெல் லும் முறை, அடுத்து என்ன நடக்கப்போகுறதோ என்ற எதிர்பார்ப்புக்களை முன்வைத்து கதையினைக் கொண்டு சென்றுள்ளார். பொதுவாக கதையைப் படிப்போர், கேட்போர் இலகுவாக விளங்கிக்கொள்ளும் விதத்தில் இவ்அம் மானை நாடகப் பாங்கில் அமையப்பெற்றுள்ளது.

### வினாக்கேட்டல்

வினாக்கேட்டல் முறையானது வேத இலக்கியத்தில் மூழ்கின்றது. பின்னர் வேதங்களைத் தொடர்ந்து வந்த உபநிடதங்களிலே தெளிவான விளக்கம் கொடுக்கப்படுகின்றது. அங்கு குருவுக்கும் சீடனுக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் பிரமம் பற்றிய உன்மையினைத் தெளிவுபடுத்தி யது. அதாவது சீடனுக்குச் சந்தேகம் ஏற்படும் போதெல்லாம் அவன் வினாத் தொடுத்தவண்ணமே இருப்பான். அந்த வினாக்களுக்கு குரு களவழியாக விடையினைத் தெளிவுபடுத்தி அவனைப் பூரணத்துவமான சீடனாக மாறறியமையினை வேதங்கள் தெளிவுபடுத்தின. அதனைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களிலும் அதன் தொடர்ச்சியினைக் காணமுடிகின்றது. இந்த வினாக்கேட்டல் முறையானது மேலைநாட்டுக் கல்விமுறையில் முக்கிய இடத்தினைப்பெறுகின்றது. அரிஸ்டோட்டில் வினாக்கேட்டல் முறையின் சிறப்பினை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். அது வினாக் கேட்டல் முறை என்பதனையும்விட அரிஸ்டோட்டில்முறை என்றே சிறப்பாக அழைக்கப்படுகின்றது. அவ்வாறாயின் இந்த அம்மானையில் புலவர் வினாக்கேட்டல் முறையில் உரையாடல் இடம் பெறுவதனை இடையிடையே தெளிவாகவே காட்டுகின்றார். முருகனுக்கும் வள்ளிக்கும் இடையிலான உரையாடல், நாரதருக்கும் வள்ளிக்கும் இடையிலான உரையாடல், வள்ளிக்கும் தோளிகளுக்கும் இடையிலான உரையாடல்

என்று பாத்திரங்களின் உரையாடல் பலவகையில் இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது.

## தர்க்கம்

ஒரு விடயம் மற்றவர்களை இலகுவாகச் சென்றடைவதற்கான வழிமுறைகளில் ஒன்றாக இருப்பது தர்க்கித்துச் சொல்வதாகும். தர்க்கம் இடம்பெறுகின்றபோது பார்ப்பவர் அல்லது வாசகர்களுக்கு அதன் புரிதல் இலகுவாகிவிடும். இந்த முறையினைப் பழங்கால இலக்கியங்கள் தொடக்கம் கண்டுகொள்ளமுடிகின்றது. வள்ளியம்மன் அம்மானையில் தர்க்கமாகவே விடயங்கள் முன்கொண்டு செல்லப்படுகின்றன. முருகனுக்கும் வள்ளிக்கும் இடையில் இடம்பெறுகின்ற உரையாடல்கள் பல தர்க்கமாக இருப்பதனால், அக்கதையினை வாசகர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

## தெய்வீகக் காதல்

ஒரு தெய்வீக காதல் எவ்வாறு நிறைவேறுகின்றது என்பதற்கு வள்ளியம்மன் அம்மானை சிறந்த எடுத்துக்காட்டாகும். ஊழ்வினையினை எடுத்துக்காட்டுவதற்காக முனைந்த புலவர், அதனைக் காதல் கதையுடன் இணைத்துப்பார்க்கின்ற முறை சிறந்த உத்தியாகும். இறை சிந்தனையுடன் ஊசலாடும் கதை மானிட சிந்தனைக்குள் நின்று பார்க்கப்படுகின்ற முறை வியப்பை உண்டுபண்ணுகின்றது. சாதாரண மக்கள் மத்தியிலே வழக்கிலுள்ள மொழிநடையினைப் கையாண்டு இந்தப் படைப்பு முன்கொண்டு செல் லப்படுகின்றது. வள்ளி ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் காதல் எனும் நிலை தூண்டப்பட்டாலும் அவள் அதற்கு இசைந்து கொடுக்காதவளாகவே காட்டப்படுகின்றாள். இறுதியில் முருகன் என்று தெரிந்ததும் அதிக காதல் கொண்டவளாக மாறுகின்றாள். அதனால் அவளின் உடலில் காணப்படும் மாற்றங்களை தோழிகள் எடுத்தரைத்து அவளைத் தேற்றுகின்றனர். இந்தத் திருமணத்திற்கு இடம் இல்லாமல் போகும் என்பதற்காக இருவரும் ஓடிச் செல்கின்றனர். தங்கையினைக் காணாமல் தவித்த வேடுவர்கள் அவர்களைத் தேடிக் காட்டில் காணுகின்றார்கள். அங்கு முருகனுக்கும் வேடுவர்களுக்கும் சண்டை இடம்பெறுகின்றபோது வேடுவர்கள் அனைவரும் இறந்து விடுகின்றார்கள். அண்ணன்மார் இறந்ததனால் அதிக சோகம்கொண்டு அவர்களைத் தழுவி அழுவது சமுகத்தளத்தில் சாதாரண மக்களுக்கு ஏற்படும் மனவெழுச்சி என்பதனைப் புவலர் பதிவுசெய்கின்றார். "உனது வேண்டு கோளுக்கு ஏற்பவே நான் சண்டை செய்தேன்" என்ற தொடரால் காதலன்மீது கொண்ட அதீத அன்பும் வெளிப்படுகின்றது. பின்னர் நாரதர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க எல்லோரும் உயிர்பெற்று எழுகின்றனர். இறுதியாக

முருகனுக்கும் வள்ளிக்கும் திருமணம் இடம்பெறுகின்றது. அதன் பின்னர் வள்ளி, தெய்வானை, முருகன் மூவரும் திருச்செந்தூர் செல்கின்றனர்.

பொதுவாக மக்கள் யாவருக்கும் இலகுவான முறையில் பத்தி யினைச் சொல்வதற்கான ஒரு கருவியாக வள்ளியம்மன் அம்மானை படைக்கப்பட்டிருக்கின்றது. இறைவன் ஆன்மாக்களை ஆட் கொள்ளுகின்ற விடயம் பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதனை இவ்அம்மானை தெளிவுபடுத்தி நிற்கின்றது. கந்தபுராணத்தில் வருகின்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கின்ற இவ்விலக்கியம், ஒருவர், ஒரு பிறப்பில் செய்கின்ற நல்ல செயற்பாடுகளுக்கு மறுபிறப்பில் முத்தியின்பம் கிடைக்கின்றது என்பதனை, எல்லோரும் விரும்பும் காதல் கதையினை முன்வைத்து தெளிவுபடுத்தியுள்ளமை, புலரின் ஆளுமைத் திறத்தினை வெளிப்படுத்துகின்றது.

# பொருளடக்கம்

1. அணிந்துரை 4

2. ஆய்வுப் பதிப்பு 7

3. வள்ளியம்மன் அம்மானை 31

## காப்பு

செங்கைமுகில் நாரணரைச் செவ்வேள் குறமாதின்
பங்கையன்சேர் அம்மானை பாடவே – துங்கட
வியமுகத்தோன் வாரணத்தை மேவிட்டாக்கூத்தாடும்
கயமுகத்தோன் காரணமே காப்பு
மணமருவுங் பூங்கூந்தல் வள்ளி அம்மானுக்கு
கணபதியே இக்கதைக்குக் காப்பு
சீராகும் பன்னிருகைச் செவ்வேளை யான் பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்
முன்னடவாய் தந்தி முருகனுக்கு முகத்தோனே[1]
கன்னல் பொரி அவலும் கற்கண்டு சக்கரை தேன்
விடலை பல கனியும் விரைவில் படைத்திடுவேன்
சிறுபயறு சக்கரையும் தேன்பாகு நெற்பொரியும்
உறுதியுடன் உனக்கு உகந்து படைத்திடுவேன்
நாடித்தமிழ் தெரிந்து நல்லோர்கள் சொற்படியே
இப்புவியில் நானும் இயன்ற கவிபாடுவதற்கு
குற்றமொன்றும் வராமல் குறைதீர்ப்பாய் கற்பகமே
வேதம் விளங்க வேலவன் அருள் போற்றி செய்ய
கச்சளகு மேனி நல்ல காந்தல் மலர்ந்தாயே
அச்சமற உன்பாதம் மறவேன் உன்பாதம்
முன்னே பெரியோர் மொளிந்த[2] வகையறிவேன்
அஞ்சலெண்டு[3] வந்தேன் அடியேனை ஆளாக்கும்
தஞ்சமெனைக்காத்து தயவு செய்யும் சண்முகனே
சுந்தரம்சேர் வள்ளி பெருமான்[4] துணையெனவே

காரானை கற்பகதோன் கந்தனருள் பெற்ற கதை
வாரேறு பூமுலையாள் வள்ளியம்மன் பொற்பாதம்
ஆராய்ந்து வாழும் அனந்தன் பெருமானே
வடிவேலர் வள்ளிதனை வதுவைசெய்து வெண்டகதை[5]
அடியேன் உரைத்தேன் இப்புவியில் என்னாளும்
வள்ளிபதம் பாட வடிவேலர் அருளால்

---

1 *மூத்தோன்*

2 *மொழிந்த*

3 *அஞ்சல் என்று*

4 *வள்ளி பெருமான் என்பது முருகனைக் குறிக்கின்றது*

5 *வென்ற கதை*

வானத்திலே எழுந்த மதிக்கு நிகராக
கானமயிலுக்கிணையாய் கண்டிருந்த வான்கோளி[1]
தானும் சிறகை விரித்தாடினதென்ப தொக்கும்
அத்தன்மை தொக்கும் அடியேனுரைத்த தமிள்[2]
வந்து தரவேணும் வாய்த்த சரஸ்பதியே[3]
சிற்றெறும்பு கூடிச் சிறந்த சமுத்திரத்தை
வற்றக்குடிப்பனெண்ட[4] வகை போலுமாகுமிது
இலங்கை அளித்த இராவணனை மாலுமிக்கு
துலங்குகிரிவானாகர் சொல்லிற் சரியென்பதொக்கும்
விசைக்கடங்காப்பரிக்கு மேலான பூவுலகில்
குசப்புரவியோடிக் குதிப்பது சரியென்பதொக்கும்
பிட்சி சிறுவாட்சி செண்பகதுக்கு நிகராய்
இச்சையுடனே இயல்வாகப் பூக்கில்லையே
பத்தரைமாதத்துத் தங்கம் பசும் பொன்னாய் நின்டிலங்க[5]
பித்தளையும் கூடி அதில் பின்னே தான் நின்டிலையே[6]
அத்தன்மைக்கொக்கும் அடியேன் உரைத்த தமிள்[7]
குற்றங்கள் வராமல் குறை தீர்ப்பாய் கற்பகமே
அச்சமற உன்பாதம் மறவேன் ஒரு நாளும்எந்தன் குருவாளி[8]
ஈன்றெடுத்த தாய் வாளி [9]
தந்தை குருவாளி[10] சாந்தோர் மிகவாளி[11]
முன்பு பெரியோர் மொளியும்[12] வகையறியேன்
இன்சொல்லறியேன் இயலறியாப் பேதைதனைப்[13]

---

*1* வான்கோழி
*2* தமிழ்
*3* சரஷ்பதி, சரசுபதி
*4* வற்றக்குடிப்பேனென்ற
*5* நின்றிலங்க
*6* நின்றிலையே
*7* தமிழ்
*8* வாழி
*9* வாழி
*10* வாழி
*11* வாழி
*12* மொழியும்
*13* பேதை (பெண்களில் 5 முதல் 8 வயதுடையவர்) ஆனால், இங்கு வள்ளி குமரப்பருவம் உடையவளாக உள்ளாள். கிராமிய வழக்கில் பேதை என்பது எதனையும் தெரியாத பெண்.

அஞ்சவெண்டு[1] வந்து அடியேனை ஆளாக்கும்
சஞ்சமென்று வந்து தயவு செய்யும் சண்முகனே
சுந்தரன்சேர் வள்ளி பெருமான் துணை எனவே
என் தலைமேற் கொண்டேன் இனி ஒருநாளும் மறவேன்
ஆதவனுக்கு நிகராய் அப்புவியிலே சிறிய
மின்னாசியை பூவுலகில் வேந்தகனும் பாத்திருந்தார்
அரக்கர்குலத்தில் அரசர்களும் தேவர்களும்
மெய்யான வேலர் விரைந்து அடிதொளுதார்[2]
அய்யன்[3] முகுந்தன் அடிதொளுது[4] அப்போது
அன்நேரம் மாயன் அவர்தனையும் அஞ்லென்று
பொன்னான தேவர் பொருந்தும் அரக்கருடன்
வையகத்தில் தேவர்களும் படைபொரவே[5]
துய்யத்திருச்சங்கை தொனித்தனர் காண் அம்மனை
மேனக்திருமாலுடனே விண்னோரும் படை பொரவே
காவலரும் பொருதார் காசினி எல்லாம் அறிய
தேவர்நடுங்கிடவே திருமால் பொருதவுடன்
அரக்கர்குலம் தேவர் அறுபத்து அமரர் பயம் தீர்ததுவே
இரக்கமுடனே இவர்களையும் அஞ்சலென்று
காவலரும் ஆன திருக்கன்னியர்கள்[6] எல்லோரும்
பாவலரும் வந்து படைபொருதார் அம்மானை
ஏற்றவன்தான் அளகை[7] எல்லோரும் பார்த்து நின்டார்
அன்னை விபூதை[8] ஆயன் அளகு[9] கண்டு
காணிக்கை கட்டி கருத்துடனே பார்த்துநிண்டாள்[10]
திட்டமானமனதுடனே தேவர்சிறைமீட்டு
வெட்டி அசுரர்களை வெண்டகளம்[11] பாடி
சூரன்தனைவதைத்து தொல்லுலகமெல்லாமறிய

1 அஞ்சவென்று
2 அடிதொழுதார்
3 ஐயன்
4 அடிதொழுது
5 பொருதல் - கந்த புராணத்திலும் பொருதல் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது
6 திருக்கன்னியர் (தேவலோகப் பெண்கள்)
7 அழகு
8 விபுல்தை
9 அழகு
10 பார்த்து நின்றாள்
11 வென்றகளம்

பாரளந்தோன் மருகன் பராக்கிரமும் தான்பாடி
சேவங்கள் பாடித்திரு கடம்புதான் பாடி
பாவகங்கள் தான் பாடி பாடியவர் தானாடி
இப்படியே வாள்குமரி[1] இவள் வளரும் அன்னாளில்[2]
ஒப்புடைய மின்னைக்கு[3] ஒன்றிரண்டு மூன்ராகி[4]
நாலைந்தாம் ஆண்டில் நல்ல பிராயம் எட்டில்
மேலான பெண்களுடன் வேலவனார் தன்மேலே
மின்னுள் குமரி[5] விரும்பி மயலாகி[6]
கொங்கார் மூலை விபூதை[7] கொண்டமையால் கண்ட அண்ணர்[8]
பூங்காவனத்தில் இருந்தாள் காண் அம்மானை
மாதுவிபூதை வயிற்றில் கருவளந்து[9]
பேதைகுமரி[10] பிறந்தநாள் காண் அம்மானை
இன்னும் வீறுமா எளுத்தறியாப்[11] பேரளகாய்[12]
மின்னுள் பிறந்தவுடன் வானவரும் தேவர்களும்
மன்னர் பிரியமுற மாதாவும் தந்தையரும்
ஆறுமுகம் பாடி ஆளித்துவேல் பாடி
கூறுமயில் பாடி கோளி கொடி[13] பாடி
மாணிக்கம்முத்து மரகதம் கொண்ட தெல்லாம்
மின்னாட்குத்தான் அளித்து வீற்றிருக்கும் வேளையிலே
அன்னமின்னாள்[14] எல்லோரும் அப்போதவள் குரைப்பார்[15]
வாடி குமரி மைத்துனங்காண்[16] வேல்முருகர்

1 வாழ்குமரி
2 அந்நாளில்
3 மின்னைக்கு (வள்ளி)
4 மூன்றாகி
5 மின்னுள்குமரி
6 மயக்கமுற்று
7 விபூதை
8 அண்ணர் - அண்ணா
9 கருவளர்ந்து
10 பேதைகுமரி
11 எழுத்தறியா
12 பேரழகாய்
13 கோழிக்கொடி
14 அன்னமின்னாள்
15 அப்போது அவளுக்குரைப்பார்
16 மைத்துனன் (மச்சான் - மைத்துணன்)

தேடறிய வேல் முருகன் செந்திவேலாயுதங்காண்
அன்னேரமே குமரி ஆறுமுகவர் மேல் ஆசை கொண்டு
மின்னாள்[1] வடிவேலர் மேலே வெகுதுயராய்
கொந்தலரும் செண்பகப்பூக்கொப்பில் அமந்தாப்போல்[2]
விஸ்த்தாரமாக வேலவர்காய் வாள்குமரி[3]
சித்தங்கலங்கிச் சேயிளையாள்[4] அப்போது
மெத்தமயங்கி வினுந்தாள்[5] காண் அம்மானை
அன்னை விபூதைக்[6] அறிவித்தாள் அப்போது
மின்னுள் மயலறிந்து[7] மெல்லியர்கள்[8] எல்லோரும்
உன்னை மயல் தீற்க[9] ஒருவரால்[10] மூற்றிது[11]
மாலோன் மருகன் வடிவேலர் தன்மேலே
மன்னர் அறுமுகனார் வந்துதித்த பொய்கையிலே
மின்னே சரவணையில் மேவும் தவம் புரிந்தால்
நேராக நீரும் நில்லெண்டார்[12] அம்மானை

## விருத்தம்

அந்தமொளி[13] கேட்டு அறுமுகவர் மேல் ஆசை கொண்டு
சிந்தை மயலுற்றாள்[14] சேயிளையாள்[15] அப்போது
நின்றாள் தவமாக சேயிளையாள் பொய்கையிலே
குன்றறிந்தான்[16] வந்தார் குறித்து

---

1 மின்னாள்
2 அமர்ந்தாற்போல்
3 வேலவர்க்காய் வாழ்குமரி
4 சேயிழையாள்
5 வீழ்ந்தாள்
6 விபூதை
7 மயக்கமறிந்து
8 மெல்லியர்கள்
9 மயக்கம் தீர்க்க
10 ஒருவராலும்
11 முடியாது
12 நில்லென்றார்
13 அந்தமொழி
14 மயக்கமுற்றாள்
15 சேயிளையாள்
16 குன்றறிந்தான்

## நடை

செண்டந்த[1] பொய்கையிலே சேயிளையும் பன்னிரெண்டு[2]
நிண்டு[3] தவம் புரிந்தால் நினைத்தபடி முற்றுமென்று
அந்தமொளிகேட்டு[4] ஆனசரவணையில்[5]
வந்து நிண்டு[6] பூங்கொடியும் வடிவேலரை நோக்கி
நிண்டாள்[7] தவமாக நேரிளையும் அப்போது
கண்டு வடிவேலர் அவள் தவசிதானறிந்து
சிந்தைதனில் நினைத்து திருக்கை வேலாயுதரை
வந்தார் அறுமுகவர் வாய்ந்த சரவணையில்
மின்மருவுமானை வினவினர் அப்போடு[8]
தன்னையும் பாராமல் தவம் புரிந்தாள் அப்போது
பொற்பணியும் கற்பும் பொருந்தும் தவனிலையும்[9]
அற்புதமாய் எங்கள் அறுமுகரைத்தான் பார்த்து
கந்தர்திரு அளகை[10] காட்டினர் காரிகைக்கு
சிந்தை மகிண்டோடிவந்து[11] தெண்டனிட்டாள் அம்மானை
தெண்டநிண்டு[12] செப்புவாள்ளேது மொளி[13]
என்னையும் நீகொள்ளீரேயாமாகில் கொற்வரே இப்பொழுது
மன்னவரே என்னுயிரை மாய்பேன்[14] என மொளிந்தாள்[15]
அன்னாளிலே[16] தேவர் ஆனசிறை மீட்டு
சூரன்தனை வதைத்துத் தொல்லுலகமெல்லாமறிய

---

1 சென்றந்த
2 சேயிழை பன்னிரெண்டு
3 நின்று
4 அந்தமொழி
5 சரவணையில் (சரவணப் பொய்கை)
6 வந்துநின்று
7 நின்றாள்
8 அப்போது
9 தவநிலை : மாரியம்மன் சிவனை நோக்கித் தவமிருந்து அலையாமுத்துப் பெற்றது, அருச்சுனன் தவமிருந்து பாசுபதம் பெற்றது யாவும் தவநிலையில் இருந்தே.
10 அழகை
11 மகிழ்ந்தோடிவந்து
12 தென்றனிட்டு
13 மொழி
14 மாய்ப்பேன்
15 மொழிந்தாள்
16 அந்நாளிலே

போரந்தனுர் புத்திரியை[1] கேட்கையிலே
அமரர் அறிய அயலுலகில் மங்கையரை
சேரேன் எனவே செய்ய சீராண்ணயிட்டேன்
தந்தை அரனார்தனை நோக்கிச் சொன்னமையால்
இந்தப் பிறப்பில் நான் கொள்வதில்லையெண்டேன்[2]
மற்றுமொரு பிறப்பில்வந்துலகில் நீ பிறந்தால்
உற்றதுணையாவேன் ஓவியமே என்றுரைத்தேன்
எந்தப் பிறப்பானாலும் என்னை நீ கொள்ளுமெண்டு[3]
உந்தநிடவாக்கருளும்[4] உத்தமரே என்றுரைத்தாள்
மானின் வயிற்றில் வரவே வரங்கொடுத்து[5]
கானமயிலேறும் காவலரும் போய்மறைந்தார்
மண்ணாரத் துள்ளிவரம்[6] புள்ளி மான் இனத்தைக்
கண்ணாரக் கண்டான் கலைக்கோட்டு
மாமுனியும் கண்டமுனியமொரு[7] கன்னி இளமானும்
கொண்ட பெரும் துயரால் கூடிய தோரம்மானை
துள்ளுதிரள் மானும் சூள்மானும்[8] பூம்புனத்தில்
வள்ளிக்குளியருகே வந்ததுகாண் அம்மனை
சேரத்திர உளைத்தி[9] உலத்து வளி நடத்தி
ஆதித்தன் பேரொளியால் அடங்காத சோபமதாய்[10]
ஆதித்தன் போலே கண்டையீண்டதுகான்[11] அம்மானை
மானீண்டு[12] போன பின்பு மனமகிண்டு[13] பூமாது[14]
வாகாய்தான் பூமாது மனமகிண்டு[15] தான் எடுத்துச்

1 இந்திரன் மகள் தெய்வானை
2 கொள்வதில்லையென்றேன்
3 கொள்ளுமென்று
4 உந்தனிடம் வாக்கருளும்
5 வரங்கொடுத்து
6 துள்ளிவரும்
7 முனியொரு
8 சூள்மான்
9 உளத்தி
10 அடங்காத சோகமாய்
11 கன்றை ஈன்றது
12 மான் ஈன்று
13 மனம் மகிழ்ந்து
14 பூமாது
15 பூமாது மனம் மகிழ்ந்து

தேனமிர்தான் கொடுத்துச் சீராகதாராட்டி[1]
சாகாமல் நோகாமல்தான் வளத்தாள் அம்மானை
அன்னாளில் அவ்வரையில் ஆனகுறவரெல்லாம்
மின்னாருடன் ஏகி வெண்பசியாற் காய்கனிகள்
மானும் முயல் உடும்பும் வலிய பறவைகளும்
தேனும் எடுத்துச் சிறந்துவரும் வேளையிலே
கானகத்தில் வேடர்களித்து விளையாடி
தானகத்தில் போகத் தங்களிலே சம்மதித்து
மலையில் குறவர்களும் வாளும்[2] குறத்திகளும்
சிலைவேடர் எல்லோரும் செல்லும் வனத்தனிலே
வாவிச்சுனையருகே வனவேடர் செல்லுகையில்
மாயமானீன்ற மதலை அளுதிடவே[3]
ஒரு மதலை அளுகுதெண்டு[4] வனக்குறவர் எல்லோரும்
சேயின் குரல் கேட்டுச் செல்வக் குறவரெல்லாம்
வாடி நமக்கு ஒரு மதலை அளுகுதெண்டான்[5]
மதலையைக்கண்டவுடன் வனக்குறவர் எல்லோரும்
குலமதலைதனைக் குறவர் மகிண்டெடுத்து[6]
கண்டு எடுத்தார்கள் கானப்பெருங்குறவர்
கொண்டாடி எல்லோம் குறம்பாடியே மகிண்டு[7]
கொம்பு தாரைமுளங்கச் கொடிய சிலை வேடரெல்லாம்
வடிவேலர் நமக்கு மகவுதந்தார் என்று சொல்லி
அடி பணிந்து தெண்டனிட்டு அறுமுகனே தஞ்சமென்று
இந்தமின்னுள் கந்தருக்கு ஏற்றமனையாவளென்று
சந்தோஷமாய் மகிண்டு[8] வனக்குறவர் எல்லோரும்வந்து
தங்கள் ஊர் புகுந்தார் வனக்குறவர் எல்லோரும்
சிந்தை மகிண்டிவார்[9] செல்வக்குறவரெல்லாம்
வாராமுலை கொடுப்பார் மஞ்சள் நீர்ராட்டிடுவார்
சீராகக் கைக்குத் திருநீற்றுக்காப்பிடுவார் மதலை

1 சீராகத்தாலாட்டி
2 வாழும்
3 அழுதிடவே
4 அழுகுதென்று - குழந்தை அழல்
5 மகிழ்ந்து
6 மகிழ்ந்து
7 மகிழ்ந்து
8 மகிழ்ந்து
9 மகிழ்ந்திடுவார்

அளுகுதென்று[1] மானனையார் யெல்லோரும்
தாங்கி மடியில் வைத்துத் தாராட்டி மொந்திடுவார்
வெள்ளித் தகட்டினுள் மேல்கட்டிதான் விரித்து
ஒள்ளிய செம்பொன்னுல் ஒரு தொட்டில் உண்டாக்கி
தொட்டில் தனில் வைத்து தோளிமார் தாராட்ட[2]
பிள்ளைக்கு வள்ளியென்று பெயருமிட்டார் அம்மானை
எல்லாக் குறவர்களும் இருந்து விசாரமிட்டார்[3]
வல்ல சிலைவேடரே மதலை கிடந்த இடம்
மானின் அடி அல்லாது மற்றோர் தடமும்மில்லே
என்ன அதிசயங்காண் என்றே திகைப்பாரும்
வள்ளிக்கிசைய வரிவிளக்குமையெளுதி[4]
கன்னி இவள் என்பாரும் கன்னிமார் என்பாரும்
பேணிக்கம் போலவே பெரியரவந்தான்னீண்ட[5]
மாணிக்கம் போலவே வளக்கார்கள் அம்மானை
சிக்கெனவே பச்சைமணி சிறிய கரியமணி
அங்குமணிக்கப்பால் அணிந்தார்கள் ஆயிளைக்கு

### விருத்தம்

பிள்ளைதனை எடுத்துப் பிரியமுடன் கானவர்கள்
வள்ளி என்று பெயரும் வளங்கியே கானவர்கள்
பூங்குளலும் நன்றாய் பொருந்தப்புவி மீது
பாங்குடனே வளந்தாள் பரிந்து

### நடை

ஓராண்டுயீராண்டு மூவாண்டு நாலைந்தாய்
வேண்டியதோரெட்டாய் வயதுமோ ஒன்பதுமாய்
பாவை வயது பதினொன்றுப் பன்னிரெண்டாய்
காவிவரிக்குயிலாள் கன்னி பருவமானாள்[6]
வயது பனிரெண்டதனில் வள்ளிதனக்கப்போது

1 அழுதல்
2 தாலாட்ட
3 சுற்றிவளைத்தல்
4 வரிவிளக்குமையெழுதி
5 பெரியரவந்தானீன்ற
6 பூப்புனிதம் அடைந்த நிலை அல்லது சாமத்தியப்படுதல்

விநாயகப் பாசிகட்டிமெய் குளல்[1] தான்முடித்து
காதுக்குத் தோடணிந்து கைக்கு வெள்ளிக்காப்புமிட்டு
கண்ணுக்கு மையெழுதிக் கருங்கொண்டை தான்முடித்து
பெண்ணுக்குப் பெண்ணுருவம் ஆனுள் இவள் பேதை
அப்படியே வள்ளி அவள் வளரும் அன்னாளில்
செப்பமுடன் கானகத்தில் திணைவிதைக்க வேணுமென்று[2]
காடு வெட்டி முள்ளொதுக்கி கட்டை மிகபிடுங்கி
மேடுபள்ளம் திருத்தி விதைதார் திணையதனை
ஆல்னதிணைப்புனத்தில் அங்காவல் வைக்கவெண்டு[3]
சேனைக் குறவரெல்லாம் செண்டுமேதான் கூடி[4]
சந்தணத் தூண்வெட்டிச் சதுரமுகக் கால் நாட்டி
கொந்தலருமார்பன் கொடுவளையும் தான் போட்டு
பத்திபெற நன்றாய் பரிவாகப் பந்தலிட்டு
சித்திரமாக சிறக்கவே தான் மேய்ந்து
அத்திர வேல்விளியாள் ஆனவள்ளிதான் இருக்க
ஆனிப் பொன்னாலே அலங்காரமாய் மேய்ந்து
மலையில் குறவரெல்லாம் வள்ளியம்மையை அளைத்து[5]
சிலைவிற் பெருவேடர் தேனேயெனமொளிந்து[6]
நம்முடைய கானகத்தில் நாங்கள் திணைவிதைத்தோம்
உன்பாங்கியரும் நீயும் இக்கானகத்தில்
கிள்ளை திணைகொய்யாமல் கீதமுள்ள மான் மரைகள்
காடைகவுதாரி கடுக வந்து தின்னாமல்
சம்புக் குருவிகளும் தாருவும்[7] வாராமல்
வள்ளியையும் பாங்கியையும் வாகாய் மிக அளைத்து[8]
மாணிக்கக் கற்கொடுத்து வண்ணக்கவுண் கொடுத்து
ஏணிப் படிவளியே ஏறி இருமென்றுரைத்து
புனத்திலே நீயும் இருபேரும்[9] ஒன்றாக
மாடப்புருவினங்கள் வந்து திணை கொய்யாமல்

1 குழல்
2 வேண்டுமென்று
3 வைக்கவென்று
4 சென்று கூடி
5 அழைத்து
6 தேனே என மொழிந்தான்
7 தாறா என்பது ஒரு பறவை
8 அழைத்து
9 இரண்டு பேர்

அம்பவள வாய்துறந்து[1] ஆலோம் எண்டிருங்கோ[2]
இருவரையும்தான் இருத்தி ஏகினர் கானவர்கள்
பறன்மீதில்[3] ஏறிப் பாவையரும் அன்னேரம்
அஞ்சுகங்காள் ஆலோம் அணில் இனங்காள் ஆலோலம்
குஞ்சரங்காள் ஆலோலம் குயிலினங்காள் ஆலோலம்
துள்ளத் திரள் மான்காள் தோகைமயில் ஆலோலம்
புள்ளிக் குயிலினங்கள் பொறிவண்டோ ஆலோலம்
கானவரிக் குயில்காள் கற்வுடையாள் ஆலோலம்
அன்னமினங்காள் ஆலோலமென்ற சத்தம்
கோதையர் தன்புனத்தில் குருகினம் போல் வளந்த
கீதமொளி[4] இசை கேட்டறிந்த நாரதனும்

## விருத்தம்

வந்து பறன்மீதேறி[5] வள்ளிகிளி ஓலமென்ன
சிந்தையுறக்கேட்டு முனிசெப்புவான்[6] இந்த மின்னுள்
முன்னாளில் காணேன் முருகனுக்கு ஆமெனவே
இன்னாளில் கண்டேன் இயல்பு

## விருத்தம்

வள்ளி குரல் ஓசைதனை மாமுனிவன்[7] தான்கேட்டு
உள்ளமுருகி உகந்தவனும் கிட்டவந்து
கிட்டவே வந்து கிளியோ மயில் இவளோ
இந்நாளில் கண்டேன் இயல்வு[8]

## நடை

மிஞ்சுமொளி[9] வள்ளியேமேவும் தினைப்புனத்தில்
வஞ்சியர் தன்னருகே வந்தானே நாரதனும்[10]

---

1 *இசைகளில் ஒன்று*
2 *என்றிருங்கோ*
3 *பரன்மீதில் (வயலில் போடப்படுவது)*
4 *கீதமொழி*
5 *பரன்மீதேறி*
6 *நாரதன்*
7 *நாரதன்*
8 *இயல்பு*
9 *மிஞ்சுமொழி*
10 *நாரதன்*

வந்து நிண்டு[1] மாமுனிவன் வள்ளி அளகைப்[2] பாத்து
இவள் அளகை[3] ஒப்புவிக்க ஒருவரால் ஏலாது[4]
வாளொத்த மின்னும் வாள்மதிபோல்[5] முகமும்
காயேற்ற கன்னிக்கமுகோ அவள் களுத்து[6]
வள்ளியர் தன்னுடைய மார்புக்கு ஒப்பிலையே
உன்னிதமாக உலகம் திறை கொள்ளும்
கொங்கை சுமக்கரிதாம் கொடிபோல் அவள் மருங்கி
தேனாரும் கெண்டைக்கால் சிறுவிரல் தன்னளகும்[7]
செந்தாமரை மலர் போல் சிற்றடியும் வீறுடனே
கந்தர்தனக்கேற்ற காரிகையாள் இந்த மின்னாள்[8]
வள்ளி அளகுதனை[9] மாமுனிவன் தான் பார்த்து
கொச்சைக் குறமாதைக்[10] கும்பிட்டார் நாரதனும்

## விருத்தம்

கும்பிட்டு நாரதனும் குறமகளைத் தான்னோக்கி
அம்பிட்டவேல் விளியீர் ஆயிளையே கொம்பரே
குருகே இளம் கிளியே கோலமயில் வாகனற்கு
மருவும் மனையாவையோ வந்து

## நடை

வண்ண மயில் வாகனக்கு மருவும் மனையாச்சுதெண்டு
அன்னை இரண்டாச்சுதெண்டு அறுதியிட்டார் நாரதனும்
பாலனைய சொல்லாளைப் பார்த்து மனமகிண்டு[11]
வாகனைய மின்னே மயிலே இனிக்கேளும்
அரவனியுஞ் செஞ்சடையான் அம்பலவாணன் புதல்வன்
சரவணையில் வந்துதித்த சண்முக வேலாயுதனார்
சூராதி சூரன் சுப்பிரமணியோன் தனக்கு

---

1 நின்று
2 அழகை
3 அழகை
4 இயலாது - முடியாது
5 வாழ்மதிபோல்
6 கழுத்து
7 தன்னழகு
8 வள்ளி
9 அழகுதனை
10 வள்ளி
11 மனம்மகிழ்ந்து

எருதேறும் யீசுரனார்[1] இயல் மதலையானவர்க்கு
தோகை மயில் வாகனர்க்கு துணையேகுமாவீரோ
அந்த மொளிகேட்டு[2] அளகு[3] குரல் வள்ளியம்மன்
சிந்தை மகிண்டு[4] சிரித்தேது செப்பலுற்றாள்
வாடா நீ நாரதனே மதிகேடு பேசாதே
போடாபுனத்தை விட்டுப் புனக்குறவர் பொல்லாதார்
விதி இதெனவே மெல்லியரும் உள் மகிண்டு[5]
மதிகேடு போசாதே வாள்முனியே போய்விடெண்டாள்
ஆம்பவள வரயாள் அளகு[6] உயிற்தோளி கண்டால்
வம்பு வரப்போகுதுகாண் மாமுனியே போய்விடெண்றாள்
அந்தமொளி[7] கேட்டு ஆனதொரு நாரதனும்
ஆதிசிவனும் அமைத்தானோ உன்சிரசில்
கானகத்திலே நீயும் கவண்எறிந்து[8] கிளி ஓலமென்ன
தேனும் தினைமாவும் சிறுகிளங்கும்[9] நீபுசித்து
மானும் முயலும் வல்பறவையானதுவும்
கானவர்கள் கொண்டு தரக்கன்னியரே நீதானும்
மான் இறச்சி தின்னவெண்டே உனைப்படைத்தான் மேதினிலே
நாரியற்கெல்லாம் அரசே நல்லகுணப்பெண்ணமுதே
வீரியஞ்சேர் கந்தரிடமேவும் மனைவியாவீரோ
செத்தில் அறுமுகனைச் சேர்ந்திருந்து வாள்ந்தால்
வந்து நின்று தேவர்களும் வானவரும் தான் தொளுவார்
பாரியெண்டு நீயும் பண்பாகவே இருந்தால்
உன்னைத் தொழுவார்கள் ஓவியமே தப்பாது
நாரதனார் சொல்ல நாசகியும்தான்[10] கேட்டு
எல்லாம் அறிவீர் இது அறியமாட்டீரே
காட்டிலேதான் திரியும் கனமிருகம் தான்பிடித்து
சூட்டிறச்சி[11] திண்டு சுகம் அறிய மாட்டீரே

1 ஈஸ்வரன்
2 மொழிகேட்டு
3 அழகு
4 மகிழ்ந்து
5 உள்மகிழ்ந்து
6 அழகு
7 அந்தமொழி
8 கவுண் (பறவைகளைத் துரத்தும் ஒருவகைச் சாதனம்)
9 தேன், தினைமா, சிறுகிழங்கு இவை உணவுப் பண்டங்கள்
10 வள்ளி
11 இறைச்சியினைச் நெருப்பில் சுட்டுச் சாப்பிடுதல்

சீர் உகந்த வாள்புனத்தில்[1] செல்வமது எங்களுக்கு
வாருகந்த மின்னே வடுவே இது உனக்கு
வேலவரை நீயும் மேவி அணைந்திருந்தால்
ஆணிப்பொன்மாலை அணிவார் உனக்குமவர்
ஆடை மிக ஆபரணம் அங்கு பதக்கம் சவடி
ஆபரணமெல்லாம் அணிவார் உனக்கு அவர்[2]
செப்பரிய வள்ளி சினந்தேது செப்பலுற்றாள்
எப்படித்தான் சொன்னாலும் எங்கள் சாதிக்களகோ
சங்குமணிப்பாசி தாவடமும் தான் அணிவோம்
எங்கள் சாதிக்களகு[3] இதுவல்லால் வேறுமுண்டோ
வேறுமுண்டோ எண்டு சொன்ன மின்னே இன்னமும் கேள்
நாறு புகுனு மணம் நல்ல குங்குமம் சவ்வாது
சாந்து சவ்வாது சந்தணமும் குங்குமமும்
இச்சையுடன் அணிந்து இருக்கலாம் என்னாளும்
இருக்கலாம் எண்டு சொன்ன இப்போது எந்தனக்கு
கருக்கொண்ட அன்றே கற்பித்த அல்லாது
வேறுவிதிவருமோ மேதினியில் எந்தனக்கு
ஆறுமுகவன் அருளுண்டு எங்களுக்கு
புனுகு செவ்வாதுமுண்டு பூக்கள் மிகவுமுண்டு
தேனும் திணைமாவும் எப்போதும் உள்ளதுதான்
மேடுபறையாதே விரையப்போ நாரதனே
செப்பாகு புல்முலையாள் சினந்தேது வாத்தை சொல்வாள்
அப்படித்தான் ஆனாலும் அவர் வருவார் நீபோடா[4]
இந்தமொளி [5]அத்தனையும் என்தோளி தான் அறிதால்
அந்தமுள்ள அண்ணர்க்கறிவிப்பாள் உன்னுயிரை
உன்னைக் கொண்டு விடுவார்கள் குறவர்கள் இப்போது
நீ நிண்டநிலை பொல்லாது நீ போடா நாரதனே
மாமுனியே உன்னுடைய வானால் இறவாதே
போமுனியே நீயும் புனத்தை விட்டு நீ கடுக
வல்லாண்மை சொன்னாய் வடிவேலற்கெண்டு சொல்லி

1 வாழ்புனம் - வேடர்கள் வாழும் இடம்
2 அவர் என்பது முருகனைச் சுட்டும்
3 சாதிக்கழகு - தாம் பிறந்த குலம்
4 அவர் வருவார் நீபோடா என்பதில், அவர் என்பது முருகனைக் குறிக்கும் சுட்டுப்பெயராகும்.
5 இந்தமொழி (இங்கு கூறிய கதை யாவும் எனும் வகையில்)

வடிவேலர் எங்களுக்கு வாய்தகுலதெய்வமது[1]
நெடியோன் திருவருளால் நிமலனார் தன்பாதம்
அடுமைதனை[2] ஆளவெண்டு[3] அவர்கருத்திலே நினைத்தால்
வடிவேலர் இங்கே வந்தால் அவர்வருவார்
வந்தால் அவருடைய மலர் பாதம் நாம் மறவோம்
என்றுரைக்க வள்ளி ஏதுசொல்வார் நாரதனும்
கந்தருடன் வேவி[4] இருந்தால் இக்கானகத்தில்
வெய்யிலே வாடுவதேன் மேனி சருகுவதேன்[5]
தையல் நல்லாள் இவ்வனத்தில் தனியே இருப்பானேன்
உந்தன் கருத்திதுவோயூளின் விதிப்படியோ
இந்தவனத்தில் இருக்கிறாய் நீதனியே
தனியே இருப்பானேன் தங்கை உண்டு இவ்வனத்தில்
பணிசேர் மொளியாள்[6] பாங்கியுண்டு இவ்வனத்தில்
அந்தப் புனத்தில் அவள் காத்திருக்கிறது
இந்தப் புனத்தில் இருக்கிறேன் நானும் இப்போ
அந்திபடும்தனையும்[7] அவள் அங்கே காத்திருந்தாள்
வந்திருப்போம் நாங்கள் ஒன்றாக மாமுனியே இராத்திரியில்
இந்த வனத்தில் இருக்கிறாய் நீ தனியே
எங்கள் வனத்தில் எங்களுக்குத் தனிமை என்ன
இருப்போம் என உரைத்த ஏந்திளைமேது சொல்லக்கேள்
மருப்பூங்குளலளகே வருவார் வடிவேலர்
தப்பாமல் வேல் முருகர்தான் வந்தால் உன்னிடத்தே
அப்போவருவாயோ அன்னமே தெள்ளமுதே
ஒப்பாக உன்னையும் ஒரு படத்திலே தான் எளுதி[8]
தப்பாமலே கொடுப்பேன் தானே அவர் வருவார்
அப்போவருவாயோ அன்னமே தெள்ளமுதே
மெய்யாக மாமுனியும் வேலற்கறிவிற்கவெண்டு

---

1 வேடுவர்களின் குலதெய்வம் முருகன்

2 அடிமைதான்

3 ஆழவென்று

4 கந்தருடன் இணைந்து

5 மேனி வாடுவது

6 மொழியாள்

7 பொழுது சாய்தல் அல்லது பொழுதுபடுதல் என்றும் குறிப்பிடுவர்

8 இங்கு நாரதன் வள்ளியினுடைய அழகை மனதில் கொண்டு படம் வரைதலைச் சுட்டி வருகின்றது

சித்திரமாய் ஒப்பனையாய்ச் சேர ஒரு படத்தில்
பத்திரமாகப் பரித்தெளுதத்[1] தொடங்குவாராம்

## விருத்தம்

நாரதமாமுனி நவிலும் வெற்பெல்லாம்
சீருடன் வள்ளி சிறந்த வெற்பெல்லாம்
பாரினில் வேலவர் பார்க்கவெண்டு[2]
நாரதமாமுனி எளுதிக்காட்டினார்[3]

## நடை

வள்ளி அளகெல்லாம் மாமுனிவன் தான் எளுதி[4]
தேய்பிறை போலே திருநுதலுந்தான் எளுதி
கொவ்வைக்கனி போலே கொத்து முத்தின் பல் எளுதி
மின்னர் இடை எளுதி மேலீடு பொற்தோடடெளுதி
அன்ன மின்னரின் அளகு குரல் எளுதி
கன்னிக்கமுகுபோல் களுத்தின் அளகெளுதி
உன்னிதமாக உயர் மார்பின் ஒப்பெளுதி
அந்த மின்னரின் அழகெல்லாம் தான் எளுதி
ஆலிலை போலே அமந்த திருவயிறும்
ஆடை உடை எளுதி அன்ன நடை எளுதி
செந்தாமரை மலர் போல் சிறந்த திருவடிவும்
அந்த மின்னரின் அளகெல்லாம் தான் எளுதி
தெள்ளிய வேலவர்க்கு தெரிசிக்க வேணுமெண்டு
வருவாரெனவே மாமுனியும் தான் நடந்தார்
வந்து நின்று மாமுனியும் வடிவேலவரை நோக்கி
கும்பிட்டு நின்று கூறுவாரேது மொளி[5]
பாலனைய சொல்லாளைப் பார்த்து வந்த செய்தியெல்லாம்
தோகைமயில் வாகனத்திற்குச் சொல்லத் தொடங்குவாராம்
ஆளி உலகெல்லாம் அறிவேன் நான் இப்புவியில்

1 சொல்லத் தொடங்குதல்
2 பார்க்கவென்று
3 எழுதிக் காட்டுதல் (வள்ளியினுடைய அழகு அத்தனையினையும் ஒன்றும் விடாது எழுத்தில் இருப்பதுபோல் தெளிவாகச் சொல்லுதல்)
4 எழுதி என்பது பல இடங்களில் வருகின்றது, அவற்றினையும் மனங்கொள்க
5 மொழி

வெள்ளி மலைச்சருவில் ஒரு மின்னாளைக்[1] கண்டு வந்தேன்
கண்டு வந்தேன் நானும் ஒரு கானக்குற மின்னாளை[2]
அந்த மின்னுள் வடிவு நான் கண்டுவந்தேன்
செண்டு நின்று நாரதனும் சிவனார் திருமகனை
வேண்டி அறுமுகற்கு விளம்பினார் செய்தியெல்லாம்
ஆதி அறுமுகனே அரனார் திருமகனே
பொதிலமால் தன்னருகே புகன்முனிவன்[3] தன்னிடத்தில்
விதியார் அடிபணிந்து விரைந்து வருகையிலே
ஆளி கடந்தோன் அருளால் அங்கே ஒரு குறமின்[4]
இனித்திருந்தாள் அங்கே இயல்வாய்த் தினைப்புனத்தில்
மானனையாள் மின்னுள் வடிவு நான் கண்டு வந்தேன்
அன்னமோ தேனோ அமுதோ சிறு குயிலோ
கந்தர் அறுமுகற்குக் கட்டுப்படுவாயோ எண்டேன்
காரார் குளவி அந்தக் கன்னி சொன்னவாய் மொளிகள்[5]
ஏலாது சொல்ல எங்கள் பெருமாளே
மங்கையவள் சொன்ன வாய்மொளிகள்[6] எல்லாம்
எங்கள் குல தெய்வமதால் இம்மலையிலே இருக்கக்
எங்களிட[7] தெய்வமதை இளிவு[8] நீ சொன்னதென்ன
நாயமல்ல[9] மாமுனியே நடுக்காட்டில் என்னுடனே
மாயம் பல உரைத்தீர் வனத்தை விட்டு நீயேகும்
ஏகுமென்று சொன்னாள் இளங்கிளியும் அப்போது
புல்மன்கணை கண்டால் பொருந்தி மனம் தேறிடலாம்
காமவிகார முலை[10] கண்டால் மயங்கிடுவீர்
செவ்வாய் நகையும் சிறந்த முத்தின் பல்லளகும்
ஒவ்வாது காணும் உலகந்திறை கொள்ளும்
மின்னாரின் கண்புருவம் விமலன் காண்டீபம் போல்
அன்னாள் அமிர்தமதிற் பிறந்த ஓவியமோ

---

1 வள்ளி
2 வள்ளி
3 பொதிகை மலையில் வாழும் முனிவன் (அகத்தியர்)
4 வள்ளி
5 மொழிகள்
6 வாய்மொழிகள்
7 எங்களுடைய
8 இழிவு
9 நியாயமில்லை
10 பெண்களின் அழகான மார்பினை விபரித்தல்

மாரிவளர் முகிலோ மாயன் திருவருளோ
முரிநிமித்தக் குளலாளை[1] மூவுலகுங் காணரிது
வானமதிலோ எளுந்த[2] மானர்திருநுதலோ
சித்திரம் போல் ஒப்புடையாள் சிறந்த திருநெற்றி உடையாள்
மின்னாரின் மேனியிலே மேவி அணைத்திருந்தால்
என்ன விதம் பேசி இனிதுரைக்கப்போறேன் நான்
பூமன் நெடுநாளாய் பொருந்தித் தவசிருந்து
பொற்குடங்கள் இரண்டும் பொருந்துமவள் மார்பதிலே
ஆலிலைபோலே அமர்ந்த திருவயிறும்
உந்திச் சுனியில் ரோமம் மெளுகதுபோல்[3]
அலுதிச் சுளிவு நிண்ட அலங்காரம் சொல்லரிது
சேலை உடையாள் சிறந்த நடையுடையாள்
நாவாலே சொல்லரிது நாயகரே பூவுலகில்
ஈணாதவாளைத் தடம் போல் இரு தொடையும்
தேனுருங் கெண்டைக்கால் சிறு விரலும் தன்னளகும்[4]
மின்னுள் வடிவு மேவும் செந்தாமரை மலரோ
இந்த வடிவு கொண்ட இளங்கிளியை பார் வனத்தில்
கண்டிலேன் நானும் கன்னி உனக்காகுமென்று
தேனுக்குள் இன்பம் தெவிட்டாத தெள்ளமுதோ
கந்தர் அறுங்குலலாள்[5] காரிகையார் செய்தியெல்லாம்
இந்தாவெனக் கொடுத்தார் இளையோனும் தான் வாங்கி
கண்டாரே வேலவரும் கன்னி திருஅளகை[6]
கண்ட உடனே மயங்கி வேலவனார் அப்போது
மின்னை நினைத்து வேலவரும் மென்மயலாய்
காமன் கணையாலே[7] கலங்கினார் வேலவரும்

## விருத்தம்

வானிலெளு[8] மின்னோமதியோ மயில் இவளோ
நானறியப் பூவுலகில் நாட்டில் இல்லை
தேனிய சொல்லாளைக் கண்டு வந்தேன்
தோகைமயில் வாகனரே இப்போ

1 குழலாளை
2 எழுந்த
3 மெழுகதுபோல்
4 தன்னழகு
5 அறுங்குழலாள்
6 திருவழகை - திருஅழகை
7 மன்மதனின் காதல் கணை
8 வானிலெழு

நடை

உந்தன் மனதை உருக்க நல்ல ஓவியங்காண்
என்னைக் கிருபையுடன் யீன்றெடுத்த[1] தாயார்காண்
செல்லாய் கடுக தினைப் புனத்தில் இப்போது
கேட்டபொளுது[2] கிலேசமிக உண்டாகி
வாட்டமுற்றுச் சோர்ந்து மயங்கினார் வேலவரும்
மாலோன் மருகன் மயக்கமதை அறிந்து
தெய்வானை அம்மனை சேதியெல்லாம் கேட்டறிந்து
நாரதனார் சொல்கேட்டு நாசகியும்[3] ஏது சொல்வாள்
நீ கொற்றரை எல்லாம் கூட்டிப்பகையாக்கி
மற்றவரை எல்லாம் வதைக்க நீபார்த்திருப்பாய்
என்னை நினையாமல் என் மணவாளனுக்கு
மின்னை வினவிவருவீரோகாண மாமுனியே
அந்தமொளி கேட்டு அன்னையரே சொல்லக்கேள்
என்மேல் கோபம் வையாதே அன்னையரே
மானே குயிலே மரகதமே சொல்லக்கேள்
அந்தக் குறுமுனிபால் அடியேன் போய் மீலுகையில்[4]
கானகத்திற் கண்டு வந்தேன் ஒரு கன்னி இளமின்னாளை[5]
கண்டு வந்தேன் நானும் கந்தருக்கு ஆகுமெண்டு[6]
நாரதனும் சொல்ல நாயகியாள் கோபமதாய்
நன்று நீ சொன்ன மொளி[7] நாரதனே உந்தனக்கு
குண்டுணிகள்[8] சொல்லி குடிகெடுப்பதல்லாது
திண்டாடியே முனிவாய் செயலளிவாய் மாமுனியே
நாரதனைச் சினந்து நாசகியும்[9] ஏது சொல்வாள்
பார்தனிலே உனக்குனற்குப் பாரி இரண்டானதுவே
விளுந்து புரண்டளுதாள்[10] மெல்லியர் தெய்வானையம்மன்

---

1 ஈன்றெடுத்த
2 கேட்டபொழுது
3 நாயகியும்
4 போய் மீளுகையில்
5 இளமைத் தோற்றமுடைய வள்ளி
6 ஆகுமென்று
7 சொன்னமொழி
8 சமுகத்திற்கு பொருத்தமில்லாத சொற்களைக் கூறுதல்
9 நாயகியும் (வள்ளி)
10 விழுந்து புரண்டழுதாள்

தொளும்[1] பினைக்கப் போறீரோ தொல்கானகந்தனிலே
என்னைத் தனியே விட்டு ஏகி வனவாசமதில்
மின்னுள் ஒருகுறத்தி வேடுவிச்சியைத்தேடி[2]
போறீரோ வேலவரே புத்திபோல் நீ நடவும்
சொன்னமொளி[3] கேட்டுச் சோபம் மிகத்தீந்து
இப்போ வருவேன் என்னுடைய தேவியரே
பொன்னனைய மின்னார்க்குப் போதவே புத்திசொல்லி
வன்னடி வேலவனார் வளி கொண்டார் அம்மானை
மானை நிறுத்தி வடிவேலர் அப்போது
ஆனதிருக்கைவேலாறு முகம் பன்னிருதோள்
வில்லுதனை எடுத்து விடுசரங்கள் தான் ஏந்தி
வன வேடனைப்போலே நடந்தார் காண் வேலவரும்
அன்நேரம் மின்னுள்[4] அளகு[5] தெய்வானையரும்
மன்வரே நீயும் வாறனெண்டு[6] போறீரே
வாஸமுள்ள வேலர் வனத்திலே வேடரைப்போல்
வாறது தான் எப்போ மயிலேறும் சேகுலனே
வாட்டமுற்று வேலவனார் மனமகிண்டு[7] கொண்டாடி
கூட்டில் கிளியினங்கள் கூவமுன்னே நான் வருவேன்[8]
நாற்றிசையும் கீர்தியுள்ள நாரதனையும் தான் அளைத்து[9]
ஏற்றமுடன் எவ்வடிவோடேகுவோங் கானகத்தில்
சீற்றமுள்ள மாமுனியோ செப்பாய் என மொளிந்தார்[10]
அப்போது மாமுனிவன் அறுமுகனைத்தான் தொளுது[11]
ஆண்டார் வடிவு கொண்ட அங்கெகலாமெனவே
நாரதனார் சொன்னபடி நாம் ஏகலாமெனவே
சீருறையும் கானகத்தில் செல்வே வேல்முருகர்

---

1 தொழுது
2 வள்ளி
3 சொன்னமொழி
4 வள்ளி
5 அழகு
6 வருவேனென்று
7 மனம் மகிழ்ந்து
8 விடியற் காலையினைச் சுட்டுவதற்கு கிளியினங்கள் கூவுதல் என்று குறிப்படப்படுகின்றது. அதாவது, இப்பொழுதை விடியற்சாமம் என்பர்
9 அழைத்து
10 மொழிந்தார்
11 தொழுது

வளையல் மணிப்பாசிகளும் வன்ன வன்னத் தோடுகளும்
இளையாள் தனற்கேற்ற இடைமணிப்பாசிகளும்
குறத்திதனக்கேற்ற கோல மணிப்பாசிகளும்
வண்ண வண்ணத்தோடுகளும் மிக்க வளையல்களும்
இச்சையுடன் வேலவனார் இசைந்த நல்ல ஆடவராய்
வேண்டும் வனம் கடந்து மைதுலவே நடந்து
புல்ண்ட துயராய்ப் புனம் புகள்ந்தார்[1] வேலவரும்

### விருத்தம்

சென்றார் வரையருகே திகைத்தார் வனம் தனிலே
வள்ளி தனைக்காணாமல் கண்களிக்க நின்றுமவர்
மயங்கி நெடுமூச்செறிந்தார் வரையருகே
விலங்கினங்களைக்கேட்டார் விரைத்து

### நடை

கானகத்தில் வந்து நின்று கந்தர் மிக மயங்கி
மானனையாள் வள்ளி இருக்குமிடமறிய
காடும் செடியும் கனமலையும் தான் கடந்து
மேடுதனிற் சென்று விசாரமுற்று வேலவரும்
வள்ளியிருக்கும் வனம் எனக்குத் தான் அறிய
புள்ளிவரிக்குயிலே பொறிவண்டே கோகுலமே
மேயும் முகிலினமே பேசும் கிளியினமே
மையெழுதுங் கண்ணாள் வனமெனக்கு காட்டீரோ
வாகனைய மான்காள் மயில்காள் குயிலினங்காள்
தோகைநல்லாள் வீற்றிருக்கும் தினைப்புனத்தைக் கண்டீரோ
அனறிலினமே அணிலினமே கோகுலமே
தெண்டல்காள் வள்ளி தினப்புனத்தைக் காட்டீரோ
மானனையாள் வள்ளி வனமெனக்கு காட்டீரோ
மாடப்புருமினமே[2] மயில்காள் குயிலினமே
ஏடொத்த வள்ளி இருக்கும் இடம் காட்டீரோ
பிட்சிகாள் முல்லை பெரிய குடமல்லிகைகாள்
இச்சையுடன் வள்ளி இருக்கும் இடம் காட்டீரோ
புல்மரமே மாமரமே புன்னைகாள் செண்பகமே

---

1 *புகழ்ந்தார்*
2 *மாடப்புறாவினமே*

காமக்குயில் மொளியாள்[1] காவெனக்கு[2] காட்டீரோ
எல்லாரும் இப்போ பேசாதிருந்தீரேயாமாகில்
வல்லாண்மையோ உங்களுக்கு வாய்முத்து சிந்திடுமோ
காமவிடாய் எல்லார்க்கும் காசினியிரேசரிதான்[3]
என்னுமளவில் எளுகதிரோன்[4] வந்துதித்தான்
வடிவேலர்ப்போ திகைத்து நிற்கும் வேளையிலே
குண்டார் தனத்தாள் குரலோசை கேட்டதுவே
குரலோசை கேட்டவுடன் கிருபையுற்று வேலவரும்
வாட்டமெல்லாம் தீந்து மனமகிள்ந்து[5] வேலவரும்
அந்தத் திசையில் அறுமுகனார் தான் நடந்தார்
சிந்தை துயராலே சென்று கண்டார் ஆயிளையை
செஞ்சிலம்பு பாடகமும் சிற்றடியும் வீறுடனே
வஞ்சி இடையும் மணிமேற் கலையுடையும்
காமனுக்கு வாய்த்த முடிமேற் கனதனமும்
வேலைப்பளித்த விளியும்[6] மரைனுதலும்
வாஷமுடன் வந்து மானார் மளைபொளிய[7]
மண்ணில் இவள் யாவரையும் மாருவதளிக்கப்
பெண்ணுருவாய்க் காமன் பிறந்தாரோ மேதினியில்
வாய்த்த தனலை விட்டு வளந்த மதிபோல் முகமும்
கண்டுமே வேலவரும் காமன் கணையதனால்
உண்டு தான் மங்கை இவள் உலகம்தனை அளிக்க
தண்டமின்சேர் காமன் தையல் எனப்பிறந்தாள்
எந்தவிதமானாலும் இவள் நமக்குப்பாரியெண்டு[8]
எப்படியும் நாம் இவளை இணக்கவேவேணுமென்று[9]
செப்பமுடன் ஆடவராய்ச் செல்ல அவள் முன்னே
ஆண்டி வடிவாக அவள் கேற்ற பாசிகளும்[10]

1 காமக்குயில் மொழியாள்
2 பேச்சு வழக்குச் சொற்களில் ஒன்று
3 உலகத்தார்
4 எழுகதிரோன்
5 மனம் மகிழ்ந்து
6 விழியும்
7 மழை பொழிய - (படுமழை, கடுமழை பொழிந்தது என்பர்)
8 நமக்கு மனைவி என்று
9 இணங்க வைத்தல்
10 அணிகலங்கள்

குறத்திதனற்கேற்ற[1] கோலமணிப்பாசிகளும்
சங்குமணிப்பாசிமிக்க வளையல்களும்
கொண்டுவந்து நின்று குறமகளைத் தான்நோக்கி
குறமகளே நீயும் வளையல் கொள்ளமாட்டீரோ[2]
கூறினாரப்போ குறமகளும் தான் எளுந்து[3]
வளையல் என்ற சத்தமதை வள்ளி அவள் தான்கேட்டு
வளையல் எங்கேயென்று வள்ளியவள் தான் கேட்டாள்
இந்தாவளையல் என்றுகூற முருகர்[4]
வளையல் தனைப்பார்த்து வள்ளியவள் ஏது சொல்வாள்
இந்த வளையல் விலை இப்போது சொல்லு மென்றாள்;
அந்த வளையல் விலை ஆயிரம்பொன் மின்னாரே[5]
ஆயிரம் பொன் என்டீர் ஆர்கொள்ளவார்[6] இவ்வளையல
என்றுரைக்க வேலவரும் ஏதுசொல்வான் வள்ளியம்மன்
நன்றுகாண் நீயுரைத்தீர் நான் அறியேன் பொன் பணமும்[7]
திணை வரகு நான் தருவேன் வளையல் தந்தீரேயாமாகில்[8]
விரகறியா மெல்லியரே மேதினியில் நான் வளையல்
விற்பேன்னான் ஆயிரம் பொன் மேதினியில் நான்தானும்
குறத்திதனற்கேற்ற கோலமணிப்பாசியுண்டு
மறத்தி தனற்கேற்ற மணிப்பாசி மெத்தயுண்டு[9]
வாங்வீராய் வாங்கும் வளையல் விற்கவேணுமென்றார்
ஆங்காணும் நீ வளையல் ஆயிரம் பொன் என்றீரே
ஆயிரம் பொன் என்டீரே ஆர்கொள்வார் இவ்வளையல்
காய்கனிகள் மெத்த உண்டு கனிந்த ரசத்தேனுமுண்டு[10]
தானியமும் தேனும் வாரி உனக்களிப்பேன்

---

1 வள்ளிக்கேற்ற
2 வாங்கமாட்டீரோ
3 எழுந்து
4 முருகன்
5 இன்று பணம் அல்லது காசு என்று சொல்வதுபோல், அன்று பொன் என்ற சொல்லே வழக்கத்தில் இருந்தது
6 யார் வாங்குவார்
7 பொன், பணம் என்பனவற்றைக் காட்டில் வாழ்பவர்கள் அறியமாட்டார்கள்
8 தருவாயென்றால் / தந்தால் (அக்காலத்தில் பண்டமாற்றப் பொருளாதாரமே வழக்கத்தில் இருந்துள்ளது)
9 அதிகமாக உண்டு
10 காதல் உணர்வுடன் கூறுதல் (பருவம் கெடாத தேன்)

பாங்காகவே வளையல் பிசகாமல்[1] நீ தாரும்
இச்சையுடன் கேட்டால் இப்போதருவேன் நான்
கணக்குடனே[2] என்வளையல் கையிலிட வேணுமென்றால்
வணகமுடன்[3] கேட்டால் வரிசையுடன் நான் தருவேன்
தந்தால் வளையல் திணைத்தானியமல்லாற் பணமும்[4]
தரவேண்டும் நீயும் தையலே என்றுரைத்தார்
பணம் காசினான்[5] அறியேன் பாரவனம் தனிலே
வளையல் உனக்குத்தருவேன் மானே நீ சொல்லக்கேள்
குளை[6] உடுக்கும் சாதியல்லோ குறிப்பறிய மாட்டீரோ
இளையாள் சிறிதாளாய் இருந்தால் இக்கானகத்தில்
திணைக்குத் கிளியடித்துத்தேனும் திணைமாவும்
புனத்தில் இருப்பதல்லால் பொசிப்பு[7] வேறில்லையென்றார்
இனத்தோடு கூடி இரியாமல்[8] இக்காட்டில்
புனத்தில் இருக்கவெண்டோ[9] வைத்தான் பிரமன்
உன்னை தாய் தந்தை இல்லையோ தையலே உன்தனக்கு
பார்த்தால் சிறுபிள்ளையாய் பசுங்கிளிபோல் வெயிலில்
வனங்காத்து இருந்தாய் என்ன மதிகன்னியரே நீதானும்
உன் ஊரேது பேரேது உனக்கிளையாள் எங்கே என்றார்
வாரேறு பூமுலையே மங்கையரே சொல்லுமெண்டார்
சிந்தை தளண்டு வள்ளி வெப்புவாள் ஏது மொளி[10]
ஆடவரே கேளுமெங்கள் அண்ணன்மார் தாய் தகப்பன்[11]
எப்போதும் இவ்வனத்தில் இருப்போம் என உரைத்தாள்
எண்ணுளி காலமெல்லாம் எங்கள் குலத்தார்க்கு
விண்ணுலகத்தார் அறியமேதினியிலே[12] இருப்போம்

---

1 *நழுவாமல், மாறாமல்*

2 *அளவானது*

3 *பணிவாக*

4 *கால் பணம் 25 சதம், அரைப்பணம் 50 சதம், முக்காற்பணம் 75 சதம், ஒரு பணம் ஒரு ரூபாய்*

5 *பணம், காசி ன்பன காட்டில் வாழ்பவர்கள் அறியமாட்டார்கள்*

6 *குழை*

7 *பேச்சு வழக்குச் சொற்களில் ஒன்று*

8 *இருக்காமல்*

9 *புனத்தில் இருக்கவென்று*

10 *ஏதுமொழி*

11 *வேடுவர்கள் தாயும் தகப்பனும்*

12 *உலகினிலே*

அண்டமடங்கா அசுரர்களை வேரறுத்த[1]
குண்டுருவவேல் எறிந்த குமரனுண்டு[2] எங்களுக்கு
எறும்பு கடையானை எண்பத்தினாலுயிற்கும்
உறும் பொருளாகி உற்பவித்தானோ[3] பிரமன்
இருப்போம் என உரைத்த ஏந்திளையே சொல்லக்கேள்
மருங்கிலாமாமயிலே மரகதமே சொல்லக்கேள்
சின்னம் சிறுகுயிலே தேன்பாகே அஞ்சுகமே
உன்சிந்தை மிகவாடிச் சிறுநுதலில் வேர்வையுமாய்[4]
இந்தத் தனிக்காட்டில் இருப்பதேன் என்றுரைத்தார்
பாருங்காண் ஆடவரே வல்குறவரெல்லாரும்[5]
சீருடனே காடுவெட்டித்திணை[6] விதைத்தார் எங்கள் அண்ணர்
மின்னே திணையதனை விலங்கினங்கள் திண்ணாமல்
மன்னவரே காவல் வைத்தாரே எங்கள் அண்ணர்[7]
கருதுகொய்யும்[8] அளவும் காவலிலே இவ்வரையில்
குருகினங்காத்துக்[9] கொண்டே அதிலிருப்போம் நாங்கள்
திணை அறுத்தால் எங்கட[10] சிற்றூர்க்குப்[11] போய்விடுவோம்
மனையகத்திலே இருப்போம் வாளுவோம்[12] என்னாளும்
ஆடவரே என்று சொன்ன ஆயிளையைத்தான் நோக்கி
மாண்டார் எலும்பணித்த மகாதேவர் வந்தாலும்
எங்களால் இவ்வனத்தில் இருந்தொரு நாள் ஆற்றரிது
சங்கையில்லாதுங்களுக்குச் சாதித்தொளில்[13] மின்னாரே
உன்னை இந்த வெயிலில் உருகியே மேனிவாட
மன்னன் பிரமன் உன்னை வகுத்தானே மகாபாவி
நன்று காண் மின்னாரே நான் உரைக்கிறேன் கேளும்

---

1 அடியோடு அழித்தல்
2 முருகன்
3 பிறப்பித்தல்
4 வியர்வையுமாய்
5 வீரமுடையவர்கள்
6 பருவகாலத்தில் காடுவெட்டித் திணை விதைத்தல்
7 வேடுவர்கள்
8 கதிர் அறுத்தல்
9 பறவைகளிடம் இருந்து காத்தல்
10 எங்களுடைய
11 வாழுகின்ற ஊரைக் குறிக்கின்றது
12 வாழுவோம்
13 வேட்டையாடும் தொழில்

மான் வயிற்றில் பிறந்த வள்ளி எனும் மின்னொருதி
தேனிய சொல்லாளே செப்பக்கேள் இப்போது
அந்தமொளி[1] உரைத்த ஆண்டார் தனைநோக்கி
சிந்தை மகிண்டு[2] சிறுநகை கொண்டந்த மின்னாள்
உந்தனக்கும் எந்தனக்கும் உறவுடோ முன்னாளில்
அல்லக்காண் மின்னாளே அவளுடைய செய்தியெல்லாம்
சொல்ல நான் கேட்டிருப்பேன் தோகையரே நாடதனில்
நல்லாரை எல்லோரும் நாவில்புகள்[3] துரைப்பார்
பொல்லார் இடந்தனிலே போகார் பெரியோர்கள்
மானீன்ற வள்ளி செய்தி வையகத்தில் கேட்டிருப்பேன்
கேட்டிருப்பேன் முன்னாளில் கிளிமொளியே[4] என்று சொன்னார்
நாட்டமுடனே அந்த நாரியான குறவர் அங்கு
உன்னைப்புனம் காற்க வைப்பாரோ பெற்ற பிள்ளையென்றாலே
கனங்குளலே நீ அவர்க்காய் காரிகையே சொல்லுமென்றார்
சந்தோசமாய் ஆண்டார் தன்னோடு ஏதுசொல்வாள்
என்னை மான்யீண்டதென்பார்[5] என் பேரும் வள்ளியென்பார்
மின்னை முகம்னோக்கி வேலவருமேது சொல்வார்
மான்யீண்ட[6] கண்டே வள்ளியம்மே சொல்லக்கேள்
உன்னை வளத்தார்க்கு உனக்கிளையாள் தான் இல்லையோ
அன்னையவள் உந்தனக்கு அறப்பாவியோ மயிலே
பின்னை ஒரு பிள்ளைகளைப் பெருவனத்திலே தினைக்கு
சன்னை[7] இடும் பட்சிகளைத்தான்[8] விலக்கமாட்டாரோ
இந்த வனவாஷமதில் ஏந்திளையே உன்னை அவர்
அந்தக்குறத்தி அனுப்பினதை நீ கேளாய்
பெற்றவர்க்கெல்லோ தெரியும் பிள்ளை வருத்தமது
பெறாதமலடி[9] பிள்ளை என்றால் தையலரே இவ்வனத்தில்
உன்னை விடுவாரோ ஓவியமே இவ்வனத்தில்

---

1 *அந்தமொழி*
2 *மகிழ்ந்து*
3 *புகழ்ந்துரைத்தல்*
4 *கிளிமொழியே*
5 *மான் ஈன்றதென்பார்*
6 *மான் ஈன்ற*
7 *தினையினை உண்ணுதல்*
8 *பறவைகள்*
9 *பிள்ளை பெறாதவள்*

நாட்டில் வளமையது நன்னுலே உன் அளவு
கண்டீரோ நீயும் காரிகையே நீயும் இப்போ
என்ன செய்வாய் நீயும் இளிகுலத்திலே[1] விதித்தான்
அன்னமுயத்தோன் வகுத்தால் ஆரை இனி வெறுப்போம்
ஆடவரே நீயும் அண்ணர்தனைப்[2] பேசாதே
வேண்டாமெண்டோ தான் விட்டார்கள் கானகத்தில்
எங்கள் குலத்திலுள்ள முறை ஏற்ற புனம் காத்திருக்க
சங்கைகாண் எங்களுக்குச் சாதித் தொழில் ஆடவரே
தேனும் தினைமாவும் சிறு கிளங்கும்[3] பிடி கிளங்கும்[4]
ஊன் இறைச்சி தின்று உகந்திருப்போம் என்னாளும்
ஆங்காணும் மின்னே அதுமெய்தான் உங்களுக்கு
பாங்கியரும் இல்லாமல் பார்வனத்திலே தனியே
உன்னை விடக்காரியமேன் ஓவியமே இவ்வனத்தில்
அன்னை தாய் இல்லாமல் அனுப்பினார் கானகத்தில்
நன்றியுள்ள பாங்கியுண்டு நான் இருப்பேனோ தனியே
காய்கனியும் தான் பறித்துக் கன்னியவள் சிற்ரூர்க்கு[5]
போய் வரவும் இப்போது போனாள் உடன் வருவாள்
ஆனாலும் மின்னே அவர்களுக்கு உன்மேலே
மானார்க்கு கொஞ்சமும் வருத்தமில்லை கண்டீரே
சற்றும் இரகமில்லை தையரே[6] உன்னோடு
தலையில் எளுதினதை[7] தள்ளிவைக்கப்போகாது
உன்ஆவி மறுக்க அருங்கானகத்திருந்தாய்
என்ன செய்வாய் நீ அதற்கு ஏந்திளையே எண்டு சொன்னார்
அதிகமான பலன் அன்புடனே செய்துவந்தால்
விதம்விதமாய் ஒன்று கண்டாய் விதி ஒருநாள் தப்பாது
ஆரிருந்தும் என்ன அன்னை பிதா இல்லாவிட்டால்
சீரிருந்தும் ஆவதுண்டோ சேயிளையே[8] இப்போது
இங்கே நான் வந்து நெடுநேர மாகுதிப்போது
வளையல்கொள்ள வேணுமென்றால் வாங்குமினி மின்னாளே

---

1 இழிகுலம்
2 அண்ணன்மார் (வேடர்)
3 சிறுகிழங்கு
4 பிடிகிழங்கு
5 வேடர்கள் வாழுகின்ற ஊர்
6 பெண்ணாரே (வள்ளி)
7 தலையில் எழுதியதை (தலைவிதி)
8 வள்ளி

மின்னே[1] ஆயிரம் பொன்விலை கொண்டு வாருமென்றார்
பொன் ஆயிரம் உரைத்தாய்போய் விடும் நீ இப்போது
மலையில் குறவர்கட்கு வளையல் விற்கவேணுமென்றால்
விலையைப் பறைந்தாலல்லோ[2] விற்பாய் வளையல் அது
மானெதியம் ஆர்தருவார் வளையல் கொள்ளப்போவதார்[3]
தேனைப் புசித்திடுவோம் சீராக வாண்டிவோம்[4]
தேனும்திணைமாவும் சிறுகிளங்கும் பிடிகிளங்கும்[5]
ஆனவரதம் எங்களுக்கு ஆனது ஆனதுதான்
இளி குலத்தில்[6] நீ பிறந்தால் இவ்வளவோ சொல்வாய் நீ
நாடுதனில் கேட்டிருப்போம் நான்தானும் சற்றறிவேன்[7]
கேட்டிருப்பேன் முன்னாளில் கிளிமொளியே[8] நீகேளும்
கோட்டுமதவாரணத்தின்[9] கொம்பே இனிக்கேளும்
அன்னை பிதா உன்மேலே அன்போடிருந்தாக்கால்
பொன் ஆயிரம் தருவார்போய் வாங்கமாட்டீரோ
என்றுரைக்க ஆடவரும் ஏதுசொல்வாள் வள்ளியம்மன்
பணம் காசி நானறியேன் பாரவனந்தனிலே
மனங்கொள் திணைவரகு வல்சாமி புல் ஏறுங்கு
தருவேன் வளையல் தந்தீரேயாமாகில்
வள்ளியரே உன்னுடைய வளமாதனைக்கேளும்[10]
கன்னி நீ உன்னுடைய களவெல்லாம்[11] நானறிவேன்
கானகத்தில் வேடர் கலைமான் முயல் உடும்பு[12]
ஊன் இறச்சி தேடி உடன் ஏகும் வேளையிலே
வள்ளிக்குளியருகே மதலை கிடந்ததினால்
தெள்ளியதோர் குறவன் சென்றெடுத்துக் கொண்டானே
மெள்ளக்குறவரெல்லாம் மிகமகிண்டு[13] நன்றாய்

---

1 வள்ளி
2 சொல்லுதல்
3 வாங்குபவர்
4 வாழ்ந்திடுவோம்
5 வனத்தில் வாழ்கின்றவர்கள் உண்ணுகின்ற உணவு வகை
6 இழி குலத்தில்
7 ஓரளவு அறிதல் அல்லது கொஞ்சம் அறிதல்
8 கிளிமொழி
9 கொம்புள்ள யானை
10 பொருத்தமானது
11 விருப்பம் இருந்தும் அதனை வெளிக்காட்டாமல் இருப்பது
12 ஆண் மான்
13 மிக்க மகிழ்ந்து

பிள்ளைக்கு வள்ளியெண்டு[1] பேரும்மிட்டார் அம்மானை
அன்னேரமே குறத்தி ஆனகுறவரெல்லாம்[2]
உன்னை வளர்கள் ஓவியமே நீ கேளும்
மின்னே உனைக்கானில் விட்டதும் இது போலாம்
தான் பயின்ற சேயிளையைத் தனிக்கானகந்தனிலே
தேன்பயின்ற சொல்லாளே சிறப்பாய் விடுவாரோ
வளத்த பிள்ளை ஆனதினால் மானே உனைக் காட்டில்
காணாமல் உன்தனையும் கானகத்தில் விட்டார்கள்
கானகத்தில் விட்டார்கள் கல்நெஞ்சராய்[3] இருப்பார்
வானவற்கு ஏற்றிடுமோ மயிலே என உரைத்தார்
என்ற மொளிகேட்டு[4] ஏந்திளையும் ஏது சொல்வாள்
நன்று காண் ஆடவரே நானுரைக்கிறேன் கேளும்
கன்மவினை[5] பேசாதே கானகத்தில் ஆடவரே
என்மேல் தயவு வைத்து என் தந்தை அன்னையரும்
பொன் ஆபரணமிட்டுப் பொருக்கி எனை வளத்தால்
என்னாளும் என்மேலே இன்பமாய் அன்புவைத்து
இன்று முதல் என்னை இயல்வாய் வளத்தார்கள்
நன்று நீ சொன்னீரே நாயகரே என்டுரைதாள்
அண்ணர்மார்[6] என்மேலே அதிகதயவாய் இருப்பார்
கண்ணாகப்போற்றி[7] கருத்தாய் எனை வளத்தார்
எண்ணமிலாதே உரைத்தீர் இனிக்கேளும் மின்னாளே
செப்பார் தனத்தாரே சீர் சிறந்த மின்னுரே
என்னதான் சொன்னாலும் அவள் வளத்த பிள்ளையென்றால்
குற்றமில்லா மின்னேகேள் உன்குலத்துக்கீனமல்லோ
மானின் வயிற்றில் வந்துதித்த மாமயிலே
தேன்பயின்ற சொல்லாளே சிறப்பாய் விடுவாரோ
மானிலத்தோர் என்சொல்வார் நாயகியே நீகேளாய்
மானின் வயிற்றுதிதாய் வையகத்தோர் கண்டதில்லை
அக்குலத்தில் நீயுதிதாய் அன்னமே தெள்ளமுதே

---

1 வள்ளி என்று
2 வேடுவர்கள் யாவரும்
3 இரங்கிக்கேட்டும் மனம் உருகாமல் இருப்பது
4 மொழிகேட்டு
5 முற்பிறப்பில் செய்தவினை இதனைப் பழவினை என்பர்
6 வேடுவர்கள்
7 மிகக் கவனமாக

விதியின்படிவருங்காண்[1] மின்னே அது தப்பாது
மாணீண்ட போதுவல்மிருக மென்று விட்டார்
தேனே இனிக்கேளும் சிவன்கரத்தில்[2] உற்றதுகாண்
எளிகுலத்தில்[3] நீ பிறக்க இதுமதியோ உன்தனக்கு
மேல்குலத்தில் நீ பிறந்தால் விடுவாரோ கானகத்தில்
பட்டால் அலங்கரிப்பார் பாவிப்பார்[4] எத்தனைபேர்
வாய்திறந்நீ மொளிந்தால்[5] வாய்முத்து சிந்துமென்பார்
மாயமிது என்பார் மண்ணில் நடக ஒட்டார்
பஞ்சணையிலே நடந்தால் உன்பாதம் சிவக்குமென்பார்
நஞ்சவிளும் பூங்குளலே[6] நல்லினதிற் சேந்திருந்தால்
பொன் பைரணமிட்டுப்போற்றி புகள்ந்துண்தனையும்[7]
துன்னு மஞ்சப்பஞ்சணையில் தோகையரே உன்னைவைத்து
என்னேரமும் புகள்வார்[8] இதுமதியோ உன்தனற்கு
என்னவிதம் சொன்னாலும் ஏந்திளையே உன்தனக்கு
ஊனின் விதிதப்பாது[9] மெய்குளலே[10] உன்தனக்கு
பழைய உறவுண்டெனக்குப்[11] பருவரையாய் கானவர்கள்
வளையல் விற்பேன் அந்நாளில் மானே உனைக்காணேன்
அப்போது துனைக்காணேன் ஆயிளையே இவ்வரையில்
செப்பார் இளமுலையாள் சேந்ததுவும் இப்போதான்
முன்னாளில் இவ்வரையில் மதியகுறவரெண்டும்
அன்னாள் அவர்கள் கண்டால் ஆதரிப்பார் என்னை மெத்த
மின்னே தான்வந்து வெகிநேரம்மாகுதிப்போ[12]
பார்த்தால் குறவர் பளிகள் மிகச்செய்திடுவார்
ஆற்றேன் சமருக்கு அறிவு கெட்டசாதி மெத்த
கொம்புகுளை உடுப்பார் கோலக்கலை அறியார் ...

---

*1* விதியின்படி
*2* சிவன் கையில்
*3* எழில் குலத்தில்
*4* பயன்படுத்துதல்
*5* மொழிந்தால்
*6* பூங்குழலே
*7* புகழ்ந்து உந்தனையும்
*8* புகழ்வார்
*9* விதிப்படி
*10* மெய்குழல்
*11* முன்னருள்ள பழக்கம்
*12* வெகுநேரமாகுதிப்போ - நீண்டநேரம்

அம்புலியிலே சிவனை ஆதரிக்க மாட்டார்கள்
சிவபூசை குருபூசை தெரிசித்தறியார்கள்[1]
தவமீதெண்டறியார் சற்றும் இரக்கமில்லார்
எப்படியும் அவர்க்கு இணங்க நடந்தாலும்
சற்றேபிளை வருகிற்தான் வதைப்பார் பொல்லாதார்
என்றுரைக்க ஆடவரும் ஏதுசொல்வாள் வள்ளியம்மன்
குண்டுருவவேல்[2] எறிந்த குமரனுண்டு எங்களுக்கு
எறும்பு கடையான் எண்பத்தினான்குயிற்கும்
உறும்பொருளாய் அங்கே உற்பவித்தாதோ பிரமன்[3]
அவரவற்குத் தக்கவராய் அங்கங்கே தான்இருந்து
சிவன் கருத்தை ஆர்[4] அறிவார் வெல்வ மிகு ஆடவரே
அந்தமொளிகேட்டு[5] ஆடவரும் ஏது சொல்வார்
இந்நுதல் வாள்மயிலே[6] இப்போதுரைக்கிறேன் கேளும்
மெய்யாக இக்குலத்தில் மேவி விதித்தான் பிரமன்
இறையோன் விதிப்படியே யேந்திளையே மான் வயிற்றில்
குறையாமல் வந்துதித்த கோதையரே மான் வயிற்றில்
வனவேடர் கையிலே வதுவைசெய்தாற் கானவர்க்கு
பொல்லாங்கு உண்டாகும் பூங்கொடியே தப்பாது
அந்தமொளி[7] உரைத்த ஆடவரோடு ஏதுரைபாள்
எந்தன் தலையில் எளுதியவாறெப்படியோ[8]
எதிரேறும் யீசுபரன்[9] இயவை இனிப்பூவுலகில்
ஆரறியப்போரூர்[10] ஆடவரே இப்போது
அந்தமொளியுரைத்த[11] ஆடவரோடுடேதுரைபாள்
சிவன் கருத்தை ஆர்[12] அறிவார் செல்வமிகு ஆடவரே

---

*1* *சிவனுக்கும் குருவுக்கும் பூசை செய்து வணங்காதவர்கள்*
*2* குன்றுருவவேல்
*3* *பிறக்கச் செய்தானோ பிரமன்*
*4* *யார்*
*5* அந்தமொழிகேட்டு
*6* *வாழ்மயில் (வள்ளி)*
*7* அந்தமொழி
*8* *எழுதியவாறெப்படியோ*
*9* *ஈஸ்பரன்*
*10* *யாரறிவார் இப்போது*
*11* அந்தமொழியுரைத்த
*12* *யார்*

கந்தர் மிகமகிண்டு[1] கன்னியுடன் ஏது சொல்வார்
இட்டவிதிதப்பாது எந்தவிதமானாலும்
கட்டளையாய் பிரமன் கானகத்தில் உன்தனையும்
இருக்க விதித்தான் இதுவிதியோ உன்தனக்கு
அந்தமொளி[2] கேட்டு ஆயிளையும் ஏதுசொல்வாள்
கந்தனார் தன் செயலைக் காசினி எல்லாம் அறியும்
வந்த விதியை மறுக்கலாமோ புவியில்
எந்தவிதம் ஆனாலும் என்ன செய்வோம் நம்விதிக்கு
தலையில் எளுதிவைத்த[3] தள்ளிவைக்கப்போகாது
தாண்டவம்மாடும் சிவனார் தன்னருளை ஆர்[4] அறிவார்
எனக்குவளையல் தாரும் எப்படியும் ஆடவரே
உனக்கு வளையல் தருவேன் ஓவியமே பொன்தருகில்
பொன் மணமும் நான்னறியேன் புகள்[5] வேலர் தன்னுனை
வன்பலவே உம்மானை வளையல் தராதிருக்கில்
போய் விடுங்காண் நீயும் புனத்தை விட்டு நீ கடுக[6]
கடுக நீயேகுமென்டீர் கைவளையல் கொள்ளாமல்
வடுவில்லாவேல் விளியீர்[7] வளையல்கொள்ளமாட்டீரே[8]
இல்லையென்று சொன்நீரே என்ன செய்வேன் ஆடவரே
முல்லை இலை நகையீர் முத்தே வனக்குயிலே
சிலைக்குப் பெரியவரே செப்பினீர் இல்லையென்று
விலைக்கு வளையல் விற்பீரேயாமாகில்
சாமிவரகெறுங்கு தானியங்கள் மெற்றவுண்டு[9]
ஆமாகில் நீதாரும் ஆடவரே பொன் பணமும்
இங்கே கிடையாது என்னாளும் இவ்வரையில்
இல் என்றால் போய்விடுங்காண் இப்போது ஆடவரே
தங்காமல் போய் விடுங்காண் சடுதியில் ஆடவரே
ஆர்வாங்கப்போறார்கள் அதுவெல்லாம் விட்டுவிடும்
சீராக நான் விலைதான் செப்புகிறேன்[10] கேளுமென்றார்

1 *மிக மகிழ்ந்து*
2 *அந்தமொழி*
3 *எழுதிவைத்த (விதிப்படி)*
4 *யார்*
5 *புகழ்*
6 *தூரம்*
7 *குற்றம் சொல்லமுடியாத கண்கள்*
8 *வளையல் வாங்கமாட்டீரோ*
9 *சாமை, வரகு, எறுங்கு அதிகமாக உண்டு*
10 *சொல்லுகிறேன்*

ஆயிரம்பொன் தாரும் அன்னமே தார்குளலே
பொன்னும் பணமும் இங்கே கிடையாது
திணைவரகு நான் தருவேன் வளையல் தந்தீரேயாகில்
திணைக்கு வளையல் ஆர்[1] தருவார் மின்னாளே
இந்தவிலை சேராது என்வளையலுமிப்போ
வில்லாதிருந்தால்[2] விரையப்போ ஆடவரே
அண்ணரெண்ட[3] சொல்லை ஆடவர்தான் கேட்டு
பெண்ணாரே உங்கள் அண்ணர் பெருமைதனைப்பேசாதே
மண்ணில் எலி பிடிப்பீர் மரம் வெட்டித்தேன் எடுப்பார்
கன்னிகுத்தியே பறவை கடுகப்பிடித்திடுவார்
விண்ணில் வரும் மேகமதை வென்பசியால் உண்டிடுவார்
அன்னம் புசித்தறியார் அருங்கானில் வேடுவர்கள்
என்னேரமுங் கானில் எளுந்தே[4] திரிவார்கள்
என்ற மொளிகேட்டு[5] ஏந்திளையும் ஏதுசொல்வாள்
நன்றுகாண் ஆடவரே நகைப்பீரே அண்ணர்களை
அண்ணரெண்டு[6] மெற்ற அதிக வீரஞ்சொல்லுகிறாய்
பெண்ணாரே உங்கள் அண்ணர் பெருமை தனைப்பேசாதே
நீர்க்கோளி தாறாவும் நெடியதொரு கானானும்
மதியாமல் தான் பிடிக்கும் மனிதரே உங்கள் அண்ணர்
செங்கால் நாரை பிடிக்கும் சேகுவரே உங்கள் அண்ணர்
சங்கை மெற்ற சொல்லுகிறாய் அவர் தன்னை நானறிவேன்
அறிவேன்னான் கானவரை ஆனபுற்றில் யீசலெல்லாம்[7]
குறியாகத்தின்னும் குறவர்களே உங்கள் அண்ணர்
கோயில் களம் அறியார் கும்பிட்டு நின்றறியார்[8]
நாவினால் உங்கள் அண்ணர் நன்மை தீமை சொல்லறியார்
சொல்லறியார் என்பீர் துணை உனக்குமில்லை
நங்கே உனக்காக நான் வந்தேன் பூங்காவில்
எங்கே நான் போவேன் ஏந்திளையே உன்னை விட்டு
நங்கையெண்டு நீ உரைத்தீரே நான் ஆரு நீ ஆரு[9]

---

1 *யார்?*
2 *விற்றல்*
3 *அண்ணரென்ற - அண்ணன்*
4 *எழுந்தே*
5 *மொழிகேட்டு*
6 *அண்ணர் என்று*
7 *ஈசல்*
8 *வேடுவர்கள் இறைவனை வணங்காதவர்கள்*
9 *நான் யார்? நீ யார்?*

பங்கப்படப்போறாய்[1] பரிசிகெட்ட[2] பேச்சுரைத்தாய்
அண்ணர் கண்டால் உன்னுயிரும் ஆடவரே என்னுயிரும்
திட்டமுடன் கொண்டிடுவார் தேசத்தில் போய் பிளையும்
வேண்டாங்காண் நீயும் விரையவே ஏகிவிடும்
ஆடவரே இப்போது அண்ணர் வருவார்கள் இப்போ
கொன்று குலைசெய்யும் [3] குறவர் வருவார்கள் இப்போ
நீ இறந்து போகாமல் ஏகிவிடும் ஆடவரே
நான் இறந்தால் உந்தனக்கு நன்மை உண்டோ வாள்மயிலே[4]
மானிறச்சி திண்ட மதியோ நாள் வீட்டில்லையோ
மானே குயிலே மரகதமே கோகுலமே
தானே வருந்தி உன்னை நாடிவந்தேன் கண்டீரே
உன்னை இந்தப்புலியுள்ள கானகத்தில்
ஏன் நீ தனியே இருக்கிறாய் பெண்ணமுதே
இந்த வனமும் வரையும் எப்போதும் உங்களிதோ
இந்த வனவாள்[5] மிருகம் அடிமையோ மின்னாரே
ஒளி கொண்ட வேள்மதியோ ஒன்னுதலே இன்னமுங்கேள்
வளிகொண்டு இவ்வனத்தில் வந்தது முன்னானுமுண்டோ
பங்கப்படப்போறாய்[6] பரிசு கெட்ட பேச்சரைத்தாய்
புருஷனில்லாக் கானகத்தில் பெண்பிறந்தாள் தன்னோடு
சருவி விளையாட தகுதியோ ஆடவரே
வளையல் விற்க வந்தீரோ வாதாட வந்தீரோ
பளைய[7] உறவோ உனக்குப் பயித்தியந்தான் கொண்டீரோ

## விருத்தம்

வனத்திலே இருந்து மேனி வாடியே வெயிலின்மேவ
புனத்திலே இருக்கவெண்டோ விதித்தனன் பிரமனுன்னை
இனத்துடன் கூடி வாழ்ந்து இரக்கலாம்[8] மின்னே நல்ல
கனதநற்தவத்தினுளே காரியமறியலாமோ

1 சிரமத்தை அனுபவித்தல்
2 சொல்லத்தகாத பேச்சு (பவுசுகெட்ட பேச்சு)
3 கொலை செய்யும்
4 வாழ்மயில்
5 வனவாழ்
6 கஸ்டப்படப் போறாய்
7 பழைய
8 இருக்கலாம்

## நடை

மானே உனை நாடி வந்தேனே அல்லாது
தேனே எனக்குமிங்கே செய்தி வேறுண்டோ சொல்
இங்கெனக்காய் வந்தீரோ இறக்கவெண்டு வந்தீரோ
சங்குமணிப்பாசி தான் வளையல் விற்கவந்தீரோ
பாசிவிற்க வந்திடத்தில்[1] பயித்தியந்தான் கொண்டிரோ
ஆசை கொண்டு நீயும் அனுமதிகள்[2] பேசாதே
பொன்னுலகில் மானாரே பூங்கிளியே இன்னமும் கேள்
அன்னமெனும் வாள்மயிலே[3] அளகு[4] சிறுகுயிலே
வாடி குறமாதே வனங்கள் எங்கும் தான் தேடி
நாடி உனை இவ்வனத்தில் நாடிவந்தேன் கண்டீரே
என்னை நீதான் அறியாதிருந்தாலும் வாள்மயிலே[5]
உன்பெருமை கேட்டிருப்பேன் உலகுதனில் நான்தானும்
அன்னமே உன்மேலே ஆசை கொண்டு வந்திருந்தால்
மன்னவரே எங்கிருந்தும் வாறீரெண்டால் ஆகாதோ
வந்தீர் வளையல் விற்க மன்னவரே உன்னையும் நான்
உன்னை நான் கேட்பது நாயமோ[6] ஆடவரே
ஆடவரே என்று சொன்ன அன்னமே மின்னேகேள்
தோடாமல்[7] என்னைக் குறிப்பறிய மாட்டீரே
வாடி மனம்தளந்து வையகமும் நாடுவிட்டு
நாடினுள் வந்த செய்தி நன்மையறிந்தாயிலையே
போடிபோடி உன்னுடைய புத்திமதி மாத்திரங்காண்
தேடி நான் வந்த செய்தி செப்புமொளி[8] கேட்டிலையோ
என்ற மொளிகேட்டு[9] ஏந்திளையாள் ஏதுசொல்வாள்
நன்று நீ சொன்னீரே நாயகரே கேளுமினி
மண்ணோரும் விண்ணோரும் வானவரும் தேவர்களும்

---

1 வந்த இடத்தில்
2 அழிமதிகள் பேசாதே
3 வாழ்மயில்
4 அழகு
5 வாழ்மயில்
6 நியாயமோ
7 ஆராயாமல்
8 செப்புமொழி
9 மொழிகேட்டு

எண்ணிறந்தபேர்கள் இறந்ததுவும் பெண்ணாலே[1]
ஆடவரே நீயும் அறிந்திருப்பீர் அம்மானை
மாண்டு போகாமல் ஏகிவிடும் ஆடவரே
ஏகுமெண்ட மின்னே கேள் இப்போதியம்புகிறேன்
வாகுடைய மின்னே வருந்தி உனை நாடிவந்தேன்
இந்தமதி ஆர்[2] சொல்வார் இயல்வு கெட்ட ஆடவரே
கன்னிகையாய் நான் இருக்கக் கானகத்தில் நீயும் வந்து
என்னைச்சரசம் பண்ண இதுமதியோ உன்தனக்கு
நங்கே உனை மறந்து நான் ஒருவன் போகேன்
என்ற மொளிகேட்டு[3] ஏந்திளையும்[4] ஏதுசொல்வாள்
இன்று நீ சொன்னமொளி[5] ஏராது போய் பிளையும்[6]
வனத்திலே இப்போது வாரார்கள்[7] கானவர்கள்
அண்ணர்மார் வாரார்கள் ஆரபாரங்கேட்கிதிப்போ[8]
போய்விடும் காண் ஆடவரே புனத்தை விட்டு நீ கடுக
என்ற பொளுது[9] இளையோனும் உள்மகிண்டு[10]
அன்னமே என்னுயிரம் அன்புமிங்கே தான் இருக்கப்
பொண்னே வெறும் கூடுபோமோ தனிவளியே
மாந்துளிர் போல் மேனி வாடாமல் உன்னருகே
உயந்த தளைமரமாய் நிற்பேன் எனப்புகண்டார்[11]
மரமாக நிற்பீரோ வல்குறவர் தங்கள் முன்னே
உரமேன் பறையுகிறீர் உன் ஊரேபோ ஆடவரே
ஆடவரே போமெனவே ஆயிளையே நீயுரைத்தாய்
ஆண்டியுனக்கேன் வீரம் அண்ணமார் வாறார்கள்
ஆரெண்டும்[12] பாரார்கள் அண்ணமார் இங்கே வந்தால்
மாண்டு போகாமல் வனத்தை விட்டு நீயேகும்
ஆண்டி பெண்ணால் இறந்தால் ஆரும் நகைப்பார்கள்

1 பெண்களால் நடந்தவைகள்
2 யார்
3 மொழிகேட்டு
4 வள்ளி
5 சொன்னமொழி
6 ஏறாது போய் பிழையும்
7 வாறார்கள்
8 ஆரவாரம்
9 பொழுது
10 உள்மகிழ்ந்து
11 எனப் புகழ்ந்து
12 யாரென்று

தவமே பெறுவேன் நான் தையலரே உன்னாலே
அவமொருநாள் வாராது ஆண்டி ஒருநாள் இறவான்
இறந்தாலும் உன்னை விட்டுபோகேன் என உரைத்தார்
மறந்திருக்கமாட்டேன் மானே உனைப் பிரிந்து
போகாதிருந்தால் புனக்குறவர் பொல்லாதார்
ஆகாதென உரைத்தேன் அடியாள்மேல்குற்றமில்லை
குற்றமில்லை எண்டீரே குறமகளே சொல்லக்கேள்
சற்றிரக்கமில்லையோ தையலரே உந்தனக்கு
அன்நேரமே குறவர் ஆரபாரத்துடனே
மன்ரே போய்பிளையும் வாரார்கள் அண்ணமார்
மானே உனை நாடி வந்தேனே அல்லாது
தேனே எனக்குமிங்கே செய்தி வேறுண்டோ சொல்
நான் மாண்டாலும் உன்னை விட்டு வளி பொறதில்லையென்றார்[1]
உன்னை விட்டு நான் போகேன் உன் ஒரு பாதத்தானை
என்னை அவர் கொண்டாலும் இவ்விடம் விட்டு போவதில்லை
அப்போது வேலவனார் ஆனவள்ளி தன்னருகே
செப்பொன்னும் பூமுலையாள் சிறந்த வள்ளி தன்னருகே
வேலோன் குனிந்த நிளல் வேங்கை மரமானார் காண்
ஆனைக்கிளயோன்[2] அணி நிளலாய்[3] நிற்பளவில்
மானைப் புலியை எய்து வந்தார்கள் கானவர்கள்
வள்ளி இருக்கும் வனம் தனிலே ஏகிநிண்டு
வந்து நின்று வேடுவர்கள் வல்மரத்தைப் தான்பார்த்து
இந்த மரம் ஏது வள்ளி இது மாயம் என்பாரும்
கண்டதில்லை இவ்வேங்கை காவல் தினைப்புனத்தில்[4]

## விருத்தம்

வேங்கை மரம் ஆனார் [5] மின்னார் தன்னருகில்
ஆங்கரும்மாவெனவே ஆறுமுகம் பூங்காவில்
வந்து நிண்டு வேடர்வல்மருத்தைப் தான் பார்த்து
இந்தமரம் ஏதெண்டார் இயல்பு

---

1 போகமாட்டேன்

2 யானைக்கு இளையவன் (முருகன்)

3 நிழல்

4 வேடர்கள் வருவதனை அறிந்து கிழப்பிராமண வடிவம் கொண்ட முருகன், வள்ளி இருந்த இடத்தில் வேங்கை மரமாகி நிற்கின்றார். அதனைக் கண்டு வியந்து வேடுவர்கள் நின்றார்கள்

5 ஆனார்

## நடை

பார்த்து நிண்டு[1] வேடர் வேங்கைதனைப் பாங்காகவே வேடர்
நேற்று நான் கண்டதில்லை நீண்ட மரம் மாயமென்பார்
மாயம்காண் இவ்வேங்கை மாயாசொருபமென்பார்
பேயோதான் இவ்வேங்கை பெரியமரம் என்பாரும்
வள்ளியம்மையை அளைத்து[2] வனவேடர் ஏது சொல்வார்
மானே மடமயிலே வள்ளியம்மே இந்த மரம்
தேனே வரலாறு செப்பாய் எனமொளிந்தார்[3]
அன்னேரம் வள்ளி அண்ணர் தனக்கு அஞ்சிக்
கன்னல் மொளியிடை[4] கைகால் தடுமாறி
ஊனே உயிரே உடன்பிறந்த அண்ணர்களே
நான் அறியேன் நடுவே முளைத்ததெண்டாள்[5]
என்றாள் இளம்கிளியாள்[6] ஏந்திளையாள் வள்ளியம்மன்
நிண்டமரம் பாத்து நெறுனநெறுவன பல்கடித்து
உன்னுடன் இருந்த உயிர் தோளி எங்கே என்றார்
நிண்டமரம் பாத்து நெறுனநெறுவன பல்கடித்து
உன்னுடன் இருந்த உயிர் தோளி எங்கே என்றார்
அந்தப்புனத்தில் அவள் அங்கே காத்து இருக்கிறது
இந்தப் புனத்தில் இருக்கிறேன் நானும் இப்போ
அந்திபடும்வரையும் அவள் அங்கே காத்திருந்தால்
வந்திடுவோம் நாங்கள் ஒன்றாக அண்ணர்களே இராத்திரியில்
என்ற மொளிகேட்டு[7] இயல்பெரிய கானவர்கள்
குண்டாமலைவேடர்[8] கோபம் மிகுதியுமாய்
கள்ளமிது வேங்கைதனை கட்டறவே வெட்டுமென்றார்

வேட்டருவாள் கோடாலி[9] விரைவுடனே தான் எடுத்து
திட்டமுடன் வெட்டவென்று சேரவே சம்மதித்தார்
நிண்டு பல்லைக் கடித்து வெட்டுவோம் என்பாரும்
வெட்டுமடா என்பார் விலக்குவார் தான்சிலபேர்

---

1 *நின்று*

2 *அழைத்து*

3 *எனமொழிந்தார்*

4 *மொழியிடை*

5 *முளைத்ததென்றாள் - முளைத்தது என்றாள்*

6 *இளங்கிளியாள் (வள்ளி)*

7 *மொழிகேட்டு*

8 *குன்றாமலைவேடர்*

9 *கோடரி, கோடலி*

கட்டறவே வெட்டுமென்பார்கள் கள்ளமிது வேங்கைதனை
திட்டமுடன் வெட்டவெண்டு சேரவே சம்மதித்தார்

## விருத்தம்

இந்த மரம் முன்னாளில் இல்லை இப்போ முளைத்ததுதான்
கந்தன் அருள் என்றறியோம் கானகத்தில் வந்தவினை[1]
மாயமோ என்பார் வல்வேங்கை வெட்ட என்பார்
நாயமல்ல[2] என்பார் நவிண்டு[3]

## நடை

சுத்தி[4] வந்து கானவர்கள் தொல்மரத்தைத்[5] தான்பார்த்து
பார்த்து ஒரு வேடன் தெய்வமரமாகுதெண்டான்
என்ன புதுமை ஏதோ அறியாமே
ஒப்பமுடன் கானகத்தில் ஒரு நிமித்தம் சொல்லிடுமாம்
கானகத்தில் வந்து காகம் கதறிடவும்[6]
ஆனதிசையில் ஆந்தை கதறிடவும்[7]
கூகை குளறிடவும்[8] கொற்றவரே இவ்வேங்கை
இன்னநிமித்தம் இட்டதினால் இயல்வானகானவரே
கூகை குளறிடவும்[9] கொற்றவரே இவ்வேங்கை
ஆந்தை கதறிடவும்[10] அது நிமித்தம் பொல்லாது
காகம் கதறிடவும்[11] கதிரோன் மறைந்திடவும்
இந்தமரம் இப்போ தெய்வமரமாமெனவே
வெட்டிவந்த கானவரின் கொற்றப்பெருங்குறவன்
நாடி இந்த வேங்கைதனை நாம் வெட்டலாகாது
மேடுபறையாதே வெட்டாதே வேங்கைதனை
வேடுவரைக்கையமத்தி வேண்டும் விசாரமுற்றார்
பார்க்கில் இது சற்றும் பளுதற்ற வேங்கையிது

---

1 ஊழ்வினை
2 நியாயமல்ல
3 நவின்று
4 சுற்றி
5 வேங்கைமரம்
6 காகம் கரைதல்
7 ஆந்தை அலறல்
8 கூகை அழுதல்
9 கூகை அழுதல்
10 ஆந்தை அலறல்
11 காகம் கரைதல்

இந்த மரம் வெட்டில் ஏதுவினைவருமோ
அந்த மரம் தறித்தால் உலகம் அளியும்[1] என்றார்
ஆனாலும் நீங்கள் அந்தமரம் வெட்டாதே
என்னென்ன மாயமோ என்று சொல்லி கானவர்கள்
வாட்டமில்லா வேங்கை வளர்நிலலாய் நிற்குதென்றார்[2]
பின்னை ஒருவர் பிங்காட்டலாமோதான்
வாருங்கோ நீங்கள் வடிவேலர் ஒன்று கண்டாய்
என்னேரமும் முருகர் ஏற்றதுணை ஒன்று கண்டாய்
கானவரே தமக்குவினை வருமெண்டெண்ணாதே
வள்ளிக்கொரு நிளலும்[3] வாய்த்ததே என்றவர்கள்
தள்ளி விலகித்தனை மரத்தை விட்ட கண்டார்
காவர்கள் போன பின்பு கந்தர் அறுமுகனார்
மானிடராக வந்து வணங்கினார் வள்ளிதனை

## விருத்தம்

கானவர்கள் ஏகிப்போகக் காவலர் வந்து நின்று
மானிட வடிவமாக மயில்தனைனோக்கிச் சொல்வார்
கூனிவிற்பிறவை நல்லாள் கூடவே இருந்தாயானால்
வானவர் அறிய உன்னை மணமது செய்வேன் என்றார்

## நடை

ஆடவரே எங்கிருந்தாய் அண்ணமாருக்கொளித்து[4]
வேடுவர் கண்டால் உன்னை வெட்டியல்லோ கொண்டிடுவார்[5]
கொல்ல அவர் தன்னாலே கூடாது வாள்மயிலே
நல்லவர்க்கு பொல்லாங்கு நாட்டில் வரமாட்டாது
ஏன் நீ தனியே இருக்கிறாய் பெண்மயிலே
போந்தனிருங் கானகத்தில் போற்றுவேன் பூங்குயிலே
நீ கூப்பிட்டு நித்தம் குரலரிந்து போகாமல்
காப்பிட்டதா உந்தன் கண்டு நடவாமல்
வெயிலே நின்று உந்தன் மேனி மெலியாமல்
கையில் கவுன் எறிந்து கிரோனால் வாடாமல்
என்னுடனே சேந்தால் இலங்குமணி மண்டபத்தில்

1 அழியும்
2 இருத்தல்
3 நிழல்
4 அண்ணன்மாருக்கு ஒழித்து
5 கொன்றிடுவார்

பொன்னுடனே முத்து ஆபரணம் மிகப்பூண்டு
சாந்து சவ்வாது பன்னீர் சந்தணங்குளையவே பூசி[1]
சேந்தளைத்து நாமிருப்போம் செருக்கலாம் தேன்மொளியே[2]
என்றுரைக்க ஆடவரும் ஏது சொல்வாள் வள்ளியரும்
காட்டகத்தில் வேடர் கலைமான் முயல் உடும்பு
தேன் அருந்துவோம் கிளங்கு திண்போம் குளையுடுப்போம்
மான்மரைகள் கொண்டிடுவோம் வல்பறவை திண்டிடுவோம்
ஊன் இறச்சி எங்களுக்கு உணவு தான் ஆடவரே
சூட்டிறச்சி திண்டு சுனையிலே நீர்குடிப்போம்
காட்டகத்திலே திரியுங்கானவர்கள் எங்கள் குலம்
வேம்பை அருந்தும் புளுவேம்பை அருந்தாமல்
தின்னைக்கனி தின்றால் செமிக்குமோ[3] ஆடவரே
கானகத்திலே திரியும் கரடிகடுவாய் புலியும்
ஏனகத்திலே வளத்தால் இருக்குமோ புண்ணியரே
பாம்பு தனைப்பிடித்து பால்வாத்து நீ வளந்தால்
கூம்பு வாய் நஞ்சுதனைக் கொப்பளிக்கும் கண்டீரே
எலியைப் பிடித்து எந்தவிதம் விட்டாலும்
புலியாய் வருமோகாண் புண்ணியரே இப்பொளுது[4]
காத்தைப்பிடித்து கரத்திலே தான் அடைத்தால்
உன்வாத்தை தான் கேட்டு வருமோகன் காவமுடன்
சொல் அறியோம் நாங்கள் சுகமறியோம் நாடறியோம்
கல்லறை மொளிகேட்டு[5] கருதுவோம் காவலரே
என்றும் பெரியோர்கள் என்னைப் புகண்டுரைக்க[6]
வாத்தையல்ல காணும் மறந்து விடீர் மன்னவனே
தேவரீரைப் பாத்தல் சிவதவசி போலிருப்பீர்
ஆவதுவேறில்லை ஆடவரே போய்பிளையும்[7]
என்பேரில் இச்சை தன்னை இன்றோடே மறந்துவிடு
உன்கனவு நான் அறிவேன் உத்தமரே கானவற்காய்
வேங்கை மரமானீர் வேடர்கண்டு விட்டார்கள்
தாங்கி அவர் ஏதோ தடை கண்டு விட்டார்கள்
அண்ணர்மார் கேட்டார் அறியேன் என்று தட்டிவிட்டேன்

---

1 நறுமணப்பொருட்கள்
2 தேன்மொழியே
3 சமிபாடடைதல்
4 இப்பொழுது, இப்போது
5 மொழிகேட்டு
6 புகழ்ந்துரைத்தல்
7 போய்ப்பிழையும்

கண்ணார சற்ரே கானவர்கள் கண்டதுண்டாய்
என்உயிரும் உன்னுயிரும் உடனே வதைத்திடுவார்
விண்ணேற்றிக்கொண்றிடுவார் விரையப்போ ஆடவரே
மன்னவனே நீயும் வனத்தை விட்டு நீயேகும்
கானவர்கள் வில்லறிவீர் கையில் கவுண் அறிவீர்
இனமொளி[1] பேசாதே எளுந்து[2] போ ஆடவரே
போவென்று சொன்ன பெண்மயிலே இன்னமும்கேள்
குளிந்தமொளி[3] 6 கண்டிலேன் குணமில்லையோ உனக்கு
என்னோடு சற்றும் இரக்க முரைத்தாயில்லையே
மின்னே உனை நானும் மேவாமல் போறதில்லை
என்ஆவி இளந்தாலும் அன்னமே உன்மேலே
மேவாமற் போறதில்லை என்றீர் விரையுடனே
அந்தமொளி[4] கேட்டு ஆயிளையும் ஏது சொல்வாள்
இந்தமொளி[5] ஆர்சொல்வார்[6] இயல்புகெட்ட ஆடவரே
காகமதற்கென்னைத் உரைத்தாள் குடித்தால் ஆகுமதோ
என்னோடுரைத்தமொளி[7] எங்கள் அண்ணார்தான் அறிந்தால்
மன்னவரே உன்னை வாளினால் கொன்றிடுவார்
கொல்ல அவர் தன்னாலே கூமாது வாள் மயிலே
நல்லவர்க்கு பொல்லாங்கு நாட்டில் வரமாட்டாது
மன்னவரே இந்தமொளி[8] மறந்து விடும் ஆடவரே
மறந்துவிடும் என்றீரே மானே உனைப் பிரிந்து
இறந்து விடுவார் போல் இருக்கிறேன் மின்னாரே
இறந்தாலும் அந்தமொளி[9] என்முன்னே பேசாதே
வருந்தாதே அந்தமொளி[10] மறந்துவிடும் ஆடவரே
கூசாமல் நீயுரைத்தாய் குறியோ உனக்குமிது
ஏசாரோ என் இனத்தார் இனிமேல் மறந்து விடும்
என்மேல் தயவு வைத்தீர் என்னினமோ ஆடவரே
மனம் பொருந்தினாக்கால்[11] மற்றுமொரு சாதி உண்டோ

---

1 இனமொழி
2 எழுந்து
3 குளிர்ந்தமொழி
4 அந்தமொழி
5 இந்தமொழி
6 யார் சொல்வார்
7 என்னோடுரைத்தமொழி
8 இந்தமொழி
9 அந்தமொழி
10 அந்தமொழி
11 மனம் இனங்கினால்

## விருத்தம்

சாதிவேறெண்டுசொன்ன தையலே[1] ஒன்று கண்டாய்
ஆதவன் வேறு மின்னே[2] அடங்கலும் ஒன்று காணும்
பேதமை சொன்னாய் மானே[3] பிறமொன்றும் சொல்லாமே
மாதவத்செயலோரெல்லாம் மலரடி சேர்வார் கண்டாய்

## நடை

சாதிவேறென்றலும் சந்தித்த நேரமதில்
ஆதிஅரன் பொருட்டால் அவன் அருள்[4] வேறுமோ
பங்கற்ற ஆடவரே பரிசிகெடப்போறீரே[5]
போடா எனவுரைத்த பெண்மயிலே இன்னமும் கேள்
தாடாண்மையாக உன்னைத் தான் அணையாமற் போகேன்
போகேன் என உரைத்த புத்திதனை விட்டு விடும்
ஆகாது ஆடவரே அளிமதிகள்[6] வந்து விடும்
போய்விடும் நீ புனக் குறவர் வாறார்கள்
அண்ணர் அண்ணர் என்சொல்லி அறிவு கெடபேச்சுரைத்தாய்
கண்ணாரக் கண்டீரே காரியையே ஆண்மையெல்லாம்
மரமாக நிண்டீர்[7] காண் மற்றும் வேறமையென்ன
உரமிகுதி சொல்லாதே ஊரேபோ ஆடவரே
போய்ப்பிளையும் என்றீரே புத்தியோ பேதையரே
வாய்ப்பானமின்னே உன்னை மறக்க நான் மாட்டேன்
என்றுரைக்க நேரம் ஏற்றும் சிலைக்குறவர்[8]
சேரக்குறவர் தினைப்புனத்தில் ஏகவெண்டு[9]
சாதிவேறென்றலும் சந்தித்த நேரமதில்
அண்ணன்மார் வாரார்கள் ஆடவரே இப்போது
வீண்பேச்சப்பேசாமல் போய் பிளையும்[10] ஆடவரே

---

1 வள்ளி
2 வள்ளி
3 வள்ளி
4 சிவன் அருள்
5 மானங்குறையப் போறீரே
6 அழிமதிகள்
7 நின்றீர்
8 நின்றீர்
9 ஏகவென்று
10 போய்ப் பிழையும் (தப்பிக்கொள்)

கண்டாரே வேலவரும் கனத்த படை வேடர்களை
அண்டர்தொளுதேற்றும்[1] ஆதி அறுமுகனார்
மின்னே உன் அண்ணரிட வீரியத்தை நான் அறிவேன்
இன்னேரம் எந்தன் இயல்வு பாரே ஏந்திளையே
கானவர் தன்னெதிரே காவலரும் போகவென்று
கானவர்கள் கொண்டாட வனக்கிளவனைப்போலே
குண்டலமும் கதில் குலுங்க இருமலுமாய்
புள்ளி உடையும் புலித்தோலும் நீள் சடையும்
தள்ளி விளுவார்[2] போல் தவசிவடிவானவர்
ஆண்டார் வடிவுகொண்டு ஆடவரும் கானவர்முன்
மீண்டார் அவர்கெதிரே விண்ணவர்கள் கொண்டாட
குக்கல் இருமலுமாய் கையில்தடியூண்டி
விக்கலுடன் தள்ளாடி மெள்ளமெள்ளவே[3] நடந்து
வனவேடர்க்கெதிரே வளிநடந்தார்[4] அம்மானை
சிலைவேடர் கண்டு சிவதவசிலாமெனவே
தான்எதிரே சென்று தடியூண்டித் தள்ளாடி
கூனி நடந்து கொடுத்தார் திருநீற்றை
பார்த்துப்புனவேடர் பரமர் இவர் தான் எனவே
போற்றிக் குறவரெல்லாம் அவர் பாதமே பிடித்தார்
கொந்தலரும் சிற்றடியைக் கும்பிட்டடி பணிந்து
கூனி நடந்து கொடுத்தார் திருநீற்றை
வந்து வணங்கி நிண்டு[5] வாங்கினார் வெண்ணீற்றை
முன்சிரசில் இட்டார் மோகனத்தோளில் இட்டார்
அந்தமுடன் நெற்றிதனில் அணிந்தார் திருநீற்றை
நீறணிந்து கானவர்கள் நேசமுடன் ஆடவர் முன்

## விருத்தம்

நெற்றிலே நீறணிந்து நேசமுடன் கானவர்கள்
இத்தணை தூரந்தனியே ஏன் வந்தீர் ஆண்டவனே
எங்கே தான் போகவந்தீர் சிவகுருவே நீயென்று
திட்டமுடன் கேட்டுத் தெளிந்து

---

1 அண்டர் தொழுதேற்றும்
2 விழுவார்
3 மெல்ல மெல்ல
4 வழிநடந்தார்
5 நின்று

## நடை

வையகமென்காட்டில் வரவேணுமோதினியே
செய்ய திருப்பாதம் சிவக்கவருவானேன்
பாருங்காண் ஆடவரே வையகத்தில் தீத்தமெல்லாம்
ஏருகந்த தீத்தம் இறங்கி நான் ஆடிவந்தேன்
மாமாங்கம்காசி வடகயிலே[1] ராமேஸ்பரம்[2]
தாமாகச் சென்று தலந்தோறும் ஆடிவந்தேன்
குத்தலம் ஆடிக்குறைவற்ற பாபநாசம்
தீத்தநதி ஆடி இங்கே வந்தேன் பார்நானும்[3]
காசினியோர் கொண்டாடக்கண்கண்ட தீத்தமெல்லாம்
தேசிகன் பாதம் தெரிசித்தேன் பார்நானும்
ஏற்ற கன்னிகாதீத்தம்[4] உண்டென்பார் இம்மலையில்
அத்தீத்தம் ஆடவென்று வந்தேன் காண் பார்நானும்
இம்மலையில் தீத்தம் நாங்கள் அறியாமல்
அப்படி ஓர் தீத்தம் இல்லையென்றார் கானவர்கள்
சும்மா உரைத்தார்கள் சுனையண்டித் தீத்தமில்லை
தேடி மலையிற் தெரிந்த கன்னிகாதீத்தம்
ஆடிப்புனத்தை விட்டு அகலாதே ஆடவரே
எங்கள் உடன் பிறந்தாள் ஏந்திளையாள் வள்ளியார்க்குச்
தங்கை உடன் துணையாய்த் தானிருக்க வேண்டுமென்றார்

## விருத்தம்

ஆண்டார் தணைத்தொளுது[5] ஆசாரம் பண்ணிமிக
தீண்டாமல் நின்று அவர் செப்புவார் ஆண்டவனே
எங்கள் உடன்பிந்தாள் இளங்கிளியாள் வள்ளியற்குத்
சங்கை உடன் துணையாய் இது

## நடை

தஞ்சமுடன் வள்ளி தனக்குத்துணையாக
குருகினங்கள் தான் அடித்து கூடி இருமென்றுரைத்தார்
ஆடவரே நீயும் அங்கங்கே தான் திரிந்து

---

1 வடகயிலை
2 இராமேஸ்வரம் (இந்தியாவில் உள்ள ஒரு மாவட்டம்)
3 இங்கு வந்திருக்கிறேன் (பார் நானும் - பயநிலை பெயர்ச் சொல்லாக வந்துள்து. இது ஒரு வகை பேச்சு வழக்கும்கூட)
4 வள்ளியுடன் இணைந்திருப்பதனை மறைமுகமாகக் குறிப்பிடுதல்
5 தனைத்தொழுது

வேடர்மலையில் திரிந்து வேஷம்மற வேண்டாம் காண்
மெற்றப்பளுத்த[1] மேனியுடன் நீ தானும்
சித்தம்மிகத்தளண்டு [2] செயலறிய வேண்டாம் காண்
கற்றவரே பூங்காவில் கானவரே வள்ளியற்கு
அத்தனே இங்கிருமெண்டடி பணிந்தார் கானவர்கள்
தேவரீர் இங்கிருக்கச் சித்தம் இரங்கினால்கால்
மாவருஷம் ஆனாலும் மறப்பதில்லை நாங்களும்தான்
அந்நேரம் ஆடவரும் அதிபிரியமாய் மகிண்டு[3]
மின்னரின் மேலே வெகு பிரியமுகமாகி
வாரும் காண் ஆடவரே வாத்தை மறவாதையும் நீர்
சேருங்கோ கன்னியுடன் செப்புங்கோ என் வசனம்
மின்னாள் சிறிதளவோ வெடுவெடுண்டு செப்பாமல்
என்னேரமுங்கிளவர்க்[4] கிசைந்திரும் நீர் என்று சொல்லி
மானார் தனக்குரைத்து வேல் வேடரே நீங்கள்
போனாலும் உங்களுக்கு புகளும் [5] தவமும் உண்டு
இனிமேல் இக்கானகத்தில் என்னால் நடக்கரிது
கனிவாய் மொளியார்க்கு[6] கருத்தாம்படி உரைத்துப்
போங்கோ நீ கானவரே பூங்கொடியாளோடிருப்போன்
ஆங்கானும் ஆடவரே அதுமெய்தான் எண்டுசொல்லி
அன்னேரமே குறவர் ஆனவள்ளியை அளைத்து[7]
மின்னே இவர் தனைப்போல் மேதினியில் கண்டதில்லை
மூப்பார் இருப்பார் முகத்திலே தான் முளித்தால்[8]
சேர்ப்பார் திருப்பாதம் சிவன் அருளும் உண்டாகும்
மானே இவர் உனக்கு வாய்ததுணையாய் இருப்பார்
தேனே ஒரு நாளும் சினந்து பறையாதே
பசித்திருக்கவொட்டாமல் பலகனியும் தேன்பாடும்
போசித்திருமெண்டே[9] கொடுத்துப் போதவே வாத்தைசொல்
தெள்ளு திணைமாவும் தின்னும் அளவு கொடுத்து

1 மெத்தப்பழுத்த - வயதானநிலை
2 சித்தம் மிகத் தளர்ந்து - ஞாபகம் குறைவான நிலை
3 மகிழ்ந்து
4 என்னேருமுங்கிழவர்
5 புகழும்
6 மொழியார்க்கு
7 அழைத்து
8 விழித்தல்
9 பேசித்திருமென்றே

எப்பொதும் இங்கே இருக்கட்டும் என்று சொல்லி
செப்பமுள்ள ஆண்டார்தனை நோக்கி
அப்போது கானவர்கள் ஆண்டார்தனை நோக்கி
இந்தத்தினை அறுத்து எங்கள் ஊர் போமளவும்
சந்தோஷமாய் இரும் நீ நாங்கள் தினை அறுத்தால்
மெய்யாகவே கூட்டிமேவி உனை வைத்திருப்போம்
அப்போது வள்ளியர்க்கு ஆண்டார் தன் செய்தியெல்லாம்
தப்பாமல் உரைத்துத் தான் அகண்டார் கானவர்கள்
அப்போது வேலவனார் அதிபிரியமாய் மகிண்டு[1]
தென்னா தென்னாவென சிரித்து மிகப்படித்து

## விருத்தம்

வேதமுனி சொற்படியே[2] மின்னார்தனைத்தேடிக்
காதவளி நடந்து கண்டோமே மேதறவே
வேடுவர்கள் வந்தார் மின்னார்துணையாகக்
கூடி இரும்மெண்டார் குறித்து

## நடை

நாடி வந்த நாரதனும் நானும் நினைத்தபடி
கூடி இருந்துள் மகிள்ந்து[3] கொம்பே பசிக்குதெண்டார்[4]
பசி உண்டோ உங்களுக்கு பரமபதம் பெற்றவர்க்கு
சசிபோல் முகத்தாளே உன்னைக் கண்டால் பசியாதோ
ஆசையாய் அன்புடனே அன்னமே உன்மேலே
தசையில் உயிரதுபோல் சாந்தகுணம் காணேன்
ஒட்டாரமிட்டீரே ஓவியமே நானும் உன்னைத்
திட்டமுடன் உன்னையும் நான் சேரவந்தேன் இப்போது
நீமேவி அணையாமல் வெடுவெடுண்டு பேசுகிறாய்
மைவிளியீர்[5] உன்தனத்தில் மருவாமல் போறதில்லை
என்ஆவி இளந்தாலும்[6] அன்னமே உன்னையும் நான்
மேவாமற் போகேன் மெல்லியரே இப்போது

---

1 *மகிழ்ந்து*
2 *நாரதர் சொற்படியே*
3 *மகிழ்ந்து*
4 *பசிக்குதென்றார்*
5 *மைவிழியீர்*
6 *இழந்தாலும்*

மெத்தப்பளுத்த[1] மேனியுடன் நீ தாமும்
இத்தனைக்கும் சாகாமல் ஏன்தான் கிளவா உனக்கு
என்ன மதிகிளவா[2] இன்னும் மறந்தாயிலையே
வன்னமொற்ற மின்னேகேள் வையகத்தில் கன்னியரை
கன்னிதனை முதியோர் கட்டி அணைந்திருந்தால்
பொன்னிறமா உன்மேனி ஓவியமே தப்பாது
தாய்யில்லை தந்தையில்லைத் தையலே உன்தனக்கு
காய்கனிகள் தின்னவெண்டோ கற்பித்தானே பிரமன்
என்னை அணைந்திருந்தால் இவ்வுலகில் தேவரெல்லாம்
உன்னைத் தொளுவார்கள் ஓவியமே தப்பாது
அன்னமேதேனே அளகு[3] சிறுகுயிலே
சின்னஞ்சிறுகுயிலே தேன்பாகே தெள்ளமுதே
உன்கண்ணாரக் கண்டீரே காரிகையே என் ஆண்மை
வேண்டாம் கிளவா[4] வீரம் பல உரைத்தீர்
ஆடவரே அண்ணரைக் கண்டஞ்சினர்ராமெனவே
புல்ண்டதுயரானீர் அண்ணர்களைக் கண்டவுடன்
தெய்வகுலமாய்ச் சீராகவே நீயும்
தீண்டாத சாதிதனை தீண்டுவரோ கற்புடையோர்
ஐந்தெளுத்தும்[5] எட்டெளுத்தும் [6] அறிந்த பெரியோர்கள்
நெஞ்சிதனில் அடக்கி நிலைகாண்பதல்லாது
வாமத்துள்ளே இருந்து மனதை ஒருபடுத்தி
காமம் தனைமறந்து கள்வினைகள்[7] சேர்வதல்லால்
பாதைக்கிறைவர்களோ பரமபதம்[8] பெற்றவர்கள்
என்றந்த வள்ளி இயல்பாய் மிகவுரைக்க
நன்று காண் ஆடவரே நான் உரைக்கிறேன் கேளும்
பூவுலகில் பெண்பிறந்தால் புருஷன்மாரில்லாமல்
நாவுலகில் உண்டோ நாயகரே நீர் அறிய
சிற்றின்பம் அல்லாது சிவனடியிற் சேராது
பெற்ற பேரின்பமெல்லாம் பேதையரே உன்னாலே

---

1 *மெத்தப்பழுத்த*
2 *மதிகிழவா*
3 *அழகு*
4 *கிழவா*
5 *ஐந்தெழுத்தும் (சிவாயநம - நமசிவாய)*
6 *எட்டெழுத்தும் (ஓம் சரவணபவ)*
7 *கன்மவினை*
8 *சிவப்பேறு (சீவன் முத்தி, விதேக முத்தி)*

சத்தி சிவன்வேறுமோ சாதி வேறுண்டோ சொல்
உற்றகுருநாதனும் ஒன்றுகாண் ஓவியமே
உன்னை விடவேறுதெய்வம் உண்டோ உலகு தனில்
மின்னாரே நீயும் விபரமறிந்தாயிலையே
அனவரதகாலம் ஆதரித்து நாமிருந்தால்
மனமகிள்வினாலே[1] வல்லமையினாற் சிவனை
காணலாம் என்றுரைத்தார் கன்னியவள் ஏதுசொல்வாள்
நாணமில்லையோ கிளவா[2] நரைத்தாலும் இன்பமுண்டோ
வீணாய் மயங்காதே வேலவர்தன்னுணை
வானாளைப் போக்காதே மறந்துவிட்டீர் வாத்தைதனை
வேங்கை மரமானீரே வேடர் கண்டு விட்டார்கள்
ஆங்காரம் சொல்லி அளிமதிகள்[3] பேசாதே
கானகத்தில் அண்ணர் முன்னே கக்கல் இருமலுமாய்
மானமளிந்த கிளவரைப்போல்[4] நீயும் நடந்தீரே
அடுத்தாரையீடேற்றும்[5] அண்ணர்மார் தங்கள் முன்னே
கொடுத்தீர் திருநீற்றைக் குறவர்களும் தான் வாங்கி
நெற்றியிலே தான் அணிந்தார் நேசமுடன் கானவர்;;கள்
பத்திமுத்தியாக உன்பாதமே பிடித்தார்
வெற்றிபுனை வேலவனார் மின்னார் தனை நோக்கி
இனிமேல் ஒருவருக்கும் யீடுபடேன்[6] என்றுசொல்லி
கனிவாய் மொளியாரே[7] கட்டுரையும் மென்றுரைத்தார்
அந்த மொளிகேட்டு[8] அளகுகுரல்[9] வள்ளியம்மன்
இந்தமொளி[10] ஆடவரே என்முன்னே பேசாதே
எங்கள் குலந்தனிலே எத்தனை பேர் ஆடவர்கள்
தங்கள் குலத்தை விட்டுத் தவறுவரோ கற்புடையோர்
அஞ்செளுத்தும்[11] எட்டெளுத்தும்[12] அறிந்த பெரியோர்கள்

---

1 மனமகிழ்வினாலே
2 கிழவா
3 அழிமதிகள்
4 கிழவரைப்போல்
5 அடுத்தாரை ஈடேற்றும்
6 ஈடுபடேன் - ஈடுபடமாட்டேன்
7 மொழியாரே
8 மொழிகேட்டு
9 அழகுகுரல்
10 இந்தமொழி
11 ஐந்தெழுத்து (சிவாயநம
12 எட்டெழுத்து (ஓம் சரவணபவ)

நெஞ்சில் அடக்கி அவர் நிலை காண்பதல்லாது
அண்ணர்கள் உன்னை வைத்தால் அம்மட்டோ சொல்வாய் நீ
வில் ஏற்றிக்கொல்லாமல் விட்டதற்கோ நீ உரைத்தாய்
ஆடவரே நீயும் ஆகாத பேச்சுரைத்தீர்
வெட்டிவிடுவார் குறவர் மெய்யாகச் சொல்லுகிறேன்
ஆண்டிவடிவாக வந்தீர் வனம்தனிலே
இளையாள் சிறியாளெண்டறியாமல் இப்போது
பிளைகள் மிக உரைத்தாய் பொறுத்தேன் நான் இன்றவும்
இனிமேல் பொறுக்கரிது இப்போது ஆடவரே
அண்ணர்மார்க் அறிவிப்பேன் உன் உயிரை
திறமுடையார் உங்கள் அண்ணர் செய்தியெல்லாம் நான் அறிவேன்
அறமுடைய மின்னாரே அண்ணர் என்று பேசாதே
மறந்து விடு மின்னாரே வாத்தை பறையாதே
இறந்து விடுவார் குறவர் எண்டோமர் பொருதால்
மறந்து விட்டீரோ அவர்கள் வந்து பின்னே தான் ஒதுங்கி
கானக்குறவரிடசமத்தை நீ கண்டீரோ
தானமுடன் குறவர்கள் வந்தால் என்னிடத்தே
ஆடகப்பெண்மயிலே அளகு[1] சிறுகுயிலே
கண்டிலையோ நீயும் காலில் விளுந்தே[2] தொளுதார்[3]
*அண்ணமார் ஆண்மை அறிவேன் நான் பெண்மயிலே*
பெண்ணாரே உங்களிட[4] பெருமையெல்லாம் நான் அறிவேன்
ஒரு குறவர்க்கொம்பது பேர் ஒண்டோடியார் பெண்டிருப்பார்
பெருமையதுவோ உங்களுக்கு பிரியமோ மின்னாரே
எங்கள் குலத்துள்ள முறை இப்படித்தான் ஆடவரே
தங்கள் குலத்துள்ள முறை தரணி தனிலே நடக்கும்
அறிந்திருந்தும் என்னுடனே அந்தமொளி பேசாதே
பிரிந்து மனம் வேறுபடப் பேசுவோரோ ஆடவரே
பேசுவதும் உன்னுடைய பெருமையல்லால் ஆடவரே
கூசுதில்லே[5] உன்னுடனே கூடிவிளையாடுதற்கு
உன்னை வெறுப்பானேன் உற்ற அண்ணர் செய்ததற்கு
என்னை அளைத்தவர்கள்[6] இவரைப் பசியாற்றி

1 அழகு
2 விழுந்தே
3 தொழுதார்
4 உங்களுடைய
5 கூசுதல்
6 அழைத்தவர்கள்

உந்தனக்குக் காவலுமாய் உடனிருங்கோ என்டுரைத்தார்
அந்தமொளிக்கோ[1] அசந்தங்கள் பேசுகிறாய்
உனக்காக இவ்வனத்தில் ஓவியமே நானும் வந்தேன்
என்னை வெறுதால் போமோ[2] இட்ட விதிதப்பாது
ஊளின் விதியை வெல்ல ஒருவரால் ஏலாது[3]
ஆளியோன் தன்னருளால் அயன் எளுத்து[4] தப்பாது
விரைத்தடங்கண் பூமுலையே மெல்லியரே சொல்லக்கேள்
நான்னுரைத்த மொளிகளெல்லாம்[5] மறிந்திலையே
ஒன்றும் அறியேன் உத்தமரே நீர் தானும்
சரசக்கெறுவிதமாய்த்[6] தானுரைத்தீர் என்னுடனே
பரிகாசம் பண்ணுவதைப் பாங்கி[7] அறிந்தால் வெறுப்பாள்
விஸ்தாரமாமயிலே மெல்லி அந்தப் பாங்கியவள்
உன்னோடு உடன்பிறந்த ஓவியமோ மின்னாரே
மானாரைக்காணேன் மயிலே அவள் எங்கேயெண்டார்
தேனாரும் சிற்றூர்க் சென்றுவரக் போனார்காண்
ஆடவரே உன்னுடைய அளிமதிகள்[8] அத்தனையும்
வேண்டாம் காண் உம்மானை விட்டு விடும் இன்றுமுதல்
ஆசையாய் அன்புடனே அன்னமே உன்மேலே
விசுவாசம் காணேன் மெல்லியரே உன்மேலே
பூமிதனிற் பிறந்த பேதயரே மானிடற்க்கு
காமமிகவானது காண்கடும் பசிகாண் காரியையே
ஆடவராகப் பிறந்தோர் ஆயிளைமார் தன்னோடு
கூடி விளையாடி தென்பசியைத்தீருமென்றார்
பூதமதிலே எடுத்த பொம்காயம் என்னுடலம்
மாயவிடாய் காணும் மன்னமதன் வாளினாலே
ஆயன்தேவர்களும் அங்கே அயந்திடுவார்
மல்லிகை முல்லை மயிலே இருவாச்சி பிச்சி
அல்லிமலர் ஆம்பல் அது தனிலும் ஆயிளையே
எல்லாமலரும் எடுத்தால் அதுவாடும்

---

1 அந்தமொழிக்கோ
2 போகுமோ
3 இயலாது
4 எழுந்து
5 மொழிகலெல்லாம்
6 சரசக்கெறுவிதமாய்த் - விளங்காத வகையில் சொல்லுதல்
7 தோழி
8 அழிமதிகள்

நல்லமலர் காணும் நாசகியே[1] பெண்மலர்காண்
வாடாது தோடாது மன்மதன் வாளினாலே
பேடைமயிலினமே பெண்பூப் பெரியதுகாண்
மன்மதன் வானாளில் வயிறு பசிக்குதெண்டார்[2]
இன்பமுடனே என்பசியெண்டப்போது
பசியெண்டசொல் கேட்டுப் பைந்தொடியாள் வள்ளியம்மன்
கசியும் இளந்தேனும் கருந்தினைமாவுடனே
தேக்கிலையைத் தான் பறித்து தேனும் தினைமாவும்
வாகுடனே ஆடவர் முன் வைத்தாளே வள்ளியம்மன்

விருத்தம்

வேலர் பசிக்கு தெண்டார் மின்னுள் எளுந்து[3] வந்து
கோலத்தினைமாவும் செந்தேனும் தான்கொடுத்து
ஆலமுண்டோன் மைந்தன் கமுகு செய்து வைத்தானோ
வேலர் அதைப்புசித்தார்கள் காண்

நடை

ஆயிளையை வாள்தி[4] அமுது செய்தார் ஆடவரும்
தேனும் தினைமாவும் தின்றேன் இனினானும்
நன்றியுள்ள தண்ணீர் நான் பருக வேணுமென்றார்[5]
அப்போது வள்ளியம்மன் ஆடவரைத் தான் நோக்கி
இப்போது நீர் பருக எளுந்தருள்[6] வேண்டுமென்றாள்
அந்தமலைக்கிந்தமலை அந்தமலைக்கப்புறத்தே
சந்தணச்சோலை தான் கடந்து சற்று வட்டம்
நன்றியுள்ள தண்ணீர் நாங்கள் பருகுவது
சென்று தான் நீர் பருகத் தேவரீர் மீளுமென்றாள்[7]
அந்தமொளிகேட்டு[8] ஆடவரும் ஏது சொல்வார்
எந்தச்சுனையோ[9] போய் நானறிய மாட்டேன்

1 நாயகியே
2 பசித்தல்
3 எழுந்து
4 வாழ்த்தி
5 வேண்டுமென்றார்
6 எழுந்தருள
7 மீளுமென்றாள்
8 அந்தமொழிகேட்டு
9 நீரருந்தச் செல்லும் இடம்

விந்தை செறிமாமயிலே விரைவாக என்னுடனே
இந்தச்சுனையில் வெள்ளம் இப்போ பருகு மென்றாள்
நான் பொசு்பேன் வெள்ளமது நாசகியே என்றுரைத்தார்
தேன் பொதிந்த சொல்லாளே திசை ஒன்றும் நானறியேன்
மாமயிலீர் உங்கள் வனம் அறியேன் காடறியேன்
காமருவுங் பூங்குளலீர்[1] காட்டீர் சுனையதனை
நாடறிந்த கள்வரே நீ நானறியேன் என்றுரைத்தீர்
மேடுபறையாதே விரைந்தேகும் நீர்பருக
பூங்கொடியே நான்போவேன் உன்புனமறியேன்சுனையறியேன்
பாவையரே உன்னைப் பசுமை சொன்னேன் கண்டீரே
அந்தமொளிகேட்டு[2] அன்னமின்னுள் வள்ளியம்மன்
இந்த மலைக்கெப்படி நீர் ஏகிவந்தீர் ஆடவரே
செந்தேன் மொளியாளே[3] தெவிட்டாத தெள்ளமுதே
வந்தேன்னான் உன்னுடைய வாய்தகுரல் ஓசையிலே
எண்டாரே அப்போது ஏந்திளையாள் வள்ளியரும்
நன்றி உடன் ஆடவரே நான் வந்தால் இப்போது
விளைபுனத்தை இப்போ விலங்கினங்கள் தின்றுவிடும்
இந்தப்புனத்தில் என் தோளி[4] தானும் இல்லை
தண்ணீர் பருகவென்றுதான் வந்தால் உன்னுடனே
விண்ணிற் பறவை வந்து விளை புனத்தை தின்றுவிடும்
விளைபுனமெல்லாம் அளியும்[5] மெய்யாக அண்ணர் கண்டால்
தப்பாமலே அவர்கள் கஷ்ந்துகள்[6] செய்வார்கள்
தப்பாதுயென்று சொன்ன தையலே இன்னமுங்கேள்
இப்போவருவாள் காண் ஏந்திளையே உன்பாங்கி
தாகம்வெகுக்குதடி[7] தையலே என்தனக்கு
பாவமோ இவ்வனத்தில் படவோ விதித்தான் பிரமன்
அன்னேரம் வள்ளியம்மன் அந்தமொளிகேட்டு[8]
இன்னேரம் ஆண்டார் இறந்தாலும் பாவம் வரும்
வாறேன் நான் ஆடவரே வாய்த்த சுனைகாட்ட
போறேன்னுள் ஆடவரே புனல்பருக வாருமென்றாள்

---

1 பூங்குழலீர்
2 அந்தமொழிகேட்டு
3 மொழியாளே
4 தோழி
5 அழியும்
6 கஸ்டங்கள்
7 தாகம் அதிகமாக வருதல்
8 அந்தமொழிகேட்டு

முன்னடக்க வள்ளி முருகரவர் மோகமுடன்
மீண்டும் நடந்து போதையரோடேதுரைப்பார்
ஓடாதே நில்லு நில்லு ஓவியமே உன்னுடனே
கூடாது நான் நடக்க கூட்டிப் போபையவென்றார்
ஏசாமலே அலைப்பான் இவன் அறியா தொண்டுமில்லை
நாயம்[1] பல உரைப்பான் நளுப்புவான்[2] என்னையவன்
பையநடவுமென்பான்[3] பயப்புவான் என்னையவன்
மெய்யே தவித்து விட்டீர் வெடுவெடுடென வாருமென்றார்
வாறேன் நான் உன் உடனே வளி தனிலே மெள்ளநில்லு[4]
வீணாய் நடவாதே மெல்லியரே இப்பொளுது[5]
கானக்குறமகளே கரடி புலியாளி சிங்கம்
வனத்திலே தான் மிருகம் நான் கண்டால் அஞ்சிடுவேன்
அந்த மொளிகேட்டு[6] ஆன வள்ளி ஏதுசொல்வாள்
இந்த மதியோதான் எனக்குத் துணையாவீர்
கந்தனார் ஆணை சொன்னால் கரடி புலியாளி சிங்கம்
இந்தத் தலந்தனிலே இருக்மோ புண்ணியரே
வருமோ காண் நம்மிடத்தில் வாய்த்த மிருகமது
ஒரு மிருகம் வாராது உண்மை சொன்னேன் ஆடவரே
தந்தியல்லால் மற்ற தனிமிருகம் அத்தனையும்
எந்தனைக் கண்டஞ்சிவிடும் இப்போது ஆடவரே
அஞ்சவே நீ வேண்டாம் இப்போது ஆடவரே
வஞ்சியரை நோக்கி வடிவேலர் ஏதுசொல்வார்
ஆத்திரமெண்டேயுரைத்தாய் அதுகண்டு என்னுடலம்
எனக்குப்புத்தி மயங்குது காண் பெண்மயிலே இப்போது
ஆணையில்லை என்றீரே ஆயிளையை இப்போது
சேணைத் தலைவரசி நகையைற மகிள்ந்து[7]
கந்தர் இதை அறிந்து கன்னி நமக்காமெனவே
ஓடி ஓடி நடந்து ஓவியத்தோடே தான்
தேடித்சுனையருகே சென்றார் இருபேரும்

---

1 நியாயம்
2 மழுப்புதல்
3 மெல்ல நடத்தல்
4 மெல்ல நிற்றல்
5 இப்பொழுது
6 மொழிகேட்டு
7 மகிழ்ந்து

கன்னல் மொளிவள்ளி[1] சுனை காட்டினாள் காவலர்க்கு
ஆடவரும் அன்னேரம் அந்தச்சுனையிறங்கி
தடாகத்துள் இறங்கி தணீர் தனைப் பாத்து
இந்தத் தண்ணீர் எனக்கு இறங்காது மின்னாரே
மரக்கிளைகள் இலை உதிர்ந்து மனிதர் குடியாமல்
குரங்குச்செடி நாற்றம் குடிகவும் கூடாது
வனக்கிளவனாய் இருந்து மாஞாலம் மெற்றவுண்டு
என் குணமும் தான் அறிவான் ஏய்ப்பான் பயப்பிமெற்ற
அண்ணாந்துபார்ப்பான் அளுவான்[2] குணால் விடுவான்
எண்ணாமல் என்னையவன் ஏய்ப்பான்[3] பயப்பிமெற்ற[4]
வாருங்காண் ஆடவரே வல்சுனையில் நீர் பருகும்
சேரத்தெளிந்து சுனைதனிலே நீர் பருகும்
வள்ளி சுனை காட்ட வடிவேலர் அங்கு நின்று
அன்னேரம் வேலவரை அதிபிரியமாய் மகிண்டு[5]
வடிவேலர் அப்போது வள்ளி தனைப்பார்த்து
தெண்டுகமடலமும் சீரான புத்தகமும்
கண்டு கொள்ளுமென்று வைத்து காவலரும் பூம்சுணையில்
மெள்ளமெள்ளவே[6] இறங்கி நீர் பருகுமாப்போலே
ஆடவரும் அப்போது அந்தச் சுனையிறங்கி
தவறி விளுந்தவரும்[7] தவளை போல் மிதந்தார்
அவசியம் தப்பாது மின்னே அன்னமே கைதாரும்
கைதாரும்மென்ற உடன் கானக்குறமகளும்
ஐயோ இதுபாவம் ஆண்டி இறப்பானெனவே
ஆண்டி இறந்தால் அண்ணர் இதை அறிந்தால்
வேண்டி மிகச் சினப்பார் வெகுபாவம் என்றவர்கள்
மெய்யாகு மென்று விரை ஒருகம்பெடுத்து
கையிலே தான் கொடுத்தார் காவலரும் தான் பிடித்தார்
கையும் ஒரு கம்பாய் கரையேறினார் காண்
அய்யோ கிளவா[8] நீ அச்சுணையிலே விளுந்து[9]

---

1 *மொழிவள்ளி*
2 *அழுதல்*
3 *வெருட்டுவான் (வெருட்டுதல், பயங்காட்டுதல்)*
4 *பயம்காட்டி - பயங்காட்டுதல்*
5 *மகிழ்ந்து*
6 *மெல்ல மெல்லவே*
7 *விழுந்தவரும்*
8 *கிழவா*
9 *தண்ணீர் அருந்தும் இடத்தில் விழுந்து*

மெய்யாய் இறந்துவிடப் போனீரே ஆடவரே
இறப்பேனோ உன்னை விட்டு ஏளைமதி பேசாதே
மறப்பேனோ உன்னையும் நான் மாண்டு[1] இறந்துபோனாலும்

### விருத்தம்

விளுந்த[2] கிளவன்[3] மெல்லியரைத்தான் நோக்கி
குளிந்தமொளி[4] உரைத்தாய் கோதையரே நான் பிளைத்தேன்
இனி நான் பிளைத்தேன் தையலரே இப்போது
என்தாபம்[5] தீரும் இனி

### நடை

மின்னரே தண்ணீர் வெகுவாய்த் தவிக்குதென்றார்
மன்னவரே தணீர் உண்டுவந்தீராய் வாருமென்றாள்
ஆடவரும் அப்போது அவளை நில்லுமென்று சொல்லி
மெய்யாகத்தண்ணீர் உண்ணவேனும்[6] என்று ஆடவரும்
தேன்விளும்[7] பூஞ்சுனையில் சீர் பாதம் தான் விளங்கி
ஆனசுனை நீரமுது செய்தாரே ஆடவரும்
அல்லி எல்லாம் தான் ஒதுக்கி ஆவலுடன் அள்ளி அள்ளி
மாதுக்கு மேல் நோக்கி வைத்த முகம் வாடாமல்
காதுக்குத் தண்ணீரைக் காட்டினார் காவலரும்
மின்னுள் நிளல்[8] இருக்க வேலவரும் அப்போது
கையீரம்கொண்டு[9] கமலமுகம் துடைத்து
போக அபையமென்று புறப்பட்டார் புண்ணியனார்

### விருத்தம்

தண்ணீர் பருகவெண்டு தார்குளலாள் வள்ளியுடன்
புண்ணியரும் [illegible]ங்கே புனம்புகுந்து எண்ணி எண்ணி
நின்றார் தவிப்பாறி நிற்க அவர் தன்னை விட்டு
விட்டுமே போனாள் மின்[10]

---

1 மடிந்து
2 விழுந்த
3 கிழவன்
4 குளிர்ந்தமொழி - இங்கிதமாகப்பேசுதல்
5 என்தாகம்
6 உண்ணவேண்டும்
7 தேன்விழும்
8 நிழல்
9 கை ஈரம்கொண்டு
10 வள்ளி

நடை

போதத் தவிப்பாறிப் பூஞ்சொற்புனக் குறத்தி
தன்பாதத்திலே விளுந்து[1] பலவிதங்கள் செப்பலுற்றுள்
கும்பிட்டுவள்ளி கோலமுள்ள ஆடவரை
வெம்பிமனம் தளந்து ஆயிளையும் ஏது சொல்வாள்
வள்ளி நெடுநேரம் வாய்திறக்க மாட்டாமல்
தள்ளிவிட்டு ஆடவரைத் தாநேது[2] செப்பலுற்றாள்
தன்மம் எண்டு[3] சொல்லி நான் பசியாற்றிச் தாபரிக்க
நன்மை செய்யக் கன்மம் விளைத்ததோ நாயகரே
இப்படி நீ செய்தீரே ஏளைமதி ஆடவரே
செப்படி போலுந்தனத்தார் சினந்தேது வாத்தை சொல்வாள்
நம்பிடக்கூடாது நாயகரே உன்னை இப்போ
கும்பிடுவீர் அண்ணர்கண்டால் என்படுவீர் கெற்றவரே
ஆண்டியுனக்கேன் வீரம் உன்மட்டோ உன்அறிவு
வேண்டியதெல்லாம் உரைத்தேன் விட்டிலையோ உன் குணமும்
இரப்பான் இடமறியான் என்று முன்னாட்கேட்டிருப்பேன்
சிரிப்போ உனக்கிதுதான் செய்தியோ ஆடவரே
அண்ணர் கண்டால் உன்னுயிரும் ஆடவரே என்னுயிரும்
திண்ணமுடன் கொன்றிடுவார் தேசமதில் போய் பிளையும்
நாணமில்லையோ கிளவா[4] நரைத்தாலும் இன்பமுண்டோ
வீணாய் மயங்காதே விரையவிடு ஆடவரே
வானாலை மாயாதே வல்வேடர் கையாலே
என்று சொல்லி வள்ளி இவரைச் மிக சினந்து
வெற்றியுடனே விரைய நடக்கலுற்றாள்
அப்போது வேலவனார் அவள் பிறகே தான் நடந்து
செப்பரிய மின்னாளே தேனே இனிக்கேளும்
ஓலை எளுதித்[5] தருவேன் உனக்கடுமையாகவென்று
சேலைத் தலப்பைப் பிடித்தாரே வேலவரும்
வாடிவந்த குலலாள்[6] வன்னவள்ளி தன்துயிலை
நாடிப்பிடித்து நவிலலுற்றார் வேலவரும்

1 விழுந்து
2 தானேது
3 என்று
4 கிழவா
5 எழுதி
6 குழலாள்

வள்ளி தனைப்பார்து வடிவேலர் ஏது சொல்வார்
என்மேனி தளர்சி உற்றேன் மின்னே இக்கானகத்தில்
பைய நிஎல்[1] இருந்து பதைப்புத் தீர்ந்து போவோம்
ஐயோ உன்னோடு நான் நடக்கமாட்டேன்
பாண்டிய நாட்டானே பரதேசி கையைவிடு
என்கற்புக் குலையாதே கையை விடு நான்போக
அண்ணர்கண்டால் உன்னை ஆரெண்டும்[2] பாரார்கள்
என்போற்பிளந்து போகாமல் விட்டுப்போ ஆடவரே
சரசம் பறையாதே சக்களவா[3] இப்போது
சக்களவா என்றவுடன் சற்றே உயிரேறி
மிக்க உயிர் வந்துதெடி மின்னே என் கூடதனில்
எடி எடி என்றுரைத்தீர் என்னிமமோ ஆடவரே
வடிவான வேல் விளியீர் மானே இனிக்கேளும்
எந்தனக்காய் உன் உயிரை இயல் பிரமனும் படைத்தான்
உந்தனக்காய் நானும் உலகு தனிலே பிறந்தேன்
பரமவிதிவிடுமோ பேதையரே உன்தனக்கு
பரமனார் கட்டளைதான் பார்தனிலே உள்ளமுறை
வீரம் அதிகமானால் வெல்வது தப்பாது
மெய்யாக நீதான் விளுவாரைப்[4] போல் நடப்பாய்
கானகத்தில் என்னையும் நீ கைபிடித்தீர் ஆடவரே
கையை விடும் என்று கலங்கித்தடுமாறி
மதிகேடு செய்தீரே வனத்தில் என்னையும் நீ
உடுத்த துயில் பிடித்தீர் உம்மானை விட்டுவிடும்
அளிமதிகள் செய்தீரே நாயமோ ஆடவரே
கானவர்கள் கண்டால் கடுங்குலைகள்[5] செய்வாரோ

## விருத்தம்

பளிவரும்யிப்போ[6] தெண்டு பரிவுடன் ஆண்டார் தன்னை
விளிசவந்தவரை னோக்கி மெல்லியாள் ஏது சொல்வாள்
எளிகுலமான என்னை இறஞ்சியே தொளுது நின்றீர்[7]
அளிமதிசெய்தீர்[8] எங்கள் ஆண்டவற்கியல்வோ என்றார்

---

1 *நிழல்*
2 *யாரென்று*
3 *சகடக்கிழவா*
4 *விழுவாரை*
5 *கடுமையான கொலை*
6 *பழிவரும் இப்போது*
7 *தொழுது நின்றீர்*
8 *அழிமதி செய்தீர்*

## நடை

விட்டு விடும் என் கரத்தை மெய்யாகச் சொல்லுகிறேன்
பட்டுவிளுவாய்[1] போடா பரதேசிகையை விடு
பாண்டிய நாட்டானே பரதேசி கையை விடு
வரமேது கானும் மதன் கணையை மாற்றி விட்டால்
அக்கரவம் சூடும் அரனார் திருவருளால்
சொக்கலோகம் பெறுவார் என்று முன் நாள் கேட்டிருப்போம்
அந்தமொளி[2] கேட்டு அன்ன மின்னாள் வள்ளியம்மன்
சிந்தை நினைத்து செப்புவாள் ஏதுமொளி[3]
காமவிகாரம் தீத்தால் கயிலாயமே பெறுவார்
நாங்கள் கேட்டறியோம் நடுக்காட்டில் உன்னுடனே
ஓரிக்கிளவாபோ ஊதாரி வீணாபோ
சேரிபறையாதே தீண்டாதே அப்பாலே
நரைத்த தலை ஆண்டிபோ நாணமில்லா வீணாபோ
உரைத்தமொளி[4] கேட்கல்லையோ உன்னோடு பேசுவதேன்
என்றுசொல்லி வள்ளியம்மன் அநேகநெடுந்தூரம்
குண்டுபோல் கண் சிவந்து கோதையரும் அந்நேரம்
வெற்றியுள்ள ஆடவரை விட்டு விலகியே தான்
வள்ளி அவள் ஏக வடிவேலர் அங்கு நின்று
வெள்ளி மலைக்குறத்தி வேடுவச்சி[5] பெண்கோவி
கூற்று விளிக்குறத்தி[6] கொடியசிலை வேடுவச்சி [7]
சாற்றும் பறச்சிசகல்கலை மறத்தி
ஏந்துதனத்தில் இரும்போ உன்நெஞ்செண்டார்
தான் கேட்டு நின்று தலையசைத்து தள்ளாடி
நான் கேட்டகேள்வி நன்று நன்று என்று சொல்லி
சாலமதிமயங்கி தாமரையில் நீரது போல்
ஏலவே தங்கள் அண்ணர் ஏற்ற வினாயகரைக்[8]
கோலமதகரியைக் கும்பிட்டார் வேலவரும்

---

1 பட்டுவிழுவாய் - பட்டு வீழ்தல் என்பது செத்துப்போவாய் என்பது போல் வரும் சொல்
2 அந்தமொழி
3 ஏதுமொழி
4 உரைத்தமொழி
5 வேடுவிச்சி
6 விழிக்குறத்தி
7 வேடுவிச்சி
8 விநாயகரை

## விருத்தம்

வேலர் மயங்கி வினாயகரைத்தான் துதிக்க
கோலமதகரியும் கோபமதாய்த் சாலெனவே
வள்ளிகுறமாது வாற வளிதனிலே
மெள்ள[1] வந்து நின்றார் விரைந்து

## நடை

தம்பி நினைக்க தரியாமல் தன்மனது
வெம்பி மதம் பொளிந்து[2] வந்தார் வினாயகனார்
விண்னதிர மண்னதிர வெற்பொட்டும் தான்அதிரக்
கண்ணால் பொரிப்பறக்க காரிடிபோல் முளங்கி[3]
குண்டை ஒடித்தம்மானை ஆடி அந்தக் குஞ்சரமும்
செங்கண் சிவந்து சீறி வீறிட்டதுவே
அங்கம்பதறிடவே ஆயிளையாள் கண்டெதித்தாள்
மாமலை போல் வந்த மதகரியைக் கண்டஞ்சி
ஏமலித்துக்கை நகந்து ஏங்கினாள் வள்ளியம்மன்
மானைவெண்டகன்றாள் மதியங்கும் நேரமதில்
ஆனைமரம்[4] பிடுங்கி ஆலித்தடித்தடித்ததுவே
கண்டாள் மதகரியைக்கன்னி தடுமாறி
திண்டாடியே மயங்கித்திருக்கை வேலாயுதனார்
திண்டாடிமெத்தத்திகைத்து நின்று வள்ளியம்மன்
பட்டறுத்த மான் போல் பறக்கும் சிறுகுரிவி
கட்டறுத்து விட்டாப்போல் காரிகையும் ஓடி வந்து
தாண்டவம் ஆடும் சிவனார் தன் மகனார் வேல்முருகர்
ஏண்டி நீ மின்னே இங்கே திரும்பி வந்தாய்
ஆண்டவனே ஆனை[5] கண்டேன் அது கண்டு நானும்மிப்போ
மீண்டோடிவாறேன் விலக்கும் அய்யா யானை தன்னை
ஆண்டியைக் கொல்ல வென்றோ ஆனைதனைக்[6] கிட்டிவந்தாய்[7]
வந்தேன்னான் ஆடவரே மதகரியைக் கண்டஞ்சி
இந்தாவருகுதென்பாள் என்னை நீ காருமென்பாள்

---

1 மெல்ல
2 பொழிந்து
3 முழங்கி
4 யானைமரம்
5 யானை
6 யானைதனை
7 அருகில்

குஞ்சரத்தைக் கண்டு வந்தேன் ஓடாதே காருமெண்டாள்
அஞ்சாமல் காற்றிடுவீர் அடைகலம் நானுனக்கு
மஞ்சார்குளலாலே[1] மதகரியை ஆர்மறிப்பார்[2]
தஞ்சமாய் இங்கொருவார் தானில்லையோ என்தனக்கு
காரார்குளலிவர்க்கு[3] கால்கை தடுமாறி
தேரோம்மாப்போலே திகைத்துத் திரும்பி நின்று
நின்ற வள்ளியைப்பார்த்து நேராக ஆடவரும்
குண்டுபோலொத்ததன் கோதையரே இப்போது
ஆண்டிதனையாணை கொன்றால் ஆர்தான்[4] பளியிறுப்பார்[5]
தாண்டி விளுவார்[6] குதிப்பார் தயங்குவார் ஓடிடுவார்
ஓடுவது கண்டிருந்து ஓவியமும் ஏது சொல்வாள்
காடுதனில் ஓடாதே கரியமறியெண்டளுவாள்
இந்தவனம் தனிலே என்னோடு பொய் உரைத்தாய்
தந்தியில்லையென்றாயே தையலே நம்பி வந்தேன்
வேடுவச்சி[7] உன்னுடைய மெய்வாத்தையைக் கேட்டு
காடுதனில் நீர் பருகக் கன்னி உன்னோடு ஏகினேன்
எப்பிளைப்புமெற்ற இனி எங்கே ஓடிப்பிளைப்பேன்
ஓடிப்பிளைக்க[8] நான் ஒரு வளியுங்காணேனே
எப்படியென்றே கிளவன்[9] ஏய்ப்பான் பயப்பிமெற்ற
கற்புடைய மங்கையரே கரியை விலக்கவொண்ணாது
மரமேறி நாம் இருந்தால் மதகரியும் இப்போது
உரமாய் மரம் முறிந்து உடனே வதைசெய்திடுமாம்
ஓடவும் கால் ஏறுதில்லை உன்னை விட்டு ஓவியமே
காடுதனில் நாமிருவர் காணாமலே ஒளிக்க[10]
வேறுமிடங்காணேன் மின்னே இக்கூறுதனில்
கூறுபட்டவேல் வளியாள் கோதை தடுமாறிடுவாள்

---

1 மஞ்சார்குழலாலே
2 யார் மறிப்பார்
3 காரார்குழலிவர்க்கு
4 யார்தான்
5 பழியிறுப்பார்
6 விழுவார்
7 வேடுவிச்சி
8 ஓடிப்பிழைக்க
9 கிழவன்
10 ஒழிக்க

அச்சம் பெருமை கண்டீர் அடுமைகண்டீர்[1] ஆடவரே
பட்சம் மறவாமல் உன்பாதம் தொளுதிடுவேன்[2]
மச்சினியும் ஆவேன் மதகரியைக் காருமெண்டாள்
தொளுவேன்[3] என உரைத்த தோகைமயிலே கேளும்
நீ அளுது[4] முறையிட்டாலும் அருங்கானகந்தனிலே
கலகமிடும் வேல் விளியீர் கானகத்தில் யானைதனை
விலக்கமதி ஆரறிவார்[5] மெல்லியரே இப்போது
உன்னாலே நானும் உயிரிளந்து[6] போவதுதான்
மின்னாரே யானை நம்மை விரையவே கொன்றுவிடும்
ஓடவும் கால் ஏறுதில்லே உன்னை விட்டு ஓவியமே
காடுதனில் நாம்மிருவரும் காணாமலே ஒளிக்க
வேறு இடம் காணேன் மின்னே இக்கூறுதனில்
என்றுரைக்க ஆடவரும் ஏந்திளையும் ஏது சொல்வாள்
நன்று காண் ஆடவரே நான் அறிவேன் உன் களவு
ஆடவரே நானும் அடைக்கலமே உன்தனக்கு
பெண்பிறந்தாரோடு பெரிய வளக்கோயுனக்கு
விண் பறந்துவாற வேளமதைத் தான் விலக்கும்
என்றுரைத்து ஆடவரை இறஞ்சி அடி தொளுது[7]
வெற்றியுள்ள ஆடவரே விலக்கும் மதகரியை
மதகரிதான் என்னை வதைத்தால் குறவர் உன்னை
விதமாய் விடுவாரோ வெட்டிடுவார் தப்பாது
வெட்டுவாரோ நம்மையவர் மெல்லியரே இப்போது
கட்டளகாண்மையெல்லாம்[8] காண்பேன் மதகரிமுன்
பட்டறுத்த மான் போல் பறக்கிண்ட[9] அன்னேரம்
அண்ணர் பெருமைதனை ஆரோடு[10] சொல்லுகிறாய்
விண்ணவர்கள் ஆனாலும் விலக்கரிது யானை தன்னை
அன்னேரமே கரியும் அலறி வீறிட்டவே
மின்னாரே யானைதனை நான் விலக்க ஒண்ணாது

1 அடிமை கண்டீர்
2 தொழுதிடுவேன்
3 தொழுவேன்
4 அழுது
5 யாரறிவார்
6 உயிரிழந்து
7 தொழுது
8 கட்டழகாண்மையெல்லாம்
9 பறக்கின்ற
10 யாரோடு

## விருத்தம்

அன்னேரமே மயிலும் அப்போ மதகரியை
மன்னவரே நீ தான் மறியெண்டாள்[1] அப்போது
யானைதனை ஆர்மறிப்பார்[2] ஆயிளையே இப்போது
தேனே மிக அறிந்து செப்பு

## நடை

ஆவத்தைத்தீத்து அடியாள்தனைக் காத்தால்
தாபந்தெளிந்து[3] சரணமென்று நான் இருப்பேன்
வாடிகுறமாதே மதகரியை இப்போது
தேடி இங்கே கூட்டிவந்தாய் செப்பாய் எனமொளிந்தார்[4]
ஏரயும் கனல் தனிலே இட்டமொளுகது[5] போல்
உருகுமந்தவேளையிலே உன் கிறுவம்[6] பேசாதே
இந்த நேரம் தனிலே எதித்த கரிமறித்தால்
உன்தனுகே பெருமை உனக்கடுமை[7] ஆவேன்னென்றாள்
அச்சம் பெருமை கண்டீர் அடுமை[8] கண்டீர் ஆடவரே
பட்சம் மறவாமல் உன்பாதம் தொளுதிருப்பேன்[9]
மச்சினியும் ஆவேன் மதகரியைக்காருமென்றாள்
சொந்தமுடனே உனக்கு நான்பாரி என்று
வந்துபிறகொதுங்கி மனை புகுந்தாள் வள்ளியம்மன்
வள்ளியரே உன்னுடைய வாத்தையை நம்பரிது
கள்ளி நீ இந்தக்கரி போய் மறைந்து விட்டால்
சொல்லதனை மாறிவிட்டால் துணையுமிங்காருமில்லை
அல்லவென்று சொன்னாலும் ஆர்எனக்கு[10] சாட்சி சொல்வார்
மனைவி என்று சொன்ன உரை மறப்பதில்லை என்றனுக்கு
சுனைதனிலே முளுகிச்[11] சொன்னமொளி[12] தப்பாமல்

1 மறியென்றாள்
2 யார்மறிப்பார்
3 தாகந்தெளிந்து
4 கிழவன்
5 இட்டமெழுகது
6 கருவம்
7 உனக்கடிமை
8 அடிமை
9 தொழுதிருப்பேன்
10 யாரெனக்கு
11 மூழ்கி - முழுகி
12 சொன்னமொழி

மலையில் குறமகளே மதகரிமுன்பாக நின்று
சிலைவேடவர் வந்தாலும் செப்பியசொல் தான் மறவேன்
என்றெனக்கு நின்னையஞ்செய் என்றாரே ஆடவரும்
குண்டமலைவேடர் என்னைக்கொண்டு விடவந்தாலும்
உனக்கு நான் பாரி உண்மை தவறேன் நான்
என்டுறுதி சொன்னாளே வள்ளியம்மன்
வனக்குயிலே நீயும் மலங்காதே என்று சொன்னார்
சொன்னமொளி[1] நான் மறவேன் தோகையரே அஞ்சாதே
மன்னவரே நீயும் மதகரியைக் காருமென்றாள்
ஓலமெனப்படுத்தி உன்படுத்தி ஓவியத்தை
வேலவரும் அப்போ வினாயகரைத்தான்[2] துதித்தார்
கற்பகத்தைக் கைதொளுது[3] கந்தர் நின்று ஆசரிக்க
சொற்பயிலும் வள்ளி துணையாவாள் என்தனக்கு
தெண்டனிடக் கற்பகத்தைச் செவ்வேள் திரும்பிவிட்டார்
வண்டணியும் பூங்குளலே[4] மானே மதகரிதான்
அண்டர் பிரான் ஆணையானை[5] போய் விட்டதென்றார்
கட்டளைய சொல்லாளைக் கையாரவே தளுவி[6]

விருத்தம்

ஆனைதனை[7] விலக்கி ஆடவரும் பூங்காவில்
மானையுறத்தளுவி மருவியே கானகத்தில்
வந்து சொருவம் மாறி வள்ளியவள் தான் அறிய
கந்தர் சொருவம் ஆனார் காண்

நடை

சோலை தனிலே கந்த மாஞ்சுனையருகே
வேலைப்பளித்த மின்னும் வேலவரும் இன்பமுடன்
சாலமதன் மனையாள் தங்களிலே ஒன்றாகி
கோலமயிலுடனே கூடினார் கோதையரும்
கலவி நலம் பாராட்டிப் பாவையுடன் வேலவரும்

1 சொன்னமொழி
2 விநாயகரை
3 கைதொழுது
4 பூங்குழலே
5 யானைதனை
6 தழுவி
7 யானைதனை

கற்களக மார்பிலுறக் கட்டி அணைந்தே தடவி
வாரார் தனம் புதைய வள்ளியுடனே கூடி
தீராத காதலெல்லாம் தீந்து தெளிந்தபின்பு
ஆறுமுகம் பன்னிருகை அசுரர்களை வென்ற கைவேவேல்
கூறு மயிலேறிக் கோளிக்கொடியுடனே[1]
யீரேளுலகம்[2] எளுத்தறியாப்[3] பேரளகைக்[4]
காரார் குளலியற்குக்[5] காட்டினார் வேலவரும்
கண்டு மயங்கிக் கானக்குறமகளும்
திண்டாடியே மயங்கித்தேவ பிரானைத்தொளுது[6]
எங்கள் குலதெய்வமதாய் இம்மலையிலே இருந்து
இந்த வேடம்கொள்ள ஏதுமதி என்கோவே
உனதுபதம் அடைய உலகு தனிலே நானும்
என்ன தவஞ்செய்தேன் என்கோவே நானுமிப்போ
தீண்டாப்புலச்சி தன்னைத்தேடி வனவாஷமதில்
ஆண்டிவடிவாக வந்தீரே ஆர்அறிவார்[7]
பொல்லாத நாயடியேன் புலச்சி நான் செய்ததெல்லாம்
எல்லாப் பிளையும் பொறுத்திங்கும் மன்னனே
ஆண்டி வாணீரே[8] ஆர்அறிவார்[9] உன்னை இங்கே
ஆனாலும் என்னை ஆளக்கருத்தில் வைத்தால்
நானாக வாறேனே நாயகரே இப்போது
தற்சொருவங்காணாமல்[10] தவிப்பாரோ தேவரெல்லாம்
மெற்ற மயங்குவரே விண்ணும் மண்ணும் உள்ள வரும்
மாயம் மிகச்சூதாக வந்தீர் எனக்காக
என்மேல் தயவு வைத்தால் உன் உருவத்தோடு வந்தால்
பேறுபெற்ற நாயேன் பேச வளக்குண்டோ

---

*1* கோழிக்கொடியுடன்
*2* ஈரேழுலகம்
*3* எழுத்தறியா
*4* பேரழகை
*5* குழலியற்கு
*6* பிரானைத் தொழுது
*7* யாரறிவார்
*8* வானீரே
*9* யாரறிவார்
*10* தற்சொரூபங்காணாமல்

## விருத்தம்

வேங்கை மரமானீர் வேடர் கண்டு விட்டார்கள்
பூங்காவை விட்டு அவர் போன பின்பு நீங்காமல்
என்னைப் புணரவெண்டு[1] ஏதோ எடுத்துரைத்தீர்
உன்னை அறிவேனோ நான்

## நடை

கந்தரே உன்னருளைக் காணாமல் நாயடியேன்
சிந்தை வேறாகச் செப்பினீர் இப்போது
அந்தப்பிளை[2] பொறுத்து அடியேனை ஆளாக்கும்
கந்தரே நீ இரங்கிக்கள வினைகள்[3] தந்தருள்வாய்
கைக்கு வளையல் கொண்டு கானகத்தில் ஆண்டியுமாய்
விற்கவென்று வந்தீரே வேலவரே நான் அறியேன்
கையில் வளையல் விலை கடுகவே கேட்டவுடன்
மைவிளியீர் ஆயிரம்பொன் வாங்குமென உரைத்தீர்
பொன்பணமும் நான் அறியேன் போடா என உரைத்தேன்
தன்பாவமோ அறியேன் சண்முகரே என்றுரைத்தார்
அந்நேரம் வேலவனார் அதிபிரியமாய் மகிண்டு[4]
மின்னேகேள் உன்னாலே வேடர் வடிவானதெல்லாம்
உன்சிந்தை வேறாகச் செப்பினீர் இப்போது
அந்தப்பிளை[5] பொறுத்து அடியேனை ஆளாக்கும்
அன்னேரம் வேலவனார் அதிபிரியமாய் மகிண்டு[6]
வனத்திலே தானிருந்து நீ கிளி ஓலமிட
கண்டு வந்து தான்னுரைதான் காரிகையே நாரதனும்
கண்டவுடன் மயங்கித்தேனே உனை நாடி
வந்தேன் நான் உன்னிடத்தே வனத்தில் உனைக்கண்டு
எந்தன் செயல் அறிந்தேன் எப்போது சேர்வனெண்டு
முந்தி ஒரு பிறப்பில் முதியதவம் செய்ததினால்
என்னை மருவவெண்டு[7] இருந்தாய் தவம் நெடுநாள்

---

1 புணரவென்று
2 அந்தப்பிழை
3 களவினைகள் தீருமென்று வள்ளி முருகனிடம் வேண்டுகின்றாள். அதாது இந்த உலகில் வள்ளி செய்த செயற்பாடுகளைச் சுட்டுகின்றது.
4 மகிழ்ந்து
5 அந்தப்பிழை
6 மகிழ்ந்து
7 மருவவென்று

அந்தத்தவம் புரிந்து அன்னாளில் நானுனக்கு
வந்து நின்று நானும் வரமளித்தேன் மின்னேகேள்
இந்தப்பிறப்பில் உன்னை நான் கொள்வதில்லை என்றேன்
எந்தப் பிறப்பானாலும் என்னை இணங்கும் என்டீர்
மின்னே நீ கேள் மேதினியில் உன்பிறப்பை
அன்னாளில் தேவர் ஆயன் மிகப்பொருதார்
மங்கையர்கள் கண்டு மயலாகி நிண்டார்கள்[1]
செங்கை முகில் நாரணரைச்சேந்தாள் விபூதையவள்
அந்தக்குமரி அவள் வயிற்றில் நீ பிறந்தாய்
நன்றியுள்ள தோளிமார் நவிலும் மெளிகேட்டு[2]
வெற்றியுடனே விரைவாய் நடந்து வந்து
உன்னை நினைத்து உன்மேற் கிருபையுமாய்
நின்று தவம் புரிந்தாய் மேவும் சரவணையில்[3]
அப்போது தானே நானும் வந்து தோன்றி நிண்டேன்
என்னை நீ கண்டு இறைஞ்சி அடிதொளுது[4]
மின்னாவேன் நானுனக்கு எனை மருவும் என்றுரைத்தாய்
அப்போது நானும் அகமகிண்டு[5] நான் உனந்தேன்
இந்தப் பிறப்பில்னான் கொள்வதில்லை என்றேன்
இணங்காதிருதால் இறப்பேன் என உரைத்தாய்
மானே மயிலே சொல்லக்கேள் இப்போது
தேவர் சிறை மீட்டுத்தெய்வேந்திரன் மகளை
மேவவென்று நானும் விரும்புகின்ற அந்நாளில்
தெய்வகுல மின்னாரைச் சேர்வதில்லை என்று சொல்லி
மைந்தனுக்குத் தான் கொடுத்து மாணெதியமுங்கொடுத்து
இந்த இனத்தோடு இருக்காிது என் புதல்வா
எத்தேசந்தனிலே ஏகியேபோய் இருந்து
புத்திரனே வாளுமென்று[6] புகள்[7] மறையோர்க்குரைத்தார்
தந்தை உரை மறுக்கத் தானாக தெண்டிருந்து
அந்த மறையவனும் அருங்கானகம் புகுந்து
வந்தந்த வேதியனும் வனத்திலே இருக்கையிலே

1 நின்றார்கள்
2 மொழிகேட்டு
3 சரவணப்பொய்கை
4 அடிதொழுது
5 அகமகிழ்ந்து
6 வாழுமென்று
7 புகழ்

வேதியனார் தான் இருக்கும் மெய் வனத்தில் அன்னாளில்
ஆதி எனும் மின்னாள் அன்னையோடு தான் சினந்து
வாளுகின்ற[1] நாளில் மறையோன் தன் கொல்லையிலே
நாளும் பொளுதும்[2] நல்ல தொருகாய் கனிகள்
வாங்கிப் பொசித்திருந்து[3] வாளுகின்ற[4] அன்னாளில்
பாங்கியர்கள் எல்லோரும் பாத்துமிக[5] ஆதிதனை
வேதியனார் தேவியென்று விளையாட்டுரைத்தார்கள்
சாதியவள் என்டறிந்து சங்கையிட்டு மின்னாளை

விருத்தம்

அன்னாளில் ஆதி அந்தணர்க்குப்பாரியென்று
மின்னாரின் பாங்கி வினையுரையாள் சும்மா
சாதி அவர் அறிந்து தங்கள் குலத்திருக்க
நீதியல்லவெண்டார் நீகந்து

நடை

அதுவன்றி இப்போது நான் உதித்த பொய்கையிலே
மதுவெண்ட பூங்குளலே மான் வேட்டையாடி வந்தேன்
நான் உதித்த பொய்கையிலே நல்ல தவம் புரிந்தீர்
தேனுகந்த சொல்லாளே செப்பக்கேள் இப்போது
இந்தப்பிறப்பில் நான் கொள்வதில்லை என்றேன்
எப்படியும் நீயும் எனை இணங்கும் என உரைத்தாய்
வதுவை செய்யும் என்றுரைத்தீர் மானே இனிக்கேளும்
விதி ஒரு நாள் தப்பாது மேலும் ஒரு பிறப்பில்
வந்து புவியில் பிறந்தால் மானே உனை வதுவை
சந்தோசமாய் முடிபேன் தையலே என்றுரைத்தேன்
அப்போது நீயும் அடிவணங்கி தெண்டனிட்டு
மேதினியில் நான் பிறந்தால் மெய்யாக இப்போது
தவறாமல் வந்து என்னைத்தான் அணையவேண்டுமென்றாய்
வாக்கருலும்[6] என்றுரைத்தாய் வரம்யீந்தேன்[7] உந்தனக்கு

1 வாழுகின்ற
2 பொழுதும்
3 உண்ணுதல்
4 வாழ்கின்ற
5 பார்த்துமிக
6 வாக்கருளும்
7 வரமீந்தேன்

நோக்கமிது காணும் நுன்னிமை வேறில்லா என்றார்
அன்னாளில் அப்புவியில் ஆதி மறையோன் தோன்றி
மன்னவர்க்கு மேலான மறையவர்க்கு ஓர் புதல்வன்
வந்துதித்தபோது மாமறையோன் தன் கொல்லையிலே
சீராக வேதியனும் சென்மவிதி[1] ஆராய்ந்து
இனத்தை விட்டு நாமகண்டு[2] இக்கானகம் தனிலே
வனத்திலே இருக்கையிலே வருமோ விதி எனக்கு
இனத்தை விட்டு நாமகண்டு[3] இக்கானகம் தனிலே
வனத்தில் இருக்கையிலே வருமோ விதி எனக்கு
சினம் உருகி அந்தணனும் சேயிளையான் ஆதிதன்னை
மனவேகம் கொண்டு வன்நரகில் தள்ளி விட்டான்
போனானே வேதியனும் பொளுது[4] விடியுமுன்னே
கோமலே ஒருவன் கூவம்ந்தனைப்பாத்து[5]
மின்னாளைக் கண்டவுடன் விசாரமுற்று அந்தணனும்
கூவந்தனில் கிடந்த கோதையரைத்தான் எடுத்து
தானமுடன் மின்னாளைத் தான் கரையேற்றி விட்டான்
கரைஏறி நின்று கன்னியவள் ஏது சொல்வாள்
உரை செறியும் மன்னவரே எவ்வூர் நின்று வாரீர் காண்
பாப்பான்[6] ஒருவனை நீ பாதையிலே கண்டீர்ரோ
வாய்ப்பான மின்னே வளிதனிலே[7] கண்டேன் நான்
அந்தமொளி[8] கேட்டு ஆதியவள் தான்ஏகி
சந்தோஷமிட்டவளும் தானும் வளி நடந்து
ஒளிகொண்ட பூமுலையாள் உற்றமறை வேதியனை
கண்டாள் வளிதனிலே காரிகையும் சென்டெதித்தாள்[9]
தொண்டு பண்ணி நின்றவளும் சொல்லுவாள் வேதியற்கு
எங்கிருந்து வாறீர் காண் எவ்வூர்காண் வேதியனே
சங்கையுடன் மின்னாளுந்தான் எதித்துக்கேட்டவுடன்
பாப்பானுக்கெவ்வூர் காண் பரதேசியானவற்கு

1 ஊழ்வினை
2 நீங்குதல் எனும் பொருளில் வரும்
3 நீங்குதல் எனும் பொருளில் வரும்
4 பொழுது
5 பறவைகளில் ஒன்று
6 பிராமணன்
7 வழிதனிலே
8 அந்தமொழி
9 சென்றெதிர்த்தாள்

ஒப்பாக என்னுடனே கூடவருவீராகில்
வருவீர் என உரைக்க மறையோனுந்தான் ஏகி
கிருவாலூர்[1] தனிலே சென்றார் இருபேரும்[2]
மருவி மறையவன் பால் வந்தானே அந்த மின்னும்
திருவும் மணவாளனுமாய்ச் சேரவெண்டு[3] சம்மதித்து
ஆங்காணும் வேதியனே அதுமெய்தான் என்று சொல்லி
பாங்காகவே இருந்தாள் பாவையுடன் வேதியனும்
நீங்காமலே அவர்கள் நீள்புவியிலே வளந்தார்
பாற்பானும் பாங்கியுமாய் பண்புடனே வாள்கையிலே[4]
மின்னாள் வயிற்றில் மிகவளந்து கெற்பமென்று[5]
மைந்தன் பிறந்த பின்பு மனமகிண்டு[6] வேதியனும்
சிந்தை மகிட்சியுமாய்ச்[7] சிறந்திருக்கும் வேளையிலே
மின்னார் சிரசதனை வேதியனே பாருமென்றாள்
ஈரும் பேனும்[8] காணேன் ஏந்திளையே உன்சிரசில்
வாருகந்த மின்னே வடுவல்லால் வேறுமுண்டோ
வடுவேது மின்னாளே வாய்த்ததோர் உன்சிரசில்
கடுவளியில் உன்சிரசில் கத்தியால் குத்தினதோ
அறியீரோ[9] நீயும் அன்று கூவம் தனிலே
குறியாகச் தள்ளிவிட்டீர் கொற்றவரே நீதாமும்
ஆதி ஒருவனுண்டோ அனுதி என்றாள் அப்போது
வேதியனும் மின்னை விட்டு விரைந்தேகிப் போகலுற்றான்
அந்நேரம் ஆதி அந்தக் கவுலா[10] முன்
வேதியனார் முன்னே விரைந்தேகிப் போகலுற்றாள்
போனதொரு வேதியனைப் பின்தொடந்து ஆதியவள்
ஆனதொரு மின்னாளும் அந்தச்சொருவம் மாறி
மோகனி சுருபமதாய் அவ்வனதிலே ஆதி
வாகனைய மின்னாள் மறையோன் தனைத்தேடி

---

1 திருவாரூர்
2 இரண்டுபேரும் *(முருகன், வள்ளி)*
3 சேரவென்று
4 வாழ்கையிலே
5 கற்பமென்று
6 மனம்மகிழ்ந்து
7 மகிழ்ச்சியுமாய்
8 ஈரும் பேனும் தலையில் இருப்பவை
9 கடவுள்
10 மயக்கம் கொள்ளுதல்

வந்து கண்டு நின்று மயக்கினாள் ஆதியவள்
மங்கை தனைக்கண்டு மயலாகி[1] வேதியனும்
பெண்ணா நாடன் இணங்கிப் புலம்பி இருபேரும்
அந்த மின்னாளுடனே இணங்கி இருக்கையிலே
மின்னாளும் அப்போ அதிகமானைப் பயின்றாள்
பிள்ளைதனைக் கண்டவுடன் பேதலித்து அந்தணனும்
கிள்ளை மொளியாளை[2] விட்டு விரைந்தேகிப் போகலுற்றான்
வேதியனும் போன பின்பு மின்னாள் மதலை தன்னை
ஆதியவள் ஆயரிட[3] மறுமதலையைப் பயின்று
போனாள் அவன் பிறகே பூவையரும் அன்னேரம்
தேனாளும் ஆதி அந்தச் சுருவம் மாறி
மறையோன் தனைப்பாத்து மாமயிலும் ஏது சொல்வாள்
இறையோன் அருளால் எனை ஆளுமென்று[4] சொன்னாள்
குறையறவே வேதியனும் கோதையுடன் சேர்ந்து
பிறைபோல் நுதலளகி பிறந்தாள் உலுப்பையவள்
கண்டதொரு வேதியனும் கலங்கியவன் ஆதியெண்டு
திண்டாடியே மயங்கித் திசைகெட்டு ஓடியபின்
அந்த உலுப்பைதனை ஆதியவள் தான் துடந்து
போனானே வேதியனும் பிறகே மிகத்துடந்து[5]
காமயில் போலணையாள் அந்தச் சுருவம் மாறி
அந்தணன் பாற் சென்று ஆதியவள் ஏது சொல்வாள் இந்த
வனத்திருந்தீர் எனை மருவும் என்றுரைத்தாள்
அந்தணனும் அப்போ அவளை மிகமருவி
சந்தமுடன் உருவைத்தான் பயின்று தான் கொடுத்தாள்
அந்தணனும் கண்டவளை ஆதியென்று ஓடி விட்டான்
விந்தையுடன் மின்னை எடுத்து ஆதியவள்
கள்வருடைய கரத்தில் இருந்து போனாள்
மனமகிண்டு[6] தான் எடுத்து வளத்தார்கள் அப்போது
அப்போது வேதியனோடவளுமே பின்தொடந்து
செபமுடன் வேதியனைச் சென்று கண்டு மின்னாளும்

1 *மயக்கம் கொள்ளுதல்*
2 *கிள்ளைமொழியாளை*
3 *ஆயரிடம்*
4 *ஆளுமென்று*
5 *மிகத்தொடர்ந்து*
6 *மனமகிழ்ந்து*

அடி பணிந்து தென்னிட்டு அய்யோ இளைப்புடனே
கடிதாக வந்தீர் கானகத்திலே தனியே
இருபேருங்கூடி இருக்கையிலே மானாரை
போகும் வேல்விளியாரைப் புலக்கிறான் வேதியனும்
நவகோள் பொருந்தியதோர் நாள் தனிலே ஆதியவள்
அவ்வைதனைப்[1] பயின்றோடினாள் ஆதியவள்
மன்னவனும் போன பின்பு ஆதியவள் பிள்ளை தனை
நன்நூல்[2] தமிள்[3] தெரியும் நாவலர்கள் தன்னிடத்தில்
மதலை தனைக்கொடுத்து மங்கை அந்த ஆதியவள்
இதனமுடன் பேசி ஏகினாள் அந்தணன்பால்
அந்தணைத்தேடி அரும் கானகம் தனிலே
செந்துருவைப் போலணையாள் சென்றுகண்டு வேதியனை
கண்டவுடனே கன்னி சுருவமாறி
அந்தணன்பால் வேதியனை அயந்து தொடுத்து விட்டாள்
கந்தமருங்குயிலைக் கண்டாசை கொண்டானே
மின்னரே நீயும் மேவினால் உந்தனக்கு
பொன்னாரம் பூண்ட பூவையரை நீ பெறுவாய்
பொன்னாரம் பூண்ட பூவை அந்த ஆதியவள்
மைந்தனையும் யீன்றாள்[4] மதலையெனும் ஆதியவள்
சிந்தைதனில் அறிந்து திசைகெட்டு ஓடியபின்
அந்நேரம் ஆதியவள் அருங்கிளவி தான் வளத்த
தன்னேர்மை ஒற்ற திருச்சாதியவரெல்லோரும்
மறையோன் தனைப்பயின்ற மதலைதனை எடுத்து
பறையரிடத்தில் அந்தப் பாலன் தணையீந்து
வேதியனைத்தேடி அந்த மின்னாள் நடந்து செல்ல
மானின் இனத்தோடே மருவும் கலையானுன்
தேனனைய சொல்லாள் செய்திதனை அறிந்து
மானின் இனம் கண்டாக மருவி வளி நடந்து
அந்தக்கலையருகே அடுத்தவளும் போகையிலே
அந்த இனமானுடனே மருவினான் வேதியனும்
எந்தவிதமானாலும் இனி விடுவதில்லையெண்டு[5]

---

1 ஔவைதனை
2 நன்னூல் - நல்லநூல் என்ற தன்மையில் வருகின்றது
3 தமிழ்
4 ஈன்றாள்
5 விடுவதில்லையென்று

கந்தமருஞ்சோலையிலே காரிகையோட இருந்து
எருதேறும் யீரருட[1] இயல் பாதமே தொளுது[2]
காரார் குளலியரும் கணவனுடன் வேதியனும்
வேதவிதி பொய்யாமல் விமலன் அடிதொளுது[3]
பாதம் மிகச்சேர்ந்து பரமபதம் பெற்றிருந்தார்
உந்தன் பிறவி ஓவியமே இப்படிக்காண்
கந்தர் இதையுரைக்கக் கன்னி கேட்டு மகிண்டு[4]
மான்யீன்ற[5] கண்டே வனக்குறவர் யுந்தனையும்
தேனே உனை வளத்த செய்தி இது கண்டாயோ
ஆண்பாலர் மூவர் ஆயிளையே உன்னுடனே
பெண்பாலர் நால்வர் பேதையரே இப்புவியில்
விதிவருமேயல்லாது வேறு விதிவருமோ
அதிசயமெண்டெண்ணாதே அயன் எளுத்து[6] தப்பாது
அந்தப்பிறப்பில் அதிக தவம் செய்து என்னை
இந்தப்பிறப்பில் எனை மருவவே பிறந்தாய்
அன்னமுயந்தோன் அருளால் அப்புவியில் ஆருயிற்கும்
பொன்னம்பலவாணர் பொற்பாதம் பெற்றிருப்பாய்
தப்பாது ஆர்தனக்கும்[7] சாதிவேறுண்டோ சொல்
மெய்யான சாதியெண்டேன்[8] மின்னே இனிக்கேளும்
எக்குலமும் இரண்டு காண் இனிவேறுமில்லை என்றார்
குலம் வேறெண்ணாதே குருவருளும் ஒன்று கண்டாய்
நலமுடனே எனை மருவநல்ல தவம் புரிந்தாய்
அன்னாட்[9] தவம் புரிந்தாய் நான் உதித்த பொய்கையிலே
தேனினிய சொல்லாளே செப்பக்கேள் இப்போது
என்மேல் கிருவை[10] வைத்தாய் நீயும் தவசி நின்றாய்
மானின் வயிற்றில் வரகவே[11] வரம் கொடுத்தேன்
அப்படியே மான் வயிற்றில் அன்னமே நீ பிறந்தாய்

1 ஈசருடன்
2 தொழுது
3 அடிதொழுது
4 மகிழ்ந்து
5 மான் ஈன்ற
6 எழுந்து
7 யார் தனக்கு
8 சாதியென்றே
9 அந்நாட் - அந்தநாள்
10 கிருபை
11 வருகவே

இப்போது நானும் வந்தேன் எனக்கு நீ பாரி என்று
விதியின் படி வருங்காண் மின்னே அது பொய்யாது
அதிசய மெண்ணாதே அயன் எளுத்துத்தப்பாது[1]
தப்பாது என்று சொன்னேன் தையலே அந்தவிதி
எப்படி நீ சொன்னாலும் இப்போது உந்தனுக்காய்
சந்தோஷமாய்ப் பொறுத்தேன் தையலே அஞ்சாதே
சொன்னார் ஆறுமுகனார் தோகை மனமகிள[2]
மன்னர் அறுமுகனார் மலரடியைப் பூண்டுகொண்டு
எவ்வுயிர்க்கும் தாயானயீரன்[3] திருமகனே
அவ்வுயிர்க்கும் பேணி அறம் வளத்தான் புத்திரனே
ஒன்று படத்தேவர் உகம்[4] முடிந்து போனாலும்
செண்ட[5] சூரர் தன்னை வென்று சிறை மீட்ட சேவுகனே[6]
ஆனைக்கிளையவனே[7] அந்நாட்டிந்திரனே
சேனைத் தலைவருக்கு வேலர் சேனாபதியே
இந்நிலத்தை ஆண்டிருந்த மாயோன் திருமகனே
காமனுக்கும் நான்முகக்கும் நன்றான மைத்துனனே
உன் பொன்னடிகள் தான்னோகப் பூம்புனத்தில் இப்போது
எனக்காக இவ்வனத்தில் வரவேணுமோ தனியே
மானீன்ற[8] கண்ணாள் மனமகிண்டு[9] வள்ளியம்மன்
தான் மயங்கிக் கந்தரிட[10] தாளிணையிலே விளுந்து[11]
சிற்றடியைக் கண்ணில் ஒற்றிச் செவ்வேளே இப்போது
பேதை நான் இப்போ பேறுபெற்றேன் உன்னாலே
வந்தடியிலே விளுந்த[12] வள்ளியரைக்கையாலே
கந்தர் அணைத்து கண் புயத்தில் மோர்ந்து
ஒன்றுக்கும் அஞ்சாதே உனக்காக இவ்வனத்தில்

1 எழுத்துத் தப்பாது - விதியை இவ்வாறு கூறுதல் உண்டு
2 மனம்மகிழ
3 தாயான ஈசன்
4 யுகம்
5 சென்ற
6 சேவகன்
7 யானைக்கிளையோன்
8 மான் ஈன்ற
9 மனமகிழ்ந்து
10 கந்தரிடம்
11 விழுந்த
12 விழுந்த

வெற்றியுடன் வந்தேனெண்டு[1] மின்னுள் தனக்குரைத்தார்
ஆடவராக வந்தீர் வனம் தனிலே
மீண்டும் அந்த வேங்கை மரமாகவே வீற்றிருந்தீர்
கானக்குறவர் கண்டு கள்ளமிது வேங்கைதனை[2]
தானமுடன் வெட்ட வந்தார் தடை கண்டு ஏசிவிட்டார்
மாயசொருபமிட்டு மானிடராய் வந்தீரே
கரமுமீராறுடைய[3] காரிகையாமெண்டு[4] என்னை
விதம் விதமாய் நீ உரைத்தாய் வேலவரே அறியேன்
மன்மதன் கணையாலே மயங்கினேன் என்றாயே
அந்த உரை சொல்லி என்முன் ஆடவராய் நிற்கையிலே
வந்து கண்டார் கானவர்கள் வனக்கிளவனா[5] நீர்
தள்ளாடிமெய் கூனித்தளச்சியுடனே அன்பாய்
மென்னவே[6] கானவற்கு வெண்ணீறளித்தீரே
கானக்குறவர் உனக்குக் காவலால்[7] வைத்தாரே
வள்ளியரே தண்ணீர் தவிக்குதெண்டு[8] வந்தீரே
தாகம் தெளிந்தீரே தன்னைலாட்கொண்டீரே[9]
என்பாவமகற்றி உன்பாதம் அடைந்தேன்
என்று வருந்தினாள் ஏந்திளையாள் வள்ளியம்மன்
வேண்டி ஆறுமுகனார் மெல்லியரைத்தான் தளுவி[10]
மானே குயிலே மரகதமே அஞ்சுகமே
தேனே ஒரு வசனம் செப்புகிறேன் கேளுமென்றார்
நெடுநேரமாக என்னிடத்தில் நின்று விட்டாய்
மின்னே விளை புனத்தில் விரைந்தேக வேண்டுமென்றார்[11]
என்னைப் போவென்று சொன்னீரே புண்ணியரே இப்போது
காதல் மணம் புரணரக் காண்பதெப்போ உன்னையும் நான்

---

1 வந்தேனென்று
2 வேங்கைமரம்
3 கரம் ஈராறுடைய
4 காரிகையாமென்று
5 வனக்கிழவர்
6 மெல்லவே
7 காவலாக
8 தவிக்குதென்று
9 தன்னை ஆட்கொண்டீரே
10 தழுவி
11 வேண்டுமென்றார்

## விருத்தம்

போவென்று சொன்ன புத்திதனைக் தான் கேட்டு
தானாகவே மயங்கி வாடினாள் தாகமுடன்
எப்போது காண்பேன் நீலமயில் வாகனரே
இப்போது காண்பேன் நான்

## நடை

அந்தமொளிகேட்டு[1] அறுமுக வேலவனார்
இந்தமொளி[2] உரைத்தீர் என்னுயிரும் உன்னுயிர் காண்
சீதமதினுதலீர் செய்தி தனைக்கேளும்
பேதை மதியோ உணக்குப் பெண்ணே உனைப்பிரியேன்
உடலிரண்டேயானாலும் உயிரொன்டிருவருக்கும்[3]
அடல் பெரிய கண்ணாளே அஞ்சாதே இப்போது
உன்னை விட்டு நான் பிரியேன் உன்னை ஒரு பாகத்தானை
மின்னே மயங்காதே விளைபுனத்தை கிள்ளை தின்னும்
கானவர்கள் உன்னைக் கடித்துரைகள் செய்வாரே
பெண்ணே சுணங்காதே நடவும் நீ பூங்காவில்
நடவுமென்று சொன்னீரே நானும் உனைக்காணாமல்
திடம்வருமோ எந்தனக்குச் செத்திறந்து போவேன் என்றார்
சாவதற்கோ உன்னையும் நான் அணைந்தேன் மின்னாரே
ஆவது வேறில்லை ஆரணங்கே அஞ்சாதே
பெண்ணே உனைப்பிரிந்து போகேன் ஒருனாளும்
போவதில்லை என்றீரே புகள்[4] பெரிய வேலவரே
வாறேன் நான் என்று வலதுகரம் தாருமென்றாள்
வேலவரும் மகிண்டு[5] மின்னே நான் வாறனென்றார்
ஆலமுண்டரானை அண்ணர் அய்ந்து கரத்தாணை[6]
மாதே மயங்காதே மனவி[7] என்று நானும் உன்னை
தேனே மலங்காதே செப்பியசொல் நான் மறவேன்

---

1 *அந்தமொழிகேட்டு*
2 *இந்தமொழி*
3 *உயிர் ஒன்று இருவர்க்கும்*
4 *புகழ்*
5 *மகிழ்ந்து*
6 *ஐந்து கரத்தானை*
7 *மனைவி*

என்று சொல்ல வேலவனார் ஏகவளி காணாமல்
மின்னார் தன்மேலே மிகமகிண்டு[1] வேலவரும்
சாந்து சவ்வாது பன்னீர் சந்தணமும் குங்குமமும்
வெள்ளிமலைக் கற்பூரம் விதம் விதமாய் அடைக்காயும்
வள்ளி தனக்களித்து மயிர்கோதி எண்ணையிட்டு
தேறுதல் சொல்லித் சிவனார் திருமகனார்
வாறேன் நான் என்று வள்ளிக் குறுதி சொன்னார்

## விருத்தம்

வேலர் திருவாணயிட மின்னாள் மிக மயங்கி
ஆலமுண்ட கண்டார் அடியிணையிற் சாலெனவே
தள்ளாடித் தானும் அவரை விட்டு
மெள்ளவே[2] வந்தாள் மின்

## நடை

வேந்தர்[3] பிரியா விடை கொடுத்தாரம்மானை
முன்னிளுக வள்ளியம்மன் பின்னிளுகப் பேராரை
மெய்யான பூங்குளலாள்;[4] அங்காற்ரா இங்காற்ராய்[5]
மெய்கூடு[6] மெய்யுயிரும் வேலவரைப்பற்றி நிற்கப்
பொய்கூடு கொண்டு[7] புனம் புகுந்தாள் வள்ளியம்மன்
சிந்துரத்தை[8] ஒட்டி திரள் மானைத்தான் கடித்து
வந்மே[9] பாங்கியரும் வள்ளியரைக் காணாமல்
பாங்கியரும் அப்போ வனம் பாத்துத்தான் இருந்தாள்
கண்டாள் உயிர்ப்பாங்கி கன்னி வருவதையும்
சினமாக நின்று சேயினையோடேதுரைப்பாள்
எங்கு சென்றீர் வள்ளியரே இவ்வனத்தை விட்டகன்று

---

1 மிகமகிழ்ந்து
2 மெல்லவே
3 முருகன்
4 பூங்குழல்
5 முடிவெடுக்கமுடியாமல் திண்டாடுதல்
6 உடலில் உயிர்ற்றநிலை
7 உயிர் இருந்தும் இல்லாதநிலை
8 ஒருவகை நறுமணப் பொருள்
9 வந்தோமே

### விருத்தம்

வண்டனியும் பூங்குளலால்[1] மானாள் உயிற்பாங்கி
அன்னதே தேனே அமுதே என் வள்ளியமே
தெளியகை வேளம் தினைப்புனம் எல்லாமளிக்க
எங்கே நீர் சென்றீர் இப்போ

### நடை

வள்ளியரே எங்கே போய்வாறாய் புனத்தை விட்டு
நான் இருந்தேன் பூங்காவில் நாடியுனைக்காணாமல்
கானகத்தில் வாளும் கவரியே[2] உன்மேனி
நீவாடிமெலிவானேன் மனம்தளந்து போவானேன்
கோடி ஒருமுகமும் குறுகுதலையாவானேன்
அதிகமான கூந்தல் அவி விளர்ந்து கிடப்பானேன்
மின்னே உனது விளி சிவக்கக் காரியமேன்
பெண்ணே உனது பிணரமுலைகள் விம்முவதேன்
காளை இருதோளும் கண்டிச்சிவப்பானேன்
உனது வளையல் உடைவானேன் மார்பு சிவப்பானேன்
உன் உந்துச்சுளியில் ரோமம்[3] மெளுகதுபோல
அந்திச்சுளிவு நிண்டலங்காரஞ் செய்வானேன்
உன்சிற்றிடை தள்ளாடுவதேன் சேலை உடைகோருவதேன்
நீறிடுவ தேதுரையாய் நீயெனக்கு வள்ளியம்மே
அந்னேரம் வள்ளியம்மன் அவள் பாங்கிக்கேதுசொல்வாள்
மின்னே நாம் மாண்டார் விரைந்து தண்ணீர் வேண்டுமென்றார்
தாகம் வெகுகடிதாய்த் தண்ணீர் தவிக்குதென்றார்
ஆவதுவேறில்லையென்று அவரோடே நான் ஏகி
ஆடவர் தண்ணீர் குடித்து அவர் தாகம் தீந்த பின்பு
மீண்டோடி நான் வரவே வேளம்[4] மறித்தது பார்
ஆனதனைக் கண்டு நான் பயந்து உள் நடுங்கி
சேனைத் தலைவர் திருக்கை வேலாயுதனை
தெண்டனிட்டு நான் பணிந்தேன் சிறந்தகரியும் காணேன்
வண்டணியும் பூங்குளலே வனக்கிளவனானவரை[5]

---

1 பூங்குழலாள்
2 வாழும் காவிரியே - காவேரி என்பதும் மரபு
3 உரோமம்
4 வேளம்
5 வனக்கிழவனானவரை

அங்கே நிறுத்தி விட்டு நான் வந்தேன் பூங்காவில்
நான் ஓடிவந்தேன் என்ன செய்தாரோ கிளவன்[1]
தந்திகொண்டுவிட்டதுவோ நான் அறியேன் தோளியரே
வள்ளியரே நீயும் வனத்தில் சுனைதனிலே
ஆடவரையகற்றி ஆடினையோ நீ சுனையில்
வேண்டாம் மென்டோதான் மின்னே வனத்தில் விட்டாய்
அண்ணமார்வத்து அறிய உரையுமென்பார்
விஸ்த்தாரமாய் உரைத்தாய் மெல்லியரே சொல்லக்கேள்
நற்றூரும் பூஞ்சுனையில் நம்மை அறியாமல்
கஸ்தூரிவாஷம் கலந்தவராா் காரிகையே
சந்தணமும் குங்குமமும் சாந்துசவ்வாதுகளும்
எந்தச்சுனையிலுண்டு என்னோடு பொய்யுரைத்தாய்
காவியஞ்சோ் மின்னே காரிகையே என்தோளி
நாவிமணம் வீசுவதும் நற்சுனையில் கண்டியிலையோ
அன்புடன் செண்பகமும் ஆனஇவ்வாச்சிபிச்சி[2]
முன்பு சுனையில் முடித்தவராா் மெய்குளலே[3]
பிட்சி சிறுவாட்சி பெரிய குடமல்லிகையும்
கச்சணியும் பூங்குளலே கண்டிலமே அச்சுனையில்
வள்ளியரே நம்முடைய வாள்[4] சுனையில் என்னாளும்
வெள்ளிமலைக் கற்பூரம் விதம் விதமாய் அடைக்காயும்
முன்னாள் அருந்தி முளுகினமே[5] அச்சுனையில்
இன்னாளில் வந்தவகை நான் அறியச் சொல்லுமென்றள்
பொன்னாபரணமிலங்கப் புனகிதமாய் உன்னிடத்தில்
நீமின்னே உடுத்ததுகில் வேறெது தானுரையாய்
அண்ணர் கொடுத்ததெண்டாள்[6] ஆயிளையே இத்துயில்தான்
மின்னே அறியாயோ வேறொருவா்தான் தருவாா்
நான் அறியாச் சோலையிலே நல்ல சுனைவேறுண்டோ
மானமுள்ள மின்னே ஆளமுள்ள பூஞ்சுனையில்
தானரும் பூஞ்சுனையில் தானாடப் போனீரோ
உன் கண்ணே சிவந்ததென்ன காரிகையே சொல்லுமென்றாா்

1 கிழவன்
2 ஆனஇவ்வாச்சிபிச்சி - வள்ளியைச் சுட்டுகின்றது
3 மெய்குழலே
4 வாழ்சுனை
5 முழுகினமே (முழுகுதல்)
6 கொடுத்ததென்றாள்

அன்னமே அச்சுனையில் அதிகமுளுக்கதனால்[1]
மின்னே சிகப்புவிளி[2] இரண்டும் எந்தனக்கு
உன் உட்தொங்கல் மேலாக உடுத்தென்ன வாள்மயிலே
உனக்கு ஏகாந்தமான சுனை எங்கே கிடைத்தது சொல்
மாகாந்தமாகவே நீ மயல்பூண்டு வந்தனையோ
என்றவள் உரைத்தபோது இளங்கிளி வள்ளி சொல்வாள்
வேண்டிய சுனை நீராடி விரைந்து நான் வாறபோது
நன்று நீ களவு சொன்னாய் நளமயில்போலே இப்போ
குண்டினில்[3] வாளும்[4] கந்தர்குமரனே அறிவாய் என்றார்

## நடை

ஆறுமுகவன் அறிந்தால் அடற்பலிகாண்
கூறுகிண்டதோளி[5] கொடுங்களவு சொல்லாதே
இத்தனை நாளும் புனத்தில் இருந்தோம் இணக்கமுடன்[6]
குற்றம் உரைத்தாய் நீ குறிப்பறியமாட்டாமல்
பொய்யெண்டறியார்கள் பூம்புனத்தில் உள்ளவர்கள்
மெய்யண்டிருப்பார்கள் விளையாட்டறியார்கள்
புனத்திலே நீயிருந்து பொய்கள் மிக உரைத்தீர்
இனத்தார் பொறுப்பாரோ இன்றே மறந்துவிடு
என்தோளி[7] என்கிறதும் எல்லாருந்தானறிவார்[8]
வன்பரக்க முரைத்தாய் வல்குறவற்கேராது[9]
காமவிதமறியேன் கலவிநலம் நானறியேன்
தாமாகநீ உரைத்தீர் தன்மையோ என்தோளி[10]
இன்றே மறந்துவிடும் என்றுரைக்கும் நேரமதில்
வெற்றியுள்ள பூங்காவில் வேலவரும் வந்தாரே
மாந்துளிர்போல் வில்லும் மலருங்கணையாக

---

1 அதிகமுழுக்கதனால் (அதிகமாக முழுகுதல்)
2 சிகப்புவிழி
3 குன்றினில்
4 வாழும்
5 கூறுகின்றதோழி
6 விரும்பி இருத்தல்
7 என்தோழி
8 எல்லோரும் தானறிவார்
9 வல்குறவர்க்கேறாது
10 என்தோழி

சேந்துநிண்டு[1] பார்த்துத் திகைத்து நின்று வேலவரும்
காதலுடன் மயங்கிக் கைகால் தடுமாறி
மாதர்முன் வந்து நின்று மன்னவரும் ஏதுசொல்வார்
மின்னாள் இருவரையும் வேலர்முகம் நோக்கி
பெண்ணே வனக்குயிலே பூங்கிளியே தெள்ளமுதே
தேனே அமுதே தினைப்புனமும் உங்களிதோ
மானேகுயிலே வனம் காற்கும் பேதையரே
மின்னாரே உங்களிட[2] விளைபுனத்தில் இப்போது
ஒரு கன்னிமான் அம்புபட்டு வந்தது கண்டீரோ
எய்துவிட்டேன் நானும் என் சரமும் பட்டதுகாண்
தப்பாமல் வந்தேன் தடத்திலே நானுமிப்போ
வந்தேன் அடிப்பிறகே மான் இங்கே வந்ததுண்டோ
தப்பறவே சொல்லுகிறீர் மானை நான் கண்டதில்லை
இங்கேதான் வந்தமான் எங்கே போம் மின்னரே
அல்லக்காண்மின்னரே அப்புறமும் போகாது
போகாது என்றீரே புகள்பெரிய[3] வேடுவரே
ஆகாதபாவம் அருங்கானில் பொய்யுரைத்தீர்
பொய்யுரையோ மின்னாரே புத்தியோ உங்களுக்கு
மெய்யாகச் சொல்லுகிறேன் விட்டுவிடும் மானையென்றார்
மானைவிடும் என்று சொன்ன மன்னவனார் தன்விளியும்
ஊனை உருக்கும் மந்த உற்பனமான் விளியும்
இருவர் ஒருமுளிப்பாய் எதித்து[4] முளித்ததையும்
கருவாக நின்றதையும் கண்டாள் உயிற்பாங்கி
கண்ணால் மருட்டிநின்றே காவலரை உள்ளறிந்து
மின்னாள் அறிந்து அந்த வேடுவரைத் தான்னோக்கி
மச்சினனே கானும் மெய்யாக உன்னுடைய
கச்சைகட்டும் சீராவுங்கண்டால் தெரியாதோ
சாந்தணியும் வேடுவனே தாரை பற்றி வந்தீரோ
கையாரப் பூட்டிக் கணையை உறவாக்கி
மெய்யாக என்மானை வித்தகரே எய்துவிட்டீர்
முல்லை முளரிமுளிருஞ் சூதானமுடன்
அல்லி மலருடனே அய்ந்து[5] கணைதொடுத்தேன்

1 சேர்ந்துநின்று
2 உங்களுடைய
3 புகழ்பெரிய
4 எதிர்த்து
5 ஐந்துகணை

அய்ந்துகணை[1] தொடுத்தால் ஆர்பிளைப்பார்[2] வேடுவனே
மிஞ்ச எய்துவிட்டீரே வித்தகரே பத்துமாதோ
என்மானை எய்துவிட்டு இப்போது வேடுவனே
உன்மான் எனத்துடந்தால்[3] ஒத்துக்குமோ உனக்கு
தக்காதுகாணும் சரம்பட்டமான் உனக்கு
சிக்காது காணும் போய்விடும் நீ இப்போது
மாயமீதென்றிந்து மானாள் உயிர்ப்பாங்கி
தானனைய பாங்கியும்போய் தன் புனம் புகுந்தாள்
அன்னேரம் வேலவரும் வந்துநின்று
மின்னாரிடந்தனிலே வேலவரும் வந்து நின்று
ஓவியமோ நானும் உறவுகாண் உங்களுக்கு
பாவிநீ என்முகத்தைப் பாரும் என உரைத்தார்
அப்போது பாங்கி அவரைமுகம் னோக்கி
செப்புகிறேன் இப்போது சேவுகரே நீ கேளும்
எட்டாத கொப்பில் இருக்கின்ற தேன் தானும்
கிட்டாது காணும் கெடுவீரென மொளிந்தாள்[4]
அந்தமுடனே அருங்கொப்பில் தேன்தானும்
எந்தனுக்கொண்டிருந்தால் ஏகிவருமே மின்னாரே
அந்தமொளிகேட்டு[5] ஆண்டார் மனமிகிண்டு[6]
இந்த மின்னை நானும் இனி இணக்கவேணுமென்று[7]
சிந்தைதனில் எண்ணிச்சிறக்கவே வேல்முருகர்
வாடிகுறமாதே வன்புனத்தில் நல்லதினை விதைப்போம்
நாடி உங்கள் புல்ம்புனத்தில் நல்லதினை விதைப்போம்
இந்தவனமும் வரையும் எப்போதும் உங்களிதோ
சிந்தையுற என்னாளும் சிறக்க திருப்பதிதம் மலையோ
அன்னமெனும் நடையீர் ஆயிளையே உங்களுக்கு
எந்நேரமும் நீங்கள் இருப்பதுவும் இவ்வனமோ

1 ஐந்துகணை
2 யார் பிழைப்பார்
3 எனைத் தொடர்ந்தால்
4 மொழிந்தாள்
5 அந்தமொழிகேட்டு
6 மனமகிழ்ந்து
7 இணங்கச் செய்தல்

வாளுவதுவும்[1] இவ்வனமோ வரையும் மிதுங்களிதோ
நாளுமிகவளந்த நற்பதியும் இவ்வணமோ
அந்தமொளிகேட்டு[2] ஆயிளையாள் பாங்கி சொல்வாள்
இந்த வனம் எங்களுக்கு எப்போதும் உள்ளதுதான்
திணை விதைத்தால் எங்களிட[3] சிற்றூருக்குத்தான் சிறப்பு
மனையகத்திலே இருப்போம் வாழுவோம் எந்நாளும்
இந்தத் திணை அறுத்தால் ஏகுவோம் சிற்றூற்க்கு
அதுவளவும்[4] இங்கிருப்போம் ஆண்மையுள்ள வேடுவனே
அந்தமொளிகேட்டு[5] இயல்பறியா ஆடவனும்
நன்றியுள்ள மின்னாளில் நமக்கு நல்ல காரியம்தான்
இது நல்லதென்றுரைத்தீர் ஏதுமக்குவேண்டியது
மதுவென்ற பூங்குளலே மான்வேட்டை ஆடிவந்தேன்
மான்வேட்டை ஆடிவந்து மண்ணின் இளமானை எய்தேன்
வந்தேன் அடிச்சுவட்டில் மானின் பிறகே நான்
எய்ததெல்லாம் போதும் நீ இங்கே விட்டு நீ ஏகும்
வெற்றியுள்ள மின்னே என்னை விலக்க காரியமேன்
வெற்றியுள்ள பாங்கியர் முன் மெய்யாக வேண்டுமென்று
இந்த வனந்தனிலே எப்போதும் உங்களுக்கு
வந்தாலும் உங்களுக்கு வாய்த்துணை நானலவோ
நல்ல துணையல்லவோ நான் வளத்த பொன்மானை
வில்லால் தொடித்தீர் வேல்கணையும் பட்டுருவ
எய்ததெல்லாம்போதும் நீ இங்க வரவேண்டாம்காண்
என்று பாங்கி இவரை மிகச்சினந்து
வெற்றியுள்ள பாங்கியன்முன் மெய்யாக வேண்டுமென்று
எப்படியும் நாம் இவளை இணக்கவே வேணுமென்று
கந்தர்சொரூபமெடுத்தார் கையில் வேலாயுதமும்
வண்டாள் குளலாள்[6] முன்வந்து நின்றாள் அப்பொழுது
கண்டாள் உயிர்ப்பாங்கி கானமயில் வீரர்தனை
கண்டவுடன் மெய்நடுங்கி திருக்கைவேலாயுதனை
வந்து முருகரிடம் மலர் பாதத்தில் விழுந்து

1 வாழுவதும்
2 அந்தமொழிகேட்டு
3 எங்களுடைய
4 அந்த நேரம் வரும்வரை
5 அந்தமொழிகேட்டு
6 குழலாள்

செந்தேன் மொளியாள்[1] சிவன் மகனார் தன் பாதம்
விழுந்து நமஸ்கரித்து மெல்லியரும் ஏது செல்வாள்
மண்ணில் நடந்து உந்தன் மலர்ப்பாதம் தானேக
இந்த வனந்தனிலே வந்தீரே ஆண்டவரே

## விருத்தம்

கங்கையுள்ள கானகத்தில் தனியே மிகநடந்து
மங்கை தனக்காக வந்தீரே எங்கள் குடி
இருதேரும் யீசரிடை[2] மைந்தரே உன் அருளால்
யீடேறுவோம்[3] நாங்கள் இப்போ[4]

## நடை

இங்கே எளுந்தருள[5] காரியமே என்கோவே
சங்கையுடன் அங்கிருந்து தன் அலைந்தாள் வாரோமோ
வந்தீரே இத்தூரம் வள்ளிதனக்காக
எந்தன் குடிகள் யீடேறும்[6] இன்றுமுதல்
அந்தமொளி[7] கேட்டு ஆதி ஆறுமுகனார்
சந்தோஷமாய் மகிண்டு[8] தானேது செப்பலுற்றார்
ஒப்பமுடன் வள்ளிதனை உடன்படுத்துவீரால்
தப்பாமல் நீ அவளை தன் இணக்கியே தந்தால்
எப்போதும் போல இருப்போம் மன மகிண்டு[9]
என்றுரைக்க வேலவரும் ஏந்திளையும் ஏது சொல்வாள்
நன்று நீ எங்களிட[10] நாயகரே நீ கேளும்
தூரிகையை வாங்கி தொடுத்தெழுத சம்மதித்தாள்
வாரிக்கை வீசுவரும் வள்ளியிட[11] பேரளகு[12]

---

1 மொழியாள்
2 ஈசரிடை
3 ஈடேறுவோம்
4 இப்போது
5 எழுந்தருள
6 ஈடேறும்
7 அந்தமொழி
8 மகிழ்ந்து
9 மகிழ்ந்து
10 எங்களுடைய
11 வள்ளியுடைய
12 பேரழகு

கற்கனக மார்பில் கணைக்கால் எளுதிடினும்[1]
நோக்கம் எளுத வருமோ னுதலுகிறீர்
தெள்ளிய சீர்களகைச் சிறப்பாய் எளுதிடினும்[2]
வள்ளிநடை எளுத[3] மாட்டீரே வேலவரே
எல்லா அளகும்[4] எளுதிடினும்[5] வேலவரே
கொல்லாமல் கொல்லும் குணம் எளுதமாட்டீரே[6]
பேதை விதமறியாள் பிள்ளைக்கு நீ பெரியோன்
எதுகண்டு மயலானீர் எங்கள் பெருமானே
மாமயிலைக் கண்டு மறுகி மனமிடைந்து
என்மனமும் நன்றுய்[7] இடைந்து மறுகிவிட்டேன்
ஏந்தான் வருந்துகிறீர் இப்போது என்கோவே
நான்தான் அளைத்துவாறேன்[8] என நடந்தாள்
ஒன்றுக்கும் நீசலிக்கவேண்டாம் காண்நாயகரே
இன்றைக்கு நான் அளைத்துவாறேன்[9] என நடந்தாள்
அந்தமொளி[10] கேட்டு அறுமுகனார் உள்மகிண்டு[11]
சிந்தை மகிண்டு[12] தேனாள் உயிர்ப்பாங்கி
வள்ளி இருக்கும் வனத்திலே வந்து நின்று
உள்ளமுருகி உகந்தவளைத்தான் பாத்து
ஊனே உயிரே உயித்துணை வள்ளியம்மே
தேனே இருவருக்கும் சித்தமுண்டோ இவ்வனத்தில்
மானே வனக்குயிலே மரகதமே சொல்லக்கேள்
கூனிற் பிறைனுதலே கொடியிடையே வள்ளியம்மே
தோளியரும் வள்ளிதனை வாரி உறவணைத்து
வள்ளியம்மே உன்னுடைய மனத்துயரம் அத்தனையும்

---

1 எழுதிடினும்
2 எழுதிடினும்
3 எழுத
4 அழகும்
5 எழுதிடினும்
6 எழுதமாட்டீரே
7 நன்றாய்
8 அழைத்துவாறேன்
9 அழைத்துவாறேன்
10 அந்தமொழி
11 உள்மகிழ்ந்து
12 சிந்தை மகிழ்ந்து

உன்மொளி[1] என்னோடு உரையாதிருப்பானேன்
இந்த வனத்தில் இருந்தோம் இருபேரும்
எந்தவிதமானாலும் என்னோடு சொல்லாமல்
இற்றைவரைக்கும் இருந்தென்ன ஓவியமே
கற்றைக்குள்ளாளே களவுசெய்யக் காரியமேன்
நஞ்சி புசித்தாலும் நம்மிருவர் தங்களிலே
வஞ்சித்தொருநாளும் மறந்து புசித்தோமிலையே
என்னவிதமானாலும் தோளியுடன் சொல்லாமல்
என்னமதி எண்ணி இருந்தாய் நீ வள்ளியம்மே

## விருத்தம்

மயிலே எனவுரைத்து வள்ளியம்மையை நோக்கி
குயில்மொளி [2] பாங்கி தானும்கூறுவாள் ஓர் வசனம்
விளிக்கு[3] நல்ல மானேமின்னே இது கருமம்
குளிக்குமோ பேதாய் உகந்து

## நடை

மண்டலரும் பூங்காவில் மன்னருடன் கூடினதை[4]
இன்றெனக்கு நீ ஒளித்தாய் இப்போது வள்ளியம்மே
என்ன தவம் செய்தாயோ ஏந்திழையே இப்புவியில்
மன்னவர் தேவர்களும் மற்றும் இருஷிகளும்
முப்பத்துமுக்கோடி முனிவர் இருஷிகளும்
செப்பமுடன் தேடிச்சீர்பாதம் காணாமல்
தலைதனிலே ரோம்மதைத் தரைதனிலே வேராக
மலையில் இருப்பார்கள் மாவருஷம் எத்தனைபேர்
கால்மேல் தலைகீளாய்க் கைவிரல்கள் வேராக
வாலசன்னாசிகளாய் வருந்துவார் வருந்துவார் எத்தனைபேர்
அப்படியே நின்று அரியதவம் செய்தாலும்
செப்படியார் சீர்பாதம் சிறந்தெவரும் காணரிது
இன்னம் தவம் செய்வார் ஒருகோடி
பெண்ணே அதிகதவம் பெற்றாய் நீபூம்புனத்தில்
என்னோடு சொல்லாதிருந்ததென்ன வாள்மயிலே

---

1 உன்மொழி
2 குயில்மொழி
3 விழிக்கு
4 கூடியதை

மின்னே நான்னிக் கருமம் மேவி நடந்திடுவேன்
உள்ளபேர் பேர் பெண் பிறந்தால் உலகத்தில் உள்ளமுறை
அன்னையற்கும் அண்ணருக்கும் அஞ்சிக் கடவதுதான்
ஆராகிலும்[1] அவற்கு அஞ்சாமல் ஆண்மை உண்டோ
தார்குளலே[2] உனக்குத் தலைஎளுத்து[3] தப்பாது
உன்னாலே நாங்கள் ஓவியமே பேறுபெற்றோம்
இந்தத் தவமாற்கும்[4] இவ்வுலகில் கிட்டாது
கந்தருடன் மேவு இருந்தால் இக்காசினியில்
எந்த விதமானாலும் ஏகுவோம் நற்பதத்தில்
உன்னாலே நாங்கள் ஓவியமே பேறுபெற்றோம்
மானும் மரையும் மயிலும் வனக்கிளியும்
ஆனையும்[5] வராமற் கார்பார் காண் ஆளியையே
அப்போது வள்ளியம்மன் அவளோடு ஏதுரைப்பாள்
எந்தனக்கு வந்தவிதி என்தோளி கண்டாயோ
கண்டாயோ என்று சொன்ன கன்னியரே நீகேளும்
அண்டர் தொளுதேற்றும்[6] ஆதிஅறுமுகனார்
தொண்டுபடத்தவசி செய்தாய் நீ வள்ளியம்மே
ஆதி ஆறுமுகனை அடிதொழுது நாமிருந்தால்
ஏது குறை எங்களுக்கு என்தோளி[7] வள்ளியம்மே
தேடாமலே எடுத்தீர் திரவியத்தைப்போடாதே
உள்ளும் புறமும் ஒட்டாத கள்வனிவன்
மெள்ளவந்து[8] உன்னை மேவினான் ஆர்அறிவார்[9]
ஏதுகுறைவந்தாலும் இருக்கிறேன் நானுனக்கு
மாதே மயங்காதே வாடி என நடந்தாள்
அப்போது வள்ளியம்மன் அவளோடெளுந்திருந்து
செப்பரிய கொங்கை வள்ளி சேர்ந்து கலை உடுத்து
பாதம் வருந்தி உயிர் பாங்கியரும் முன்னடக்க
பேதையரும் அப்போ பின்னே நடக்கலுற்றாள்

---

1 *யாராகிலும்*

2 *தார்குழல்*

3 *தலை எழுத்து*

4 *தவம் யார்க்கும்*

5 *யானையும்*

6 *தொழுதேற்றும்*

7 *என்தோழி*

8 *மெல்லவந்து*

9 *யார் அறிவார்*

தெண்டல்[1] அசைந்துவரச் செண்பகங்கள் பூச்சொரிய
புன்னைமுல்லை செண்பகமும் பூவளையிலே சொரிய
சின்னங்குளலாடச்[2] செண்பகங்கள் பூச்சொரிய
சேர்ந்த சிலம்பிரண்டும் சீராகமேபாட[3]
மிக்க தன்னூல் வளியே வேண்டும் விதம் உரைத்து
வாறார் தனம் புதைய வள்ளியுடனே கூடி
செய்யானருள் வந்து திருக்கை வேலாயுதனை
கை கலந்து பூங்காவில் கலந்தாரே காரிகையோடு
மெய்யான பூங்காவில் மின்னாள்நடன் இருந்தார்
புனகிதமாய் வேலவரும் பூவையரைத் தான்னோக்கி
மைபோலும் கண்ணாளே வருந்தாதே இப்புனத்தில்
செப்பமுடன் இங்கிரும் நீ சிறந்தே பதிக்கேசி
வாறேன்னான் என்று வள்ளி தனக்குரைத்தார்
ஏறுமயில் வாகனரே என்னை விட்டு நீ பிரிந்தால்
தேறுவனோ நானும் திகைப்பேனோ நானுமிப்போ
மாறுபட மண்சுமந்த வள்ளலார் தன் மகனே
என்னைவிட்டு நீ பிரிந்தால் இனி எனக்கு ஆர்உதவி[4]
மன்லனே உன் கூடவாறேன் எனமொளிந்தாள்[5]
மின்னாள் தனையகற்றி மெய்ப்பாங்கியை அளைத்து[6]
அன்னமேதேனே அளகு[7] சிறுகுயிலே
போறேன் திருச்செந்தூர்மேவி வருவேன் நான்னாளை
மானே உயிர் பாங்கி வள்ளியுமோ உன்காவல்
என்னோடுடன் பிறந்தாள் என்காவல் அல்லாது
மன்னவரே இன்னுமொரு வார்த்தை ஒன்று நீ கேளும்
ஆவதெல்லாம் சொல்வீர் அவள் துயரம் மாற்றரிது
தந்தைதாய் ஆனாலும் அன்னைசுற்றம் மானாலும்
உன்னை அவட்கு[8] உற்றதுணை காணாது
ஊனே உயிரே உடன் பொருளே உத்தமரே
தேனே ஒருவசனம் செப்புகிறேன் கேளுமென்றார்

---

1 தென்றல்
2 சின்னக்குழலாடச்
3 ஸ்ரீராகம்பாட, ஸ்ரீஇராகம் பாட
4 யார் உதவி
5 எனமொழிந்தாள்
6 அழைத்து
7 அழகு
8 அவர்கட்கு, அவர்களுக்கு

## விருத்தம்

உரைத்த நல்மொளியினாளே[1] ஓவிய நடையினாளே
சிரித்துறத் தளுவிப்[2] புலக்கிச் செப்புவார்ரேது வேலர்
வரைத்தட மீதில் மாதே செப்பிநீர் என்று போனார்
திரைக்கடங்காத மாதே செப்பிநீர் என்று போனார்

## நடை

போனார் வடிவேலர் பூங்கிளிக்குப் புத்திசொல்லி
என்னைவிட்டு நீ போக இயல்வோகாண் உத்தமரே
உன்னைவிட்டு வந்தபின்பு உயிற்தோளியானவளும்
என்னை வம்பு சொல்லி ஏசினாள் ஆடவரே
வெற்றியுள்ள பாங்கி விளையாட்டுச் சொல்லாதே
நன்றியுள்ள தோளி நகையாதே போடி என்றேன்
அந்நேரம் நீயும் அவள்முன்னே தோன்றி நின்றீர்
மன்னவரைக் கண்டு மகிச்சி[3] உடனே இருந்தேன்
அன்னமின்னாள் பாங்கி அவளெல்லாம் தானுரைத்தார்
மின்னேநான் வந்த உடன் மெய்ப்பாங்கியை அளைத்து[4]
கண்ணாரக் கண்டிலையோ ஒரு கன்னிமான் அம்புபட்டு
இந்தப்பூங்காவனத்தில் நீ வரக் கண்டிலையோ
சந்தோஷமாய் உரைத்தேன் தையலும் ஏதுரைப்பாள்
நான் வளத்த பொன்மானை நன்றாக எய்தீரே
அப்போது நானும் அவளையுறவாக்கவென்று
மெய்யாக என் சுருவம்[5] மெல்லியர் தனக்கெதிரே
எந்தன் சுருபம் எடுத்து நின்றேன் மின்னேகேள்
மின்னேநீ இங்கே விரைந்து வருமளவும்
பெண்ணே உனை நினைத்துபோதப் பரதவித்தேன்
தங்கை மின்னாள் வீற்றிருக்கும் காவல்தினைப்புனத்தில்
புல்ங்கொடியைத் தான்நிறுத்திப் போனாள் புனம்பார்க்க
மானாரும் புல்ங்காவில் வாடிநின்று வேலவரை
நாடியே வேலவரை நல்ல புல்ங்காவனத்தில்

1 நல்மொழியினாளே
2 தழுவி
3 மகிழ்ச்சி
4 அழைத்து
5 வடிவம்

## வெண்பா

வனத்திலே நின்று வடிவேலரை நோக்கி
புனத்திலே நின்று புலம்பவே நல்ல
மின்னாருடனே வேலவரும் தோற்றினார்
அன்னாள் அவர்தான் அறிந்து

## வேறு

வள்ளியவள் முன்னே தோன்றினாரப்போது
மன்னவரைக்கண்டு வணங்கினாள் வாள்மயிலும்[1]
சிந்தை துயராலே தேன்மொளியும் ஏது சொல்வாள்
நான்வாறேன் எனவே போனீரே மன்னவனே
இன்னேரமட்டாய் இறப்பாரைப் போலிருந்தேன்
மன்னவரே உன் பாதம் வருந்தியே காணாமல்
உன்னைப் பிரியவிட்டு இருப்பேனோ மாமயிலே
தளை உடுக்கும் சாதி என்றேன் சண்முகரே கேட்டீரோ
மனம் பொறுக்குதில்லை என்று வனத்தில் எனைமருவி
தனம்தேடிப் போனீரோ தான்பொறுக்க மாட்டேனே
என்றே அயந்திடுவாள் இருப்பாள் எளுந்திருப்பாள்[2] 2
அப்போது தானும் ஆன உயிர் பாங்கி என்பாள்
மின்னே மயங்காதே வேலவரிப்போது
வருவார் மயங்காதே வள்ளியரே இப்போது
இந்தத் துயரறிந்தால் என்ன சொல்வார் நம்மினத்தார்
விஸ்த்தார மின்னே விட்டுவிடும் இத்துயரை
இந்த வகை அறிந்தால் நம்முயிரை மாய்த்திடுவார்
உந்தன் தலையில் விதி ஒருவருக்கும் கிட்டாது
என்றே உயிர் பாங்கி அவளை மனம் தேற்றி
போயும் நெடுநாளாச்சே புனத்திலே வேலவரும்
என் காயம் உருகுதென்பாள் காணேன் என அயர்வாள்
வானாளை போக்கிடுவேன் வடிவேலர் வராவிட்டால்
காணாமல் நான் இருக்கக் காரிகையே கூடாது
வள்ளி மயங்காதே வடிவேலர் இப்போது
வெள்ளி உதிக்கு முன்னே விரைந்து வருவாரெனவே
உன்னை மறந்திருக்க ஒண்ணாது எந்தனுக்கு

1 வாழ்மயில் (வள்ளி)
2 எழுந்திருப்பாள்

என் ஆவி மயங்குதென்பாள் அய்யோ[1]என அயர்வாள்
வானவற்கெல்லாம் அரசே வனத்தில் எனை விட்டு
போனீர் அடியேன் பொறுக்கவும் மாட்டேனே
நின்று பதறிடுவாள் நெடுமூச்சித் தான் எறிவாள்
வெற்றி வடிவேலவரே என்று அயந்திடுவாள்
எப்போ வருவீரோ என்றே அயந்திடுவாள்
குண்டுருவவேலெறிந்த கொற்றவரே என் துயரம்
இன்று வந்து இருப்பீரோ என்றே அளுதிடுவாள்[2]
அந்தி இளம்பிறைக்கும் அளகுசெறி[3] தென்றலுக்கும்
ஒக்கமனம் வேகுதையோ உன்னை நான் காண்பதெப்போ
புனத்தில் கிளியெறியாள் புன் சொல்லுரைவாள்
வனத்தில் பிறவெறியாள் வண்ணக் கவுன் எறிவாள்
இருப்பாள் எழுந்திருப்பாள் என்ன செய்வேன் என்றயர்வாள்
திருக்கை வேலாயுதனைச் சேருவதெக்காலமென்பார்
ஆண்டி வடிவாக வந்து அன்பாய் எனை நாடி
இவ்வனத்தில் வந்து எனை மருவிப்போனீரே
வளையல் விற்கவந்து வனத்தில் எனை மருவி
தளந்தேடிப்போனீரே தான் பொறுக்கமாட்டேனே
வள்ளிதனையமத்தி வனத்தில் இருக்கையிலே

## விருத்தம்

வாறேன்று போனீர் வனத்தில் எனைமருவி
தேறுதலையாய் இருந்தேன் செவ்வளே கூறுமயில்
ஏறுமயில் வாகனரே குறித்து உனைநாடித்
தாகமுடன் இருந்தேன் நான்

## நடை

மின்னாளிருபேரும் வனத்தில் இருக்கையிலே
சின்னங்குளலூதிச் சேந்தார் குறவரெல்லாம்
வள்ளிக்கிளங்கெடுத்து மானையெய்து கானவர்கள்
சேரத்திரண்டு திமிதிமென வந்தார்கள்
வந்துமே கானவர்கள் வனத்திலேதான் இருந்து

---

1 ஐயோ
2 அழுதிடுவாள்
3 அழகுசெறி

செந்தேன்மொளியாரே[1] சிறுகுயிலே அஞ்சுகமே
வள்ளியரே பாங்கியரே மானிடவராகவந்த[2]
தெள்ளுதமிளாயுஞ்[3] சிவதவசி எங்கே என்றார்
மாண்டார் எலுமணியும் மகாதேவர் போலேவந்த
ஆடவரைக் கணோம் எவர் எங்கே என்றுரைத்தார்
ஆடவரெங்கேயென்று அண்ணிமார் கேட்டவுடன்
மெய்யாய் புதுமைதனை விளம்புகிறோம் கேளுமென்றார்
இருந்தார் சில நெடுநாள் எங்களுடன் தான்கூடி
அருந்தினைமாவும் அன்பாகவே கொடுத்தோம்
அய்யரவர்[4] எங்களுடன் அன்பாகவே இருந்து
பையரவம் பூண்ட பரமர் திருவருளால்
நவமான தேன் கனியும் நாங்கள் அவர்க்குப் பயந்து
வடிவேலர் தன்னானை அவர்க்குப் பயந்து
பசித்திருக்க ஒட்டாமல் பலகனியும் தேன் மாவும்
கொடுத்துமே தாவரித்தோம் எங்கேகினாரோகான்
ஒப்பமுள்ள ஆண்டார் ஒருவரையும் காணாமல்
தப்பியே ஏகிவிட்டார் தான் அவரைக் காணோமே
மீண்டுவருவாரெண்டிருந்தோம் நாங்களுந்தான்
தங்கைமின்னாள் வள்ளியரும் நானும் மிகத்தேடி
இன்றளவும் தேடுகிறோம் ஏங்கேகினாரோ
என்றுரைக்கக் கன்னியர்கள் ஏற்கி அந்தக் கானவர்கள்
அந்தமொளிகேட்டு [5]ஆனகுறவரெல்லாம்
சிந்தைதளண்டு[6] சிவதவசி போனரென்று
அய்யோ சிவதவசி அவரேகினாரெனவே
மெய்யே பதறிடுவார் வெகுபாவம் என்று சொல்லி
மங்கையர் அத்தவசி வருத்த மறிந்தாய்யிலையே
சங்கையுள்ள ஆடவரும் தானெங்கே போனாரோ
எங்கேகிநாரோகான் அவரைநான் காண்பதெப்போ
செங்கைமுகில் நாரணனே திருக்கை வேலாயுதனோ
வனக்கிளவனைப்போலே வந்து நம்மை ஆளவந்தார்

---

1 செந்தேன் மொழியாரே
2 மானிடராக வந்து
3 தெள்ளுதமிழ்
4 ஐயரவர்
5 அந்தமொழிகேட்டு
6 சிந்தை தளர்ந்து

அறியாமல் நாம் அவரை ஆண்டியென்டல்லோ இருந்தோம்
மறிமான் மளுவேந்தும் மகனோ அவர்தானோ
பெய்மாயமாக வந்த போய்விட்டார் கண்டீரே
நன்றுகான் நீங்கள் நற்சுனைகள் உள்ளதெல்லாம்
சென்றுநீ பாத்தீரோ செல்வரெங்கள் ஆடவரை
இன்றளவும் தேடுகிறோம் எங்கேதான் போனானே
இனிமேற் பருவமென்ன என்ன செய்வோம் நம்விதிக்கு
வனிதையர்கள் என்ன செய்வார் வன்பாவி நாமெண்டால்
குறவர்கள் வந்து வாள்புனத்திலே[1] கூடி
தினை அறுக்கவேண்டும் போங்கோ சிற்றூற்கு
வள்ளி அம்மனை அளைத்து[2] வந்தகுறவரெல்லாம்
இந்தத்தினை அறுப்போம் இனிக் காவல்தான் வேண்டாம்
நீங்கள் இருபேரும் நீள் புனத்தை விட்டேகிப்
போங்கோ இருபேரும் பூவையரே சிற்றூர்க்கு
பொங்கல் இட்டு நாங்கள் புதுதினை கொய்துவாறோம்
திங்கள்னுதவனையீர் சிற்றூக்குப் போங்கள் ளென்றார்
அப்போதறிவளிந்து[3] இருவரும் மெய்சோர்ந்து
நெருப்பில் நெய்விட்டாப்போல் நேரிளையும் பாங்கியரும்
வேறுபட்ட மான்போல நேரிளையும் பாங்கியரும்
முண்டுண்டாப்போல்[4] முகத்தை முகம்பாத்துநின்று
வேலவனார் வந்தால் வெறும் புனத்தில் இப்போது
வள்ளி எங்கேயென்று பதைப்பாரே தோளியரே
பொன்னடியைத்தேடிப் புனத்திலே வந்துநின்று
மானினத்தைக்கேட்டு மறுகுவரோ மாமயிலே
மான்காள் கிளிகாள் மயில்காள் குருகினங்காள்
பூங்காவைவிட்டு போன செய்திசொல்வீரோ
மல்லிகைமுல்லை மயிலை இருவாச்சி பிட்டு
நல்லபுகள்[5] வேலவனார் நாடிவந்தால் சொல்லுமென்றார்
மயிலேகுயிலே மாடப்புறாமினமே[6]

1 வாழ்புனத்திலே
2 அழைத்து
3 அறிவழிந்து
4 சாப்பிட்டு விக்கித் தவிக்கும் நிலை
5 நல்லபுகழ்
6 மாடப்புறாவினமே

அயில்வேல் விளியாரே அறுமுகர்க்குச்சொல்வீரோ
இந்தவனத்தைவிட்டு ஏகினுள் வள்ளியென்று
கந்தர் அறுமுகர்க்கு காட்டிவிட மாட்டீரோ
பூமரமே மாமரமே புன்னைகாள் செண்பகமே
வேலவனார் வந்தால் வளிதனையும் காட்டீரோ

## விருத்தம்

குறவர் தினை அறுக்கக்கூடிவந்துவாள் புனத்தில்
திடமுடனே சிற்றூற்குச் செல்என்றார் எங்களையும்
மன்னவரும் என்னை வலதனித்துப்போனாரே
சிற்றூற்கு வாவென்றாள் மின்

## நடை

பாங்கியுடன் அவளும் பார்த்துப்பரதவித்து[1]
ஏங்கி மனம் புண்ணாகி ஏகினாள் என்றுரையும்
மறந்திருக்கமாட்டார் வடிவேலர் இப்போது
சிறந்திருப்பார் எங்கே எனத்தேடி
சிறந்திருக்கும் மானாகமே குயிலே சிற்றூற்குப்
சொல்லுங்கோ என்று வள்ளிதோளியுடனே நடந்து
வல்லபுகள்[2] வேலவரை நான் காண்பதெக்காலம்
மண்ணீர்மாக வளிமுளுதும்[3] வள்ளியம்மன்
கண்ணீர் சொரியக் காரிகையுந்தான் நடந்தாள்
என்னவிதியோ எளுதினவாறெப்படியோ[4]
வெள்ளிமலை வேலவனார் எனைத்தேடி
நாளைவருவாரோ நான் அறியேன் தோளியரே
தோளி ஒரு வசனம் சொல்லக்கேள் இப்போது
ஆளிஅமர்ந்தோன் மருகன் அறுமுகற்குத் தோளியரே[5]
அங்கொருதி உண்டாம் அவளிந்தால் வேலவரை
இங்கே வரவிடுவாரோ வேலவரை
ஊரிருந்தும் பேரிருந்தும் உற்றார் பெற்றார் இருந்தும்
எனதுயரம் ஆற்ற ஒருவரால் ஏலாது
கூடிநடவும் என்று கூறினாள் கொம்பனையாள்

---

1 பார்த்துப் பரிதவிர்த்து
2 வல்லபுகழ்
3 வளிமுழுதும்
4 எழுதியவாறெப்படியோ
5 தோழியரே

நீஅங்கும் இங்கும் போகாதே அன்னமே வள்ளியரே
காரிருண்டபூங்குளலே[1] கடுகிவா என்று சொன்னாள்
வங்காரமான மயிலேறும் சேவு னார்
வருவார் மயங்காதே வள்ளியரே இப்போது
நீ என்ன தவம் செய்தாயோ இப்போது
கண்ணுறங்கமாட்டார் வடிவேலர் இப்போது
தாமதமாய் நில்லார் காண் சண்முகரும் இப்போது
தீராதகாதல்கொண்டு செத்திறந்து போவேன் என்றாள்
அஞ்சாதே நீயும் அன்னையவள் அறிந்தால்
கொஞ்சுமொளி[2] உரைப்பாள் கோதையரே நம்மையவள்
இந்த மயக்கமதை நம்மினத்தார் தான் அறிந்தால்
உன்தனையும் எந்தனையும் உடனே வதைத்திடுவார்
அந்தமொளிகேட்டு[3] அன்னமின்னாள் வள்ளியம்மன்
சிந்தைதளந்தேன் தேன்மொளியே[4] வாருமென்றாள்
தள்ளாடி தள்ளாடித் தானும் உயிர் பாங்கியுமாய்
சீர்சிறந்த சிற்றூரில் சென்றார் இருபேரும்
மாலைக் கருங்குளலாள்[5] மாசற்ற மென்மொளியாள்[6]
தெண்டனிட்டு வள்ளியையும் சிறந்த உயிர் பாங்கியையும்
கொண்டாடிருவரையும் கோதையவள் தான் வணங்கி
சித்திரம்போல் மின்னாலே தெய்வகுலப் பெண்ணமுதே
இன்றைவரையும் இருந்தீர் வனம் தனிலே
தேனே கனியே தெவிட்டாத செங்கரும்பே
என்றுமே தாயார் இருகையாலே தளுவி[7]
நன்றியுள்ள தாயாரும் நல்ல இனத்தாரும்
பேறுபெறத்தான் வாள்த்தி[8] தாயாரும் உன்மகிண்டு[9]
வண்ண முருகனுக்கு மனைவியுமாவாயெனவே
வெற்றியுள்ள வேலவர்க்கு மேவுந் தெய்வானையை போல்
உற்றதுணையாவீர் என்று உச்சிதனை மோந்தாள்

1 காரிருண்ட பூங்குழலே
2 நெஞ்சுமொழி
3 அந்தமொழிகேட்டு
4 தேன்மொழியே
5 கருங்குழலாள்
6 மென்மொழியாள்
7 தழுவி
8 வாழ்த்தி
9 உள்மகிழ்ந்து

என்னேரமும் நமக்கு ஏற்ற துணையாய் முருகர்
பெண்ணே உனைமேவிப் பொற்பாதம் பெற்றிருப்பாய்
வேலர் என்று சொன்ன உடன் மின்னுரும்தான் கேட்டு
ஆலமுண்டமின்போலே ஆயினையாள் அங்கு
ஆறுமுகவன் என்று அன்னசொல்லத்தான் கேட்டு
சீறிமுகம் நோக்கித்தேன் மொளியாள்[1] ஏது சொல்வாள்
ஆறுமுகவன் என்று ஆரைநீ[2] சொல்லுகிறாய்
வேறுமொருவசனம் விளம்புமென உரைத்தாள்
பாதாதி கேசமுறப்பாத்தனே அன்னையரை
மாதாதி கைத்து வள்ளியைப்பாத்தேதுரைப்பாள்
ஏதுமகனே உனக்கு இந்த மயக்கமதேன்
காதல் கொண்ட மங்கையைப்போல் கண் சிறக்கப் பாத்திருந்தாய்
என்ன விதியோ என் மகளை வள்ளியம்மே
அன்னமே பாங்கியரே அவள் மயக்கம் ஏதெனவே
நீங்கள் அங்கே ஏது செய்தீர் நீண்ட தினைப்புனத்தில்
இருந்தோம் புனத்தில் எங்களுக்கொன்றுமில்லை
தினப்புனத்தில் நீங்கள் செய்ததொரு காரியத்தால்
வள்ளியற்கு ஏதோ மயக்கமது என்றுரைத்தாள்
மயக்கமதைப் பார்த்து மாதாவும் ஏது சொல்வாள்
வாசல் படிகடவாதே வள்ளியம்மே நீயுந்தான்
அந்தமொளி[3] கேட்டு ஆனவள்ளி தோளியுடன்
சிந்தை மிகத்தளண்டு[4] தேன்மொளியும்[5] ஏது சொல்வாள்
வள்ளியரும் பாங்கியரும் மாதா சினந்ததினால்
கள்ளிகள் போல் ஒதுங்கிக் கண்ணையும் கண்பார்லுற்றான்
அன்னேரம் மாரன் அலைகடலில் முட்செறியும்
மின்னும் மிடியெனவே மேகம் கரியெனவே
நிலவுகுடையாக நீண்ட தெட்டுந் தேராக
தென்றல் தேரேறித் சலையதனைத்தான் தெரிந்து
தினைகொய்து வேடர் சிற்றூர் அடைந்தார்கள்
வட்டமதினுதலாள் மங்கைநல்லாள் வள்ளியம்மன்

1 மொழியாள்
2 யாரைநீ
3 அந்தமொழி
4 மிகத் தளர்ந்து
5 தேன்மொழியும்

கூந்தல் அவிள்ந்து[1] குலைந்துவிளக்கோனதையரும்
தானே தளண்டு[2] சருகுபோல் மெய்வாடி
திக்கெட்டும் பா.ற்பாள் திகைப்பாள் உளுத்திருப்பாள்
பக்குவங்கள் சொல்வாள் பதைப்பாள் உயிர்போக
மிக்கநெடுமூச் செறிவாள் விளிப்பாள் அயந்திடுவாள்
சிக்கெனவே பல்கடிப்பாள் செய்ய உயிர்ப்பாங்கியென்பாள்
வள்ளிமயக்கமடை மாதாவும் தான் அறிந்து
உள்ள மொளிஎன்னோடுரையுமடி தாதியரே
நீங்கள் அங்கே ஏதுசெய்தீர் நீண்ட தினப்புனத்தில்
இருகேரும் இருந்தோம் எங்களுக்கு ஒள்றுமில்லை
அன்னேரம் நாங்கள் ஆனவள்ளியாருடனே
வந்துவிட்டோம் நாங்கள் வேறுவினையுமில்லை
ஏங்கி அளுதிடுவாள்[3] என்மகளே எண்டயர்வாள்
கிள்ளிமொளியார்க்கு[4] கிலேசமிக எண்டருவாள்
அந்நேரந்தன்னிலே ஆனவள்ளி பாங்கியரை
சிந்தை உறப்பாத்துக் தெய்வமே உண்டளுவாள்
கந்தரே என்று கையை நிலத்தறைவாள்[5]
அண்ணர்மார் பாத்து அலறி விளுந்தவர்கள்[6]
கந்தரே என்று காணிக்கை கட்டிடுவார்
வெள்ளி மலைவாளும் வேலர்க்கபய மென்பார்
கண்ணீறுபட்டதென்பார் காரிகையாள் வள்ளியற்கு
வெண்ணீறு போட்டுவேலவரே தஞ்சமென்பார்

## விருத்தம்

பார்த்துக்குறவர் வள்ளிமயக்கமதை
கந்தர் அருள் அல்லாது கானகத்தில் வந்த வீனை
வேலர்க்கபயமென நொந்து மனம் வாடி
வள்ளியரைப் பாத்தார் மகிண்டு[7]

---

1 *அவிழ்ந்து*
2 *தளர்ந்து*
3 *அழுதிடுவாள்*
4 *கிளிமொழியார்க்கு*
5 *நிலத்தில் அடித்தல்*
6 *விழுந்தவர்கள்*
7 *மகிழ்ந்து*

### நடை

அப்படியே எல்லோரும் அளுது[1] மிகச்சலித்து
செப்பமுடனே சிறந்திருக்கும் நேரமதில்
வடிவேலா் அப்போது வந்தாா் வனந்தனிலே
கடியமயில் வாகனனாா் காணாா் ஒருவரையும்
காணாா் ஒருவரையும் கானகத்தில் மின்னாளை
வீணாய் மயங்கி நின்று வேலவரும் ஏது சொல்வாா்
பூ மரத்தைப் பாத்தாா் புனமெங்கும் தான் பாா்த்தாா்
மைபோல் இருளதிலே வேலவரும் தான் ஏகி
தேடியே சிற்றுா்கி[2] சென்றரே வேல்முருகா்
சென்றெங்கும் பாத்து திகைத்தாா் அறுமுகனாா்
நின்று புனத்தில் நிமலன் மைந்தன் ஏது சொல்வாா்

### விருத்தம்

வந்து தினைப்புனத்தில் வள்ளிதனைக் காணாமல்
இந்தப் புனத்தில் இவா்கள் இல்லையோ செந்திருவாள்
தள்ளாடிமெய் நடுங்கித்தான் அவளைக் காணாமல்
உள்ளம் உருகி நின்றா் உற்று

### நடை

சிந்தை துயராலே திகைத்து நின்று வேலவரும்
விஸ்தாரமான மெல்லிரைக்காணாமல்
பித்தரைப்போலே புலம்பலுற்றாா் வேல்முருகா்
வேலவரும் நானோ வேறு மனுவுருவோ
ஆலமுண்டோன் மைந்தன் அறுமுகனும் நானோகாண்
கோளிக்கெடியுமுண்டோ கூரறிய வேலுமுண்டோ
ஆறுமுகந்தன்னை அடையாளம் பாா்க்கலுற்றாா்
கூறுமயில்வாகனாா் கூரறுத்து தன்சடத்தை
ஏறுமயில் வாகனாா் எதித்து மிகவாத்தை சொல்லி
வேறுகுறையில்லை வேலவா்நாம் என்றறிந்து
ஊளின் விதியை ஒருவரால் மாற்றவொண்ணா
ஏந்திளையும் நாமும் இருந்ததுவும் இவ்விடந்தான்
வேடா்தினையறுத்து விட்டாா்களாய் இருக்கும்
ஏடவிளும்[3] பூங்குளலை[4] எங்கே இனிக்காண்பேன்

---

1 வாழ்மயில்

2 சிற்றூர்க்கு

3 ஏடவிழும்

4 பூங்குழலை

## விருத்தம்

என்னைப் பிரிந்தவளும் இவ்வனத்தை விட்டகண்டாள்
மின்னை இனிகண்டு மேவுவதும் என் நாளோ
புல்மரங்காள் குயில்காள் புனத்தில் எனக்கறிய[1]
மாமரமே சொல்வீர் வகுத்து

## நடை

எங்கே இனிக்கண்டு எனது துயர்தீற்பதெப்போ[2]
கொங்கார் முலையாளைக் கூடி அணிவதெப்போ
மங்கை எனைக் காணாமல் மறுகி[3] மயங்குவாளே
சங்கையுள்ளமின்னைத்தான் அணிவதெக்காலம்
அன்றில்காள் பேடைகாள் அன்னமே வாள்மயிலே[4]
தெண்டல்காள் மின்போன தடம் எனக்கு காட்டீரோ
வள்ளிக்கொடிபோன தடமெனக்கு காட்டீரோ
உள்ளம்கொண்டு உயிர் கொண்டு உள்ளமெல்லாம் கொண்டு
தான் கண்டு மின் போன தடமெனக்கு காட்டீரோ
இன்னேரம் மின்னை எங்கே இனிக்காண்பேன்
உந்தனிடபாங்கி[5] உனக்குறுதி சொன்னதினால்
என்னை மறந்து ஏகினாய் சிற்றூற்கு[6]
வனத்திலே நான் தேடி மறுகுவனெண்டுனக்கு[7]
இனத்தோடே கூடி ஏகினையோ மின்னாளே[8]
என்னை மறந்து உன்தேசம் ஏகி விட்டாய்
உன்னை மறந்து உயிர்வாளேன் ஏந்திளையே
எண்ணும் அளவில் எளுகதிரோன்[9] போய்மறைந்தார்
மன்னவரும் அப்போ சிலைவேடர்[10] உரை கேட்டு
அத்தியின் கீள்[11] வீற்றிருந்தார் ஆதி அறுமுகனார்

1 நானறிய என வரும்
2 துயர் தீர்ப்பதெற்போ
3 விருப்பமும் விருப்பமின்மையும்
4 வாழ்மயில்
5 உன்னுடை தோழி
6 வள்ளி வாழும் ஊர்
7 விருப்பமும் விருப்பமின்மையும்
8 வள்ளி
9 எழுகதிரோன்
10 சிலைவேடர் என்பது வேடர்களில் ஒரு குழுவினர்
11 கீழ்

ஏற்றி எருதேறும் யீசன்[1] திருமகனார்
ஊரன்டடைந்த[2] பின்பு ஒருவரையும் காணாமல்
ஆரெனப்பாத்தாலும்[3] ஆத்தியின்கீள்[4] வீற்றிருந்தார்
அந்நேரம் பாங்கி அனந்தல் மிக் தெளிந்து[5]

---

1 ஈசன்
2 ஊரென்றடைந்து
3 யாரெனப் பார்த்தாலும்
4 அத்திமரத்தின் கீழ்
5 மிகத் தெளிந்து

## குறிப்பு :

வேடர்களில் பல வகையினர் உண்டு என்பதனை அறிகின்றோம்

சிலைவேடர் : தேன் எடுப்பவர்கள்

மலைவேடர் : மலையை அண்டிய பிரதேசங்களில் வாழ்பவர்கள். இந்த இரண்டு பிரிவினரும் வேடுவர்களின் பெரும் பிரிவாகுமாம்

வனவேடர் : வனத்திலே வாழ்பவர்கள்

கட்டனூறுவேடர் : மன்னர்களுக்குப் போர் வீரர்களாக இருந்தவர்கள். குறிப்பாக பராக்கிரமபாகு மன்னனின் படைப்பிரிவில் இவர்கள் ஒரு அணியாகச் செயற்பட்டனராம்

களப்பத்துவேடர் : மீன் பிடிப்பவர்கள்

திருக்காக்கன்னிவேடர் : நாட்டுக்கு நாடு சென்று வாழ்பவர்கள்

செல்லாப்பத்துவேடர் : தேன் எடுத்து வேட்டையாடல்

கனவளவேடர் : காட்டுக்குள் வாழ்பவர், மிருகங்களைவேட்டையாடுபவர்

வில்குறவர் : வில்லைக் காவிச் செல்பவர்கள்

தன்காரியமாகத்தானும் வெளியில் வந்தாள்
மின்காட்டும் வேலவரைக் கண்டாள் வெளிப்புறத்தே
கண்டவுடன் தோளியரும் கந்தரிட[1] தாளிணையில்
தெண்டனிட்டு விளுந்து[2] செப்புவாள் ஓர்வசனம்
கண்டுதொளுது[3] கனங்குலளால்[4] செய்தியெல்லாம்
கந்தர்தனக்கு உரைத்தாளே தோளியும்
தேடியயூடெனக்குச் [5]சிக்கினாப்போலேதான்
நாடி உனைத்தே நாங்கள் பட்டபாடுரைக்கில்
சொல்லத்துலையாது[6] தோகைமயில் வாகனரே
நல்லபுகள்[7] வள்ளியரும் நானும் வனத்திருந்தோம்
அப்போது அண்ணர்மார் ஆனதினை அறுக்க
மின்னாரே சிற்றூக்கு ஏகும் என உரைத்தார்
அன்னேரம் வள்ளி அயந்து[8] இருக்கையிலே
என்ன விதியோ இதுவோ நான் செய்த தவம்
என்றுமே வள்ளியரும் என்முகம் பாத்திடுவாள்
நின்றுநெடுளச்[9] செறிவாள் நினைவறிந்து மெய் நடுங்கி
ஒளுகும்[10] கனலதிலே இட்டமெளுகதுபோல்
அளுதுமிகச் சலித்து[11] வள்ளியரும் நானுமாய்
வனங்கடந்து சிற்றூர்க்கு வந்தோம் காண் நாயகரே
இனத்தார்கள் எல்லோரும் எங்கள் தனைத் தளுவி[12]
கண்ணேமணியே கருங்குயிலே அஞ்சுகமே
வண்ணமுருகனுக்கு மனைவியுமாவாயெனவே
உச்சிதனை மோந்தாள் உள்ளம் குளிந்தவளும்
கச்சிறுகப் பூண்ட கனதனங்கள் விம்மிடவே
இச்சை கொண்ட வள்ளி ஏதும் உரையாமல்

1 கந்தரிடம்
2 விழுந்து
3 கண்டுதொழுது
4 கனங்குழலாள்
5 தேடிய ஊடெனக்கு
6 சொல்லைத்தொலையாது
7 நல்லபுகழ்
8 அயர்ந்து
9 நின்று நெருடுதல் (பயப்படுதல்)
10 ஒழுகும்
11 அழுதுமிகச் சலித்து
12 தழுவி

அய்யோ விதியிதென்பாள் அய்யரே என்றளுவாள் [1]
இப்படியேமயங்கும் இவள் துயரம் கண்டதினால்
இந்தவினை வந்தவிதம் ஏதோ எனக் கேட்டார்
வனதில் இருந்து வருகையிலே வள்ளியர்க்கு
சினத்துப் பசாசு சேர்ந்தோ என்பாரும்
கோளிகடாவும்[2] நேந்து தொளுதிடுவார்[3]
வெள்ளிமலைக் குறவர் வேலர்க்குபயம் மென்பார்
எல்லாரும் ஏங்கி மனம்தளன்ண்டு[4] தான் இருக்க
அவையில் எளுகதிரோன்[5] அடைந்தான் குடதிசையில்[6]
எல்லாரும் நித்திரைக்கான் இப்போது வேலவரே
வள்ளிதுயராற்ற ஒருவரால் ஏலாது
என்னுடைய புத்தி இயல் வேலரேகேளும்
உன்னாலே வள்ளி உயிரிளந்து[7] போகாமல்
ஏங்கி மனம் தளண்டு[8] இருந்தோம் நாம் இன்றளவும்
கூட்டி நடவுமென்று கூறியே தோளியரும்
வேலவனார் அங்கிருக்க தோளியரும் அங்கு சென்று
சொல்லுவாள் அப்போது தோளி ஒரு வசனம்
சங்கையுள்ளமின்னாளே தினைப்புனத்தில் இப்போது
திங்கள்னுதலனையீர் தினையைமான் தின்னுதெண்டாள்

## விருத்தம்

மற்றோர் அசுப்பறியாமல்[9] வள்ளியரும் பாங்கியரும்
புனத்தைமான் தின்னுதெண்டு [10] பொய் சொன்னாள் பாங்கி
இனத்தாரும் மற்றுமுன்னோரும் எல்லாரும் நித்திரை காண்
எளுந்துவாவெண்டாள்[11] மின்

1 என்றழுவாள்
2 கோழிக்கடாவும் - சேவல் கோழி
3 தொழுதிடுவார்
4 மனம் தளர்ந்து
5 எழுகதிரோன்
6 மேற்குத்திசை
7 உயிரிழந்து
8 தளர்ந்து
9 மற்றவர்களுக்குத் தெரியாமல்
10 திண்ணுதென்று - சாப்பிடுதல்
11 எழுந்துவாவென்றாள்

## நடை

தாரணியும் மார்பளகி[1] தாயார் அறியாமல்
கார் சிறந்து பூங்குலே கடுகி எளுந்து[2] நீ வாருமென்றாள்
வள்ளியரும் அப்போ மயக்கமது விட்டெளுந்து[3]
சந்தோஷமாய் அவகளிருபேரும்[4]
கந்தரிடதாளிணையிதான்[5] விளுந்துதெண்டனிட்டு[6]
நாதர் அறுமுனார் நன்றாய் மனமகிண்டு[7]
ஆறுமுகம் காட்டி நின்றார் வடிவேலவரும்
நின்றவடிவேலவரை வள்ளியரும் பாங்கியரும்
சென்றுமிகத்தொளுது[8] தெண்டனிட்டார் அம்மானை
அண்டர்தொளும்[9] பெருமான் அதிபிரியமாய் மகிண்டு[10]
இனிமேல் பருவமென்ன இளங்கொடியே அஞ்சுகமே
ஏதம் அறியாள் எட்டியுந்தானறியாள்[11]
வள்ளியரை நீயும் வடுச்செய்தீர் ஆதலினால்
அன்னையரும் எங்கள் அண்ணன்மார் எல்லோரும்
ஏதெண்டுசொல்லி இருந்தார்கள் எல்லோரும்
சுற்றத்தார் எத்தனைப்பேர் சூள்ந்து[12] இருந்தாலும்
மற்றொருவராலே மயல்தீற்கக்[13] கூடாது
தேனியகண்ணாளே செப்பக்கேள் இப்போது
மானினியகண்ணாளே வடிவேலரைப்போலே
தேடியும் காணோம் திருக்கை வேலாயுதனை
சொல்வாள் வள்ளியற்குத் தோளி ஒரு வசனம்
உன் கூந்தல் அவிள்ந்தாலும்[14] உன் கொங்கை சரிந்தாலும்

---

1 மார்பழகி
2 எழுந்து
3 விட்டெழுந்து
4 அவர்களிருபேரும்
5 கந்தரின் தாழினை
6 விழுந்துதெண்டனிட்டு
7 மனம்மகிழ்ந்து
8 சென்று மிகத்தொழுது
9 அண்டர் தொழுது
10 மகிழ்ந்து
11 வேறு எங்கும் செல்லாதவள்
12 சூழ்ந்து
13 மையல்தீர்க்க
14 அவிழ்ந்தாலும்

செந்தூமுருகரிடதேவி[1] என்று வாள்ந்திருப்பீா்[2]
சந்திரரும் சூரியரும் தானவரும் உள்ளவும்
என்றைக்கும் நன்றாய் இருக்கக் கடவதெண்டு[3]
நின்றுமிக வாள்த்தி[4] நேரிளையும் பாங்கியையும்
காரிகையின் கைப்பிடித்துக் காவலர்தன் கைக்கொடுத்து
சீரிய சொல் பாங்கி திருக்கை வேலாயுதனை
தொளுதுமிக்க[5] தெண்டனிட்டு சொல்லுவாள் வள்ளியற்கு
அளுதுமிகப்பொருமி[6] ஆவலுடனே தளுவி[7]
தேட்டமுடன் உன்னையும் நான் தெரிசிப்பதெக்காலம்
அன்னேரம் வேலவனார் அதிபிரியமாய் மகிண்டு[8]
என்னேரமும் இருப்பேன் தோளியரே உன்னிடத்தில்
நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உன்னை ஒருநாள் மறவேன்
எப்போதும் உன்னிடத்தில் இருப்பேன் நான் தோளியரே[9]
வள்ளியரும் அப்போது வளுத்துவாள்[10] ஓர் வசனம்
உன்னை விட்டுநான் போக ஊரின் விதிப்படியோ
நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உன்னை ஒருநாள் மறவேன்

## விருத்தம்

வள்ளியையும் வேலவரையும் வளமுடனே பார்த்துநின்று
தோளி[11] உறவனைத்துச் சொல்லுவாள் ஓர் வசனம்
கோளி கூவமுன்னே[12] போய்விடு கோகுறவர் முனிக்கமுன்[13]
தாவிவளி நடப்பீர்தான்

---

1 செந்தூர் முருகன்தேவி (வள்ளி)
2 வாழ்ந்திருப்பீர்
3 நன்றாய் இருக்கக் கடவாய் என்று
4 வாழ்த்தி
5 தொழுதுமிக
6 அழுதுமிகப்பொருமி
7 தழுவி
8 மகிழ்ந்து
9 தோழியரே
10 சொல்லுதல், கூறுதல்
11 தோழி
12 கோழி கூவமுன்னே
13 விழிக்கமுன்

### நடை

வள்ளியையும் வேலரையும் வாள்த்தி[1] வளிநடத்தி
மெள்ளவே[2] பாங்கியரும் நின்றாள் மனையகத்தே
வேதாவிதிப்படியே வேலவரும் வள்ளியரும்
பாதம் வருந்தப் பதறி வளி நடந்தார்
அப்போது பாங்கியரும் அன்னை அறியாமல்
மெய்யான பஞ்சனையில் மேலேதான் கண்துயின்றாள்
கச்சைகட்டும் சீராகவும் கந்ருடன் வள்ளியரும்
இச்சையுடனே இலைபிளகு தான் அருந்தி
மன்னர் அறுமுகனார் வள்ளியை உடன்பாற்பார்
துன்னுமிருள் நீங்கித் தோன்றிரண்டானவே
பையரவமாணிக்கம் பந்தம் பிடித்துவர
ஐயமறச்சென்றார் அரைக்காதம் பூங்காவில்
செண்பகப் பூங்காவில் சென்றாரே வேலவரும்

## விருத்தம்

பூங்காவில் அப்போ பூவையரும் வேலவரும்
நீங்காமல் சென்றிருந்தார் நிச்சயமாய் பூங்காவில்
வீற்றிருக்கும் வேளையிலே வையோன் உதயமெனக்
கீத்திஉடன் இருந்தார் அங்கு

### நடை

தோகை மயிலாட சுரும்பினங்கள் தான்பாட
வீற்றிருக்கும் நேரமதில் வெய்யோன் உதயமெனக்
கூற்றுவிளி வள்ளி எங்கே எண்டன்னை கூற்றுற்றாள்
பாங்கி எளுந்து[3] படுக்கைதனை தடவி
வாங்கு சிலை வள்ளி எங்கே என்றெனைத் தேடலுற்றாள்
பாகனைய சொல்லாளே பஞ்சனையிலே கிடந்த
வாங்குசிலை வள்ளி எங்கேயெண்டு[4] தேடலுற்றாள்
தோகையவன் எங்கேயெனறு துயரமுற்று தேடுவாராம்
திடுக்கிட்டுச்சற்றே திருவந்தால் நீங்கியபின்

---

1 வாழ்த்தி
2 மெல்லவே
3 எழுந்து
4 எங்கேயென்று

படுக்கைதனைத் தடவி பாத்தாளே தோளியரும்[1]
அன்னைதனைப்பாத்து அளுது[2] புலம்பிடுவாள்
உன்னைப்பிரிந்தாலும் உன்னுமுயிந்து போல்
என்னைப்பிரியாள் அவள் எங்கே என்டளுவாள்[3]
மாதா அளுது[4] மக்களுக்குச் சொல்லலுற்றாள்
கானவரே வள்ளிதனைக் காணேன் என அளுதாள்
மானனையாள் வள்ளிதனை மாயமாய்க் காணேனே
ஆவென்பாள் கூவென்பாள் ஐயோ என அழுவாள்
மின்னார்தனை அமத்தி வேடர்தடம் பாத்தார்[5]
வெளியிலே வந்துநின்று வேடர்தடம் பார்த்தார்
இருபேர்தடமும் இந்தவளிபோகு தென்பார்
நின்றடியைப் பார்த்து நெறுநெறு எனப் பல் கடித்து
குண்டுபோல் கண்சிவந்து கொற்றப்பெரும் குறவர்
ஏற்றும் சிலைக்கு இலக்குண்டோ எங்களுக்கு
சேரச்திரண்டு சினத்துக்குறவரெல்லாம்
ஆரபாரத்துடனே எல்லோரும்தான்கூடி
சென்று கச்சைகட்டித் சீராவுஞ்தான் சேர்த்து
வெற்றியுள்ள வில் எடுத்துவீரக்கணை தெரிந்து
ஒன்றாகக்கூடி ஒருமித் தெளுந்திருந்து[6]
சென்றுதடம்பாற்பார் சிலையதனைதான் ஏந்தி
கொம்புகுளங்குறிபார் குறவர் மிகச்சினந்து
அம்பு தெரிந்தெடுப்பார் அடிபார்பார் கானவர்கள்
கானவர்களெல்லாம் கடுக தடம் எடுத்து
வானவரானாலும் நம்வனத்தில் வரமுடியாது
கானவரே நம்மிலும் ஓர்கள்வன் வலியவன்கான்
தானமுடன் அவளைத் தடத்திலே சென்று கண்டு
மின்னாள் வள்ளியையும் மேவவந்த கள்வனையும்
இப்போவதை செய்வோம் என்றேகினார்குறவரெல்லாம்
சத்தமுடன் வள்ளிதனைக்கொடுபோன் கள்வனிவன்
இருபேர் தடமும் இந்தவளிபோகுதென்பார்

1 தோளியரும்
2 அழுது
3 என்றழுவாள்
4 அழுது
5 பார்த்தார்
6 தொழுதிருந்து

ஒருமுகமாய் வாருமென்றார் உள்ள பேரெல்லோரும்
கூடிக்குறவரெல்லாம் கூக்குரல் இட்டே எளும்பி[1]
நாடித்தடத்தோடே நல்ல பூங்காவனத்தில்
வேகமதாய்; ஓடிப் போறார்கள் வேடரெல்லாம்

## விருத்தம்

போனார்குறவர் போனதடமீதெவே[2]
மானமுடனே வளிநடந்து யீனமுடன்[3]
வள்ளிதனைக் கண்டார் வடிவேலரைக்குறித்தார்
கள்வனிவன் தான் என்றார் குறித்து

## நடை

கண்டவுடனே கடுங்கோபங்கொண்டெளுந்து[4]
கண்டவுடன் வள்ளி அறப்பயந்து அப்போது
மன்னவரே அண்ணன்மார் வந்தார்கள் இப்போது
மன்னவர்கள்வந்தால் மதிஏது செப்புமென்றார்
மாதேமயங்காதே வேடர் நமக்கெதிரே
இப்போதுகானில் ஏகிவந்த கானவரை
பெண்ணே அவர்கைளாநன் பொண்டிவிளக்கொன்றிடுவேன்
அந்தமொளியுரைத்த[5] அறுமுகரைத்தான் நோக்கி
ஆனைக்கிளையவரே[6] ஆதி அறுமுகனே
உன் தஞ்சமென்று சொல்லி ஒதுங்கினாள்வள்ளியம்மன்
மானைப்பிறகவிட்டு கள்ளனையும் கள்ளியையும்
கண்டவர்கள் வேடர் கள்ளனையும் கள்ளியையும்
உன்னைவதைப்போம் மென்டேகினார் வல்குறவர்
கள்ளாநீ இப்போ கானமயிலைத்திருடி
மெள்ள[7] வந்துபூங்காவில் வீற்றிருக்கக் காரனமேன்
தானமுடன் சிற்றூரில் தங்கை வள்ளியானவளை
ஏனமுடன் திருடி இங்கே கொண்டு வந்தனையோ
வள்ளிதனைத்திருடி வந்தாயோ கள்ளாநீ

---

1 எழும்பி
2 போனதடமீதே (போன வழி)
3 ஈனமுடன்
4 கடுங்கோபங்கொண்டெழுந்து
5 அந்தமொழியுரைத்த
6 யானைக்கிளையவரே
7 மெல்ல

அப்போது வேலவனார் வேடர்தனைனோக்கி
தங்கை வள்ளி என்று தடத்திலே நீங்கள் வந்தீர்
இங்கே வந்தீர் வேடுவரே இறந்துவிடப்போறீர்
காட்டிலே மான்யீன்ற[1] கன்னிதனை எடுத்து
வீட்டிலே கொண்டுபோய் மெல்லியரைத்தான் வளத்தீர்
தங்கை என்று நீ வளத்தீர் தங்கையவள் உன்னினமோ
சங்கையுடன்போய் விடுங்கான் தப்பாது கானவரே
உங்கள் இனத்தோடு ஏகுங்கோ கானவரே
வேடரது கேட்டு வெகுகோபம் கொண்டெளுந்து[2]
காடதனிற்கள்வனிட கட்டாமை கண்டீரோ
கள்வனொருவன் கன்னிதனைத்திருடி
கொள்ளிகொண்டு சுட்டாப்போல் கூறினது கேட்டீரோ
வள்ளி ஆர் நீ ஆர்மலைக்குறவா[3] போய்விடுடெண்டார்[4]
தெள்ளிமையாய் உரைத்த திடமதனைக் கேட்டீரோ
மானீன்று போட்டதொரு மாமயிலாள் வள்ளியரை
தானே அவர்உரைத்த சமத்தைநீ கேட்டீரோ
மலையில்குறவர்களே வனவேடரேநீங்கள்
சிலையில் பெரியவராய் சிறந்திருக்கஇப்போது
கண்ணான வள்ளிதனை களவு செய்துவந்துநீ
எண்ணாமற்சற்றும் இவன் இந்தமொளி[5] உரைத்தான்
இத்தனைபேர் நாங்கள் இறந்துதான் போனாலும்
சற்றும் நிமைப்பொளுதில் சமர்செய்து கொண்டிடுவோம்
கூடிக்குறவரெல்லாம் கொக்கரிக்க வில் எடுத்து
நாடிக்கணைதெரிந்து நடந்தார் முருகர்முன்னே
அந்தக்குறவர்தனில் அறிவுடைய வல்வேடன்
இந்தப்புனம் ஏதோ தெரியாது
வந்தான் ஒருவன் வள்ளிதனைத்திருடி
என்னவிதமோ அறியேன் இவன் சமத்தனாயிருப்பான்
என்றுகுறவன் அவர்கள்தனை அமத்தி[6]
சென்றுமுருகரிடம் செப்புவான் ஓர் வசனம்

1 மான் ஈன்ற
2 கொண்டெழுந்து
3 யார் மலைக்குறவா
4 போய்விடு என்றார்
5 இந்தமொழி
6 அமர்த்தி

போமிகுந்த சேவுகரே பூங்காவனந்தனிலே
வாருகந்த கொங்கை மின்னாள் வள்ளியையும் இரவில்
இரவுதனில் கொண்டு வரக்காரியமேன் என்றுரைத்தார்
நாவுருவங்கொண்டவற்கு நாயமல்ல வேயிதுதான்
மானீண்டமின்னாற்கு[1] வளக்குண்டோ நீபோடா
தேன்போன்ற மின்னாளைத் திருடினது இன்றுமல்ல
ஆடினவற்கேவதுவை அமைபாரென[2] அறிந்து
வள்ளியரைக்குறவர் வதுமைமுடித்திருந்தால்
உள்ளபேரெல்லாம் உகம்முடிந்து போனவார்கள்
தானறிந்து வந்து மின்னைத் தையலவள்என்றறிந்து
நான்திருடிவந்தேனென்று நகைத்தாரே வேலவரும்
வேலர்நகைபுரிய வேடர்கள்தான் எளுந்து[3]
ஆலமுண்டோன் மைந்தன் அறுமுகனென்டெண்ணாமல்
கானகத்தில் நீஒருவன் கள்வனாகத் துணிந்து
வேடர்குல மின்னாளை விஸ்த்தாரமாய்த்திருடி
வனத்திலே உன்னுடைய வல்லமையும் சமத்துவம்
மானீண்டமின்னெனவே வகுத்துரைத்தாய் இப்போது
கானவர்கள் உன்னைக் கைலே[4] கொண்டிடுவார்
தீராண்மைபேசுகிறாய் செத்திறந்துபோகாதே
வாடாநீ வல்குறவா மானீண்டமானாற்க்கு
போடாநீ இப்போ பொருதவென்றால்நீ வாடா
கான்வரே நீங்கள் என்னை கணைக் எதிர்க்கமாட்டீரே
வேடுவரே நீங்கள் என்னை வெற்றிகொள்ளவந்தீரோ
வந்தவளியோடு போய்பிளையும்[5] வேடர்களே
வள்ளிதனைத்திருடி வந்திருந்த கள்வனிட
தெள்ளிமையாய் உரைத்த செய்தியைக்கேட்டீரோ
கள்ளா நீ இப்போ கான மயிலைத்திருடி
மெள்ளவே[6] பூங்காவில் வீற்றிருந்த வீரமதோ
நன்றென்று சொல்லி நடந்தார் முருகர்முன்னே
வில்லேற்றிக் கானவர்கள் வேண்டும் கணை தொடுத்தார்

1 மான் ஈன்ற மின்னார்க்கு
2 அமைவாரென
3 எழுந்து
4 கையாலே
5 போய்ப்பிளையும் (தப்பிக்கொள்)
6 மெல்லவே

அப்போது வள்ளி அறுமுகனார் பின்னொளித்தாள்
கானவர்கள் விட்டகணைமாரி அத்தனையும்
வானவர் சேனாதிபதியார் மலரடியிலே பூவாய்
வணங்கித்தொளுதிடவே வல்வேடர் எய்தகணை
இணங்கிக்குறவரெல்லாம் இவரை வதைப்போமெனவே
அப்போது வேலவனார் அதிபிரியமாய் மகிண்டு [1]
இப்போதுவேடுவரே என்முன் எதித்ததினால்[2]
கொன்றிடுவேன் உங்களைநான் வள்ளிதனை வளத்தீர்
வென்றிடுவேன் உங்கைளாநான் வள்ளிதனை வளத்தீர்
ஆனதினால்; விட்டேன் அப்பாலே போய்விடுங்கோ
எங்கள் உடன் எதித்தாய்[3] இனிப்பார் சமத்தை என்றார்
வள்ளியையும் உந்தனையும் வாணால் தனைவதைத்து
கொள்ளிவாய் பேய்க்குக் கூறிடுவோம் கண்டாலே
அப்போது வேலவனார் ஆனவள்ளியைப் பார்த்து
செப்பரியமின்னாரே செய்தி அறிந்தாயிலையே
என்தனையும் உன்தனையும் ஒக்கவதை செய்யவெண்டு[4]
வந்தார் குறவர் மானே உந்தனாலே
இத்தனை நேரம் பொறுத்தேன் இனிப்பொறுக்கேனே
சற்றிமைப்பொளுதில்[5] வதைப்பேன் தையலே அஞ்சாதே
அடுமைதனக்காக[6] அறுமுகரே பாத்திருந்தீர்
வடிவேலரே உன்மனம் என்றாள் வள்ளியம்மன்
பால்படந்த சொல்லாள் பரிந்துரைத்த நேரமதில்
வேல்பட்டுருவி விளுந்தார்கள்[7] எல்லோரும்
கானவர்கள் பட்டு விளக்கண்டு[8] நின்று வள்ளியம்மன்
சீரனைய கானவர்கள் செத்து இறந்தபின்பு
பொன்னனைய வள்ளி பெருமூச்சு விட்டேங்கி
என்னை வளர்த்தவர்கள் இதுவோ படுவார்கள்

---

1 மகிழ்ந்து
2 எதிர்த்ததனால்
3 எதிர்த்தாய்
4 செய்யவென்று
5 சற்றிமைப்பொழுதில் - கண்ணிமைப்பொழுது
6 அடிமைதனை
7 விழுந்தார்கள்
8 விழக்கண்டு

அன்னை தனக்கினி ஆரென்று[1] தான் அளுதாள்[2]
கண்ணில் ஒற்றிக் கானவர்கள் காலும் இருகைதனையும்
மண்ணில் விளுந்து[3] மயங்கினாள் வள்ளியம்மன்
செய்யதிருமேனி செங்குருதி ஆறோட
அய்யையோ என்று அவர்மேல் விளுந்தளுதாள்[4]
வேறிரண்டு கூறாக விளுந்தீரோ[5] அண்ணர்களே
என்றளுதமின்னை[6] இளையோன் சோதிக்கவென்று
வெற்றியுடன் அளுதாய்[7] மின்னேநீ இப்போது
என்னெண்ணங்கான் உனக்கு இவரைவதையுமென்றாய்
என்றுரைத்தாய்வேல் கொண்டெறித்தேன் அவர் மடிந்தார்
என்னை அவர் வளத்தால் இரங்காதோ மன்னவனே
மானீன்றகண்டே வள்ளியரே சொல்லக்கேள்
நின்டிரங்கியே அளுதாய்[8] நீதியோ மின்னாளே
மான்யீன்றகண்டே[9] வள்ளியம்மே சொல்லக்கேள்
உடன் பிறந்தாயோ நீ ஓவியமே என்றுரைத்தார்
திடமாக நீயவரைச் செயித்துவிடு[10] என்றாயே
ஆனாலும் உன்னை அவர்கள் அல்லோதான் வளத்தார்
மனதிரக்கம் என்று சொன்ன வள்ளியரே சொல்லக்கேள்
கண்ணுறக்கமான பின்பு கட்டுரைத்தாய் என்னுடனே
புனத்திலே நாம் இவரைப் பொன் பொன்டிவிளக்கொல்வதில்லை
மாண்டுவிட்டார்குறவர் வள்ளியரே உன்னாலே
மீண்டும் பிளப்பாரோ[11] மெல்லியரே இப்போது
தேறிவிடும் உன்மனது சிந்தை கலங்காதே
வாறீராய் வாவெனவே வாத்தை சொல்லியே நடந்தார்
பெருகுபுனல் கண்துடைத்து பேதை அந்த வள்ளியம்மன்
போர்தனிலே வெற்றிகொண்டு பேற வடிவேலருடன்

1 யாரென்று
2 அழுதாள்
3 விழுந்து
4 விழுந்தளுதாள்
5 விழுந்தீரே
6 என்றழுதமின்னை
7 அழுதாய்
8 அழுதாய்
9 மன் ஈன்ற கண்டே
10 ஜெயித்துவிடு
11 பிளைப்பாரோ

ஓகையிலே துயில் ஒதுக்கி ஓடினாள் வள்ளியம்மன்
துடந்து[1] வரும் மின்னாளை தோகை மயில் வாகனனார்
அடந்து வரும் மின்னாளே உங்கள் அண்ணர் இறந்துவிட
மானே வருவாரோ மனதிரக்கம் தானில்லையோ
அத்தனே இங்கெனக்கு ஆரிருந்தும்[2] ஆவதுண்டோ
கத்தனே உன்னையல்லால் காணேன் ஒருவரையும்
எத்தனை பேரிருந்தும் எனதுயரம் ஆற்றரிது
வடிவேலர் வள்ளிதனை மனமகிண்டு[3] கொண்டாடி
கடிதாய் வளிநடந்தார் கானகத்தில் வேலவரும்
நடந்து வரும் வளியில் நாரதரும் வந்து கண்டார்
தோகைமயில் வாகனரைத் தோற்றமுள்ள மாமுனியும்
வடிவேலரையும் வள்ளியரையும் தான் தொளுது[4]
வள்ளியரைத் தொழுது வணங்கிநின்று மாமுனியும்
ஒள்ளிய மேனியெல்லாம் உதிரமே தென்டுரைத்தார்
அந்தமொளி[5] கேட்டு ஆயிளையாள் வள்ளியம்மன்
வந்தீரே கானகத்தில் மாமுனியே அன்றொருநாள்
செப்பினீர் அந்நாளில் செய்தி அறியாதிருந்தேன்
வடிவேலர் என்னை ஆள்கொள்ள[6] வேணுமென்று
சங்கையுள்ள ஆடவராய் தான் வளையல் விற்கவந்தார்
ஆண்டியென்லல்லோ அவரை நான் எண்ணாமல்
வேண்டியதெல்லாம் உரைத்தேன் வேலவரும் தான்பொறுத்தார்
ஆண்டிவடிவகற்றி ஆறுமுகம் பன்னிருதோள்
தூண்டாமணி விளக்காய் போய்வாறேனெனயெனைஆளாக்கி
போனார் வடிவேலர் போய்வாறேன் என்றுசொல்லி
மானாரென் தோளியுடன் நனும் வனத்திருந்தோம்
அந்நாளிலேகுறவர் ஆன தினைஅறுக்க
மின்னே என் தோளியுடன் ஏகினோம் சிற்றூர்க்கு
தேடிய பொருளெனக்கு சிக்ககினாப்போலேதான்
நாடிஎங்கள் வேலவரையும் நான் துடந்து[7] வந்துவிட்டேன்

---

1 தொடர்ந்து
2 யாரிருந்தும்
3 மனம் மகிழ்ந்து
4 தொழுது
5 அந்தமொழி
6 ஆட்கொள்ள
7 தொடர்ந்தார்

என்னையும் வேலவரையும் எங்கள் அண்ணர்மார் துடந்து[1]
வந்து அவர்கள் வனத்திலே கண்டுவிட்டார்
கள்ளனிவனென்று காவலரைக் கொல்லவந்தார்
மெல்லவே காவலர்கள் விரைய வளைந்துகொண்டு
அன்னேரம் வேலவனார் அவர்கள் தனையமத்தி
வனத்திலே போய் பிளையும் என்றார் வடிவேலர்
கள்ளனையும் கள்ளியையும் கானகத்தில் இப்போது
தெள்ளிய செங்குருதி ஆறோடவைப்ப மென்டால்
ஒட்டாரம் பண்ணி எங்கள் உத்தமரைப் பின் துடந்தார்[2]
பட்டார்கள் கானவர்கள் என்றே பரவவித்து[3]

## விருத்தம்

கானவர்கள் பின் துடந்து[4] கந்தனுடன் பொருது[5]
தானமுடன் குறவர்கள்தான் எல்லாம் வானவரே
பட்டார்கள் குறவர்[6] படுகளத்தை[7] விட்டேகி
விட்டேகி வந்தேன் நான்

## நடை

அந்தமொளிகேட்டு[8] ஆனபுகள்[9] நாரதனும்
வந்துதெண்டனிட்டு வடிவேலரைத் தொளுது[10]
வேலவரே நம்முடைய மெய்ப்பதத்திலே சேர்ந்தால்
ஆலமுண்ட வள்ளி அண்ணமார் தன்னையெல்லாம்
கொண்டு வளிபோவார்களோ கோதைமுகம் வாடிடவும்
இறந்தகுறவரையும் எளுப்பிவிடவேண்டுமென்றார்[11]
வானவர் தான் மகிள வள்ளிபிரியமுற
போவதே கருமம் புண்ணியரே என்றுரைத்தார்
ஆவதுவேறில்லை அடியேன் விண்ணப்பம்மென்றார்

1 தொடர்ந்தார்
2 தொடர்ந்தார்
3 பரிதவிர்த்து
4 தொடர்ந்து
5 சண்டை செய்து
6 இறந்துள்ளார்கள் குறவர்
7 வேடர்கள் இறந்த இடம்
8 அந்தமொழிகேட்டு
9 ஆனபுகழ்
10 தொழுது
11 எழுப்பிவிடவேண்டுமென்றார்

சித்தம் இரங்குமையா என்று மிகத்தெண்டனிட்டார்
வெள்ளிமலை வேலவரை வேண்டினார் நாரதனும்
மைபொருந்தும் கன்னிதுயர் மாற்றவே வேண்டுமென்று
இப்போது கானகத்தே இறந்தகுறவரெல்லாம்
வந்துவிடவேண்டுமென்று வடிவேலரைத் தொளுதார்[1]
அண்டஅசுரனைத் தடித்த[2] அளகு[3] வடிவேலவனார்
நன்றெனவே நாரதன் சொல் நாங்கேட்க வேண்டுமென்று
தெள்ளியகை வேலவரும் திருவாய் மனமகிண்டு[4]
வள்ளிஉன் அண்ணர்தனை வாவென்டளையுமென்றார்[5]

## விருத்தம்

பட்டகுறவர் தனைப்பாத்து மனமகிண்டு[6]
திட்டமுடன் வள்ளி சென்டளைக்க[7] இட்டமுடன்
வந்தார்குறவரெல்லாம் மாதைமுகம்னோக்கி
கந்தர் தனைத் தொளுதார்[8] காண்

## நடை

கட்டவிளும்[9] பூங்குளலாள்[10] கந்தர் உரை கேட்டு
எல்லருமசேர எளுந்துமே[11] வாருமென்றார்
செத்த குறவரெல்லாம் சேர எளுந்திருந்து[12]
அன்னேரமே குறவர் ஆரபாரத்துடனே[13]
சொல்லரிய வேலனாரெங்கேயெனக் கேட்டார்
குளிந்த மலர்மல்லிகையே கொம்பேயிளங்குயிலே
கங்கையில்லை என்கிளியே கந்தர்வலர் எங்கே என்றார்

---

1 தொழுதார்
2 அழித்த
3 அழகு
4 மனம்மகிழ்ந்து
5 வாவென்றளையுமென்றார்
6 மனமகிழ்ந்து
7 சென்றழைக்க
8 தொழுதார்
9 கட்டவிழும்
10 பூங்குழலாள்
11 எழுந்துமே
12 எழுந்திருந்து
13 ஆரவாரத்துடன்

எங்கேயிருக்கிறார் எங்களை யாட்கொண்ட பிரான்
அப்போது வள்ளியுந்தான் அண்ணர் தனைநோக்கி
இப்போது வாருங்கோயிசுரர் மகனைப்பணிய
மெய்யான வள்ளியரே வேலவரே என்றளுது[1]
தப்பாமல் வந்து கண்டார் சண்முகரை வேடர்களும்
தெண்டனிட்டு வேடர் திருமால் மருகோன்
தெண்டனிட்டு விளுந்து[2] செப்புவார் ஏதுமொளி[3]
எங்கள் குலதெய்வமதாய் இம்மலையிலே இருந்து
இந்தவேஷம் கொளள் ஏதுமதி என்கோவே
வேறுகுறைவாராமல் வேடர்களுக்காய் இரங்கி
ஆறுமுகம் காட்டி அருள்புரிய வேணுமென்றார்
அப்போது வேலவனார் ஆறுமுகம் பன்னிருகை
ஆறுமுகம் காட்டி நின்றார் வடிவேலர்
கோலக்குறவரெல்லாம் கும்பிட்டுத்தான் பணிந்து
வள்ளியற்காய் இவ்வனத்திலே வரவேனுமோதனிலே
தெள்ளுதமிழ்[4] வேலவரே உன் சீர்பாதம் நான்னோக

## விருத்தம்

எங்கள் குலதெய்வமதாய் இம்மலையிலே இருந்து
தங்கை வள்ளிக்காசைகொண்டு வந்தீரே எங்கள் குடி
ஆக்கமும் நீசெல்வமும் நீ ஆறுமுகரே இப்போது
பாக்கியம் பெற்றோமே அவள் மேலே ஆசைகொண்டு

## நடை

என்னோடுடன் பிறந்தாள் அவள்மேலே ஆசைகொண்டு
மன்னவரே இவ்வனத்தில் வரவேனுமேதினிலே
அறுமுகரே நீ தான் அருமைதனை ஆளவென்றாய்
தாவென்றால் வள்ளிதனை தாரோமோ சண்முகரே
கானகத்தில் நீ நடக்கக் காரியமேன் என்கோவே
சற்றே அறிந்தோமென்றால் சண்முகரே உன்பதியில்
வள்ளியரை நாங்கள் தாரோமோ சண்முகரே
பத்தரடிபார்க்குப் பொக்கிஷங்கள் நல்லதெண்டோ

1 என்றழுது
2 விழுந்து
3 ஏதுமொழி
4 தெள்ளுதமிழ்

அந்தமொளி[1] கேட்டு ஆதிஆறுமுகனார்
என்றுரைத்த வேடுவரை இளையோன் சோதிக்கவென்று
குண்டாமலை[2] வேடர்களே உங்கள் குணம் அறியமாட்டேனே
நான்வந்து பட்டபாடுரைக்கில் வனத்திலே வள்ளியற்காய்
தேடியே நான் வந்தேன் தெள்ளியசீர்வேடுவரே
நாடியே சிற்றூர்க்கு வள்ளியரும் பாங்கியரும்
புனத்தைவிட்டுப் போனார்கள் நான் அவளைக் காணாமல்
வனத்திலே நின்று மறுகிமனம் தளண்டு[3]
எல்லாப் பிளைபொறுத்து எங்களை ஆளாக்கும்
எங்களுக்கு இவ்வனத்திலே வேறுதுணை காணோமே
ஊன்அருந்தி இருப்போம் உன்னருளைப் பெற்றிடுவோம்

## விருத்தம்

மானும் மரைக்கலையும் மலைத்தேனும்
ஊனும் அருந்தி உகந்திருப்போம் தாரணியில்
தேனருந்தும் வள்ளி தனக்காக இவ்வனத்திலே
பாக்கியம் பெற்றோம் நாங்கள்

## நடை

எங்களையாளவந்த இயல்வேலரேகேளும்
பொங்குகடல் சூளும்[4] பூவுலகில் என்னாளும்
ஆவது வேறில்லை அடியேன் விண்ணப்பமொன்று
நாங்கள் வள்ளிதனை வளத்த வரிசையது குன்றாமல்
தெள்ளிய சீர்வேலவரே செப்புகிறோம் கேளுமென்றார்
கற்புடைய வள்ளியரைக் காசினியெல்லாம் அறிய
மெய்ப்புடைய உங்களை விண்ணோர் மண்ணோர் அறிய
கைப்பிடித்துத்தாறோம் கலியாணமாப்படியே
இணங்கியே எங்களுடன் எளுந்தருள[5] வேணும்மென்றார்
மாதாப்பிதாவறிய அன்னை சுற்றத்தார் எல்லோரும்
வேதாவிதிப்படியே மெல்லியரை இப்போது

1 அந்தமொழி
2 குன்றாமலை
3 தளர்ந்து
4 சூழும்
5 எழுந்தருள

இணக்கமாய் கைபிடித்து தாறோம் என மொளிந்தார்[1]
சீருடைய சிற்றூர்க்கு செல்வதே நல்லதென்று
நாரதரும் சொல்ல நாயகரும் தான் கேட்டு
பாருகந்த வேலவரை பசுமொளியாள்[2] வள்ளியுடன்
சீருடைய கானவரும் தெண்டனிட்டார் அப்போது
செண்டமர் தன்னைவெண்ட[3] சிறைமீட்ட சேவுகனார்
நன்றெனவே சொல்லி நடந்தார்கள் எல்லோரும்
வேலவனார் வந்து வீற்றிருக்கவேண்டுமென்று
கானவர்கள் முன்னோடிக் காவனங்கள் தான்போட்டு
வானவர்கள் மெய்க்க வகுப்பாய் அலங்கரித்து
விஸ்த்தாரமான வேலவரை அங்கிருத்தி
அன்னேரமே குறவர் அனைவோரும்[4] தான் கூடி
மன்னர் அறுமுகனே வந்துதொளுதார்கள்[5]

## விருத்தம்

கானகத்தில் வேடனுரை கந்தர் மிகக்கேட்டு
வானகமாஞ்சிற்றூரில் வந்துநின்று தானமுடன்
வல்லாள் உயிர்ப்பாங்கி மாதாவும் அன்னை சுற்றம்
எல்லோரும் தான் தொளுதார்காண்[6]

## நடை

மன்னர் அறுமுகனார் மலரடியைத் தான் தொளுது[7]
மின்னாள் தன் வள்ளியையும் மேவும் வடிவேலரையும்
கண்ட குறக் கன்னிகை தொளுது[8] ஏதுரைப்பார்
வண்டணியும் பூங்குளலாள்[9] வள்ளி அவள் தனக்கு
மாதா வயிற்றில் வந்து கருவைக்கையிலே
வேதாவிதிதானோ மெய்தவங்கள் செய்தாளோ

---

1 மொழிந்தார்
2 பசுமொழியாள்
3 தன்னைவென்ற
4 அனைவரும்
5 வந்து தொழுதார்கள்
6 தொழுதார்காண்
7 தொழுது
8 தொழுது
9 பூங்குழலாள்

நல்லகுலத்தில் வந்துதிக்க நல்லதவம் செய்தோமோ
திங்கள்னுதலனைய சேயிளைமார் எல்லோரும்
முன்னாளிலே அவளும் முதியதவஞ் செய்ததினால்
இன்னாளில் வேலவற்கு இனங்கும் மனைவியாள்
வள்ளியைப்போல் தவசி செய்தவரார் வையகத்தில்
வெள்ளிமலை வேலவற்கு மேவும் மனைவியாள்
வள்ளிதனை எய்தி வனதிற்கொடுபோன்
கள்வனிவனென்று கண்குளிரப்பாற்பாரும்
மங்கை தனக்கேற்ற மணவாளன் என்பாரும்
தங்கை தனக்கேற்ற சண்முகனார் என்பாரும்
என்றுமே கன்னியர்கள் அவரை மிகத்தொளுதார்[1]
குண்டுதனிலே வேடர்கூடி ஒருமுகமாய்
பாங்காகவேதான் பரிவாகப் பந்தலிட்டு
பூங்காவில் உள்ள பூக்கள் அலங்கரித்து
வானவர் மெய்க்க வகுப்பாய் அலங்கரித்து
வாளைகமுகுடனே வான்கமுகின் பாளைகளும்
கோளைபடாமல் குறவர் அலங்கரிப்பார்
வர்ணமுள்ள கும்பாகுடம்[2] வைத்து அலங்கரித்து
அன்னமின்னாள் மஞ்சள் நீராட்டி அலங்கரித்து
சந்தனம் குங்குமமும் கூட்டி அணிந்திடுவார்
கங்குல் தெரியாதபடி கனக மேல்கட்டிகட்டி
சிங்காரமாக சிறக்க அலங்கரித்து
வாறவளியெங்கும் வகுப்பாய் அலங்கரித்து
தானுடனே வாளைக்குலைத் தாமரைப்பூப்பந்தலிட்டு
பூரண கும்பமும் பொரிவாய் அலங்கரித்து
மன்னவரெங்கள் வளியடுமை கொண்டபிரான்
வானவர் எல்லாம் வந்தார் மனம் காண
கானக்குறவரெல்லாம் கண்டுமகத் தொளுது[3]
இந்திரனும் வந்தார் இறையோனுந் தான்தொளுதார்[4]
சந்திரரும் சூரியனும் தானவரும் தான் வந்தார்
மாயன்மறவி வருணன் கதலிமுதல்

---

1 மிகத்தொழுதார்

2 கும்பகுடம்

3 தொழுது

4 தான்தொழுதார்

தூய இந்திராணி துலோத்துமை மாருடனே
தெய்வலோகத்து மின்னார் சேரத்திரண்டு வந்தார்
சிற்றூர்க்கு வந்தார்கள் வள்ளிவதுவைகாண[1]
செந்தில் அறுமுகனை சேரச் தொளுதுநின்றார்[2]
அறுமுகனே அலங்கரிப்பார் அப்பொளுது[3]
தானவர்கள் மெய்க்கக் திருச்சங்கு ஊதுவாராம்
ஆலாத்தி ஏந்திடுவார் ஆலவட்டம் வீசிடுவார்
காலாதி ஓமம் வகுப்பார் கலைமுனியும்
செல்வக் கயிலை எனச் சிற்றூர் சிறந்ததுவே
மெய் வாய்த்த கண்ணுள் மடவார் குரவையிட
நாற்சதிரமாக நன்றாய்த் தரை மெளுகி[4]
வாட்சியமாய்க் கோலமிட்டு வானத்தில் மின்னார்கள்
பூந்துயிலால் பாவாடைபட்டு அலங்கரித்து
வையந்திறை கொள்ள வைத்தார் கணபதியை
அய்யா மனமகிள[5] அம்மை உமை மகிள[6]
ஆனதிருக்காவனத்தில் அறுமுகப்பெருமான்
வானவர்கள் சூளவந்திருந்தார்[7] காவனத்தில்
அன்னேரம் தெய்வகுல ஆயிளைமார் எல்லோரும்
மின்னாரை நீராட்டி மேகக்கலையுடுத்து
கோதிக்குளல் முடித்து குளிர்ந்த மலர்சாத்தி
பாதிப்பிறைனுதலில் பட்டமும் சுட்டிகட்டி
அஞ்சனக்; கண்ணெளுதி[8] அளகாய்[9] பணியணிந்து
பட்டங் காறைச்சவடிபதக்கம் மிக அணிந்து
கைக்கு நல்ல மோதிரமும் கனக விரலாளியிட்டு
பொற்கனக மார்பில் பொருத்தப் பணியணிவார்
காலாளிபீலி கனமோதிரமுடனே
ஆபரணமெல்லாம் அணிந்தார்கள் ஆயிளைக்கு

1 திருமணம்காணுதல்
2 தொழுதுநின்றார்
3 அப்பொழுது
4 தரைமெழுகி
5 மனம் மகிழ
6 உமை மகிழ
7 சூழ வந்தார்
8 கண்ணெழுதி
9 அழகாய்

தானமுடன் வள்ளிதனைப் பார்து நின்று மின்னார்கள்
கன்னி இவள் இந்த மின்னாள் கந்தருக்குப் பாரியென்று
கொங்கை மடவார் குறத்திகள் எல்லாம் கூடி
தங்கள் குலத்தில் உள்ள சாத்திரமெல்லாம் முடித்து
வெற்றி வடிவேலவரை விதமாய் அலங்கரித்து
சாந்துசவ்வாது சந்தணமும் குங்குமமும்
ஏந்துபுகள்[1] வள்ளியற்கும் வேலவருக்குமே அணிந்து
ஒப்புவித்துப்பார்தார்கள் ஓவியத்தை மின்னார்கள்
இப்புவியில் வள்ளிக்கிணை இல்லையென்பாரும்
தேன்மருவும் கைத்தலத்தான் தெய்வச்சபை நடுவே
பூமருவுஞ்காவனத்தில்[2] பொற்பலகை தான் போட்டு
பலகையதின்மேலே பாவாடை தான் போட்டு
சிலபேர் குரவையிட சேர்த்துநின்று மின்னார்கள்
மங்கள வாத்தியங்கள் வகை வகையேதான் பாட
சங்குதொனி முளங்கத் தமிள்[3] வீணை பாடிவர
கும்பிட்டு மின்னார்கள் குரவை ஒலித்துவர
கந்தர் எளுந்து[4] காவனத்தில் னுட்புகுந்து
அந்தமுள்ள பாவாடை அதிலிருந்தார் வேலவரும்
சந்தமுடன் வள்ளிதனைத் தானெடுத்து மாதுவரும்
பூமருவுங்தேவர்களும் போற்றி நின்று சே சே என்று
அன்நேரமே வேதன்முகித்தம் எடுத்துரைப்பார்
இப்போமுகித்தம் சரியென்று தான் உரைத்தார்
தானம் கொடுத்துச் சடங்கறுப்ப பூசை பண்ணி
வானவரும் தேவர்களும் வந்திருந்தார் பந்தலிலே[5]

## விருத்தம்

வந்தவினையெல்லாம் வல்லறுந்து போவதற்கு
தந்தி அறுமுகற்குச் சடங்கறுத்துப் பூசைபண்ணி
வானவருந்தான்வரும் மாமயிலோன்புகள்[6]
கானவரும் கண்டார் களித்து

---

1 *ஏந்துபுகழ்*

2 *பூமருவுங்காவனத்தில்*

3 *தமிழ்*

4 *எழுந்து*

5 *பந்தரிலே*

6 *மாமயிலோன்புகழ்*

### நடை

மானனையாள் வள்ளியிட வலது கரம் பிடித்து
தேனாரும் வள்ளியிட சிறுவிரலைக் கைப்பிடித்து
வள்ளியரும் வேலவரும் வந்து அரசாணி சுற்றி
செம்மையுடன் ஓமம் சிறக்கவே சுற்றி வந்து
அம்மி மிதித்து அருந்துதியெல்லாம் காட்டி
தெள்ளு தமிள்[1] வேலவரும் சீர்பாதம் போற்றி செய்து
ஒப்பமுடன் மகிண்டு [2]உடனிறுதார் அம்மானை
அன்னேரம் வேலவனார் ஆனபுகள்[3] தேவர்கள்கும்[4]
மின்னார் அவர்களுக்கும் விருந்தளித்தார் அப்போது
அன்று களித்து அடுத்தனாளும்[5] களித்து
நன்றியுள்ள நாலாம்நாள் நாம் மாடவெணுமென்று
கடிதாக ஓர் துயில்தான் கன்னியவள் தானுடுத்து

### விருத்தம்

சீராட்டி வேலரையும் செப்பரிய வள்ளியையும்
நீராட்டி நாலாம்நாள் நின்றுமே பாராட்டி
கானவர்கள் நீர்வார்த்தார் காவனத்து வேலவற்க்கும்
வானவரும் கண்டார் மகிண்டு[6]

### நடை

கானவர்கள் மாமயிலைத்தான் அளைத்து[7] அப்போது
கானவர்கள் சீத எங்கள் கைமேலே நீர் வார்த்து
வெள்ளிக்கரண்டகமும் வெண்பொன்னால் பாக்குவெட்டி
தெள்ளிய பொற்கலமும் சின்னக்கிளி வில்லும் அம்பும்
கென்றில் படிக்கம் கிடாரம் மிகக்கொடுத்து
மாம்துளிர்போல் பட்டுமெத்தை வர்ணத்தலை அனையும்
மேகம் தவளும் விளைபுனமும் வாள்[8] புனமும்

1 தமிழ்
2 மகிழ்ந்து
3 ஆனபுகழ்
4 தேவர்களுக்கும்
5 அடுத்த நாளும்
6 மகிழ்ந்து
7 அழைத்து
8 வாழ்புனமும்

தானமுடன் தேன் எடுக்கும் தன்புனமும் வாள்[1] புனமும்
வள்ளிக் கிளங்கெடுக்கும் வாள்புனமும் பூங்காவும்
வாளைகமுகு வான்பெரிய சோலைகளும்
மேகந்திரளாக மேயும் தினப்புனமும்
யீசன்[2] தனக்கேற்ற இனிய பலாமரமும்
கூசாமலே கொடுத்தார் கோதை வள்ளியார் தனக்கு
குன்றாத சீதனங்கள் கூறி அவற்கித்தனையும்
ஒன்றாகத் தந்தோமென்று உறுதிநீர்தான் வார்த்தார்
சீதனங்கள்தான் வாங்கித் திருக்கை வேலாயுதனார்
வேண்டிய சீதனங்கள் மெத்தவுந் தந்தாரெண்டு[3]
ஆண்டார் குறவரிடம் அன்பு கொண்டே மகிண்டு[4]
அம்மனோடந்த அறுமுகனார் உன் மகிண்டு[5]
சம்மதங் கொண்டாடித் தனித்திருக்கும் வேளையிலே
குமுர்தமொளி[6] வாசகத்தார் குறவரெல்லாம் கூடி
அமுதுபொலியவென்று அடிதொளுதார்[7] வேலவரை
தேக்கிலையைத் தான் பறித்து தேனும் தினை மாவும்
வாகுடனே தான் இலையில் வைத்தாரே வேலவற்க்கு
கங்கைச் சடையோன் இருக்கும் கைலையிலே
வங்கார வேலவரும் வள்ளியம்மையுங்கூட
சங்கரனார் வாளும்[8] சறுவகலைகிரியில்
பொன்னின் கைலையிலே போய்புகுந்தார் அம்மானை
ஆலாலமுண்டோன் அலங்கார மண்டவத்தே[9]
வேலாயுதனும் விண்ணப்பஞ் செய்தார்கள்
அம்மையுமையும்மாதும் மனமகிண்டு[10]
செம்மையுடன்யென் மகனைச் சீக்கரத்தில் அளையுமென்றார்[11]

1 வாழ்புனமும்
2 ஈசன்
3 தந்தாரென்று
4 மகிழ்ந்து
5 மகிழ்ந்து
6 குமிர்தமொழி
7 அடிதொழுதார்
8 வாழும்
9 மண்டபத்தே
10 மனமகிழ்ந்து
11 அழையுமென்றார்

முருகன்தனையளைக்க[1] வேண்டுமென்றார் முக்கணனார்
வருக வெண்டளைத்தார் வள்ளியுடன் வேலவரும்
சென்றார் திருக்கையிலை தேவரெல்லாம் கண்டெளுந்தார்[2]
நன்றியுள்ள வேலவரை நன்மையுள்ள தேவரெல்லாம்
சிவனை மிக வணங்கி அம்மையுமையையும் வணங்கி
அப்போதுதானும் தெய்வானை யம்மனும்தான்
நீதியுடன் உங்கள் மகன் நிலமை தனைக்கேளும்
நான்ஒருதி இங்கிருக்க நல்ல மடவாரெனவே
கானக்குறத்திதனைக் கலியாணம் செய்துவந்தார்
என்றுமே தெய்வானை எரியளவே கண்சிவந்து
நின்று கோவிக்கலுற்றாள் நிமலன் திருமகனாரை
ஆறுமுகன் கேட்டு அவள் தனக்கு மெற்ற அஞ்சி
பாறுபஞ்சிபோலே பறக்கலுற்றார் வேலவரும்
வடிவேலரஞ்சிவிட மாமுனிவன் நாரதனும்
கடிதாகச் சென்று நின்று கன்னியோ டேதுரைப்பார்
கோபமுடனிருந்த கோதை தெய்வானை மின்னே
தாவமுடனே தாள்பணிந்து தெண்டனிட்டு
அன்னையரே உந்தனற்கு அதிகவெகு கோவமதேன்
மாதாவே நீயும் மனவேகம் கொண்டிருந்தால்
ஆதாரம் இல்லை அன்னையரே எங்களுக்கு
அம்மா இனிவேண்டாம் அதிகவெகுகோபம்
பாரியென இருந்தால் பாருலகில் வேகமதேன்
ஆரியஞ்சேர்மின்னே அடியேன் தனக்காக
சினம்தணிக்வேனும் என்று தெண்டனிட்டார் நாரதனும்
அன்னேரமேதான் அளகு[3] தெய்வானை மின்னாள்
மன்னர் வினாயகனார்[4] வந்துமே தெண்டனிட்டார்
தெண்டனிட்டு அம்மனையும் சீர்பாதம் போற்றிசெய்து
முருகன் தான் செய்த குற்றம் எல்லாம் நீ பொறுத்து
வெற்றிமயில் வேலவனார் மேதினியில் செய்தகுற்றம்
ஆர்தான்[5] பொறுப்பார் அம்மா எனத் தொளுதார்[6]

---

1 முருகன்தனையழைக்க
2 கண்டெழுந்தார்
3 அழகு
4 விநாயகனார்
5 யார்தான்
6 தொழுதார்

கார்கொண்டபூ முலையே நீ சவித்திருக்கக் காரியமேன்
தந்திமுகனும் தையல்தனைனோக்கி
இந்தமதியேதோதான் எவர்கள் வந்தாலுமினி
எல்லாப் பவுசிகளும் உனக்கென்றுதானுரைத்தார்
பொல்லாப்புச் சொல்லாதே பூங்கிளியே என்னாணை
நன்றியுள்ள மின்னாளே நான் சொல்ல நீ கேளும்
வெற்றியுள்ள வேலரிடமெய்ப்பவுசிகள் எல்லாம்
தந்தோம் உனக்கெண்டார் தந்திமுகத்தோனும்
அந்த உரைகேட்டு ஆயிளையும் ஏது சொல்வான்
அப்படிப் படைத்தார் அன்னையருங்கானகத்தில்
இப்படிச்செய்வதென்ன இனிப்பார் குறத்திதனைக்
குளறப்பிடித்தடித்து[1] கோதையரைக் கானகத்தில்
பளையபடி[2] ஓட்டிடுவேன் பாருமினி இப்போது
கானக்குறத்தி கன்னியை என் கண்ணெதிரே
நான் வரவும் ஒட்டேன் நாயகரே உம்மானை
அங்கே குறத்தியுடன் அறுமுகவேலவரும்
எங்காகிலும் போவார் என்முன்னே வாராமல்
அங்கே வரவும் ஒட்டேன் அவர் கண்ணிலும் முளியேன்
சிங்கார வேலவனார் தேசத்தில் போய்பிளைப்பார்
வாரமுள்ள வேலவனார் மளையாள் குறத்தியுடன்
தூரவளி போய் பிளைப்பார்[3] சொன்னேன்னான் தப்பாது
தெய்வானை அம்மன் எடுத்துரைக்கத்தான் கேட்டு
நானே உரைத்த மொளி[4] நாயகியே நீ கேட்டிலையே
எந்தவிதி வந்தாலும் இனிமேற்தான் செய்வதென்ன
சிந்தைமகிண்டென்களும் செளுதி[5] அரசாளுமென்றார் [6]
அந்நேரம் மாமுனிவன் ஆனைமுகனைத் தொளுது[7]
மன்னவனே அவ்வதுவை வையகத்தில்; இல்லையோதான்
சொல்லக்கேளாய் முனியே தோகை மயில் வேலர் செய்தி
அன்று அறுமுகனார் அவதரித்த நாள் முதலாய்

1 அழுதல்
2 பழையபடி
3 பிழைப்பார்
4 உரைத்தமொழி
5 சிந்தை மகிழ்ந்து எங்கும் செலுத்தி
6 அரசாளுமென்றார்
7 தொழுது

நன்றி உடன்நான் அவர்க்கு நான் பாதியாய் இருக்கக்
இப்போதொருகுறத்தி எனக்கு நிகராக வேதான்
வைப்பாட்டியாக வைத்து வரக் காரியமேன்
அத்தனை வீரியம் அவரக்கு ஆர்கொடுத்தார்[1] மாமுனியே
ஆனையுரித்தோனும் அவர் தேவி மாதுமையும்
கூட்டிக்கலியாணம் குறத்தனைய் முடித்து
நாடிமகன் தனையும் நன்றாக வைத்திருத்தார்
அன்னை பிதாவும் அப்படியே செய்தார்கள்
என்ன சொல்லப்போறேன் இருப்பதில்லை நான் மரிப்பேன்
தரிப்பாரோ அந்தமொளி[2] தையலே அர்தனக்கும்
இந்தமொளி[3] ஆர்[4] சொல்வார் எனக் கிளைய தேவியரே
இன்றைக்கும் உன்னாலே யீடேற[5] வேண்டாயோ
தேவர்கள் நின்றிரங்கத் தெய்வேந்திரன் வணங்க
மாதே உன்னுடைய மனையிடஞ் செல்லுமென்றார்
இந்தமொளி[6] என் கணவற் ஏதோ என மொளித்து[7]
கானகத்தில் வாள்[8] குறத்தி கையில் மருந்தாலே
மன்னவரே என் கணவர் மயங்கினார் என்றுரைத்தாள்
அக்கவலைவிட்டுவிடும் அன்னையரே சொல்லக்கேள்
உன் கணவன் செய்த உகமைதனை நீ அறிவீர்
வந்தவளை உந்தனக்கு வாய்த[9] உதவியென்று
என்னேரமும் வாளும்[10] நீ இனிப்பகையும் வேண்டாம்
நாரதனும் அப்போது நாயகியைத் தான் வேண்டாம்
மின்னாரே உன்னுடைய வேலவரைய்தான் பார்க்க
என்னுடைய மாதாவே எளுந்தருள[11] வேணுமென்டார்
பஞ்சவர்ணக்கிளியாள் பாவைதெய்வானையம்மன்
கிஞ்சுகின்ற நாரதற்காம் கிளிமொளியாள்தான் இரங்கி
சங்கை உள்ளபூங்கொடியாள்தான் கோபம் தனிந்து

1 யார்கொடுத்தார்
2 அந்தமொழி
3 இந்தமொழி
4 யார்
5 ஈடேற
6 இந்தமொழி
7 எனமொழிந்து
8 கானகத்தில்வாழ்
9 வாய்த்த
10 எந்நேரமும் வாழும்
11 எழுந்தருளல்

இங்கிதங்கள் பேசி இருக்கின்ற வேளையிலே
யீசுரரும்[1] பார்பதியும் தெய்வானையம்மனைக் கொண்டு
உன்னானை வேலருடன் ஒரு நாட்பகையாமல்
என்னாளும்[2] நன்றாய் இருக்கக் கடவதென்று
கந்தரே ஏகுமென்று கற்பித்தார் யீசுரனார்[3]
தந்தை மகாதேவர்தான் அனுப்ப வேல்முருகர்
சிந்தை மகிண்டு[4] செப்புவாரேது மொளி[5]
போற்றி மிகத்தொளுது[6] பூவுடையோற் கேதுரைப்பார்
காத்திருப்பேன் உன்பாதம் காசினிக்குப் போவதில்லை
கந்தனை நானும் காணாதிருப்பேனா
என்றுரைக்க யீசுரனார் [7]இயற் பாதமே தொளுது[8]
என்னையும் காசினியில் ஏகாதென உரைத்தார்
அந்நேரம் வேலவனார் அய்யா [9]விடைவாங்கி
தந்தை விடை வாங்கித் தையல் உமையுடனே
சிந்தை மகிண்டு[10] ஜயா சீர்பாதம் தெண்டநிட்டு
அய்யா பதஞ்சேர்ந்தேன்னான் பதிக்குகேகவென்று
மெய்யாகவே எனக்கு விடைதந்தார் எங்கள் அய்யர்[11]
அப்போது ஆதிசிவனாரும் அம்மை உமையவளும்
தெய்வானை தன்னைச் சீக்கிரமே[12] சென்று கண்டு
அருந்ததியின் கற்புடைய அன்னமே தெள்ளமுதே
உந்தநற்கேற்ற தங்கை ஓவியநல் ஓவியங்காண்
சந்தோஷமாய் இருப்பாய் தங்கை வள்ளியாருடனே
நன்றுகாண் நான் வாறேன் நாதனே என்றியிரங்கித்
கோபம் தெளிந்து கோதை தெய்வானை மின்னாள்

1 ஈஸ்பரரும்
2 என்னாழும்
3 ஈஸ்பரனார்
4 மகிழ்ந்து
5 மொழி
6 மிகத்தொழுது
7 ஈஸ்பரனார்
8 தொழுது
9 ஐயா
10 மகிழ்ந்து
11 ஐயர்
12 சீக்கரம்

தாவம்[1] தெளிந்து தன் கணவனைக் காண
அந்நேரம் மின்னாள் ஆரபாரம் கேட்டு[2]
மின்னாள் தான் மிகப் பயந்து அப்போது

## விருத்தம்

வள்ளிபயந்திருக்க வடிவேலர் அஞ்சிவிட
தெள்ளுதமிள்[3] வள்ளியற்குச் சென்று நின்று ஏதுசொல்வாள்
நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உடன் பிறந்த தங்கையல்லோ
என் தங்கை நீயலல்வோதான்

## நடை

அன்னேரமேகான் அளகு[4] தெய்வானை மின்னாள்
என் தங்கை வேண்டாம் உனக்குப் பயமுமில்லை
சந்தேகம் வேண்டாம் உனக்குப் பயமில்லை
பயமுண்டோ உந்தனற்கு பாவையரே உந்தனற்க்கு
வனிதையரே என்னாளும் வாள்ந்திருப்போம்[5] நாமளொண்டாய்[6]
அப்போது மாதுமையும் அறுமுகத்தான் பார்த்து
இப்போது நீயேகும் என் மகனே என்றுரைத்தாள்
மின்னாள் இருபேரும் வேலவரும் மாதுமையும்
பொன் அடியைப் போற்றிப்புகள்[7] முதவர்கள் ஏதுரைப்பார்

## விருத்தம்

மன்னவரும் அந்த மாதுமையைத் தான்னோக்கி
பொன்னடியைப் போற்றிப் புகந்துரைப்பார்[8] அன்னேரம்
செந்திநகர்[9] மேவத் திருவாக்கு நீ தருவாய்
இப்போது நீ தருவாய் இன்று

## நடை

1 தாகம்
2 ஆரவாரம்கேட்டு
3 தெள்ளுதமிழ்
4 அழகு
5 வாழ்ந்திருப்போம்
6 நாங்கள் ஒன்றாய்
7 போற்றிப் புகழ்
8 புகழ்ந்துரைப்பார்
9 செந்தில்நகர்

அன்னையரே உன் வாக்கருளும் என்றார் வேலவரும்
மின்னார் மைந்தனைப் பாத்து பார்பதியும் தான்மகிண்டு[1]
பணிந்த மைந்தனைப் பார்த்து பார்பதியும் தான் மகிண்டு[2]
அணிந்த ஆபரணம் அத்தனையும் தான்கொடுத்து
மாதுமையாள் அன்னேரம் மங்கையரைத்தான் பாத்து[3]
கீதமொளியாளே[4] கிஞ்சுக வாய் அஞ்சுகமே
மின்னாள் வள்ளியுடன் மேவியிரும் என்னாளும்
எந்த விதமானாலும் இனிமேல் பகையாமல்
சிந்தைமகிண்டு[5] சிறந்திருப்பீர் ஒன்றாக

## விருத்தம்

வாடி தெய்வானை மின்னே வள்ளியுடன் நீயுமினி
நாடி நிதம் பூசல் நடவாதே கூடி
என்னாளும் வாள்ந்திடுங்கோ[6] என மகனார்தன்னுடனே
பெண்ணே எனப் புகண்டார்[7] புரிந்து

## நடை

மைந்தரும் நீயும் மனமகிண்டு[8] தான் உரைந்தீர்
எந்தன் தலையில் விதிக் என்ன செய்வேன் மாமியரே
அந்தமொளி[9] கேட்டு அன்னையரும் ஏது சொல்வாள்
தலையில் விதியொரு நாட் தப்பாது மின்னாளே

## விருத்தம்

என்ன சொல்லப்போறோம் இனிமேலொரு நாளும்
மின்னே பயந்திருக்க வேண்டாம் காண்மின்னாரே
சேந்திருந்து நீங்கள் செல்வர் வடிவேலரோடு
வாள்ந்திருங்கொன்றாய்[10] மகிண்டு[11]

---

1 தான் மகிழ்ந்து
2 தான் மகிழ்ந்து
3 பார்த்து
4 கீதமொழியாளே
5 சிந்தை மகிழ்ந்து
6 வாழ்ந்திருங்கோ
7 புகழ்ந்தார்
8 மனமகின்று (மனம் மகிழ்ந்து)
9 அந்தமொழி
10 வாழ்ந்திருங்க ஒன்றாய்
11 மகிழ்ந்து

## நடை

என்று மிகப் புத்தி சொல்லி ஏந்திளையாள் மாதுமையும்
நன்றியுடன் சொல்லி நயந்தனுப்ப அன்னேரம்
வன்னமயில் மேலே வடிவேலர் ஏறிவர்
பெண்ணே திருச்செந்தூர் போய் வாரும் என்றனுப்பி
தேவர்பிடைசூடச்[1] சின்னம் பணிமாற்ற
நாவலர்கள் எத்திசையும் நாதகீதம்பாட
வண்ணமுள்ள வாத்தியங்கள் வகைவகையே தாள்பாட
முப்பத்துமுக்கோடி முனிவர் பிடைசூள
முத்துவண்ணக்குடையும் மோகனரெத்தினக் குடையும்
செப்பமுடன் மின்னார் சேரப்பிடைசூள
வண்ணக் குடையும் மகர நீலக் குடையும்
ஆலவட்டம் வீசி அடியார் பிடைசூள
நீலமயில் வாகனற்கு நின்று கவரியிட
எங்கும் தவில் முளங்க எக்காலம் ஊதிவர
மாதர் கவரியிட மன்னர் பிடைசூள
வேதாவிறுமாவும் மிக்க இருசிகளும்
தேவர்குளாத்துடனே தெய்வேந்திரன் படையும்
வண்ணக் கொடியுடனே மயில் வாகனம் ஏறி
மின்னாள் இருபேரும் வேலவரும் தான் மகிள
வந்துதிருச் செந்தூர்போய் புகுந்தார் எல்லோரும்
அந்தமுள்ளலோகம் தாண்டியவர் எல்லோரும்
அங்கு திருச்செந்தூர் போய் புகுந்தார் எல்லோரும்
இந்தக்கதையை இயற்றமிளால்[2] ஆராந்து
சிந்தையுடன் இந்நூலைச் செந்தமிளால்[3] 3ஆராய்ந்து
சந்தோஷமாய் உரைப்போர் தரணியில் என்னாளும்
கந்தர் அருள் பெற்றிருப்பார் காசினியில் என்னாளும்
நந்திபதம் பெறுவார் நாயகனார்சீர் பெறுவார்
தந்திமுகனருளும் தான் பெறுவார் பூவுலகில்
சிவன் அருளும் பெற்றிருப்பார் சீருடனே வாள்ந்திருப்பார்[4]

---

1 தேவர்புடைசூழ
2 இயற்றமிழால்
3 செந்தமிழால்
4 வாழ்ந்திருப்பார்

நவகோளும் வாராது நமனும் அணுகாது
சீர்பெறவே என்னாளும் சிவன்கெதிபெற்றே[1] இருப்பார்
வள்ளிதனை வேலவனார் மணம்செய்து வென்றகதை
தெள்ளுதமிள்[2] ஆராய்ந்து சிறப்பாகச் செப்பினவர்
என்றும் சிவன் பதியில் இறஞ்சியே வாள்ந்திருப்பார்[3]
இந்நூலை நல்லதென்று எளுதிப்[4] படித்தவரும்
நன்னூல்[5] இதென்றும் நாடிப்படிப்பவரும்
ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி
வண்ணமயில் வேலர் மலர்பாதம் பெற்றிருப்பார்
பாடினோர் வாளி படித்தோர்மிகவாளி
கேடாதோர் மிகவாழி கிளையுல்ர் மிகவாளி
நாடிப்படிப்போரும் நன்னிலத்தில் என்னாளும்
ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கூட்டம் முசியாமல் வாளியதே
சிவமயம் வள்ளி அம்மானை முத்தி பெற்றது கணபதி முன்னிற்கவும்
ஆரார் எளுதினோராயினும் இப்புகளை
ஆராய்ந்து கொள்ள அறிவுடையோர் சீராய்ந்து
குற்றங்கள் நீக்கி குறைதீத்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர்கடன்

1 சிவன்கதிபெற்றோர்
2 தெள்ளுதமிழ்
3 வாழ்ந்திருப்பார்
4 எழுதிப்படித்தவரும்
5 நன்னூல் - நல்ல நூல் என்ற கருத்து



## கலாநிதி முருகு தயாநிதி

தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் முனைவர் முருகு தயாநிதி அவர்கள் இலங்கை, தேசிய கல்வி நிறுவகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். தம்முடைய நுண்மான் நுழைபுலத்தின் ஊற்றாக பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அரிய படைப்புகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள "வள்ளியம்மன் அம்மானை", அம்மானை விளையாட்டில் வள்ளியம்மனின் வாழ்க்கை வரலாற்றை மகளிர் வழியாக சொல்வது போல் புனைவு செய்தவிதம் இந்நூலுக்கு உரிய தனிச்சிறப்பாகும்.

யாப்பு வடிவில் பாட்டினை அளித்தாலும் பாமர மக்களும் படித்து எளிதில் பொருள் புரிந்து கொள்ளும் அளவிற்கு இந்நூலினை இயற்றியளித்த பேராசிரியர் அவர்களின் செயல் போற்றுதலுக்குரியது.

ஆசிரியர்தம் சீரிய தொண்டு வளர்க.

முனைவர் **பாஞ். இராமலிங்கம்**

புதுவைப் பல்கலைக் கழகம்

புதுச்சேரி, இந்தியா.

ISBN 819383078-4

9788193830789